
ரா.கி.ரங்கராஜன்
ஹேமா!
ஹேமா! ஹேமா!

# ஹேமா! ஹேமா! ஹேமா!

ரா.கி. ரங்கராஜன்

அல்லயன்ஸ்

(நூற்றாண்டு கண்ட முதல் தமிழ் புத்தக நிறுவனம்)

# முன்னுரை

1972'ம் வருட வாக்கில் இந்த நாவல் குமுதத்தில் தொடர்கதையாக வெளிவந்தது. அமரர் எஸ்.ஏ.பி.யும் லட்சக் கணக்கான வாசகர்களும் எனக்கு அமோகமாக ஊக்கம் தந்தார்கள்.

கதையை நகர்த்துபவரே கதையைச் சொல்பவராக அமையும்போது, எழுதுவதில் பல சிரமம் உண்டு. சம்பவங்களை வேறு எந்தக் கோணத்திலிருந்தும் பார்க்க முடியாமல், நான் நான் நான் என்றே வந்து போரடிக்கும். அதையும் மீறி இந்த நாவல் ஓரளவு வெற்றி பெற்றது.. கடவுள் அருள்.

முடிவுப் பகுதிகளைப் படிப்பவர்கள் 'டைட்டானிக்' திரைப்படம் என்னை இன்ஃப்புருவன்ஸ் செய்திருக்கிறது என எண்ணுவார்கள். ஒரு திரைப்படத்தில் நான் மயங்கியது உண்மையே. ஆனால், அது

‘டைட்டானிக்’ அல்ல. அதற்கு முப்பது வருடங்களுக்கு முன்பு வெளிவந்த ‘பொஸைடின் அட்வெஞ்சர்’ என்ற வேறொரு ஹாலிவுட் படம். ஒரு சொகுசுக் கப்பல் பனிப்பாறையில் இடித்து தலை குப்புற முழுகுவதையும் பிரயாணிகள் தப்பிச் செல்வதற்குப் படாதபாடு படுவதையும் அற்புதமாக அந்தப் படம் காட்டியது. முழுகும் கப்பலை வைத்து ஒரு கிளைமாக்ஸ் எழுத வேண்டுமென்ற ஆசை என்னைத் தூண்டியது. மற்றபடி அந்தப் படத்தின் கதைக்கும் இந்த நாவலின் கதைக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை.

புத்தகத்தை அழகிய முறையில் வெளிக் கொணர்ந்திருக்கும் **அல்லயன்ஸ் கம்பெனிக்கு** என் நெஞ்சார்ந்த நன்றி.

**ரா. கி. ரங்கராஜன்**

# ஹேமா

## 1

''என்னடி இது, ஹேமா?'' என்றுதான் அம்மா கேட்டாள், நான் எழும்பூரில் ரயிலை விட்டிறங்கியதும்.

''ஏன் அம்மா? என்ன விஷயம்?'' என்று திகைத்தேன் நான். வண்டி ஸ்டேஷனுக்குள் நுழையும் போதே நான் தலையை நீட்டி அவளுடைய உருவம் பிளாட்பாரத்தில் தென்படுகிறதா என்று எவ்வளவு ஆர்வத்துடன் தேடினேன்! அவளைக் கண்டதும் இரண்டு கைகளையும் பிடித்துக்கொண்டு 'அம்மா!' என்று எத்தனை குதூகலமாகக் கூவினேன்!

அம்மா என்னடாவென்றால், என்னை ஒரு முழம் தள்ளினாற்போல் நிறுத்தி, என் தோள்கள் இரண்டையும் இரண்டு கைகளால் அழுத்திக்கொண்டு, என்னை ஒரு வினாடி இமைக்காமல் உற்றுக் கவனித்துவிட்டு, ''ஊகூம்... சரி, வா,'' என்கிறாள்.

என்னிடம் எதை ஆட்சேபிக்கிறாள் என்று புரியாதவளாக, இரண்டு சூட்கேஸ்களையும் கைக்கொன்றாக எடுத்துக் கொண்டேன்.

மாலை வண்டியான அந்தத் திருச்சிராப்பள்ளி எக்ஸ்பிரஸில் அன்று சரியான கூட்டம். வந்தவர்களும் வரவேற்றவர்களும் சந்தித்துச் சந்தித்து மகிழ்ந்துகொண்டிருந்தார்கள். எனக்கு மட்டும் ஏனோ இந்த வினோத வரவேற்பு!

அம்மா இரண்டு எட்டு முன்னே நடந்தவள், மேல் வகுப்பு வெயிட்டிங் ரூமுக்குள் எட்டிப் பார்த்தாள். ''ஒருவருமில்லை. இப்படி வா,'' என்றாள்.

இன்னும் திகைத்து விழித்தவளாக அவளைப் பின் தொடர்ந்தேன்.

''இப்படியா ஹேமா மார்பும் தோளும் தெரிகிற மாதிரி லோ கட் ஜாக்கெட் போட்டுக் கொள்வது? புது இடத்துக்கு வருகிறாய். மரியாதையாய் இருக்க வேண்டாமோ? கௌரியம்மாள் என்ன நினைப்பார்?'' என்றாள்.

கௌரியம்மாள் என்றது அவள் வேலைபார்க்கும் எஜமானியம்மாள்.

ஒருமுறை என் பிளவுசை நானே பார்த்துக் கொண்டேன். சிரிப்பு வந்தது. ''ஏம்மா, நானே ஒரு தஞ்சாவூர் கர்னாடகத்தை மாட்டிக்கொண்டு வந்திருக்கிறேன். இந்த மெட்றாசில் இதைத் தூக்கிச் சாப்பிடக்கூடிய நாகரிகமெல்லாம் இருக்கும்...''

''சரி, சரி. விவாதம் பண்ணாதே. பெட்டிச் சாவியைக் கொடு,'' என்று வட்ட மேஜைமீது ஸூட்கேசை வைத்து, என்னிடமிருந்து திறவுகோலை வாங்கித் திறந்து பரபரவென்று துணிகளையெல்லாம் கலைத்தாள் அம்மா. ''எல்லாம் இதே மாதிரி ரவிக்கைதானா? அல்லது வேறே நல்லது ஏதாவது வைத்திருக்கிறாயா?''

''கலைக்காதே, நானே எடுத்துத் தருகிறேன்,'' என்று சொல்லி, இருப்பதற்குள் சற்றுச் சாதாரணமான ஒரு பிளவுசை எடுத்துத் தந்தேன்.

''இங்கேயே மாற்றிக்கொண்டு விடு,'' என்று கூறிவிட்டு, வாசல் பக்கம்போய் நின்றுகொண்டு யாரும் வந்துவிடாதபடி பாதுகாப்பாய் நின்றுகொண்டாள் அம்மா.

''அவ்வளவு அவசியமா அம்மா?'' என்றேன்.

''கட்டாயம்,' என்றாள் அம்மா, எனக்கு முதுகைக் காட்டியபடியே.

''நல்ல அம்மா போ!'' என்று சிரித்துக்கொண்டே ரவிக்கையை மாற்றிக் கொண்டேன்.

அம்மா மறுபடியும் என்னை ஆராய்ந்து, ''பரவா யில்லை,'' என்று அரைமனதாக நற்சான்று வழங்கினாள். பிறகு ''பார்த்து வா. என்னிடம் ஒன்றைக் கொடு,'' என்று ஒரு ஸூட்கேஸை வாங்கிக்கொண்டு சாலையைக் கடந்தாள். ''டாக்ஸி வேண்டுமா என்ன? பஸ்ஸிலேயே போய்விடலா மில்லையா?'' என்றாள் என்னிடம்.

''உன் எஜமானியம்மாள் தலையைச் சீவிவிட மாட்டாளா நாம் டாக்ஸியில் போய் இறங்கினால்! பஸ்ஸிலேயே போகலாம்,'' என்றேன்.

அம்மா சிரித்துவிட்டாள். நினைவு தெரிந்த நாள் முதலாக என்னைக் கவர்ந்து வந்திருக்கும் சிரிப்பு அது. வெள்ளை வெளேரென்று ஒரு முல்லைச் சரம் மின்னலடித்து மறைகிற மாதிரி இருக்கும் அம்மாவின் சிரிப்பு. அவளுக்கு எவ்வளவு வயதானால்தானென்ன, என்னதான் தலையிலே பூவும் நெற்றியில் குங்குமமும் இல்லாவிட்டால்தான் என்ன, அந்தச் சிரிப்பின் கவர்ச்சி மட்டும் ஒரு நாளும் குறையாது என்று நினைத்துக் கொண்டேன்.

நாலு வருடம் முந்தி, அம்மா புறப்பட்டாள் சென்னைப் பட்டணத்துக்கு. அப்போது என் அப்பா - ஒரு சினிமாக் கொட்டகையில் குமாஸ்தாவாக இருந்தவர் - இறந்துபோய் இரண்டு வருடம் ஆகியிருந்தது. என் அப்பாவைப் பெற்ற பாட்டிக்கு, இரண்டு பேர் சாப்பிடுகிற அளவுக்கு. கோவிலிலிருந்து தானியம் வந்து கொண்டிருந்தது. நானும், அம்மாவும் அந்தப் பாட்டியிடம் ஒண்டிக்கொண்டிருந்தோம்.

ஒருநாள், ''பட்டணத்திலே கௌரியம்மாள் ரொம்பக் கிடக்கிறாளாம். ஒத்தாசைக்கு ஆள் வேண்டுமாம். நீ ஒரு மாசம் போய் இருந்து பாரேன்,'' என்று யாரோ சொன்னார்கள். கௌரியம்மாள் என்பவள் யார் என்ன என்றுகூடக் கேட்டுக் கொள்ளவில்லை அம்மா. உடனே புறப்பட்டு விட்டாள். நான் ஹைஸ்கூலில் படித்துக் கொண்டிருந்தேன். என்னைப் பாட்டியுடனேயே தங்கியிருக்கச் சொல்லிவிட்டுச் சென்றாள்.

'ஒரு மாத ஒத்தாசை' என்பது 'நிரந்தர சமையற்காரி' என்று ஆகிவிட்டது.

கௌரியம்மாளின் கணவர், மதுரைப் பக்கத்திலே ஏதோ கிராமத்திலே நிலபுலம் பார்த்துக் கொள்கிறேன் என்று தங்கியிருக்கிறாராம். ஏராளமான சொத்தும், கடை கண்ணிகளும் உள்ள கௌரியம்மாள், தன் தம்பி ஹரி என்பவனுடன் சென்னையில் இருக்கிறாளாம். அவ்வளவுதான் எனக்குத் தெரியும்.

வருடத்துக்கு ஒருமுறை வந்து இரண்டு நாள் அம்மா தங்குவாள். மாதா மாதம் எப்படியோ எனக்கு ஐம்பது ரூபாய் அனுப்பி வந்தாள். நான் ஸ்காலர்ஷிப்புகள் வாங்கியே பட்டதாரி ஆகியப்பின். மேலே படிப்புக்குப் படிக்கலாமா, படிப்பதானால் என்ன படிக்கலாம் என்று யோசித்துக் கொண்டிருந்தபோது அம்மாவிடமிருந்து பத்து நாள் முன்பு கடிதம் வந்தது.

''...இங்கே அவுட்ஹவுசில் குடியிருந்தவர்கள் காலி செய்துவிட்டார்கள். அந்த இடத்தை நமக்குத் தருவதாய்ச் சொல்லியிருக்கிறார்கள். பாட்டியுடன் நீ புறப்பட்டு வந்து விடு. உனக்கு ஏதாவது வேலை இங்கே தேடிக் கொள்ள லாம்...''

சென்னைக்குப் போவதுபற்றி நான் உற்சாகமாகவே யிருந்தேன். பாட்டி என்னுடன் வர மறுத்துவிட்டாள்.

''இரண்டு வேளைச் சோறு எனக்கு நானே பொங்கிப் போட்டுக் கொள்வேன். இங்கேயே என் கடைசிக் காலம் கழியட்டும்,' என்று சொல்லிவிட்டாள். அதனால்தான் நான் மட்டும் தனியாக வந்தேன்.

அம்மா என்னை கௌரியம்மாள்முன் கொண்டு போய் நிறுத்தி, ''என் பெண்,'' என்றாள் சுருக்கமாக, முகமலர்ச்சியுடன்.

தோட்டத்துப் புல்வெளியில், கூடை நாற்காலியில் கௌரியம்மாள் அமர்ந்து கொண்டு தோட்டக்காரன் அடிக்கடி லீவு போடுவதைப்பற்றி அவனுக்கு ஏதோ எச்சரிக்கை கொடுத்துக்கொண்டிருந்தாள். நல்ல வாட்ட சாட்டமான சரீரமும் பணப் பெருமையைப் பறைசாற்றும் அலங்காரமுமாக இருந்தாள். வயது முப்பத்தைந்துதான் இருக்கும்.

ஏற இறங்கப் பார்த்தாள் என்னை. ''அடிக்கடி சொல்வாயே, இவள்தானா! மதமதவென்று வளர்ந் திருக்கிறாளே?'' என்று மட்டும் கூறிவிட்டு, தோட்டக் காரனிடம் மேலே பேசத் தொடங்கிவிட்டாள்.

அவுட்ஹவுசுக்கு என்னை அழைத்துச் சென்றாள் அம்மா. என் வருகைக்காக எவ்வளவு பிரியமாய்ச் சுத்தம் பண்ணி வைத்திருக்கிறாள், பாவம்! எனக்குக் கண்களில் உறுத்தியது.

''இதுவரையில் நான் அவர்கள் வீட்டுச் சமையலிலேயே என் வயிற்றைக் கழுவிக் கொண்டேன். இனிமேல் உனக்கும் சேர்த்து அங்கே சமைத்தால் நன்றாயிருக்காது. ஆழாக்கு சாதம் வடித்து, ஒரு ரசம் வை. செய்யத் தெரியுமில்லையா?'' என்றாள் அம்மா.

''பாட்டி அதெல்லாம் ஜம்மென்று சொல்லிக் கொடுத்திருக்கிறாள் அம்மா,'' என்று அம்மாவுக்கு உற்சாக

மூட்டினேன். பிறகு குரலைத் தணித்துக் கொண்டு, ''அம்மா! மேலே படிக்கலாமா என்று கொஞ்சம் ஆசை இருந்தது எனக்கு. இங்கே வந்ததும் அது பறந்தே போய்விட்டது. எங்கேயாவது எப்படியாவது ஒரு வேலை சம்பாதித்துக்கொண்டு உன்னை ஜம்மென்று வைத்துக்கொள்ளப் போகிறேன்,'' என்றேன்.

''நாளைக்கு அதைப்பற்றி நானே சொல்கிறேன்,'' என்று சொல்லிவிட்டுச் சென்றுவிட்டாள் அம்மா.

**அ**ன்று மாலை இருட்டுவேளை வெளியே ஒரு ஹாரன் ஒலித்தது. தெருவில் போகிற கார் போலிருக்கிறது என்று முதலில் எண்ணினேன். விடாமல் இரண்டு மூன்று தரம் ஒலித்த பிறகு இங்கேதான் பக்கத்தில் யாரோ கூப்பிடுகிறார்கள் என்று புரிந்தது.

வெளியே வந்து பார்த்தேன்.

எங்கள் அவுட்ஹவுசுக்குப் பக்கத்திலேயே கார் ஷெட் இருந்தது. அதிக வெளிச்சமில்லாத இடம். வண்டியை ஷெட்டுக்குள் கொண்டு போய்விடுவதற்காக யாரோ காரில் காத்திருந்தார்கள். ஷெட்டின் கதவு பூட்டியிருந்தது. அதைத் திறந்துவிட வேண்டும். அதற்காகத்தான் ஹாரன் அடித்திருக்கிறார்கள் என்று புரிந்துகொண்டேன்.

உதவி செய்யலாம் என்று அருகில் சென்றேன். காரை ஓட்டிவந்தவன் வாலிபன். டிரைவர் மாதிரி இல்லாமல் சற்றுத் தோரணையாக இருந்தான். கௌரியம்மாளின் தம்பியாகத்தான் இருக்க வேண்டும் என்று ஊகித்துக் கொண்டேன். அதற்குமேல் கவனிப்பதற்குப் போதிய வெளிச்சமில்லை.

''ஒரு தரம்தான் ஹாரன் அடிப்பேன், உடனே வந்து ஷெட்டைத் திறக்க வேண்டும் என்று எவ்வளவு தடவை சொல்லியிருக்கிறேன், முனியம்மா?'' என்றான் அவன், நான் நெருங்கியதும்.

முனியம்மாவா! தூக்கிவாரிப்போட்டது. பிறகு சிரிப்பை அடக்கிக் கொண்டேன். இருட்டில் என்னை வேலைக்காரி என்று நினைத்துவிட்டான் போலிருக்கிறது!

''இந்தா,'' என்று அவன் நீட்டிய சாவியைப் பெற்றுக்கொண்டு ஷெட்டின் பூட்டைத் திறந்தேன்.

காரின் ஹெட்லைட் ஒளிக்கு நேரெதிரில் நான் வந்ததும்தான் அவன் தன் தவற்றை உணர்ந்தான். ''ஓ!'' என்ற வியப்பொலி வெளிப்பட்டது அவனிடமிருந்து.

தலையை வெளியே நீட்டி என்னைப் பார்த்தவாறே காரை உள்ளே கொண்டுபோய் நிறுத்தினான். திரும்பக் கதவைப் பூட்டிக்கொண்டு அவன் வெளியே வந்தபோது நான் அவுட் ஹவுசுக்குப்போய்விட்டேன்.

ஆனால் அவன் எங்கள் வீட்டு வாசலில் சிறிது தயங்கி, ''நீ...'' என்றான்.

''சாரதாம்மாவின் பெண். ஹேமா,'' என்றேன். பின்பு மரியாதைக்காக, ''உள்ளே வாருங்கள்,'' என்றேன்.

''அக்கா சொல்லிக் கொண்டிருந்தாள் நீ வரப்போகிற தாய்... நான் ஏதோ பாவாடை சட்டையோடு ஒரு இரட்டை வாலாக இருக்கப் போகிறதென்று நினைத்திருந்தேன்,'' என்றான் அவன். (பெயரென்ன...? ஆமாம், ஹரி. ஹரி.)

''இரட்டை வால் இல்லாவிட்டாலும் நான் ஒற்றை வால்தான். காலேஜில் எனக்கு அப்படித்தான் பெயர்,'' என்றேன்.

''காலேஜ் வரையிலும் போயிருக்கிறாயா? உன் முகத்தைப் பார்த்தால்...''

''மக்கு மாதிரி இருக்கிறதா?''

''ஓ! நோ, நோ! குடும்பப்பாங்காய்த்தான் இருக்கிறது என்று சொல்ல வந்தேன். வகுப்பில் முதல் பத்து ராங்க்குக்குள் இருப்பாயா?'' என்றான் அவன்.

எனக்கு ரோஷம் பொத்துக் கொண்டு வந்தது. ''நைந்த் ஸ்டாண்டர்டிலிருந்தே முதல் இரண்டு ராங்க்குக்குள்தான் நான். படிப்பில் மட்டுமில்லை, விளையாட்டு, பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி...'' குழந்தைத்தனமான ஆர்வம் என்னுள் ஊற்றுப்போல் பெருகிக்கொண்டே வந்தது. ''ஊரில் நாங்கள் இருந்த இடத்தில் கொஞ்சம் திருட்டுப் பயம். அதனால், நான் பரிசு வாங்கிய கப்புகள், மெடல்களை யெல்லாம் இங்கே அம்மாவிடம்தான் அனுப்பிவிடுவேன். அவள் காட்டியதில்லை?'' என்றேன்.

''இல்லையே?'' என்றான் அவன். தற்செயலாய் எடுத்துக்காட்டுகிற மாதிரி அவைகளை இவனிடம் காட்ட வேண்டும் என்று துடித்தது எனக்கு. அம்மா எங்கே வைத்துத் தொலைத்தாள்? இருந்த இரண்டொரு அலமாரிகளைத் திறந்து பார்த்தேன். காணோம்.

''என்ன தேடுகிறாய் ஹேமா?'' என்று கேட்டுக் கொண்டே உள்ளே வந்தாள் அம்மா. ஹரியை அவள் எதிர் பார்க்கவில்லை. புடவைத் தலைப்பைச் சட்டென்று இழுத்துப் போர்த்துக்கொண்டு, ''வாருங்கள் தம்பி, ரொம்ப நேரமா யிற்றா?'' என்று பதைத்தாள்.

''இல்லை, இல்லை. இப்பத்தான் எட்டிப் பார்த்தேன். உங்கள் பெண்ணின் படிப்பைப் பற்றி விசாரித்துக் கொண் டிருந்தேன். நிறையக் கப்புகளும் மெடல்களும் வாங்கி யிருக்கிறேன் என்றாள். காட்டச் சொல்லிக் கொண்டிருந் தேன்...'' என்றான் ஹரி.

என்னைக் கண்டிக்கிற மாதிரி அம்மா பார்த்தாள். ''அப்படியெல்லாம் பெருமை அடித்துக்கொள்ளக் கூடாது, ஹேமா. இவரோட படிப்புக்கு முன்னே உன்னுடையது எந்த மூலை? கப்பையும் மெடலையும் அப்புறம் காட்டிக் கொள்ளலாம்,'' என்றாள்.

''ஓ.கே.'' என்று கையை வீசிவிட்டு ஹரி போய் விட்டான்.

விடியற்காலையில் அம்மா என்னை எழுப்பி, காப்பி போட்டுச் சாப்பிடும்படி சொல்லிவிட்டு பங்களாவுக்குப் போய்விட்டாள். தோட்டத்திலிருந்து காலைக் காற்று சுகமாய் வீசிக் கொண்டிருந்தது. வெளியேயுள்ள குழாயடியில் பல் துலக்கலாமென்று வந்தேன்.

முகத்தைக் கழுவிக்கொண்டு நிமிர்ந்தபோது, சில கெஜ தூரத்தில் ஹரி நின்றுகொண்டிருப்பதைக் கண்டேன். ''இப்படி வா,'' என்று சாடை காட்டினான்.

முதலில் தயக்கமாயிருந்தது. பிறகு, முழுங்கியா விடப் போகிறான் என்று தைரியப்படுத்திக்கொண்டு சென்றேன்.

பங்களாவின் பின்பக்கம் மாடிப் படிக்கட்டு சென்றது. ''வா'', என்று கூறிக்கொண்டே முன்னே ஏறிச் சென்றான்.

பெரிய ஹாலை அடுத்து, ஒரு சிறிய அறை இருந்தது. ''உள்ளே வா,'' என்றான்.

அவன் குரல் தாழ்ந்தே இருந்ததால் எனக்குச் சற்றுத் திகில் ஏற்பட்டது. அறை வாயிற்படியில் ஒரு காலை மட்டும் வைத்துத் தலையை நீட்டி, ''என்ன?'' என்றேன்.

ஒரு ஸ்டீல் பீரோவைத் திறந்தான் ஹரி. ''இங்கே பார்,'' என்றான். பார்த்தேன்.

மேல் இரண்டு தட்டுக்களில் என் பரிசுக் கோப்பைகள் - பெரும்பாலும் வெள்ளியால் ஆனவை - அழகாக அடுக்கி வைக்கப்பட்டிருந்தன.

''அட! அம்மா இங்கே கொண்டு வந்து பத்திரப்படுத்தி யிருக்கிறாளே!'' என்றேன்.

''உஷ்!'' என்று ' ன் குரலை அடக்கினான் அவன். ''நீ சுத்த அப்பாவிப் பெண். ஏன் இதெல்லாம் இங்கே வந்திருக்கிறதென்று தெரியவில்லை?''

''தெரியவில்லையே!'' என்று விழித்தேன்.

''அடகு பிடிப்பதில் என் அக்காவுக்குத் தனி சந்தோஷம்.''

குப்பென்று வியர்க்கிறமாதிரி இருந்தது எனக்கு. மாதாமாதம் அம்மா அனுப்பிவந்த ஐம்பது ரூபாய்கள்... இங்கே அவளுக்கே சம்பளம் போதாமல்... என் வெள்ளிக் கோப்பைகளை எஜமானியிடமே அடைமானம் வைத்து... அந்தப் பணத்தையா நான் தஞ்சாவூரில் செலவழித்து மகிழ்ந்தேன்! வெட்கமாயிருந்தது.

''எடுத்துக்கொண்டு போ. நான் அக்காவிடம் பிற்பாடு சொல்லிக் கொள்கிறேன்,'' என்றான் ஹரி.

''ரொம்ப நன்றி. ஆனால் பிச்சை வாங்குவது எனக்குப் பிடிக்காது,'' என்று சொல்லிவிட்டுப் படபடப்புடன் அவுட்ஹவுசுக்குத் திரும்பினேன். அம்மாவின் நிலைமையை - ஏன், என் நிலைமையையே எண்ண எண்ண - ஆத்திரம் பீறிட்டுக்கொண்டு வந்தது. இனி படிப்பைப் பற்றிச் சொப்பனத்திலும் நினைக்கக்கூடாது என்று தீர்மானித்துக் கொண்டேன். வேலை, வேலை, வேலை! அது எதுவானாலும் சரிதான். என் காலில் நான் நின்று, என் பாதுகாப்பில் அம்மாவை வாழ வைக்கவேண்டும்...

**ப**த்து மணிக்கு அம்மா வேலைகள் முடிந்து திரும்பினாள்.

''கேள், கஸ்டம்ஸ் இலாகாவில் பிரகாசம் என்று அஸிஸ்டென்ட் கலெக்டர் இருக்கிறார். உன் அப்பாவுடன் அந்த நாளில் படித்தவர். குடும்ப சிநேகிதர். எப்போதாவது என்னை வந்து பார்த்து விசாரித்துவிட்டுப் போவார். உன்னைப் பற்றி வேலைக்காக முன்பே சொல்லி வைத்திருக்கிறேன்...'' என்றாள்.

''எங்கே அவர் ஆபீஸ்?''

''சொல்கிறேன். சீதக்காதி நகர் என்று போட்டிருக்கும் பஸ்ஸில் போ. கஸ்டம்ஸ் ஆபீஸுக்கு அருகில் நிற்கும். நாலாவது மாடி என்று சொல்லியிருக்கிறார். உன்னை நீயே அறிமுகம் பண்ணிக்கொள். நாலு இடத்தில் உனக்காக மெனக்கிடுவார்.''

''தேவலையே அம்மா! நீகூட இவ்வளவு முன்னேற்பாடாய் எல்லாம் தெரிந்து வைத்திருக்கிறாயே?'' என்று பாராட்டினேன்.

''வறுமை வந்தால் எல்லாம் தானாகவே தெரிய ஆரம்பிக்கும்,'' என்றாள் அம்மா.

என் பரிசுக் கோப்பைகளைப் பற்றி நினைவு வந்தது. ஆனால் அம்மாவிடம் எதுவும் சொல்லவில்லை.

சாப்பிட்டுவிட்டு, அம்மா சொன்ன பஸ்ஸைப் பிடித்துக்கொண்டு கஸ்டம்ஸ் கட்டடத்தை அடைந்தேன். பிரகாசத்தின் அறையில், அவருடைய நாற்காலி காலியாக இருந்தது.

''சார் இப்போது ஹார்பரில் இருக்கிறார். ஸ்டேட் ஆஃப் பாண்டியா கப்பலில் இருப்பார்,'' என்றார் ஒரு குமாஸ்தா. பிறகு அங்கே போவதற்கான பாஸையும் கொடுத்து, வழியும் கூறினார்.

**அ**ம்மா! என்ன காட்சி!

எதிரே நின்றிருந்தது 'ஸ்டேட் ஆஃப் பாண்டியா' கப்பல். சிங்கப்பூருக்கும் சென்னைக்குமிடையே ஓடும் பிரயாணிக் கப்பல் என்று விளம்பரங்கள் பார்த்திருக்கிறேன். ஆனால், இப்படியொரு மாளிகைபோல் காட்சி தரும் என்று எண்ணியதில்லை. வெள்ளை வெளேரென்று சுத்தமாய், சுறுசுறுப்பாய்க் காட்சியளித்தது அந்த வேளையில்.

கப்பலை அடைவதற்கான பாலம் ஒன்று போடப்பட்டிருந்தது. காங்வே என்பது அதுதான் போலும்.

அதற்குச் செல்லும் வழியில், கட்டடத்தின் நிழலில் நாற்காலி போட்டுக் கொண்டு இரண்டு அதிகாரிகள் உட்கார்ந்துகொண்டு இருந்தனர். கப்பலிலிருந்து வந்து வெளியே செல்லும் ஊழியர்களைச் சட்டைப்பை, பாண்ட் பைகளைத் தட்டிப் பார்த்து அனுப்பிக் கொண்டிருந்தார்கள்.

நான் வந்த விஷயத்தைச் சொன்னேன். ''சற்று உட்காருங்கள். அவருக்குச் சொல்லியனுப்புகிறேன். காலையிலிருந்து ரம்மேஜிங் நடந்துகொண்டிருக்கிறது,'' என்றார் அந்த இருவரில் ஒருவர்.

உட்கார்ந்து கொண்டேன். ''ரம்மேஜிங் என்றா சொன்னீர்கள்?''

''ஆமாம். கடத்தல் பொருளைச் சோதனை போடுகிறார்கள் என்று அர்த்தம். இன்று கப்பல் புறப்படுவதால் போவோரும் வருவோருமாக இருப்பார்கள். கடத்தல் சுலபம். கண்டுபிடிப்பது கஷ்டம்,'' என்று சொன்ன அவர், ஒரு போர்ட்டரைக் கூப்பிட்டு, நான் வந்திருப்பதுபற்றிக் கப்பலுக்குச் சொல்லியனுப்பினார்.

நான் காத்துக்கொண்டிருந்தேன். 'ஸ்டேட் ஆஃப் பாண்டியா' ஆடாமல் அசையாமல் என்னையே பார்க்கிற மாதிரி இருந்தது.

''அட! இங்கே எங்கே வந்தாய்?'' என்று பின்புறம் ஒரு குரல் கேட்டது.

ஹரிதான் புன்னகையுடன் நின்றுகொண்டிருந்தான். அவர்களுடைய நிறுவனங்கள் சம்பந்தமாக அடிக்கடி இங்கே வருகிறவன்போலிருக்கிறது. துறைமுக ஊழியர்களிடம் அவன் பழகிய விதத்திலிருந்து அதை ஊகித்தேன்.

நான் பதில் சொல்வதற்குள் கப்பல் ஊழியரொருவர் - தோளில் இரண்டு நட்சத்திரங்கள் பதித்த கறுப்புப் பட்டையும் வெள்ளை அரை நிஜாரும் அணிந்திருந்தவர் - என்னிடம்

வந்தார். ''மிஸ் ஹேமா என்பது நீங்கள்தானே? ஏ.ஸி. அழைத்துவரச் சொன்னார்,'' என்றார்.

''நானும் காப்டனைப் பார்க்கத்தான் வந்தேன்,'' என்று என்னுடனேயே புறப்பட்டான் ஹரி.

'காங்க் வே' வழியாக நடந்தோம். கீழே, துறைமுகத்தின் கான்கிரீட்பாதையில் செல்லும் ஆட்களையும் கை வண்டி களையும் காணுகையில் லேசாய்த் தலையைச் சுற்றியது.

கப்பலுக்குள் நுழைந்தோம். எங்களை அழைத்துச் சென்ற ஊழியர் சில குறுகலான நீண்ட தாழ்வாரங்களைத் தாண்டியதும், ''இப்படி மேலே போங்கள்,'' என்று கைகாட்டிவிட்டுச் சென்றுவிட்டார்.

ஒருவர் மட்டுமே செல்லக்கூடிய குறுகலான இரும்புப் படிக்கட்டு அது. சைக்கிள் பெடலைக் காட்டிலும் கொஞ்சமே அகலமானது. ஏணிபோலப் படிக்குப் படி திறந்த இடைவெளி இருந்தது. பத்துப் பன்னிரண்டடி உயரம்.

ஹரி மேலே ஏறினான்.

நானும் என்னவோ கப்பலிலேயே பிறந்து வளர்ந்த வளைப்போல, ரொம்ப அனாயாசமாக ஏறுகிறமாதிரி, கிடுகிடுவென்று ஏறினேன் படிகளில். ஐந்தாவது படியிலேயே என் அகங்காரத்துக்குத் தண்டனை கிடைத்தது. படிக்குப் படி இருந்த இடைவெளியில் கால் வழுக்கி, கைப்பிடி நழுவியது. அசிங்கமாக, அலங்கோலமாக விழுந்து, தலையையோ, முகத்தையோ அந்த இரும்புப் படிகளில் நசுக்கிக்கொண்டிருப்பேன். சட்டென்று ஹரி ஒரு கையால் என் கையைப் பற்றிப் பிடித்துக்கொண்டான்.

'தாங்ஸ்' என்று அசட்டுச் சிரிப்புடன் கூறி, சமாளித்துக் கொண்டு மேலே ஏறினேன். அவனுடைய ஸ்பரிசம் என்னைச் சிலிர்க்க வைத்துவிட்டது.

படிக்கட்டின் வளைவில் காப்டனின் அறை இருந்தது பார்த்ததும் எனக்கு ஏற்பட்ட முதல் எண்ணம் அந்த அறை முழுவதும் ஆட்கள் அடைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதே. ஆனால் உண்மையில் ஐந்துபேர்களே இருந்தார்கள். அறை சிறியதாகையால் அப்படித் தோன்றியிருக்கிறது. சோபாக்களில் அமர்ந்துகொண்டு நால்வரும், மேஜையின் விளிம்பில் தொற்றினாற் போல் ஒருவரும் இருந்தார்கள். ஐந்து பேருமே ஏதோ சிவப்பான பானத்தை உறிஞ்சிக் கொண்டிருந்தார்கள்.

உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவர் எழுந்துகொண்டு, ''வாம்மா ஹேமா'' என்றார். அவர்தான் நான் தேடிவந்த அஸிஸ்டென்ட் கலெக்டர் பிரகாசம் என்று ஊகித்துக் கொண்டேன். ''ஹலோ!'' என்று ஹரியைக் கைகுலுக்கினார் ஒருவர் அவர் தான் காப்டன் என்றும் தெரிந்து கொண்டேன்.

மேஜை விளிம்பில் இருந்தவர் சட்டென ஏதோ யோசனை வந்தவர் போல, ''சார், பிரகாசம்!'' என்று கூப்பிட்டார். மற்றவர்களுக்கும் சாடை காட்டினார்.

ஐந்து பேரும் அந்தச் சிறிய அறையின் ஒரு மூலைக்குச் சென்று தங்களுக்குள் ஏதோ விவாதித்துக்கொண்டார்கள். தாழ்ந்த குரலில். ''ஒய் நாட்?'' என்று ஒருவர் உரக்கச் சொன்னது மட்டும் என் காதில் விழுந்தது.

ஹரியும் நானும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டோம். ஒன்றும் புரியவில்லை.

அதிகாரிகள் 'குட்டி மாநாடு' முடிந்தது. பிரகாசம் கீழுதட்டைக் கடித்தபடி, யோசனையில் ஆழ்ந்தவராக என்னிடம் வந்தார். ''உனக்கு ஒரு வேலை தரப்போகிறேன். செய்வாயா?'' என்றார்.

நான் புன்சிரிப்புடன், ''வேலை கேட்கத்தானே நானே வந்தேன்?'' என்றேன்.

''இது நீ எதிர்பார்த்தது போன்ற வேலையில்லை. அபாயமானது,'' என்றார் பிரகாசம். பிறகு என் முகத்தையே பார்த்தார்.

அந்தச் சிறிய அறையெங்கும் ஆழ்ந்த நிசப்தம்.

வெளியே நீலக்கடல் தான் யாருக்கும் அடங்காத ஊக்குழந்தையாக ஹோவென்று இரைச்சலிட்டுக் கொண்டிருந்தது.

## 2

நோயாளியின் வாயில் தர்மாமீட்டரை வைத்து விட்டுக் காத்துக்கொண்டிருக்கும் டாக்டர் போல, பிரகாசம் என் முகத்தையே நோக்கியபடியிருந்தார்.

ஆபத்தானது, அபாயமானது என்ற வார்த்தைகளைக் கேட்டு நான் பயந்துவிடவில்லை. அம்மா என்ன சொல்வாளோ என்ற எண்ணம்தான் என்னைத் தயங்க வைத்தது. அதுவும் இரண்டொரு வினாடிகளுக்கே.

''என்ன வேலையாயிருந்தாலும் சரி, செய்கிறேன்,'' என்று கூறினேன்.

பிரகாசம் பெருமையுடன் மற்றவர்களைப் பார்த்தார். 'என் நண்பனின் பெண்ணா, சும்மாவா!' என்று பெருமையடித்துக் கொள்வது போலிருந்தது அந்தப் பார்வை.

காப்டன் முன்னே வந்து, ''தாகத்துக்கு என்ன சாப்பிடுகிறீர்கள், மிஸ் ஹேமா?'' என்று கேட்டார்.

''நீங்கள் அருந்திக் கொண்டிருப்பதைத் தவிர வேறு எதுவானாலும் சரிதான்,'' என்றேன். எல்லோரும் சிரித்தார்கள்.

ஒரு சாதாரண ஆரஞ்சுக் கிரஷை ஊற்றித் தந்தார் காப்டன். கறுப்பு நிறமாயும் குள்ளமாயும் இருந்த அவர், பரபரவென்று சுறுசுறுப்பாக இருந்தார்.

''நாம் உட்கார்ந்து பேசலாமே?'' என்றார் ஓர் அதிகாரி.

''ஒரு சின்ன விஷயம். அனுமதி கொடுத்தால் சொல்கிறேன்,'' என்று ஒரு குரல் கேட்டது. ஹரிதான் அப்படிச் சொன்னவன். வேலையைப் பற்றிப் பிரகாசம் சொன்னது முதல் நான் மற்ற எல்லாவற்றையும் மறந்தாற்போல், ஹரியையும் மறந்து போயிருந்தேன்.

''தாராளமாய், தாராளமாய்,'' என்றார் காப்டன், அவனிடம்.

''மிஸ் ஹேமா எங்கள் வீட்டுக்குத்தான் வந்திருக்கிறாள். தன் அம்மாவோடு தங்கியிருக்கிறாள். மிஸ்டர் பிரகாசம் என்னதான் 'குடும்ப நண்பரென்றாலும், எந்த விதமான ஆபத்தான வேலையிலும் ஹேமாவை இறங்க வைப்பதற்கு முன்னால் அவளுடைய அம்மாவைக் கேட்டுக் கொண்டு செய்வது நல்லதில்லையா?'' என்றான் ஹரி.

'நியாயம்தான்,' என்கிற மாதிரியில் என்னையும் பிரகாசத்தையும் மாறி மாறிப் பார்த்தார்கள் மற்றவர்கள். ஓர் உண்மை எவ்வளவுக்கெவ்வளவு சாதாரணமாயும் அப்பட்டமாயும் இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு அதைப் புறக்கணிப்பது கஷ்டமாயிருக்கும் என அப்போது கண்டுகொண்டேன். நான் அருந்திக் கொண்டிருந்த ஆரஞ்சுக் கிரஷ் என் தொண்டையிலேயே சிக்கிக்கொண்டு நின்று விட்ட மாதிரி இருந்தது. எதிர்பாராமல் கிடைக்கவிருக்கும் வேலை எதிர்பாராமல் கை நழுவி விடப்போகிறதே என்று எனக்கு அச்சமேற்பட்டது. அந்த அச்சத்துக்குக் காரணமான ஹரியின்மீது கோபமும் வந்தது.

பிரகாசமாவது ஏதேனும் சொல்லியிருந்தால் எனக்குக் கைகொடுத்த மாதிரி இருந்திருக்கும். அவரும் மௌனமாகவே

இருக்கவே, நான் சொன்னேன் அழுத்தமாக: ''நான் வீட்டை விட்டுப் புறப்பட்டபோது, என் அம்மா, 'இன்ன மாதிரி வேலை என்றால் ஒப்புக்கொள். இன்ன மாதிரி என்றால் மறுத்துவிடு,' என்று எதுவும் சொல்லவில்லை. இரண்டாவது, என் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளுகிற பொறுப்பு என்னுடையதுதான். என் அம்மாவினுடையதல்ல,'' என்று கூறிவிட்டு ஹரியைப் பார்த்தேன் - 'உன்னுடையதும் அல்ல,' என்று தெரிவிக்கிற மாதிரி. ''ஆகவே என் அம்மாவிடம் எதுவும் கேட்க வேண்டாம்.''

''தட்ஸ் ரைட்''' என்றார் பிரகாசமும். ''ஆனால் உன் அம்மாவை அப்படி ஒரேயடியாய் உதறிவிடக் கூடாது. நான் அவரிடம் பக்குவமாய்ச் சொல்லிக் கொள்கிறேன்.''

''அப்படியானால் சரி,'' என்று சிரித்தான் ஹரி. தனக்கொன்றும் தோல்வியில்லை என்று காட்டிக் கொள்வதற் காகச் சிரிக்கிற மாதிரி இருந்தது. ''ஓகே காப்டன்! உங்களை அப்புறம் பார்க்கிறேன்.''

பிரகாசம் அவன் கையைக் குலுக்கி, ''சமய சந்தர்ப்பங் களை புரிந்து கொள்வதில் நீங்கள் புலியாயிருக்கிறீர்கள், மிஸ்டர் ஹரி. எங்கள் இலாகா விஷயங்களை எப்படி அன்னியர் முன்னிலையில் பேசுவது என்று தயங்கிக் கொண்டிருந்தேன்.''

''புரிகிறது,'' என்று ஹரி புறப்பட்டுவிட்டான்.

இரும்புப் படிகளை அவனுடைய ஷூக்கள் கடக்கும் சத்தம் தேய்ந்து மறைந்தது. காப்டனின் அறையில் மிச்சம் நாலு பேர் இருந்தார்கள். ஆனாலும்கூட, பூவைக் கிள்ளியெறிந்து விட்டுச் செடியைப் பார்க்கிற மாதிரி எதிரில் யாருமே இல்லாததுபோன்ற ஒரு வெறுமையை உணர்ந்தேன் நான். 'சே, என்ன பிரமை!' என்று என்னை நானே அதட்டிக் கொண்டேன்.

''எங்கே அந்த விளம்பரம்?'' என்று பிரகாசம் கை நீட்டினார் தன் உதவியாளரிடம். அவர் எடுத்துக் கொடுத்து, பிரகாசம் என்னிடம் தந்த காகிதத்தைப் பார்த்தேன்.

ஆங்கில தினசரியில் இரண்டு நாள் முன்பு செய்யப் பட்டிருந்த 'வரி விளம்பரம்' அது. 'தினகரா பிரைவேட் லிமிடெட்' என்ற நிறுவனம் கொடுத்திருந்தது. ஒரு பெண் குமாஸ்தா தேவையாம் அவர்களுக்கு.

''இந்த அலுவலகத்தில்தான் நீ வேலைக்குப் போகப் போகிறாய்,'' என்றார் பிரகாசம்.

''இந்தியாவிலேயே நான் ஒருத்திதான் அப்ளிகேஷன் போடுவேன்? அப்படித்தானே?'' என்றேன் வேடிக்கையாக.

''உன் அப்ளிகேஷனை மட்டுமே கவனிக்கும்படி அங்கே ஏற்பாடு செய்திருப்போம். கவலைப்படாதே,'' என்றார் பிரகாசம்.

''இன்றைக்கே ஒரு அப்ளிகேஷன் போட்டுவிடு. நாளை மறுநாள் இன்ட்டர்வியூவுக்கு அழைப்பு வரும். போய்ப் பார்த்து, வேலையை ஒப்புக்கொள். சம்பளம், அலவன்ஸ் எல்லாம் சேர்த்து ஆயிரம் ரூபாய்க்குக் கொஞ்சம் மேலே வரும்.''

''சரி... பேனாவை எடுத்துப் பேப்பரில் எழுதுவதும், பைல்களை ஸ்டீல் அலமாரியில் அடுக்கி வைப்பதும் அப்படியொன்றும் ஆபத்தான வேலையாகத் தோன்ற வில்லையே?'' என்றேன்.

''தோன்றாதுதான்,'' என்று புன்னகை செய்தார் பிரகாசம். ''நீ பாட்டுக்குப் பேசாமல் ஆபீசுக்குப் போய் வந்து கொண்டிரு. மாசம் முதல் தேதி, சம்பளத்தை வாங்கி, அம்மா கையிலே கொடு. ஆபத்து வரும்போது சொல்கிறேன்.''

''அது நியாயமில்லை, சார்.'' என்றார் 'ஸ்டேட் ஆஃப் பாண்டியா'வின் காப்டன். ''அக்கு அக்காகப் பிரித்து பிளக்காவிட்டாலும், கொஞ்சம் கோடியாவது காட்டுங்கள் மிஸ் ஹேமாவுக்கு,'' என்று அவர் சொல்லிக் கொண்டிருந்த சமயம், ஒரு கப்பல் சிப்பந்தி ஏதோ காகிதத்துடன் அறை வாசலில் தயங்கி நின்றார். ''கொண்டு வா இப்படி. எல்லாம் லாஸ்ட் மினிட்தான் உங்களுக்கு'' என்ற காப்டன் அந்தக் காகிதத்தில் கையெழுத்திட்டு அவரை அனுப்பினார்.

''பெரிதாய் ஒன்றுமில்லை, ஹேமா. இந்த மனிதரின் பேச்சைக் கேட்டுப் பயந்து போகாதே,'' என்றார் பிரகாசம். ''இந்தத் தினகரா பிரைவேட் லிமிடெட் ஒரு சந்தேகாஸ்பதமான கம்பெனி. டெக்ஸ்டைல் மெஷினரிகள் வாங்குவதாயும் விற்பதாயும் பேர். அந்தப் போர்வையில் கள்ளக் கடத்தல்கள்தான் நடக்கின்றன. அவர்களுடைய ஆட்கள் இங்கே வருகிறார்கள், போகிறார்கள். அவர்களுடைய கம்பெனிக்காக யந்திரங்கள், பாகங்கள் எல்லாம் வருகின்றன. ஆனால் கையும் களவுமாக எதுவும் பிடிபடுவதில்லை.''

''நிஜமாகவே யோக்கியர்களோ என்னவோ?'' என்றேன்.

''எதிர்ப்படுகிற எல்லோர் பேரிலும் ஒரு சந்தேக முத்திரையைக் குத்தி வைப்பது இவர்கள் வேலை. அதை நீக்கிக் கொள்ள வேண்டியது அவனவன் வேலை,'' என்றார் காப்டன்.

பிரகாசம் அந்தக் கிண்டலைப் பொருட்படுத்தாமல், தொடர்ந்தார்: ''ஸ்பாட்டிலேயே - அதாவது அந்தக் கம்பெனியிலேயே எங்கள் ஆள் ஒருத்தர் இருந்தால் நல்லது என்று நினைத்திருந்த சமயம் இந்த விளம்பரம் வந்திருக்கிறது. நீயும் வந்திருக்கிறாய்.''

''வேலை வர வேண்டும்,'' என்று சேர்த்தேன்: ''அதற்கு வேளை வரவேண்டும்.''

''கட்டாயம் வரும்,'' என்று பிரகாசம் உறுதி கூறினார். ''உனக்கு வேலை கிடைக்கும்படி செய்வது எங்கள் பொறுப்பு.''

''என் பொறுப்பு?''

''முன்னேயே சொன்னேனே, ஒழுங்காக வேலைக்குப் போய் வந்து கொண்டிரு என்று. யாருக்கும் எவ்வித சந்தேகமும் ஏற்படாமல் வெறும் குமாஸ்தாவாகவே வேலையைக் கவனி. டெலிபோனையும் நீதான் பார்த்துக் கொள்ளும்படி இருக்கும். ஏழெட்டு எக்ஸ்டென்ஷன் தானாகையால் சுலபமாய்க் கற்றுக் கொள்ளலாம்...''

பிரமிப்புடன் நான் கேட்டுக் கொண்டிருக்க, பிரகாசம் சொன்னார்:

''ஒருவர் திடீரென்று ஒருநாள் உன்னை டெலிபோனில் கூப்பிடுவார். 'நான்தான் சோழன் பேசுகிறேன்,' என்று சொல்வார். பதிலுக்கு நீ, 'ஸாரி, ராங் நம்பர்,' என்று சொல்லி டெலிபோனை வைத்து விடு. ஆனால் அன்று முழுதும் ஆபீசில் யார் யார் வருகிறார்கள். என்னென்ன செய்கிறார்கள் என்பதில் ஒரு கண் வைத்துக்கொள். பிறகு நாங்கள் கேட்கிறபோது அந்தத் தகவல்களைச் சொன்னால் போதும்.''

''பூ!'' என்று ஊதினேன்.

''ஆனால் உனக்கு நல்ல நடிப்புத் திறமை தேவை,'' என்றார் பிரகாசத்தின் உதவியாளர். இவர் அதிகம் பேசாதவர் என்பதை ஆரம்பத்திலிருந்தே கவனித்திருந்தேன். ''அவர் களுக்கு உன்னைப் பற்றிச் சிறிது சந்தேகம் விழுந்தாலும், என்ன செய்வார்களென்று சொல்ல முடியாது. எதைச்

செய்யவும் அஞ்சாதவர்கள் என்பதை மட்டும் ஞாபகத்தில் வைத்துக்கொள்.''

''யார் சார் இந்தக் காலத்தில் கரும்பைப்போல் வேலையும் கொடுத்து, அதைத் தின்பதற்காக ஆயிரம் ரூபாய் கூலியும் கொடுக்கிறார்கள்? நான் அந்த வேலைக்குப் போக இப்போதே தயார்'' என்றேன்.

பிரகாசம், காப்டனின் மேஜை மீதிருந்த ஒரு வெள்ளைத் தாளை எடுத்துத் தந்தார். ''மனுவை எழுதிக்கொடு. நாங்கள் மற்றதைப் பார்த்துக்கொள்கிறோம்,'' என்றார்.

காப்டனின் மேஜையையே பயன்படுத்திக்கொண்டு எழுதித் தந்தேன். ''ஒற்றிக்கொள்ள இரண்டு கண் போதாது,'' என்று என் பின்னால் நின்று பார்த்துக்கொண்டிருந்த காப்டன் என் கையெழுத்தைப் பாராட்டினார்.

''நாங்கள் வேறு சில சின்ன ஏற்பாடுகளைப் பேச வேண்டியிருக்கிறது. நீ போகலாம்,'' என்று விடை கொடுத்தார் பிரகாசம். ''சும்மா கப்பலை வேடிக்கை பார்க்க வந்தவள் மாதிரி பார்த்துகொண்டே திரும்பிவிடு,'' என்றார்.

கீழே இறங்கிவந்தேன். மேலும் ஒரு தளம் இறங்கி, குறுக்கும் நெடுக்குமாகப் படுத்துக்கொண்டிருக்கும் டெக் பிரயாணிகளைக் கடந்தேன். கம்பி போட்ட தனியறையில் சளசளவென்று பேசிக்கொண்டிருந்த பெண் பிரயாணிகள் என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார்கள். ஆண் துணை இல்லாமல் நான் பிரயாணம் செய்ய வந்திருக்கிறேன் என்று நினைத்தார்களோ என்னவோ? குறுக்கே தெரிந்த ஒரு சந்தில் புகுந்து வெராந்தா போன்ற விஸ்தாரமான வெளிப்புறத்தை அடைந்தேன். எங்கு சென்றாலும், கப்பலுக்கே உரிய ஒரு வினோத வாடை என்னைப் பின்தொடர்ந்து வந்துகொண்டே யிருந்தது.

கைப்பிடிச் சுவரைப் பிடித்துகொண்டு மாடியிலிருந்து பார்க்கிற மாதிரி வெளிப்புறம் பார்த்தேன்.

துறைமுகத்துக்கு மறுபுறம் வெகு கீழே, அழுக்கடைந்த கடல் சிறுசிறு திவலைகளாகக் கப்பலின் மீது மோதிக் கொண்டிருந்தது. தண்ணீரிலிருந்து இவ்வளவு உயரத்திலா இருக்கிறோம் என்ற பிரமிப்பும் ஏற்பட்டது. பல காலியான கண்ணாடி புட்டிகள் - விஸ்கி பாட்டில்கள் என்று ஊகித்தேன்-- மேலும் கீழுமாகத் தண்ணீரில் மிதந்து தத்தளித்துக் கொண் டிருந்தன. டக் போட்டுகள், லாஞ்சுகள், சரக்குக் கப்பல்கள் முதலியவற்றுக்கு அப்பால் செதி செய்கிறமாதிரி மோனத்தில் மூழ்கியிருந்தன நீலவானும் நீலக் கடலும்.

ஒவ்வொரு சிறு அனுபவமும், ஒவ்வொரு சிறிய காட்சியும் என் மனத்தில் குதூகலம் ஏற்படுத்திக் கொண் டிருந்தன. தேடத் தொடங்கிய முதல் நாளே வேலை கிடைத்ததும், அந்த வேலை சுவையானதாக, பரபரப்பானதாக அமைந்ததும்தான் என் மகிழ்ச்சிக்கு காரணம்.

என் கைக்கு அருகே இன்னொரு கரம் கைப்பிடி விளிம்பைப் பிடித்தது. ''மெஸேஜ் ஏதாவது எழுதிப் போட்டிருக்கிறாயா என்ன?'' என்றான் ஹரி.

நம் மனம் களிப்புடன் இருக்கும்போது உலகத்தில் எல்லோருடைய குற்றங்களையும் மன்னிக்கத் தோன்றும் போலும். அதற்குமுன் நாம் என்னென்ன அற்பத்தனங்களைக் காட்டினோம், எப்படியெல்லாம் சிறுமையை வெளிப் படுத்தினோம் என்பதை நினைக்கவே வெட்கமாகிவிடுகிறது. ஹரியைப் பார்த்தபோது எனக்கும் அப்படித்தான் இருந்தது. ''நான் கொஞ்சம் முரட்டுத்தனமாகப் பேசிவிட்டேன். நீங்கள் என்னிடம் அக்கறை காட்டியதை மதிக்கத் தவறிவிட்டேன்,'' என்றேன், தலையைக் குனிந்துகொண்டு.

''நீ ரொம்ப சுயேச்சையான பெண். அதை நான் புரிந்துகொள்ளவில்லை,'' என்றான் ஹரி.

''மெஸேஜ் என்று ஏதோ சொன்னீர்களே, என்ன அது?'' என்று கேட்டேன்.

கீழே தண்ணீரில் மிதக்கும் புட்டிகளைக் காட்டினான் ஹரி. ''நடுக் கடலில் பிரயாணம் செய்யும்போது, இந்த மாதிரி புட்டிக்குள் ஏதாவது கடிதம் எழுதி அடைத்துக் கடலில் மிதக்க விட்டுவிடுவார்கள் என்று நீ கேள்விப்பட்டதில்லை? உலகத்தின் மற்றொரு கோடியில் எவரோ ஒருவரின் கையில் அந்தப் புட்டி கிடைக்குமாம். அவர் பதில் எழுதுவாராம். அப்படியே நட்போ, காதலோ உதித்து வளருமாம். என்ன ரொமான்ட்டிக் ஐடியா!'' ஹரி என்முகத்தையே பார்த்தான். அவன் கண்களில் ஒளி படர்ந்திருந்தது. ''ஹேமா, இந்தமாதிரி ஒரு புட்டிக்குள் நீ கடிதம் எழுதிவைப்பதானால் என்ன எழுதுவாய்?'' என்றான்.

தஞ்சாவூரில் என் காலேஜ் தோழி அன்னபூரணி ஒரு பழைய காமிரா வைத்திருந்தாள். அதில் ஃபோகஸ் செய்யும் குமிழைத் திருகத் திருக, பிளந்தாற்போல் தெரிகிற இரண்டு உருவங்கள் நெருங்கி நெருங்கி வந்து, இறுதியில் ஒன்றாக ஆகிவிடும். அந்தமாதிரி ஹரியும் என்னோடு ஒன்று படுவதற்காக நெருங்கி நெருங்கி வந்துகொண்டிருக்கிற மாதிரித் தோன்றியது. அதை நான் விரும்புகிறேனா, வெறுக்கிறேனா என்று எனக்கே தெரியவில்லை. ஆகையால், ''எனக்கு வேலை கிடைத்து விட்டது,'' என்று பேச்சை மாற்றினேன். ஆனால், 'எங்கே வேலை? என்ன மாதிரியான வேலை?' என்று அவன் கேட்டுவிட்டால் என்ன சொல்வது என்ற குழப்பமும் உடனே உதித்தது.

என் மனத்தைப் புரிந்து கொண்டவனாக, அதைப் பற்றிக் கேட்காமல், ''வேலை கிடைத்ததற்கு ட்ரீட் ஒன்றும் கிடையாதா?'' என்றான் ஹரி.

''இந்தக் கப்பலிலா?''

''ஏன், டைனிங் ஹால் பார்க்கவில்லை நீ? வா, காட்டுகிறேன். நீ எனக்கு ட்ரீட் தர வேண்டாம். நான் உனக்குத் தருகிறேன்,'' என்று முன்னே நடந்தான். மறுக்கத் தோன்றாதவளாக நானும் பின்னே சென்றேன்.

மேல்வகுப்புப் பிரயாணிகளுக்கான அந்த டைனிங் ஹால் விசாலமாக இருந்தது. ஆனால் பல மேஜைகள் காலியாயிருந்தன. புறப்படப்போகும் கப்பலாகையால் இந்த வேளையில் யாரும் சாப்பாட்டில் அக்கறை கொள்ள வில்லையோ என்னவோ? கண்ணாடி ஜன்னல்களுக்கு வெளியே துறைமுகம் தெரிந்தது.

'நான்வெஜிடேரியன்' என்று பலகை வைத்திருந்த மேஜைகளில், இரண்டு சீக்கியர்கள் இழுத்து இழுத்து எதையோ கடித்துத் தின்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடன் ஈர்க்குச்சிபோல ஒரு பெண் உட்கார்ந்திருந்தாள். வாய் நிறைய ஆகாரத்தை அடைத்துக்கொண்டு உரத்த பஞ்சாபியில் பேசிக்கொண்டிருந்தாள் அவள். சண்டை போடுகிறாளா, சாதாரணமாகப் பேசுகிறாளா என்று என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. இன்னொரு மேஜையில் இளம் தம்பதி இருவர், ஒருவருக்கொருவர் எடுத்துப் பரிமாறி உபசரித்துக் கொண்டிருந்தார்கள். சற்றுத் தள்ளி, சேர்ந்து உணவருந்திக் கொண்டிருந்த கப்பல் அதிகாரிகள் நால்வரில் ஒருவர், பெடஸ்டல் விசிறியைத் தன் பக்கம் திருப்புமாறு வெயிட்டருக்குக் கட்டளையிட்டுக் கொண்டிருந்தார். தலைக்கு மேலே கூரையில் பொந்து பொந்தாக வாயைத் திறந்துகொண்டிருந்த ஏர் கூலர்களிலிருந்து குளிர்ந்த காற்று வந்துகொண்டிருந்தது.

வெஜிடேரியன் என்று போட்டிருந்த மேஜையடியில் ஹரி எனக்கும் ஒரு நாற்காலியை நகர்த்தித் தந்தான். வெள்ளை

யூனிபாரத்தில் இருந்த வெயிட்டரிடம் சூப் கொண்டுவரும்படி பணித்தான், என்னைக் கேட்காமலே.

பீங்கான் தட்டில் சூடான சூப்பும் அகலமான ஸ்பூனும் கொண்டு வந்து வைத்தான் வெயிட்டர்.

''எனக்கு இதெல்லாம் பழக்கமேயில்லை,'' என்றேன் வெட்கத்துடன்.

''பழகிக்கொள்ள ஆரம்பி,'' என்றவன், ''ப்ரெட் கொண்டுவா'' என்று மேலும் ஆர்டர் கொடுத்தான்.

''ஊகூம். வேண்டாம் என்று மறுத்தேன். முள்கரண்டியையும், ஸ்பூனையும் உபயோகிக்க வேண்டியிருக்குமோ என்ற பயம் என்னைப் பிடித்துக்கொண்டது.

''ப்ரெட்டைச் சும்மா கடித்துச் சாப்பிடலாம். இடது கையில் பிடித்துக்கொண்டு கடித்தால் இன்னும் நாகரிகம்,' என்றான் ஹரி. எப்படித்தான் என் மனத்தில் ஓடும் எண்ணங்களை அவன் படிக்கிறானோ என்று ஆச்சரியமாயிருந்தது.

சூப்பை ஸ்பூனில் எடுத்து இரண்டு வாய் உறிஞ்சியிருப்பேன்.

விசுக்கென்று எதுவோ உருண்டு வந்து என் சூப் தட்டில் விழுந்தது.

மெல்லிய நாப்கின் காகிதம். சாப்பிட்டு முடித்தவர்கள் கையையும், வாயையும் துடைத்துக்கொண்ட பிறகு சுருட்டிக் கசக்கி எறிந்தது.

நிமிர்ந்து எதிரே பார்த்தேன்.

''ஸாரி மிஸ். ஸாரி சார்,'' என்று அவசரமாகச் சொன்னபடி இரண்டு மேஜைக்கப்பாலிருந்து ஒரு வாலிபன் எழுந்து விரைந்து வந்தான். முதலில் அவனை ஒரு சீக்கியன் என்றுதான் நினைத்தேன். அந்தமாதிரி வாட்டசாட்டமாக இருந்தது அவன் தோற்றம். தேவைக்கு அதிகமாகவே

ஸைட்பர்ன்ஸ் வைத்திருந்தான். கண்கள் சிறிதாக இடுங்கினாற் போலிருந்தன. உதட்டிலிருந்த புன்னகை வலுக்கட்டாயமாக அங்கே சிறை வைக்கப்பட்டிருப்பதுபோல் தோன்றியதே தவிர, இயற்கையானதாக இல்லை.

''மன்னியுங்கள்... கையைத் துடைத்துவிட்டு வைத்தேன். காற்றில் பறந்துவிட்டது,'' என்றான் அவன்.

''பரவாயில்லை,'' என்றான் ஹரி. நானும் அதை ஆமோதிக்கிற மாதிரிப் புன்சிரிப்புக் காட்டிவிட்டு, சூப் தட்டை அந்தக் காகிதப் பந்தோடு நகர்த்தி வைத்தேன்.

''வேறு சூப் கொண்டுவரச் சொல்லட்டுமா?'' என்றான் அவன்.

''தாங்ஸ். எதுவும் வேண்டாம்,'' என்றேன்.

ஹரி, தலையைச் சாய்த்து மௌனமாக அவனையே பார்த்தபடி பிரெட்டைக் கடித்துக்கொண்டிருந்தான். நாங்கள் அவனுடன் உரையாடத் தயாராயில்லை என்று சொல்லாமல் சொன்னதும், அவன் தன் மேஜைக்குத் திரும்பிவிட்டான்.

அதன் பிறகு நான் அதிகம் பேசவில்லை.

என்ன செய்தாலும் எதைப் பார்த்தாலும், எங்கு சென்றாலும் அந்த ஆளின் உருவம் என்கூடவே வருகிறமாதிரி இருந்தது. அவனுடைய இடுங்கிய கண்கள் என்னைத் துளைப்பது போலவே இருந்தது. அவனுடைய நெடிய உருவம் என் நெஞ்சை அமுக்குகிற மாதிரியே இருந்தது.

அச்சம் எனப்படும் உணர்வை முதல் தடவையாக அன்று தெரிந்துகொண்டேன். நான் பயப்படும்படி அவன் பேசவில்லை. கேட்கவில்லை. செய்யவில்லை. இருந்த போதிலும், ஏதோ ஒருவகையில் என் வாழ்க்கையில் அவன் குறுக்கிடப் போகிறான் என்று நிச்சயமாகத் தோன்றியது.

# 3

''ஏன உன் முகம் இப்படி மாறிவிட்டது?'' என்று ஹரி கேட்டான்.

''ஒன்று மில்லையே!'' என்றேன்.

''எதற்காக இப்படித் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே வருகிறாய்?'' என்றான் விடாமல்.

''யார்? நானா?'' என்றேன் அப்போதும்.

'ஸ்டேட் ஆஃப் பாண்டியா' வின் டைனிங் ஹாலில் சந்தித்த அந்த இளைஞன் என்னைத் துரத்திக்கொண்டு என் பின்னாலேயே வருகிறமாதிரி இருந்தது. ஆனால் அப்படி யொரு தேவையில்லாத, காரணமில்லாத அச்சம் என்னை பிடித்துக்கொண்டிருக்கிறது என்று ஹரியிடம் சொல்லவும் வெட்கமாயிருந்தது.

எண்ணற்ற மின்சார விசிறிகள் சுழலும் வெயிட்டிங் ஹாலையும் பெஞ்சுகளும் தடுப்புகளுமாக இருக்கும் கஸ்டம்ஸ் ஹாலையும் கடந்து, நீண்டகன்ற படிகளின் வழியே இறங்கி, 'பாசஞ்சர்ஸ் கேட்'டுக்கு வந்தோம்.

''காரில் போய்விடலாம், வா'' என்று அழைத்தான் ஹரி. தொலைவில் தெரிந்த கடலின் நீல வண்ணத்தைத் தூக்கிக் கொடுக்கிறமாதிரி அவனுடைய சிவப்புக் கார் பளீரென்று நின்று கொண்டிருந்தது.

'சரி, போகலாம்' என்று கூற வாயெடுத்தவள் உடனே கட்டுப்படுத்திக்கொண்டேன். ஒரே ஒரு நாள் - ஒரு முழுநாள்கூட இல்லை - பழக்கத்தை வைத்துக்கொண்டு எவ்வளவு தூரம் செல்வது?

''தாங்ஸ். கொஞ்ச நேரம் சைனா பஜாரைச் சுற்றிப் பார்த்துவிட்டு வருகிறேன். நீங்கள் போங்கள்,'' என்று சொல்லி அவனை அனுப்பிவிட்டேன்.

''இருந்தாரா? பார்த்தாயா?'' என்று ஆவலுடன் கேட்டாள் அம்மா, நான் அவுட் ஹவுஸ் வீட்டுக்குள் நுழைந்ததும்.

''பார்த்துவிட்டேன். இரண்டு மூன்று நாளில் சொல்கிறேன் என்றார்.'' - அதற்குமேல் பேச எனக்குச் சோர்வாயிருந்தது. பிரகாசமே நேரில் சொல்லிக் கொள்ளட்டும் என்று நினைத்துக்கொண்டேன்.

அக்கறையில்லாதவள் போல் இருந்தேனே தவிர, அடுத்த 36 மணி நேரத்துக்குள் என் பொறுமையெல்லாம் பறந்துவிட்டது. தபால்காரர்கள் எந்தெந்த நேரத்துக்கு வருகிறார்கள் என்பதைத் தெரிந்துகொண்டு அந்தந்த வேளையில் காம்பவுண்டு வாசலில் போய் நிற்கத் தொடங்கினேன்.

அப்படி ஒரு முறை நின்றிருந்த போது, காரில் வெளியே போய்விட்டுத் திரும்பிக்கொண்டிருந்த ஹரி என்னைக் கண்டுவிட்டான். காரை நிறுத்தி, ''எனக்காகவா?'' என்றான்.

''எது?'' என்று திகைத்தேன்.

''இங்கே நீ நின்றுகொண்டிருப்பது!''

குப்பென்று என் கன்னம் சிவப்பது எனக்கே தெரிந்தது. கதைகளில் படித்து, திரைகளில் பார்த்திருக்கிற அந்த வினோத உணர்ச்சி இதுதானோ என்று என் உள்ளறிவு கேட்டது.

ஆனாலும் பட்டிக்காட்டுப் பெண்ணைப்போல் வீட்டுக்குள் ஓடி ஒளிந்துகொள்ள நான் விரும்பவில்லை. ''இல்லை. இது தபால்காரருக்காக,'' என்று தயங்காமல் பதில் கூறிவிட்டேன். ஹரி போய்விட்டான்.

இன்னொருமுறை அம்மாவே வாசலுக்கு வந்து, ''ஏன் உன் பெண் எப்போதும் வாசலிலேயே நிற்கிறாள் என்று கௌரியம்மாள் கேட்கிறாள்,'' என்றாள்.

''அவளிடமிருந்து விடுபடுவதற்கு வழி பார்த்துக் கொண்டிருக்கிறாளாம் என்று சொல்லு, போ!'' என்றேன் சிறிது கோபத்துடன். எழும்பூர் ஸ்டேஷனில் பிளவுசை மாற்றிக்கொண்ட நிமிடத்திலிருந்து இந்தக் கௌரியம்மாள் என் சுதந்திரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக அரித்துக் கொண்டே வருவதை என்னால் பொறுக்கமுடியவில்லை.

மூன்றாம் நாளன்று ஒரு ஜீப் நுழைந்தது தோட்டத்துக்குள். அவுட் ஹவுசினருகே அது நின்றபோதுகூட நான் அலட்சியமாகவே இருந்தேன். கௌரியம்மாளையும் ஹரியையும் தேடிக்கொண்டு பல பேர்கள் வருகிறார்கள், போகிறார்கள். அம்மாதிரிதான் ' ' யாதும் என்று நினைத்திருந்தவளுக்கு, ஜீப்பிலிருந்து பிரகாசம் இறங்கியதைக் கண்டதும் எப்படி இருக்கும்! ''வாருங்கள், வாருங்கள்!'' என்று அளவுக்கு மீறி உரத்துக் கூப்பிட்டதோடு, பகல் நேரத்தில் சற்றுக் கண்ணயர்ந்து ஓய்வெடுத்துக் கொண்டிருந்த அம்மாவைக்கூட உலுக்கி எழுப்பிவிட்டேன்.

''நான் சொன்ன கம்பெனிக்கு - தினகரா பிரைவேட் லிமிடெட் - நாளைக் காலை போ. கைமேல் அப்பாயிண்ட் மெண்ட் ஆர்டர் கொடுத்து விடுவார்கள்,'' என்று எனக்குச் சொன்ன வண்ணமே நான் பிரித்துப் போட்ட நாற்காலியில் உட்கார்ந்தார் பிரகாசம்.

''என்னவோ நீங்கள்தான் தெய்வம் மாதிரி...'' என்று அம்மா தூக்கக் கலக்கம் பாதியும் கூச்சம் பாதியுமாகத் தடுமாறினாள்.

ஆனால் பிரகாசம், ''இதிலே என்ன பிரமாதம்?'' என்று ஒரே வார்த்தையில் அவளுக்குப் பதில் கூறிவிட்டு, என்னையே பார்த்துப் பேசி--ர். அவர் சொல்லப்போவதை நான் உன்னிப்பாகக் கேட்டுக்கொள்ள வேண்டும் என்று அவருடைய பார்வையிலிருந்து புரிந்துகொண்டேன்.

''நாளைக்காலை பதினொன்றுக்கு மேல் பன்னிரண்டு மணிக்குள் அங்கே நீ இருக்கவேண்டும். குப்தா என்பவர்தான் இன்ட்டர்வியூ செய்து கொண்டிருப்பார். அவர்தான் எனக்கு வேண்டிய நபர்.'' 'வேண்டிய' என்ற சொல்லை உச்சரிக்கும்போது அவர் கண் ஜாடை காட்டினார். அந்தக் குப்தா என்பவர்தான் அவர்களுடைய இலாகாவுக்கு உட்கையான நபர் ஊகித்தேன். ''குப்தாவிடம் உன் பெயரை மட்டும் சொல்லு. என் பெயரை சொல்லவேண்டாம். கொஞ்சம் இரு என்று சொல்லி அப்பாயிண்ட்மெண்ட் ஆர்டரை டைப்படித்துக் கொடுத்துவிடுவார்.''

''தாங்ஸ் சார், மெனி மெனி தாங்ஸ் சார்,'' என்றேன் பள்ளிக்கூடச் சிறுமியைப்போல.

''ஆனால் குப்தா இல்லாத வேறு நேரத்தில் போனால், வேறு யாரேனும் உன்னைப் பேட்டி கண்டால், இந்த வேலை உனக்கு நிச்சயமில்லை. அதற்கு நான் ஜவாபுமில்லை,'' என்றார் பிரகாசம்.

''தலை போனாலும் போய்விடமாட்டேனா டாணென்று?'' என்றேன் பெருமையுடன்.

அதற்குள் அம்மா கன்னங்கரேலென்று ஒரு டம்ளர் காப்பி போட்டு எடுத்து வந்துவிட்டாள். குடித்துவிட்டு எழுந்துகொண்டார் பிரகாசம்.

வாசல்வரை சென்று ஜீப்பை வழியனுப்பிவிட்டு வந்தேன்.

''ஹேமா, வா இப்படி,'' என்று அவசரமாக அழைத்தாள் அம்மா, வீட்டுக்குள்ளிருந்து. ''புடவை மாற்றிக் கொள் சீக்கிரமாய்.''

''எதற்காக? எங்கே போகப் போகிறோம்?'' என்றேன் திகைப்புடன்.

''கௌரியம்மாளைப் பார்த்து நமஸ்காரம் பண்ணு. வேலைகிடைக்கப் போகிற விஷயத்தைச் சொல்லு. நல்ல காலம். வெளியே எங்கேயும் போகாமல் வீட்டில்தான் இருக்கிறார்,'' என்றாள் அம்மா.

வந்ததே பார்க்கவேண்டும் எனக்கோர் ஆத்திரம். ''அந்த அம்மாளை நான் ஏன் நமஸ்காரம் பண்ண வேண்டும்? அவள் எனக்கு அம்மாவா, மாமியாரா?'' என்றேன்.

''ஹேமா!''

''அல்லது, எனக்கு இந்த வேலையை அவள் வாங்கிக் கொடுத்தாளா?''

''அவர் மனசு வைத்தால் இதைப்போல நூறு வேலை வாங்கிக் கொடுப்பார். நீ பெரிய கௌரவக் குறைவாக நினைப்பாயே என்றுதான் நான் கேட்கவில்லை. தெரியுமா?''

''ரொம்ப சந்தோஷம். அதேபோல் இப்போதும் என் உணர்ச்சிகளுக்கு மதிப்புக் கொடுத்து, பேசாமல் இரு. நமஸ்காரம் பண்ண வேண்டுமாம் நமஸ்காரம்!''

''இதோ பார்!'' என்று என் மோவாயைத் தன் பக்கமாகத் திருப்பினாள் அம்மா. அவள் விரல்கள் அழுத்திய அழுத்தலில் என் மோவாயில் எரிச்சல் ஏற்பட்டது. ''அவரை நமஸ்காரம் பண்ணி, ஆசீர்வாதம் வாங்கிக் கொண்டு வேலைக்குப் போவதானால் போ. இல்லாவிட்டால் எந்த வேலைக்கும் நீ போகவேண்டாம். புரிகிறதா''

''போகாமல் இங்கேயே இருந்துவிடுவேன். ஆனால் இனிமேல் நீ அவரிடம் அடகு வைப்பதற்கு என்னிடம் கோப்பையோ, மெடலோ கிடையாது!'' என்னையும் அறியாமல் வெளிப்பட்டுவிட்டன அந்த வார்த்தைகள்!

ஒரே ஒரு கணம் அம்மாவின் முகம் இருளடைந்தது. ஆனால் உடனே மாற்றிக்கொண்டாள். ''என்ன கன்னா பின்னாவென்று பேசுகிறாய்? உன்னுடைய பீற்றல்

கோப்பைகளை நான் ஏன் எடுத்துப் போகிறேன்? அவ்வளவும் இதோ இருக்கிறது பார்!''

அலமாரிக் கதவுகளைப் படீரென்று திறந்தாள்.

என்னுடைய வெள்ளிக் கோப்பைகள்!

ஆரவாரத்துக்கும் கைதட்டல்களுக்குமிடையே மேடையேறிப் பெற்று, மார்போடணைத்துக்கொண்டு திரும்பி, பாசாங்கு அடக்கத்தோடு பக்கத்திலிருந்தவர்களுக்குக் காட்டி மகிழ்ந்த வெற்றிப் பரிசுகள்! பளபளவென்று இரண்டு தட்டுக்களை அடைத்துக்கொண்டிருந்தன.

அதிர்ச்சியினால் எனக்கு வார்த்தைகள் குழறின.

''ஏது அவ்வளவு பணம் உனக்கு? எப்படி... எப்படி இதையெல்லாம் மீட்டாய்?'' என்றேன்.

''திருப்பித் திருப்பி அதையே சொல்கிறாயே! ஓரிடத்துக்கும் போகவில்லை இதெல்லாம். இங்கேயேதான் இருந்தது. நீ பார்க்கவில்லையென்றால் அதற்கு நானா பிணை?'' என்றாள் அம்மா.

எனக்கு ரத்தம் கொதித்தது, அவள் பார்வையில் தென்பட்ட கள்ளத்தனத்தைக் கண்டதும். எனக்கு ஞாபகமிருந்து அம்மா இதுவரையில் எதற்காகவும் என்னிடம் பொய் பேசியது கிடையாது. தன்னைக் காட்டிலும் வயதில் சின்னவர்களிடம் போய்ப் பொய் சொல்கிறாளென்றால், எவ்வளவு மனச்சாட்சிக்கு விரோதமான செயலை அவள் செய்திருக்க வேண்டும்? அதை எண்ணிப் பொருமினேன் நான்.

எதை நான் பிச்சை என்று சொல்லி ஹரியிடம் ஏற்க மறுத்தேனோ அதையே அம்மா மான ரோஷமில்லாமல் அவன் அக்காவிடம் வாங்கி கொண்டு வந்திருக்கிறாள்! என்ன சொல்லிக் கெஞ்சினாளோ?

''ஒரு பை எடு,'' என்றேன்.

''எதற்கு?'' என்றாள் அம்மா.

''இதையெல்லாம் போட்டுக் கொண்டு போய் அந்தக் கௌரியம்மாளிடமே திருப்பிக் கொடுத்துவிட்டு வரப் போகிறேன்,'' என்றேன்.

''ஹேமா!'' நெருப்புக் கக்கும் விழிகளால் என்னைப் பொசுக்கிவிடுகிறமாதிரி பார்த்தாள் அம்மா. ''அந்த மாதிரி ஏதாவது செய்தாயோ தெரியும் சேதி! திருப்பிக் கொண்டு போய்க் கொடுப்பதாம் திருப்பி! என்ன நினைப்பார் அந்த அம்மாள்?''

''அவள் நினைப்பதை மட்டும் சொல்கிறாயே! நான் ஒன்றும் நினைக்கமாட்டேனா? நீ ஒன்றும் நினைக்கக்கூடாதா? பிச்சை எறிகிற மாதிரி அந்த அம்மாள் ஒன்றைத் தூக்கிப் போட்டால் நாய்மாதிரி கௌவிக்கொண்டு வந்து விடுவதா?''

''உனக்கு வாய் நீண்டுகொண்டே போகிறது,'' என்றாள் அம்மா. ''நீயும் நானும்...''

நான் மேலே பேசுமுன் ''சாரதாம்மா! சாரதாம்மா!'' என்று மிக இனிமையான குரலொன்று வாசலில் அழைத்தது.

''ஐயையோ! கௌரியம்மாளே வந்துவிட்டார்! என்னவெல்லாம் அவர் காதில் விழுந்ததோ!'' என்று என்னைப் பார்த்துப் பல்லைக் கடித்துவிட்டு வாசலுக்குப் பாய்ந்தாள் அம்மா.

''நீயா இவ்வளவு சத்தம் போட்டு இரைந்து கொண்டிருந்தாய்? இத்தனை வருஷங்களில் நான் உன் குரலையே கேட்டதில்லையே?'' என்று வெகு இனிமையாக, வெகு பரிவாக, வினாத் தொடுத்தாள் கௌரியம்மாள்.

அம்மா வெட்கத்துடன் தலைகுனிந்துகொண்டு, புடவைத் தலைப்பைத் திருகியவாறு, ''ஒன்றுமில்லை...

ஏதோ எதிர்த்துப் பேசினாள். அதனால் கொஞ்சம் கோபம் வந்தது...'' என்றாள்.

''பாவம், அவள் வந்து இரண்டு நாளாகவில்லை. அதற்குள் பிலுபிலுவென்று பிடித்துக்கொள்கிறாயே!'' என்றாள் கௌரியம்மாள். பின்கைகளைக் கட்டியவாறு, முகத்தைச் சிறிதும் அசைக்காமல், குரலில் தக்க ஏற்றத்தாழ்வு தந்து அவள் பேசிய தோரணை - அதிலும் எனக்குப் புரிந்துகொண்டு வந்த விதம் - என் ஆத்திரத் தீயை விசிறி கொண்டு வீசியது.

''பிரகாசம் வந்திருந்தார் போலிருக்கிறதே?'' என்று கேட்டுக்கொண்டே கார் ஷெட்டை நோக்கி நடந்தாள் கௌரியம்மாள். ''ஹேமாவுக்கு வேலை ஏதாவது பார்த்துத் தரச் சொல்லியிருக்கிறேன் என்றாயே?''

''ஆமாம். அதற்காகத்தான் வந்திருந்தார். நாளைக்கு ஏதோ ஒரு கம்பெனிக்குப் போகச் சொல்லியிருக்கிறார். நிச்சயமாய்க் கிடைக்குமாம்,'' என்றாள் அம்மா.

''என்ன கம்பெனி?'' என்ற கௌரியம்மாள், ''ஷெட் சாவியை மறந்துவிட்டேன், எடுத்து வா, என்று தோட்டக்காரனை விரட்டினாள்.

என்ன கம்பெனி என்று அம்மாவுக்கு மறந்துவி[illegible]டதால் அவுட் ஹவுசை நோக்கி, 'ஹேமா! இங்கே கேட்[illegible]றார்கள் பார்,'' என்று குரல் கொடுத்தாள்.

எனக்கு வேறு வழியிருக்கவில்லை. உ[illegible]ளேயே இருந்தவள் வேண்டாவெறுப்பாக வெளிப்பட்டு, [illegible]தினகரா பிரைவேட் லிமிடெட்'' என்றேன்.

கௌரியம்மாள் தனக்குத் தானே பேசிக்கொள்கிற மாதிரி, ''தினகரா பிரைவேட் லிமிடெட்... கேள்விப்பட்டதாக இல்லை... தினத்துக்கொன்று முளைக்கிறது புதிது புதிதாய்... ஆனால் பிரகாசம் சொன்னாரென்றால் நல்ல ஸ்தாபன மாகத்தான் இருக்கும்,'' என்றாள்.

நான் உள்ளே திரும்பிவிட்டேன். தோட்டக்காரன் ஷெட்டின் சாவியை எடுத்துவந்து தந்தான். கௌரியம்மாள் தானே காரை ஸ்டார்ட் செய்து வெளியே கொண்டுவந்தாள். அத்தனை நேரமும் அம்மா அங்கேதான் நின்றிருந்தாள், கைகட்டிச் சேவகியாக.

திடீரென்று என் கவனம் கலைந்தது ஓர் அன்னிய மொழியினால். ஜன்னலருகே நின்றுகொண்டு மறுபடி கேட்டேன். சந்தேகமின்றி, அம்மாவும் கௌரியம்மாவும்தான் ஏதோ பேசிக் கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் தமிழில் அல்ல. வேறொரு மொழியில்.

உச்சரிப்பிலிருந்தும் இரண்டொரு சொற்களிலிருந்தும் அது கன்னடம் என்று அறிந்துகொண்டேன். வியப்புப் பரவியது என் உள்ளத்தில். அம்மா எப்போது கன்னடம் கற்றுக்கொண்டாள் என்பதற்காக மட்டுமல்ல, திடுதிப் பென்று அந்தமாதிரி ஓர் அயல்மொழியில் அவர்கள் உரையாட வேண்டிய அவசியமும் எனக்குப் பிடிபட வில்லை.

'ஈ ஹெண்ணு பிடக்குடது.. ஹடஹச்சி இக்களபேக்கு' என்ற சொற்கள் மட்டும் என் உள்ளத்தில் பதிந்தன.

அடுத்த நாள் காலை.

''எனக்கு வேலை இருக்கிறது. பங்களாவுக்குப் போகிறேன். கௌரியம்மாளைத்தான் நமஸ்காரம் பண்ணமாட்டேன் என்று சொல்லிவிட்டாய். சுவாமி படத்துக்காவது ஒரு ஊதுவத்தி கொளுத்தி வைத்து, கன்னத்தில் போட்டுக்கொண்டுவிட்டுப் புறப்படு,'' என்று கூறிவிட்டுப் போனாள் அம்மா. ''சரியம்மா,'' என்றேன்.

நான் குளித்து உடையணிந்து கிளம்புகிறபோது மணி பத்து இருக்கும்.

திடுப்பென்று, "ஸ்... அப்பாடி! அம்மா!" என்று காலை நொண்டிக்கொண்டே வந்தாள் அம்மா.

"என்னம்மா, என்ன?" என்று பதறினேன்.

"பாத்ரூமில்... அந்தப் பாவி வேலைக்காரியிடம் எவ்வளவு முட்டிக் கொண்டேன் தெரியுமா, சோடா உப்புத் தூவிச் சுத்தம் செய் என்று... செய்யாமல்... அப்பா! ஒரே பாசி..." நொண்டி நொண்டி உள்ளே வந்து சுவரில் சாய்ந்து கொண்டுவிட்டாள்.

முழங்காலைத் தொட்டேன் - 'இங்கேயா அடிபட்டது?" என்று கேட்டபடி.

"ஆ!" என்று அலறி விலகிக் கொண்டாள் அம்மா. "அயோடெக்ஸ் இருக்கிறது பார் அதோ அந்தப் பிறையில்... எடு.. ஐயோ! போட்டது போட்டபடி வந்துவிட்டேனே அங்கே... விருந்தாளிகள் வேறே வருகிறார்களாம்... கௌரியம்மாள் சொன்னாரே..."

"அட, என்னம்மா நீ ஒன்று!" களிம்பைத் தடவிவிட்டேன் அம்மாவின் முழங்காலில்.

"ஹேமா.. என் கண்ணம்மா.. கொஞ்சம் அங்கே போய், பாக்கி சமையல் வேலைகளை முடித்துவிடடி..."

"அம்மா, மணி பார்த்தாயா?" என்று என் கைக்கடிகாரத்தை அவள் கண்முன்னே நீட்டினேன். "பத்தே காலாகிறது. பதினொன்றுக்கெல்லாம் நான் இன்ட்டர்வியூவுக்கு இருக்க வேண்டும். மறந்துவிட்டதா?" என்றேன்.

"ஆமாம், ஹேமா, அது மறந்தே போச்சு. சரி, இருந்தாலும் பரவாயில்லை. நாளை மறுநாள் மறுபடி பிரகாசத்திடம் சொல்லி இன்னொரு தடவை முயற்சி பண்ணிக்கொள்ளலாம். விருந்தாளிகள் வருகிற சமயம் பார்த்து, நான்தான் காலை ஒடித்து வைத்துக் கொண்டேன் என்றால், வயது வந்த பெண், சமையல் தெரிந்தவள்,

சட்டென்று கைகொடுக்காமல், எனக்கென்ன ஆச்சு என்கிற மாதிரி போகலாமா? என் செல்லமில்லையா, சொல்வதைக் கேள்...''

''சே!'' என்று வெறுப்புடன் என் கைப்பையைத் தூர எறிந்தேன். (முதல்நாள் மாலைதான் ஆசையாய் வாங்கி யிருந்தேன், பேட்டிக்குப் போவதற்காகவே.) ''பிரகாசம் சொன்ன வேலைக்குத் தலைமுழுக வேண்டியதுதான்.. சமையலுக்குத் தொலைகிறேன். ஆனால் அதைப் பண்ணு, இதைப் பண்ணு என்று விரட்டினார்களோ... ஆமாம்! நான் மகா பொல்லாதவளாகிவிடுவேன்...''

''யாரும் விரட்டமாட்டார்கள்,'' என்றாள் அம்மா.

பங்களாவுக்குள் நுழைந்து நேரே சமையற்கட்டுக்கே போனேன்.

அம்மா சொன்ன மாதிரி எல்லாம் அலங்கோலமாகவே இருந்தன. கியாஸ் அடுப்பு வீணாய் எரிந்துகொண்டிருந்தது. வெங்காயம் பாதி நறுக்கப்பட்டுப் பாதி முழுசாகக் கிடந்தது.

முதலில் கியாஸை அணைத்தேன். சாம்பாருக்குப் புளி கரைக்கலாம் என்று குழாயில் தண்ணீர் பிடித்து கொண்டிருந்த போது—

''கொஞ்சம் சுடு தண்ணீர் இருக்குமா, சாரதாம்மா?'' என்ற குரல் கேட்டது.

'ஹரி!' என்று நான் மனத்துக்குள் சொல்லிக் கொண்டேன். அவனோ ''நீயா!'' என்று வாய்விட்டே வியப்பை வெளிப்படுத்தினான்.

''ஆமாம் - அம்மாவுக்கு திடீர் ஆக்ஸிடெண்ட். பாத்ரூமில் வழுக்கி விழுந்துவிட்டாள். ஆகவே நான் ரிலீவிங் குக்,'' என்றேன்.

''விழுந்தார்களா? எந்த பாத்ரூமில்? எப்போது?'' என்றான் ஹரி.

''இப்போதுதான் - ஐந்து நிமிஷம் முன்பு. இங்கேயுள்ள பாத்ரூமில்,'' என்றேன்.

''வேடிக்கையாக இருக்கிறதே! நான் இங்கே பாத்ரூமில் தாமே ஒரு ஷெல்பு அடித்துக்கொண்டிருக்கிறேன். ஒரு மணி நேரமாய்! உன் அம்மா அங்கே விழவில்லையே! இங்கே வேறு பாத்ரூம் ஏது?'' என்றான் ஹரி.

எனக்குத் திகீரென்றது. என்னைப் பெற்ற அன்னையிடம், நான் அறிந்திராத, பார்த்திராத ஒரு பகுதி இருக்கிறது என்ற சந்தேகம் முதல் முறையாக உதித்தது என் மனத்துள். அவளுக்கும் கௌரியம்மாளுக்கும் எஜமானி - சமையற்காரி உறவு தவிர வேறொன்றும் இருக்க வேண்டும்...

''ஹரி! உங்களுக்குக் கன்னடம் தெரியுமா?'' என்றேன்.

''தெரியுமே? எனக்குப் பத்து வயது ஆகிறவரை நாங்கள் மைசூரில்தானே இருந்தோம்?'' என்றான் ஹரி.

''ஈ ஹெண்ணு பிடக்குடது. ஹடஹச்சி இக்கள பேக்கு என்றால் என்ன அர்த்தம்?'' என்று கேட்டேன்.

## 4

''என்ன வார்த்தை?'' என்று அதிசயத்துடன் கேட்டான் ஹரி. நான் மீண்டும் சொன்னேன், என் செவியில் விழுந்திருந்த அந்தக் கன்னடச் சொற்களை.

ஹரி சொன்னான்: ''ஏதோ தப்பும் தவறுமாய்க் கேட்டு விட்டுச் சொல்கிறாய். ஆனால் 'இந்தப் பெண்ணை இப்படி விடக்கூடாது. அடக்கி வைக்கணும்' - கிட்டத்தட்ட இவ்வளவுதான் அர்த்தம். எங்கே இதைக் கேட்டாய்? யார் சொன்னது அப்படி?''

ஒரு நிமிடத்தில் எனக்குப் புரிந்துவிட்டது. என்னை வேலைக்குப் போகாமல் தடுக்கத் திட்டமிட்டிருக்கிறார்கள்

அம்மாவும் கௌரியம்மாளும்! ஏன்? அதுமட்டும் தெரியவில்லை.

சமையலறையில் போட்டது போட்டபடி விட்டு விட்டு வெளியேறினேன் நான். ''நல்ல வேளை மணி பத்தரைதான் ஆகிறது,'' என்று வெளிவராந்தாவிலிருந்த டைம்பீஸைப் பார்த்து எனக்கு நானே சொல்லிக் கொண்டேன்.

''ஹேமா! கொஞ்சம் இரு. என்ன நடந்தது?'' என்று கேட்ட ஹரிக்குப் பதிலேதும் தரவில்லை.

முழங்காலை நீவி விட்டுக்கொண்டு சுவரில் சாய்ந்தாற் போல் உட்கார்ந்திருந்த அம்மா என்னைக் கண்டதும் திடுக்கிட்டாள்.

''ஏன் அதற்குள் வந்து விட்டாய்? ஏதாவது சமையல் செய்தாயா, இல்லையா?'' என்ற அவள் கேள்விகளுக்கு நான் பதில் கொடுக்கவில்லை. குழாயடிக்குச் சென்று முகம் கழுவிக் கொண்டேன். தலையை மறுபடி சரிசெய்து கொண்டேன். உடையின் சுருக்கங்களை தடவிவிட்டு, கண்ணாடியில் ஒருமுறை பார்த்துக் கொண்டேன். கோபத்தினாலும் வேகத்தினாலும் படபடப்பினாலும் செக்கச் செவேலென்றாகி விட்ட முகத்தில் பவுடர் ஒற்றிக்கொண்டபோது சுள்ளென்று எரிகிற மாதிரி இருந்தது.

ஹாண்ட் பாக்கைத் தோளில் ஏற்றிக்கொண்டு, காலில் செருப்பை மாட்டிக்கொண்ட போதுதான் அம்மா தன்னை மறந்து எழுந்துவிட்டாள். கால் ஒடிந்தவளாகப் பாசாங்கு செய்ய வேண்டும் என்ற நினைப்பு ஒரு கணம் அவளுக்கு மறந்துவிட்டது. நொண்டாமல், தடுமாறாமல் எழுந்து வந்து என் எதிரே வழியை மறிக்கிற மாதிரி நின்று கொண்டு, ''என்னடி வந்துவிட்டது உனக்கு?'' என்றாள் பல்லைக் கடித்துக் கொண்டு.

''எனக்கு ஒன்றும் வரவில்லை.'' என்றேன் கோபத்தைக் காட்டாமல். ''உனக்குத்தான் வந்திருக்கிறது - பணக்கார

சினேகிதம், கன்னட மொழியில் ஞானம், பெற்ற பெண்ணுக்கு எதிராகச் சூழ்ச்சி செய்கிற புத்தி, நடிப்புத் திறமை எல்லாம்!''

அம்மா பின்னடைந்து போய், தானாகவே என் வழியை விட்டு விலகிக் கொண்டாள். அவள் உதடுகள் துடித்தன கோபத்தால்.

மவுண்ட் ரோடு தபால் நிலையத்துக்கு எதிர்ச் சாரியில், இரண்டு தியேட்டர்களுக்கு இடையிலிருந்த ஒரு சந்துக்குள் இருந்தது தினகரா பிரைவேட் லிமிடெட். புராதனமான கட்டடம் அது. காரை உதிர்ந்த பெரிய தூண்களைக் கொண்ட வெராந்தாவில் அடுத்தடுத்துப் பல வாசற்படிகள் தெரிந்தன.

எதிர்ப்பட்ட அத்தனை வாசல்களில் எதில் நுழைந்தால் பிரகாசம் குறிப்பிட்ட குப்தா என்பவர் இருப்பார்? சிறிது தடுமாறினேன். ஆனால் வெராந்தாவின் மறுகோடியில் ஒரு வாசலையொட்டி பெஞ்சு போடப்பட்டிருப்பதையும் ஐந்தாறு பெண்கள் காத்திருப்பதையும் கவனித்தவுடன் என் தடுமாற்றம் தணிந்தது. அவர்களும் வேலைக்குப் பேட்டிக்காகத்தான் வந்திருக்கிறார்கள் என்பதை அவர்கள் தோற்றத்திலிருந்தும் காத்துக் கொண்டு உட்கார்ந்திருந்த மாதிரியிலிருந்தும் கண்டு கொண்டேன்.

ஏழாவது மனுதாரியாக நானும் போய் உட்கார்ந்து கொண்டேன். மணியாகிறதே என்று வழியில் தென்பட்ட கடிகாரங்களையெல்லாம் பார்த்துப் பதைத்துக்கொண்டு ஓடிவந்ததில் மூச்சு இரைத்தது. பெஞ்சில் உட்கார்ந்ததும் ஆசுவாசப் பெருமூச்சுவிட்டேன்.

பியூன் ஒவ்வொருவர் பெயராகக் கூப்பிட்டு, உள்ளே அழைத்துச் சென்றான். ஐந்து நிமிடத்தில் அவர்கள் பேட்டி முடிந்து வெளியேறினார்கள்.

இறுதியில் என்முறை வந்தது. உள்ளே சென்று ''வணக்கம் சார்,'' என்றேன்.

தலையை நிமிராமலே உட்காரும்படி சைகை காட்டினார் குப்தா. ஜலதோஷத்துக்கு மூக்கில் உறிஞ்சிக் கொள்ளும் இன்ஹேலர் குப்பி இருக்குமே, அதுபோல் குள்ளமாய், மெல்லிசாய், வெளுப்பாய் இருந்தார் அவர். வயது ஐம்பதிருக்கும். முக்காலே மூன்று வீசம் வழுக்கை விழுந்து விட்ட தலை.

அன்று கப்பலில் நான் எழுதிக் கொடுத்த விண்ணப்பத் தாள் அவர் முன் இருந்தது. ''பெயர்? வயது? ஊர்?'' என்ற கேள்விகளைக் கேட்டு, அந்த விண்ணப்பத்தில் 'டிக்' செய்து கொண்டு வந்தார். 'நீயும் நானும் இங்கே ரகசியமான உறவுக்காரர்கள்' என்று என்னைப் பார்த்து விஷமமாகப் புன்னகை செய்து கண்களைச் சிமிட்டுவார் என்று நினைத் தேன். அப்படி எதுவும் செய்யாதது ஆச்சரியமாயிருந்தது. மெய்யாகவே பெரிய காரியங்களில் ஈடுபட்டிருப்பவர்கள் அப்படிப்பட்ட சில்லறை சமிக்ஞைகளில் ஈடுபடமாட்டார்கள் என்பதை உணருகின்ற பக்குவம் எனக்கில்லாததே காரணம்.

''வெளியே போய் உட்கார்ந்திரு. வீட்டுக்குப் போய்விட வேண்டாம்,'' என்றார் குப்தா.

திரும்பவும் பழைய பெஞ்சில் வந்து உட்கார்ந்து கொண்டேன்.

இந்த ஆபீசிலா நான் வேவு பார்க்கப் போகிறேன்? மலைப்பாக இருந்தது.

யாரோ என்னைத் தட்டினார்கள் தோளில்.

என்னைக் காட்டிலும் மூன்று நாலு வயது பெரியவளான பெண் அவள். மாநிறமானாலும் முகத்தில் நல்ல களை இருந்தது.

''நீங்கள்தானே ஹேமா? என்னோடு வாருங்கள்,'' என்றவள் இன்னொரு வாசலின் வழியே உள்ளே அழைத்துச் சென்றாள்.

ஏராளமான ஸ்டீல் பீரோக்கள் தடுப்புச் சுவர்கள்போல் வரிசையாக இருந்தன. அவற்றின் நடுவே பல குமாஸ்தாக்கள் வேலை செய்து கொண்டிருந்தார்கள். தினகரா பிரைவேட் லிமிடெட் என்பது அப்படியொன்றும் சிறிய ஸ்தாபனம் அல்ல என்று எண்ணிக் கொண்டேன்.

அந்த ஹாலைக் கடந்ததும் குப்தாவின் அறையைப் போலவே ஒரு சிறிய அறை இருந்தது. அங்கே நாங்கள் நுழையுமுன்பே கிய் என்ற ரீங்காரம் கேட்டுக் கொண்டிருந்தது. ''அடாடாடா! ஒரு நிமிஷம் அந்தண்டை இந்தண்டை போக முடியாது!'' என்று சலிப்புடன் சொல்லிக் கொண்டே அந்தப் பெண் உள்ளே ஓடினாள்.

அவள் டெலிபோன் ஆபரேட்டர் என்பதை அறிந்தேன், அங்கே இருந்தது, கர்னாடகமான ஒரு டெலிபோன் எக்ஸ்சேஞ்ஜ் பல ஒயர்களும் பல ஸ்விட்சுகளும் இரண்டு டயல்களும் பல துவாரங்களுமாயிருந்த மேஜையில் ஏதோ ஒரு ஒயரைச் சட்டெனப் பறித்து, சின்னஞ் சிறு பல்பு எரிந்துகொண்டிருந்த இடத்தில் செருகினாள். ''தினகரா பிரைவேட் லிமிடெட். குட்மார்னிங். பர்சேஸ்? ஜஸ்ட் எ மினிட்,'' என்று டெலிபோன் ரிஸீவரில் கூறினாள். டக் டக்கென்று ஸ்விட்டுசுகளைத் தட்டிவிட்டாள். டெலி போனில், ''மெட்றாஸ் ஸ்டீலில் கூப்பிடுகிறார்கள்,'' என்று கூறி மறுபடி ஒரு ஒயரைத் துவாரத்திலிருந்து வெளியே இழுத்துவிட்டு ஒரு புன்சிரிப்புடன் என் பக்கம் திரும்பினாள். அவளுடைய சுறுசுறுப்பு ஆச்சரியமாயிருந்தது.

''அதுதான் உங்கள் இடம்,'' என்று அறையின் மற்றொரு புறத்திலிருந்த மேஜை நாற்காலியை எனக்குச் சுட்டிக் காட்டினாள். மேஜைமீது கோணல் மாணலாக அடுக்கப்பட்ட ஒரு காகிதக் கட்டு இருந்தது. ஒரு புதிய ஃபைலும் இருந்தது அதனருகே.

''எனக்கு வேலை கொடுத்துவிட்டார்களா?'' என்றேன், வியப்புடன்.

''இன்றையிலிருந்து உங்களை வேலையில் சேர்த்தாகி விட்டது. நாளைக்கு ஆர்டர் தருவார்கள்,'' என்றாள் அவள்.

பிரகாசத்தையும் இறைவனையும் நெஞ்சார நன்றியுடன் நினைத்துக் கொண்டேன்.

''என்னென்ன வேலைகள் செய்ய வேண்டும்?'' என்று கேட்டேன்.

''கடிதங்களையெல்லாம் தேதி வாரியாக அடுக்கி பஞ்ச் பண்ணி, ஃபைலில் சேர்த்துவிட வேண்டும். அதுதான் இப்போதைக்கு உங்கள் வேலை. நடுவே எனக்கு வேலை ஒழியும்போது உங்களுக்கு டெலிபோன் ஆபரேடிங் கற்றுத் தருவேன்,'' என்றாள்.

அவளுடைய வேகமான சுபாவம் எனக்குப் பிடித் திருந்ததால் ''வணக்கம் டீச்சர்,'' என்றேன் தமாஷாக.

''என் பெயர் வனஜா,'' என்று அவள் சொல்லும்போதே டெலிபோன் மேஜையில் பல்புகள் எரிவதும் கிய் கிய் கிய் என்ற ஓசைகள் எழுவதுமாயிருந்தன. வனஜா எல்லா வற்றுக்கும் ஈடு கொடுத்தபடியே என்னிடமும் பேசிக் கொண்டிருந்தாள். ''பீக் அவர் டிராஃபிக் என்கிறார்களே, அது போல இது பீக் அவர் டெலிபோன்,'' என்றாள் அவள். ''அவரவர்கள் முந்தின ராத்திரி யோசனை செய்து வைத்த சூழ்ச்சிகளையெல்லாம் காலையில் ஆபீசுக்கு வந்ததும் ஒப்பித்தாக வேண்டுமே. இல்லாவிட்டால் மண்டை வெடித்துவிடாதா? அதனால்தான் இந்தப் பீக் அவர் ரஷ்!''

'சூழ்ச்சி' என்று அவள் சொன்னது எனக்கு வினோத மாகப்பட்டது. அதை விளையாட்டாகச் சொன்னாளா அல்லது இந்த அலுவலகத்தில் நடைபெறும் ரகசியக் காரியங்களை ஓரளவுக்குத் தெரிந்து வைத்துக்கொண்டு பேசுகிறாளா? அவள் முகத்திலிருந்து எதையும் அறிய முடியவில்லை.

நான் என் மேஜைக்குச் சென்று கடிதங்களைத் தேதி வாரியாக அடுக்க ஆரம்பித்தேன். வெளி நாட்டு ஸ்தாபனங்

களுடன் நடத்திய கடிதப் போக்குவரத்துக்கள் அவை. பெரும்பாலும் யந்திர பாகங்களைப் பற்றிய விஷயமாக இருந்ததால் எனக்குப் புரியவில்லை. நடுநடுவே, சில கருவிகள் சரியாக இல்லையென்பதால் வேறு அனுப்பித்தர வேண்டும் என்று சில கடிதங்கள் எழுதப்பட்டிருந்தன. அவைகளை ஒழுங்காக அடுக்கிய பின் பஞ்சிங் மெஷினில் ஓட்டை போட்டு ஃபைலில் கோக்கத் தொடங்கினேன்.

புதுக் குமாஸ்தா வேலைக்கு வந்துவிட்ட சேதி அதற்குள் எல்லா இலாக்காக்களுக்கும் பரவிவிட்டது போலிருக்கிறது. பல ஃபைல் கட்டுக்களையும் கடிதங்களையும் என் மேஜை மீது கொண்டு வந்து குவிக்கலானார்கள் பியூன்கள்.

இடைவேளை நேரத்தை அறிவிக்க மணியடித்தார்கள்.

சிப்பந்திகள் பலர் எங்கள் அறையை எட்டிப் பார்த்த தோடு, என்னையும் விழி தெறிக்கிற மாதிரி பார்த்துவிட்டுச் சென்றார்கள். டெலிபோனில் 'ஜஸ்ட் எ மினிட்' மந்திரத்தை ஜபித்தபடியே எட்டிப் பார்க்கிறவர்களுக்கு விஷ் பண்ணுவதும் ஹலோ போடுவதுமாக இருந்தாள் வனஜா. எனக்கு அவளுடைய கலகலப்பு பொறாமையாகக்கூட இருந்தது ஒரோர் சமயம்.

''அப்பாடா! இனிமேல் ரஷ் கொஞ்சம் குறையும்,'' என்று கூறிய வனஜா, டெலிபோன் மேஜையின் மேற் புறத்தைத் தூக்கினாள். பள்ளிக்கூட டெஸ்குகளைப்போல் அது திறந்துகொண்டது. ''உங்களுக்குத் தோசை பிடிக்கு மில்லையா?''

பின்னர்தான் நான் கவனித்தேன் அவள் டிபன் பொட்டலத்தை எடுத்திருக்கிறாள் என்று. காலையில் அம்மாவிடம் சண்டை போடாமல் புறப்பட்டிருந்தால் நான் சாப்பாடும் சாப்பிட்டு டிபனும் எடுத்து வந்திருக்கலாம். இரண்டுமில்லாமல் வயிறு காய்ந்து கொண்டிருப்பதை அப்போதுதான் உணர்ந்தேன். இருந்தாலும் அவளிடம்

எதையும் பெற வெட்கமாயிருந்தது. ''நான் சாப்பிட்டு விட்டுத்தான் வந்தேன். நீங்கள் சாப்பிடுங்கள்,'' என்று சொல்லிவிட்டு என் வேலையில் மூழ்கினேன்.

வனஜா என்னை வற்புறுத்தவில்லை. தோசையை விண்டு விண்டு வாயில் போட்டுக்கொண்டே இடது கையால் டெலிபோனையும் ஆபரேட் செய்து கொண்டிருந்தாள்.

எல்லாம் நறுவிசாக முடிவடைந்ததும், ''ஓகே! ஆரம்பிக்கலாமா?'' என்றபடி உள்ளங்கைகளைப் பரபர வென்று தேய்த்துக் கொண்டாள்.

''என்ன ஆரம்பிப்பது?'' என்று திகைத்தேன்.

''டெலிபோன் ஆபரேடிங்தான்,'' என்றாள் அவள். ''ரெடி தானே?''

''ரெடி டீச்சர்.''

''எல்லாவற்றையும் ஆஃப் செய்து வைத்திருக்கிறேன் பாடம் ஆரம்பிப்பதற்காக,'' என்றாள் வனஜா. அதோ அந்த பிபிஎக்ஸ் பெட்டிதான் மெயின். அதை ஆன் பண்ணுங்கள் முதலில்.''

சுவரில் பதிந்திருந்த இரும்புப் பெட்டியில் ஸ்விட்சைத் தட்டிவிட்டேன்.

''இதோ இங்கே போர்ட் கீயையும் ஆன் பண்ணிக் கொள்ளுங்கள்,'' என்றாள்.

அவள் காட்டிய ஸ்விட்சையும் தட்டினேன்.

''இந்தப் போர்டை 'ஃபைவ் பிளஸ் ட்வென்ட்டி' என்று சொல்வார்கள். அதாவது இருபது எக்ஸ்டென்ஷன்வரை கொடுக்கலாம் என்று அர்த்தம். ஆனால் இப்போது ஒன்பது இலாக்காக்களுக்குத்தான் எக்ஸ்டென்ஷன் வைத்திருக் கிறோம். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு நம்பர் உண்டு.''

''என்னென்ன இலாக்காக்கள்?'' என்று குறுக்கிட்டேன்.

''இதோ இந்த அட்டையில் ஒட்டி வைத்திருக்கிறேன். இரண்டு, மூன்று நாட்களில் உங்களுக்கு நெட்டுருவாகிவிடும். இங்கே கவனியுங்கள். இரண்டு டயல் இருக்கிறது. ஒன்று அவுட் ஆஃப் ஆர்டராகப் போய்விட்டால் இந்த எக்ஸ்டிராவைப் பயன்படுத்தலாம்..''

தங்களுக்குத் தண்ணீர் பட்ட பாடாக இருக்கிற விஷயத்தை மாணாக்கனும் கிடுகிடுவெனப் புரிந்து கொள்ள வேண்டியதுதானே என்று எல்லா ஆசான்களும் நினைப்பதுண்டு. வனஜாவும் அப்படித்தான் நினைத்துக் கொண்டு வேகமாகப் பேசிக்கொண்டே சென்றாள்.

''வெளியிலிருந்து கூப்பிடுகிறார்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். இதோ இந்த மூடி டொக்கென்று கீழே விழும். கிய் கிய் என்கிற சத்தமும் கேட்கும். ரிஸீவரை எடுத்துக் கேட்கிறீர்கள். ஸ்டோர்ஸ் டிபார்ட்மெண்ட்டைக் கூப்பிடச் சொல்கிறார்கள். எக்ஸ்டென்ஷன் நம்பர் என்ன? ஏழு. ஆன்ஸரிங் கார்டு - இதோ இருக்கிறதே இந்த ஒயர் - எடுத்து அந்த எக்ஸ்டென்ஷனுக்குண்டான துவாரத்தில் போட்டு, இந்தக் கைப்பிடியை - காப்பிக்கொட்டை மெஷின் மாதிரி இருக்கிறது, பாருங்கள் - இதை இரண்டு சுற்றுச் சுற்றினால் அந்த எக்ஸ்டென்ஷனில் மணி அடிக்கும்..''

எனக்கு போரடிக்கத் தொடங்கியது. கொட்டாவிகூட வந்தது. இருந்தாலும் அதைச் சாமர்த்தியமாக மறைத்துக் கொண்டு, ''எக்ஸ்டென்ஷனிலிருந்தே நம்மைக் கூப்பிடு கிறார்கள்? அப்போது?'' என்று ஒரு கேள்வி கேட்டு வைத்தேன்.

''அதற்கு லைட் எரியும். ஆ! இதோ ஜாக்கியில் லைட் எரிகிறது பாருங்கள். உள்ளேயிருந்து கூப்பிடுகிறார்கள் என்று அர்த்தம். எடுத்துக் கேளுங்கள்,'' என்று ரிஸீவரை எடுத்து என்னிடம் கொடுத்தாள்.

''எஸ்,'' என்கிறேன் வனஜா சொல்வதுபோலவே.

''வனஜா, பத்ராவதி அண்ட் கோவுக்குப் போட்டு மணி எப்போது யு.கே.யிலிருந்து வருகிறார் என்று விசாரி.''

அந்தக் குரல்! பனிக்கட்டியாலான கையொன்று என் இருதயத்தின் மீது அழுத்துகிற மாதிரி இருந்தது. என் தொண்டை உலர்ந்தது. என் கண்கள் வெளியே விழுந்து விடுகிறாற் போல தெறித்துக் கொண்டு நின்ற [redacted] டைனிங் ஹாலில் கேட்ட அதே குரல்.

''பதில் சொல், பதில் சொல்,'' என்று என் பக்கத்தி லிருந்து வனஜா பலமுறை கூறிய பிறகே நான் சுய உணர்வுக்குத் திரும்பினேன்.

''ஆரம்பத்திலேயே இவ்வளவு நெர்வஸாக இருக்கிறாயே?'' என்று என்னைக் கேலி செய்துவிட்டு, தானே ரிஸீவரை வாங்கிக்கொண்டாள் வனஜா. ''எஸ் சார்..'' போட்டுத் தருகிறேன் சார்..'' என்றவள் என்னைப் பார்த்தபடி ''இல்லை சார்.. புது குமாஸ்தா போட்டிருக்கிறார்கள் இங்கே டெலிபோன் ஆபரேட் செய்வதற்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருந்தேன். அப்போது நீங்கள் கூப்பிட்டீர்கள்.. என்ன சார்? ஆமாம் சார், புதுப் பெண். ஹேமா என்று பெயர். ரமா இல்லை, ஹேமா.''

''உஷ்!'' நெற்றியைக் கைகுட்டையினால் துடைத்துக் கொண்டு ரிஸீவரைத் திரும்ப வைத்தாள் வனஜா. ''வில்லன் வந்தாயிற்று. இனி ஒரு நிமிஷம் மூச்சுவிட முடியாது,'' என்று தனக்குள் முனகிக் கொண்டாள். அவளுடைய உற்சாகமும் கலகலப்பும் எங்கோ ஒளிந்துகொண்டுவிட்ட மாதிரி இருந்தது.

என் முகம் நிச்சயம் சவம்போல் வெளுத்துத்தான் இருந்திருக்கும். வனஜா அதைக் கவனிக்காததால் என் குரலை இயல்பானதாக ஆக்கிக்கொண்டு, ''அது யார் வில்லன்?'' என்று சிரிக்க முயன்றேன்.

''ஒவ்வொரு ஆபீசிலும் ஒரு ஹீரோ, ஒரு வில்லன் இருப்பார்கள். இந்த ஆபீசில் ஹீரோ கிடையாது. வில்லன் மட்டும் உண்டு.'' டக்டக்கென்று ஸ்விட்சுகளைத் தட்டி, கனெக்ஷன்களைக் கொடுத்த வண்ணமே பேசினாள் வனஜா. ''நீங்கள் பேசினீர்களே, அவர்தான் ஜி.எம். மின் - ஜெனரல் மானேஜரின் - பிள்ளை. ஜனார்த்தனன் என்று பெயர். பெரியவர் நல்லவர். சாது. இது எங்கிருந்தோ வந்து [illegible]றது அவருக்கென்று...''

நான் மௌனமாக ஃபைல்களைச் சரிசெய்வதில் ஈடுபட்டேன்.

ஜனார்த்தனன். அதுதான் அவன் பெயரா?

டெலிபோனில் கேட்ட குரலை வைத்து, அவன் தானென்று நான் எப்படி நிச்சயம் பண்ணினேன்? எனக்கே தெரியாது. ஆனால் எவ்வித அடிப்படையும் இல்லாமல், எந்தப் பகுத்தறிவுக்கும் கட்டுப்படாமல் நிகழ்கின்ற விஷயங்கள் எவ்வளவோ உண்டில்லையா? அதிலே இதுவும் ஒன்று.

யந்திரம் போல் என் வேலைகளைக் கவனித்துக் கொண்டிருந்தேன், மணி ஐந்தடிக்கும்வரை.

டெலிபோனில் வனஜா, ''எஸ் சார்... மிஸ் ஹேமாவையா? சொல்கிறேன் சார்,'' என்றவாறு ''உன்னை ஜி.எம்.மின் அறைக்கு வரச் சொன்னார் ஜனார்த்தனன்,'' என்றாள்.

''என்னையா?'' என்றேன். திடீரென்று என் அச்சங்கள் பறந்துவிட்டாற்போல் தோன்றியது. வருவது வரட்டும். ''எந்த அறை? எப்படிப் போக வேண்டும்?'' என்று கேட்டேன்.

''முத்து!'' என்று ஒருவனைக் கூப்பிட்டாள் வனஜா. ''இவரை ஜி.எம். ரூமுக்கு அழைத்துப் போ,'' என்றாள்.

அவனேதான்.

காரணமில்லாமல் கடுகத்தனை பயமும் காட்டத் தேவையில்லை என்று உறுதி பூண்டிருந்தேன் நான். எனவே புன்னகையை விடவில்லை. கைகுவித்து ''வணக்கம்'', என்றேன் இனிமையாக.

அவனைக் காட்டிலும் அவன் அமர்ந்திருந்த நாற்காலி முதுகு உயரமாக இருந்தது. மேஜைமீதும் நாற்காலியின் முதுகிலும் தரையிலும் செக்கச் செவேலென்ற விரிப்புக்கள் கண்ணைக் கூச வைத்தன.

எனக்காக அவன் துளியும் அசையவில்லை, புன்னகை செய்யவுமில்லை.

''கப்பலில் உன்னைப் பார்த்தபோது நீ ரொம்ப நல்ல பெண் என்று நினைத்தேன்,'' என்றான்.

''ஏன்? அந்தக் கருத்தை மாற்றிக் கொள்ளும்படி என்ன நேர்ந்தது?'' என்றேன், வேடிக்கையாகவே.

''உன்னால் ஒருவருக்கு வேலைபோய்விட்டதே!''

''யாருக்கு?'' என்று திடுக்கிட்டேன்.

''குப்தாவுக்கு,'' என்றான் ஜனார்த்தனன்.

## 5

குப்தாவுக்கு வேலை போய்விட்டதா! ஜனார்த்தனன் கொடுத்த தகவலைக் கேட்டு, எனக்குத் திக்கென்றிருந்தது.

என் பொருட்டு, எனக்கு உதவி செய்த குற்றத்துக்காக அந்த நல்ல மனிதருக்குத் துன்பம் நேரிட்டதே என்று மட்டும் நான் வருந்தவில்லை. எனக்கு வேலை கொடுத்தற்காக அவரை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறார்கள் என்றால், அவருடைய குட்டு உடைபட்டுவிட்டது என்றல்லவா

பொருள்? அப்படியானால் என் தலைக்கு மேலேயும் கத்தி தொங்கிக்கொண்டிருக்கிறது, எந்த வினாடியிலும் அறுந்து விழப்போகிறது என்றுதானே அர்த்தம்?

பிரகாசத்தையும் அவருடைய கஸ்டம்ஸ் இலாகாவையும் எண்ணிப் பார்க்கவே கேவலமாயிருந்தது. பூ என்று ஊதியதுமே பொலபொலவென்று விழக்கூடிய சீட்டுக் கட்டு மாளிகையைக் கட்டியிருக்கிறார்கள் புத்திசாலிகள்! முதல் நாளன்றே, முதல் சில மணி நேரத்துக்குள்ளேயே, ஜனார்த்தனன் கண்டுபிடித்துவிட்டானே இவர்களுடைய ரகசியத் திட்டத்தை! என்ன பெரிய கஸ்டம்ஸ்!

ஜனார்த்தனன் என் முகத்தையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு விகாரமான இளிப்பு அவன் உதட்டில் தொற்றிக்கொண்டிருந்தது. அடுத்தாற்போல் அவன் என்ன கேட்கப் போகிறான் என்பது தெரியாமல் நான் மரம்போல் நின்றிருந்தேன்.

அவன் கேட்டான்: ''உண்மையைச் சொல். குப்தாவுக்கு எவ்வளவு கொடுத்தாய்?''

திடுக்கிட்டேன் நான், இந்த எதிர்பாராத கேள்வியினால். எனினும் வெகுநேரமாக எதுவுமே பேசாமல் நின்றுகொண்டிருக்கிறோம் என்ற உணர்வு என்னை உசுப்பியதால், ''கொடுப்பதா? என்ன கொடுப்பது? எதற்கு?'' என்று கேட்டேன்.

''லஞ்சம்தான்,'' என்றான் ஜனார்த்தனன். தனது பெரிய நாற்காலியிலிருந்து எழுந்துகொண்டு என்னை அணுகி, எனக்கு எதிரிலேயே நின்று கொண்டான் அவன். அவனுடைய அடர்த்தியான புருவங்களும், கெட்டியான மூக்கும் சிவந்திருந்த கண்களும் என்னுள் கலக்கத்தை மூட்டின. ''தெரியாத மாதிரி நடிக்காதே. லஞ்சத்தினால்தான் ஒழிந்தார் உன் அருமை நண்பர் குப்தா,'' என்றான் தொடர்ந்து.

இது புதுத் தகவலாக இருந்ததோடு, சட்டென்று என் அறிவுக்கு ஒரு தெளிவும் ஏற்படுத்தியது. குப்தாவின்

உண்மையான குற்றத்தை இவர்கள் கண்டுகொள்ளவில்லை போலிருக்கிறதே! வேறேதோ அல்லவா குற்றம் சாட்டுகிறான்!

திகைப்பு, ஆறுதல், மகிழ்ச்சி - எல்லாம் என் மனத்தில் மூண்டன.

''அவர் லஞ்சம் வாங்குகிறவரோ இல்லையோ எனக்குத் தெரியாது. நான் ஒரு பைசாகூடத் தரவில்லை,'' என்றேன்.

''ஓகோ,'' என்றவன் தலையைச் சாய்த்துக்கொண்டு என்னை நோக்கினான். ''நீ கிராஜுவேட்டா?''

''பி.யு.ஸி. முதல் வகுப்பில்...''

''கிராஜுவேட்டா - பட்டதாரியா என்கிறேன்.''

''இல்லை.''

''அதுதான் கேட்டேன்.''

வெற்றிக் கொக்கரிப்புடன் புருவங்களை உயர்த்தி அவன் பேசினான்: ''இந்த வேலைக்குப் பட்டதாரியைத்தான் நியமிக்க வேண்டும் என்று மேலிடத்தில் உத்தரவு போட்டிருக்கிறோம். ஆனால் குப்தா உன்னை அமர்த்தியிருக்கிறார். உன் விண்ணப்பத்தை வரவழைத்துப் பார்த்தேன் காலையிலேயே. பட்டதாரி இல்லையென்று தெரிந்தது. இதற்கு முன்னாலும் இந்தக் குப்தா இப்படிச் செய்திருக்கிறார் என்று எங்களுக்குச் சந்தேகம் இருந்து வந்தது. இந்தத் தடவை கையும் களவுமாய் அகப்பட்டுக்கொண்டார். கூப்பிட்டுக் கேட்டேன். உன்னிடம் லஞ்சம் வாங்கிக்கொண்டதாய் ஒப்புக் கொண்டார். மூன்று மாதச் சம்பளத்தைக் கையில் கொடுத்து வீட்டுக்கு அனுப்பி விட்டோம்.''

பிரகாசத்தைப் பற்றி அவசரமாக முடிவு கட்டியது எவ்வளவு முட்டாள் தனம் என்று எண்ணிக்கொண்டேன். அதே சமயம், எப்படியானால் என்ன, குப்தா வேலையிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதால் என் வேலையும் போயாயிற்று என்று மனத்துக்குள் கசந்து கொண்டேன்.

அந்த அறையை விட்டு வெளியேறும் எண்ணத்துடன் இரண்டடி எடுத்து வைத்திருப்பேன். அதற்குள், ''இரு,'' என்று கூறிக்கொண்டு என் முன்னால் வந்து நின்றான் ஜனார்த்தனன்.

உள்ளூரப் படபடப்பு ஏற்பட்ட போதிலும் அதைக் காட்டிக் கொள்ளாமல் தைரியமாகவே அவன் முகத்தைப் பார்த்தேன். யோக்கியர்களிடமும், நேர்மையாளர்களிடமும் நல்லவர் களிடமும்தான் அஞ்ச வேண்டுமே தவிர, ஜனார்த்தனன் போன்றவர்களிடம் பயப்படத் தேவையில்லை என்று சின்ன வயது முதலே என்னுள் நெஞ்சுரம் ஏறியிருந்தது.

''குப்தா போய்விட்டதால் வேலை போய்விடுமோ என்று நீ பயப்பட வேண்டாம். நீ பட்டதாரி இல்லையே தவிர, வேறு தகுதிகள் உனக்கிருக்கின்றன,'' என்றான் ஜனார்த்தனன்.

அவன் அடுத்து என்ன சொல்லப்போகிறான் என்பதை ஊகித்துவிட்டேன். அதையே அவனும் சொன்னான்: ''ஹேமா, நிச்சயமாய் ஒரு தகுதி இருக்கிறது உனக்கு - உன் அழகு, இளமை.''

''ரொம்ப நன்றி. ஆனால் அந்தத் தகுதிகளை உபயோகித்து வேலை பெற நான் விரும்பவில்லை,'' என்று பதிலளித்துவிட்டு அவனைத் தாண்டிச் செல்ல முயன்றேன்.

''ஹேமா!'' என்று அதட்டிய வண்ணம் மறுபடி என் முன்னே வந்தான்.

ஒரு வினாடி சென்றிருந்தால் நான் என்ன செய்திருப் பேனோ, சொல்வதற்கில்லை. அதற்குள், சாத்தியிருந்த கதவு திறந்தது. ''எக்ஸ்க்யூஸ் மீ சார்,'' என்றவாறு வனஜா உள்ளே நுழைந்தாள்.

''என்ன?'' என்றான் ஜனார்த்தனன் எரிச்சலுடன்.

''உங்கள் எக்ஸ்டென்ஷன் சரியாய் வேலை செய்யவில்லை, சார். பார்த்துவிட்டுப் போகிறேன்,'' என்று கூறிய வனஜா, நேரே ஜனார்த்தனனின் மேஜைக்குச் சென்றாள்.

டெலிபோனை எடுத்து, டக்டக்கென்று தட்டினாள்; டயல் செய்தாள்; ரிஸீவரைக் காதில் வைத்துக் கேட்டாள்; 'ஹலோ ஹலோ' என்று கூப்பிட்டாள். மொத்தத்தில் நானொருத்தி அங்கே இருப்பதையோ ஜனார்த்தனனின் முகம் கடுகடுத் திருப்பதையோ துளியும் கவனித்ததாகத் தெரியவில்லை.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு நான் வெளியேறினேன். ''நீ தொடர்ந்து வேலையில் இருக்கலாம், மிஸ் ஹேமா,'' என்று ஜனார்த்தனன் சொல்வது என் காதில் விழுந்தது.

சற்றைக்கெல்லாம் வனஜாவும் திரும்பிவிட்டாள். நன்றியுடன் அவள் கைகளைப் பற்றிக்கொண்டு, ''நல்ல சமயத்தில் என்னைக் காப்பாற்றினாய் வனஜா,'' என்றேன்.

''உஷ்!'' என்று உதட்டில் விரல் வைத்து எச்சரித்தாள் அவள். ''இங்கே வேண்டாம். வீட்டுக்குப் புறப்படலாம், வா.''

இப்போது நினைத்துப் பார்த்தால், இருவருமே எப்படி ஒரே சமயத்தில் ஒருவரையொருவர் 'வா போ' என்று பேசிக்கொள்ளும் அளவுக்கு நெருக்கம் கொண்டோம் என்று ஆச்சரியமாயிருந்தது.

நான் தனிமையாயில்லை என்ற உணர்வு முதல் முறையாக ஏற்பட்டது.

அவரவர்கள் கைப்பைகளை எடுத்துக்கொண்டு வெளியே வந்தோம். மாலை நேரத்து மவுண்ட் ரோடு கோலாகலமாயிருந்தது. தையற்கடையிலிருந்து கொட்டப் பட்ட துணித் துண்டுகள் மாதிரி பலவகையான வண்ணங்களில் ஆண்களும், பெண்களும், வாகனங்களும் கும்பல் கும்பலாகச் சென்றுகொண்டிருந்த காட்சி என்னைச் சற்றே நிற்க வைத்தது. ஆனால் வனஜா என் கையைப் பற்றி, ''அதோ அங்கே திரும்பினால், திருவல்லிக்கேணி போகும் வழியில் என் வீடு

இருக்கிறது. ஒரு நிமிஷம் வந்துவிட்டுப் போகலாம், வா,'' என்று அழைத்தாள்.

என் மனமும் அவளுடைய நட்புக்காக ஏங்கிக் கொண்டிருப்பதை உணர்ந்தேன். அவளது கையைக் கோத்துக்கொண்டு நடந்தேன். பார்வைக்கு மென்மையாகத் தோன்றிய அவள் விரல்கள் உண்மையில் இரும்பைப் போல் கடினமாக இருப்பதாகத் தோன்றியது. ஜன வெள்ளத்தில் நீச்சலடித்துச் சென்றபடியே அவள் முகத்தை ஆராய்ந்தேன். அதுவும் எஃகில் வார்த்தாற்போலிருந்தது. அவளுடைய கலகலப்பான பேச்சும் சிரிப்பும் வெறும் மேல்பூச்சுத்தான் என்று எனக்குப் புரிந்தது. உள்ளே நெருப்பைப் போட்டு வைத்திருக்கும் பன்னீர்ச் செம்பாக அவள் தோன்றினாள்.

குறுக்கே ஒரு தெருவில் புகுந்து, அதிலிருந்து வெட்டிக்கொண்டு செல்லும் ஒரு சந்தை அடைந்தோம். ''இதுதான் என் வீடு,'' என்று அவள் சொல்லுமுன், ''அக்கா!'' என்று கூவியவண்ணம் மூன்று குழந்தைகள் ஓடிவந்தார்கள், தாழ்வான சிறிய வீட்டுக்குள்ளிருந்து.

மூத்தவள் பாவாடை தாவணி அணிந்த பதின்மூன்று, பதினாலு வயதுப் பெண். அடுத்தவன், நிக்கரும் சட்டையும் போட்டிருந்த எட்டு வயதுச் சிறுவன். கடைசியாக மூன்று வயது ஆண் குழந்தை. அரை நிஜார் மட்டுமே அணிந்து கொண்டிருந்தது.

''அப்பா இன்னும் வரவில்லை?'' என்று கேட்டுக் கொண்டே அந்தக் குழந்தையைத் தூக்கிக் கொண்டாள் வனஜா. ''என் கிட் பிரதர் - கடைக்குட்டித் தம்பி,'' என்றாள் என்னிடம்.

ஒன்றிக்கட்டையாகப் பிறந்து வளர்ந்த எனக்கு அந்தச் சிறிய குடும்பத்தைக் காணப் பொறாமையாக இருந்தது.

''அப்பா இன்னும் வரலை அக்கா. நானே சமையல் பண்ணிட்டேன்,'' என்றாள் பெரிய பெண்.

''குட், குட்!'' என்றவள், ''காப்பி கொண்டுவா பார்க்கலாம். எனக்கும் இந்த அக்காவுக்கும்,'' என்று கூறி அவளை அனுப்பிவிட்டு, என்னை உள்ளே அழைத்துச் சென்றாள்.

கசகசவென்று அடைசலான இடம் அது. எது அறை, எது கூடம் என்று பிரித்துச் சொல்ல முடியாதபடி ஏதேதோ திரையும் மரத் தடுப்புமாக இருந்தது. சுவரெங்கும் படங்கள், காலண்டர்கள். அலமாரியெங்கும் பழைய புத்தகங்கள், பேப்பர்கள், சீசாக்கள்.

''என் அம்மா இறந்துபோய் இரண்டு வருஷமாகிறது. அப்பா கார்ப்பரேஷனில் வேலை பார்க்கிறார். இவனைப் பக்கத்து வீட்டு அம்மாளிடம் விட்டுவிட்டு நாங்கள் ஆபீசுக்கும் பள்ளிக்கூடத்துக்கும் போகிறோம்,'' என்றாள் வனஜா, தோளில் சாத்திக்கொண்டிருந்த தம்பியைக் காட்டி.

வேறு ஏதோ சொல்ல மனத்துக்குள் ஒத்திகை பார்த்துக்கொண்டே அவள் பேசுகிறாள் என்று எனக்குத் தோன்றியது.

''குழந்தைகளுக்கு ஒரு சாக்லேட் கூட வாங்காமல் வந்துவிட்டேனே! இங்கே பக்கத்தில் ஏதாவது கடை இருக்கிறதா?'' என்று எழுந்தேன்.

''பரவாயில்லை, உட்கார்,'' என்று என் தோளை அழுத்தி அமரச் செய்தாள் வனஜா.

அவள் தங்கை கொண்டு வந்து தந்த காப்பியை நான் பருகிக் கொண்டிருந்தபோது, ''சாயந்தரம் நடந்த நிகழ்ச்சியைப் பெரிதாக எடுத்துக்கொண்டுவிட்டாயா என்ன?'' என்றாள்.

''ஆத்திரமாயிருக்கிறது,'' என்றேன்.

''இருக்கத்தான் இருக்கும். இருக்கத்தான் வேண்டும்,'' என்று வனஜா ஆமோதித்தாள். ''ஆனால் அதற்கெல்லாம் பயந்து போய் வேலையை விட்டுவிடமாட்டாயே?''

பதில் கூற இயலாமல் நான் காப்பியை ருசிக்கிறமாதிரி பாசாங்கு செய்தேன். ஜனார்த்தனனின் செய்கையில் ஏற்பட்ட அருவருப்பு, பிரகாசம் என்னை அந்த நிறுவனத்தில் அமர்த்திய இரக்கம் - இரண்டுக்கும் மல் யுத்தம் நடந்துகொண்டிருந்தது என் மன அரங்கத்தில்.

''வேலையை விட்டுவிடாதே என்று கேட்டுக்கொள்ளத் தான் உன்னை இவ்வளவு தூரம் அழைத்து வந்தேன்,'' என்றாள் வனஜா.

''ஆமாம். வேறு வேலை கிடைப்பது சுலபமில்லை,'' என்றேன்.

''நான் சொல்லுவது அதற்காக அல்ல,'' என்றாள் அவள் பின்னர் நிலத்தை நோக்கியபடி சில வினாடிகள் மௌனமாக நின்றாள்.

வாசலில் குழந்தைகளின் சிரிப்பொலியும், சுவர்க் கடிகாரத்தின் சீரான நாடித் துடிப்பும், அலமாரிக்குள்ளிருந்து ஒரு பல்லியின் சூள் சப்தமும், பின்கட்டில் யாரோ துப்பட்டியை உதறுகின்ற ஓசையும் துல்லியமாகக் கேட்கும் அளவுக்கு நிசப்தம் நிலவியது.

''உன்னைப்போல ஒரு துணைக்காத்தான் நான் பல காலமாகக் காத்திருக்கிறேன்,'' என்றாள் வனஜா ஆழமான, தெளிவான குரலில். ''வேலையை விட்டுவிட்டு நீ எங்கேயும் போகாதே. இரு. நீயும் நானுமாகச் சேர்ந்து தீர்க்க வேண்டிய கணக்கொன்று இருக்கிறது. அதைத் தீர்த்து முடிக்கும் வரையில் நீ வேலையை விடாதே.''

வனஜாவைப் பிரமிப்புடன் பார்த்தேன். தோளில் சாத்தியிருந்த குழந்தையை நசுக்கிவிடப் போகிறமாதிரி அவள் கைகள் அதை அழுத்திக்கொண்டிருந்தன. அவள் உடம்பு சதையினாலும் நரம்பினாலும் ஆனமாதிரி இல்லாமல், பளபளவென்று கனன்றுகொண்டிருக்கும் உலோகத்தில் செய்தமாதிரி இருந்தது. என்னையும் மீறி என் மனத்தினுள் அச்சம் மூண்டது.

''நான் போகமாட்டேன் வனஜா. இந்த வேலையை விடவேமாட்டேன்,'' என்ற சொற்களை, தெய்வ சந்நிதியில் சத்தியம் செய்து கொடுப்பது போன்ற அழுத்தத்துடனும் பயத்துடனும் உச்சரித்தேன்.

**வீ**ட்டை நோக்கிப் புறப்பட்டபோது, அம்மாவின் மீது எனக்கிருந்த கோபம் பெரும்பாலும் குறைந்துவிட்டது.

ஒருவேளை இந்த ஜனார்த்தனனைப் பற்றித் தெரிந்து வைத்திருந்துதான் வேலைக்குப் போகவேண்டாமென்று கௌரியம்மாள் என்னைத் தடுத்தாளோ? அம்மாவும் அதை வெளிப்படையாகச் சொல்லப் பிரியப்படாமல்தான் மறைமுகமாகக் கண்டித்தாளோ?

'இளங்கன்று பயமறியாது என்பதுபோல் இந்தப் பெண் ஆபத்தில் இறங்கி மாட்டிக் கொள்கிறாள். இவளை இப்படி விடக்கூடாது. பிடித்து வைக்க வேண்டும்,' என்றுதான் அவர்கள் அன்று பேசிக் கொண்டிருப்பார்கள் கன்னடத்தில். அதை நான் தப்பாக எடுத்துக் கொண்டிருக்கிறேன்...

வரவர இந்த எண்ணமே என்னுள் வலுப்பட்டது. அதற்கு ஆதாரம் எதுவும் கிடையாதுதான். ஆனால் காலையில் அம்மாவிடம் சண்டை போட்டுக் கொண்டு வந்ததைக் குறித்து வருந்திக் கொண்டிருந்த மனம், அவளுடன் சமாதானம் செய்துகொள்ள என்ன அற்பமான சாக்குக் கிடைக்கும் என்று தேடியவாறிருந்தது.

பழக்கடை யொன்றைத் தாண்டியவள் நின்றேன். அம்மாவிடம் எவ்விதக் கோபமுமில்லை என்பதை நிலைநாட்டுகிற வகையில் கொஞ்சம் பழம் வாங்கிக் கொண்டால் என்ன? வேலையில் சேர்ந்த முதல் நாளாகையால் பொருத்தமாயும் இருக்கும்.

இரண்டு ஆப்பிள் வாங்கிக் கொண்ட பின்னர்தான் என் அருகில் நின்றிருந்த மனிதரைக் கவனித்தேன்.

''வணக்கம், பிரகாசம் சார்! நாளைக்கு நானே உங்களை வந்து பார்த்துத் தாங்ஸ் சொல்ல நினைத்திருந்தேன்,'' என்றேன் உற்சாகத்துடன்.

அவர் என்னை மேலும் கீழும் ஆச்சரியமாகப் பார்த்தார். ''நீங்கள்..'' என்று இழுத்தார்.

நான் திகைத்துப்போனேன். என்னைத் தெரியாதவர் போல் அல்லவா பார்க்கிறார்? ''பிரகாசம் சார்... நான் ஹேமா. என்னைத் தெரியவில்லை?'' என்றேன்.

''ஸாரி... நீங்கள் ஏதோ தப்பாக நினைத்துவிட்டீர்கள்,'' என்று கூறியவர், தான் வாங்கியிருந்த பழங்களுக்கான பணத்தைக் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்.

பொம்மைபோல நானும் பழங்களைப் பெற்றுக் கொண்டு காசைத் தந்தேன். இப்படிக்கூடவா உரித்தெடுத்தாற் போல அதே அச்சாக ஒருவர் இருக்க முடியும்? பிரகாசத்தின் இரட்டையாக இருந்திருந்தால், அதைச் சொல்லி யிருக்கலாமே! பிரகாசம் என்கிற பெயரையே தான் கேள்விப்பட்டிராதது போல் அல்லவா போய்விட்டார் பேசாமல்?

குழம்பிக்கொண்டே நடந்தேன் மவுண்ட் ரோடில். எங்கே போய் பஸ் ஏற வேண்டும் என்பதுகூட மறந்துவிட்டது. திடீரென்று என் காதில் மெதுவான குரல் கேட்டது.

''திரும்பிப் பார்க்காமல் போ. நான் உன் பின்னால்தான் வந்து கொண்டிருக்கிறேன். எதிரில் தெரிகிற புத்தக ஷாப்புக்குப் போ. பேசலாம்.''

எவ்வளவு தாழ்வாக ஒலித்த போதிலும் அது பிரகாசத்தின் குரல்தான் என்று கண்டுகொண்டேன். மின்னல் வேகத்தில் என் அதிர்ச்சியை மறைத்துக்கொண்டு ஏதும் நடவாததுபோல் சாலையைக் கடந்து எதிர்சாரியில் இருக்கும் பெரிய புத்தகக் கடையினுள் நுழைந்தேன்.

பிரம்மாண்டமான இடம் அது. மூடுகிற நேரமாகையால் பலர் வெளியேறிக் கொண்டிருந்தார்கள். குழந்தைகளுக் கான புத்தகங்களைக் கொண்ட மூலைக்குச் சென்று ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டலானேன். சில நிமிடங்களில் இன்னொருவரும் அங்கே வந்து இன்னொரு புத்தகத்தை எடுத்துக் கொண்டார். ஓரக் கண்ணால் பார்த்து அது பிரகாசம்தான் என்று நிச்சயப்படுத்திக் கொண்டேன்.

அந்த மூலையில் எங்களை தவிர யாருமில்லை. கண்ணாடி வழியே தெருப்புறத்தைப் பார்த்தாற்போல் நாங்கள் நின்றிருந்தோம். புத்தகங்களிலிருந்து கண்ணை எடுக்காமலே, ''பொது இடங்களில் நீ என்னைத் தெரிந்த மாதிரி காட்டிக் கொள்ளாதிருப்பது நல்லது ஹேமா,'' என்றார் பிரகாசம்.

''சரி சார்,'' என்றேன், நானும் தலையை நிமிர்த்தாமலே. புத்தகக் கடையினுள் உள்ளவர்களுக்கு முதுகைக் காட்டினாற்போல் நாங்கள் நின்றிருந்ததால் எங்கள் உதடுகள் அசைவதைக்கூட எவரும் கவனித்திருக்க முடியாது.

''நான் கஸ்டம்ஸ் பேர்வழியாகையால் யார் எந்த இடத்தில் என்னைக் கவனித்துக் கொண்டிருப்பார்களோ சொல்ல முடியாது. என்னைத் தெரிந்ததாகக் காட்டிக்கொள்வது உன் வேலைக்கு உதவியாக இராது.''

''தாங்ஸ் சார். இனி ஜாக்கிரதையாக இருக்கிறேன்,'' என்றேன்.

''உன் அம்மா போன் பண்ணினாள் இன்று காலை.''

''உங்களுக்கா?'' திடுக்கிட்டவளாக, தலையைத் திருப்பவிருந்தேன் அவர் பக்கம். நல்ல வேளை, கடைசி வினாடியில் ஞாபகத்துடன் அடக்கிக்கொண்டேன்.

''ஆமாம். 'தினகார பிரைவேட் லிமிடெட்'டில் நீ வேலைக்குப் போவது அவளுக்குப் பிடிக்கவில்லையாம். நீ கேட்கமாட்டேன் என்கிறாயாம். உன்னைத் தடுக்கும்படி கேட்டுக் கொண்டாள் என்னிடம்.''

''என்ன சொன்னீர்கள்?''

''சங்கடமாகத்தான் இருந்தது. 'ஹேமா வயது வந்த பெண். தைரியக்காரி. நல்லது கெட்டது அவளுக்கே தெரியும்,' என்று சொல்லிவிட்டேன்.''

கையிலிருந்த புத்தகத்தை வைத்துவிட்டு இன்னொன்றை எடுத்துக் கொண்டேன். ''ரொம்ப நன்றி, சார்.''

''உனக்குப் பயமாயிருந்தால் நின்றுவிடு.''

''கடுகத்தனையும் இல்லை,'' என்றவள் சட்டென்று அன்று நடந்தவைகளை ஞாபகப்படுத்திக் கொண்டேன். ''குப்தாவுக்கு வேலை...''

''தெரியும்.'' பிரகாசமும் வேறொரு புத்தகத்தை எடுத்துக் கொண்டார். ''அதற்காகக் கவலைப்படாதே. குப்தாவுக்கு வேறு இடத்தில் வேலை வாங்கித் தந்துவிடுவோம்.''

''க்ளோஸிங் டைம், சார்.'' புத்தகக் கடையின் ஊழியரொருவர் எங்களருகே வந்து ஞாபகப்படுத்தினார். பிரகாசம் புத்தகத்தைத் திரும்ப வைத்துவிட்டு முதலில் வெளியேறினார். சில நிமிடங்கள் கழித்து நானும் புறப்பட்டேன்.

அவுட் ஹவுசில் விளக்கு எதுவும் எரியக் காணோம். மரப் அம்மா இன்னும் பங்களாவிலிருந்து திரும்பவில்லை போலும் என்று எண்ணிக் கொண்டே காம்பவுண்டுக்குள் நுழைந்தேன்.

தோட்டத்தின் நடுவே இருந்த விளக்குக் கம்பம், அவள் உள்ளிருந்து வந்து கொண்டிருப்பதைக் காட்டியது. அவுட்ஹவுசின் சாவி அவளிடம்தான் இருந்ததாகையால், பூட்டியிருந்த கதவினருகே சென்று நின்று கொண்டேன்.

அம்மாவும் அங்கேதான் வந்தாள். ஆனால் பூட்டைத் திறக்கவில்லை. என்னை வழிமறிக்கிற மாதிரி அவுட்ஹவு ஸின் வாசலில் நின்றுகொண்டு, ''எங்கே வந்தாய்?'' என்றாள்.

அந்தக் கேள்வியின் முழுப் பொருளையும் உணர்ந்து கொள்ளப் பல நிமிடங்கள் பிடித்தன எனக்கு. அவள் முகத்தின் மீது விளக்கு வெளிச்சம் விழாத போதிலும், கடும் சீற்றத்தினால் அங்கே ஏற்பட்டிருக்கக் கூடிய பளபளப்பை நான் கண்டேன்.

அவளுடைய கோபத்தைப் பொருட்படுத்தாதிருக்கத் தீர்மானித்தேன். ''இந்தா,'' என்று இரண்டு ஆப்பிள்களையும் அவளிடம் நீட்டினேன்.

என் கையைத் தட்டிவிட்டாள் அம்மா. கிரிக்கெட் பந்துபோல இரண்டு பழங்களும் இரண்டு திசையில் உருண்டோடின.

# 6

''எங்கே வந்தாய் என்று கேட்டேன்.'' தன் பைத்தியக் காரத்தனமான கேள்வியையே மறுபடி கேட்டாள் அம்மா.

''என் வீட்டுக்கு,'' என்றேன் பொறுமை இழக்காமல்.

''இது உன் வீடு இல்லை,'' என்றாள் அம்மா நிர்தாட் சண்ணியமாக. ''எப்போது என்னையும் கௌரியம்மாளையும் விரோதித்துக் கொண்டு நீ வெளியே போனாயோ அப்புறம் உனக்கு இங்கே வர எவ்வித யோக்கியதையும் கிடையாது.''

''ஓகோ,'' என்றேன் பல்லைக் கடித்துக்கொண்டு. உடம்பு ரத்தம் மொத்தமும் குப்பென்று நெற்றிக்கு ஏறிக் கொதித்துக் கொண்டிருக்கிறாற்போல் தோன்றியது.

''வேலை தேடிக்கொண்ட மாதிரி ஜாகையும் தேடிக் கொள்,'' என்றாள் அம்மா, கண்டிப்புடன்.

நான் வெறுப்புடன் சிரித்தேன். சற்று முன்பு பிரகாசம் சொன்ன வார்த்தைகள் - 'ஹேமா வயது வந்த பெண். தைரியக் காரி. நல்லது கெட்டது அவளுக்கே தெரியும்' என்று சொன்னது என் காதில் ஒலித்தது. எனக்குத் துணிச்சல் ஊட்டுவதற்காகவே அவர் அப்படிச் சொன்னார் போலிருக்கிறது.

''சரி போகிறேன். உள்ளே போய் என் பெட்டியை எடுத்து வந்து போடு,'' என்றேன்.

''நானொன்றும் நீ வைத்த வேலைக்காரியில்லை,'' என்று கூறிவிட்டு அம்மா வீட்டுக்குள் சென்றாள்.

அவளுடைய ஆவேசத்தையும், ஆத்திரத்தையும் கண்டு நான் அதிர்ந்து போய் நின்றேன். நிஜமாகவே என்னை வீட்டுக்குள் வர வேண்டாமென்றா சொல்கிறாள்? இல்லை, சும்மா விரட்டுகிறாளா? எதுவானாலும் அதற்குப் பணிவ தில்லை என்று தீர்மானம் செய்து கொண்டு உள்ளே போனேன்.

ஊரிலிருந்து நான் கொண்டு வந்திருந்த சூட் கேஸ், மரப் பீரோவின் மீதே இருந்தது. அம்மாவை ஓரக்கண்ணால் பார்த்தபடியே அதை எடுத்துக் கீழே வைத்துக்கொண்டு உட்கார்ந்தேன். பிரிக்கும் போதும் அம்மாவைப் பார்த்துக் கொண்டேன். கயிற்றில் கிடந்த இரண்டு துவாலைகளை எடுத்துச் சும்மாவானும் அந்த சூட்கேசுக்குள் அடைத்த போதும் அவளைக் கவனித்தேன்.

அம்மா கையைக் கட்டிக் கொண்டு ஜன்னல்வழியே வெளியே பார்த்தபடியே விறைப்பாக நின்றிருந்தாள்.

தணியும் போலிருந்த என் கோபம் மறுபடியும் விசிறப்பட்டு விட்டது. கௌரியம்மாளின் விருப்புவெறுப்பு களுக்காக இவள் ஏன் இப்படி நடுங்கிச் சாக வேண்டும்? அவளிடம் அம்மா என்ன விதத்தில் சிக்கிக் கொண்டிருக் கிறாள்?

''இதோ பாரம்மா, நான் உன் வயிற்றில் பிறந்தவள்தான். உனக்கு இருக்கிற வீம்பில் நாலில் ஒரு பங்காவது எனக்கும் இருக்கும். தெரிந்து கொள்,'' என்றேன்.

அம்மா என்னை எரித்துவிடுகிற மாதிரி பார்த்தாள்.

''நான் ஒப்புக் கொண்டிருக்கிற வேலை எனக்குப் பிடித்து இருக்கிறது. உன் எஜமானிக்குப் பிடிக்கவில்லை என்பதற்காக அதை விட முடியாது. வேறு எது வேண்டுமானாலும் சொல்லு,'' என்றேன்.

''வேறுதான் சொல்லி விட்டேனே - இந்த வீட்டுக்குள் நீ வர வேண்டாமென்று.'' இன்னொரு கயிற்றில் போடப் பட்டிருந்த சுடிதாரைக்கொண்டு வந்து போட்டாள் என் சூட்கேசின் மீது. ''இதை மறந்து விட்டாயே?''

இவ்வளவு பிடிவாதம் காட்டுகிறவளிடம் எதுவும் பண்ண முடியாது போலிருக்கிறதே என்று ஒரு கணம் நான் துவண்டுவிட்டேன். இன்னொரு வினாடி தாமதித்திருந்தால்

'உன் இஷ்டத்துக்கு மீறி நடக்கமாட்டேன் அம்மா' என்றுகூறி அவள் காலிலேயே விழுந்திருப்பேனோ என்னவோ. ஆனால்—

திடீரென என் கண் முன்னே வனஜாவின் முகம் தென்பட்டது. 'நீயும் நானும் சேர்ந்து தீர்க்க வேண்டிய கணக்கொன்று இருக்கிறது' என்று அவள் சொன்னதை எப்படி மறக்க முடியும்? வேறெதற்காக இல்லாவிட்டாலும் அவளுக்குக் கொடுத்த வாக்கைக் காப்பாற்றுவதற்காகவாவது என் வேலையைத் தொடர வேண்டுமென்று உணர்ந்தேன். பத்து யானைப் பலம் வந்தாற் போலிருந்தது.

புன்னகையுடனும் திமிருடனும் அம்மாவை ஏறிட்டு நோக்கினேன். "அன்றைக்கு எழும்பூரில் கழற்றச் சொல்லிப் பறித்துக் கொண்டாயே, அந்த லோகட் பிளவுஸ் எங்கே? எடுத்துப் போடு. சுதந்திரமான இடத்திற்குப் போன பிறகாவது அதை அணிந்து கொள்கிறேன்," என்றேன்.

அம்மாவின் கண்கள் அப்படிச் சிவந்து நான் பார்த்ததில்லை. அவளுடைய மெலிந்த உதடுகள் துடித்தன. நான் நிச்சயமாக வீட்டை விட்டு வெளியேறத் தீர்மானித்து விட்டேன் என்பதைப் புரிந்து கொண்டதும் அடக்கமாட்டாத சீற்றம் கொண்டவளாக, "ஓகோ! அவ்வளவு தூரத்துக்கு வந்து விட்டாயா?" என்று கையை ஓங்கிக்கொண்டு என்னை நோக்கிப் பாய்ந்தாள்.

பளீரென்று என் கன்னத்திலோ முதுகிலோ அடி விழுந்திருக்கும். அதற்குள் வாசலிலிருந்து "சாரதாம்மா!" என்ற குரல் கேட்டது.

"இதோ வந்தேம்மா," என்று பக்தியும் பணிவுமாக அம்மா வெளியே ஓடுமுன், அலுங்காத நலுங்காத நடையுடன் கௌரியம்மாளே உள்ளே வந்துவிட்டாள்.

"என்ன சாரதாம்மா, ஹேமாவுடன் இருபத்து நாலு மணி நேரமும் இப்படிச் சண்டை போடுகிறாய்? அங்கே பங்களா

வில் கேட்கிறது, உன் கூச்சல்!'' என்று அவள் கடிந்து கொண்ட விதத்தில் அப்பப்பா! என்னமாய்த் தேன் சொட்டியது! ''ஒரே பெண் என்றாய். கொள்ளைப் பிரியம் என்றாய், பிரிந்திருக்க முடியவில்லை என்றாய். கடைசியில் இப்படி அவளைப் போட்டுத் தினசரி கொத்தி எடுக்கிறாயே, சே! சே!''

''நீங்களே பாருங்கள்,'' என்று என்னையும் சூட்கேசை யும் சுட்டிக் காட்டினாள் அம்மா. ''அந்தத் தினகரா கம்பெனி வேலை வேண்டாம் என்று சொன்னீர்கள் இல்லையா? இவளிடம் சொன்னால் கேட்கமாட்டேன் என்கிறாள். அந்த வேலைக்குப் போவதானால் வீட்டுக்கு வரக்கூடாது என்கிறேன். சரி, வீட்டை விட்டே போகிறேன் என்கிறாள்.''

''ரொம்ப மோசம் நீ! குழந்தை ஏதோ சொன்னால் அப்படியே எடுத்துக் கொண்டு விடுவதா?'' என்று அம்மாவைக் கண்டித்தவள், என் தோளைத் தொட்டாள்.

என் உடம்பு ஒரு சாணாகக் குறுகிவிட்ட மாதிரி சுரீலென்று சுருங்கியது. என் தோளைத் தொட்டது மனித விரல்களல்ல - பழுக்கக் காய்ச்சிய இரும்பு என்பதுபோல் என் புலன்கள் துடி துடித்தன. இன்னொரு முறை அவள் என்னைத் தொட்டுவிடக் கூடாதென்று அஞ்சியவளாகச் சட்டென விலகிக் கொண்டேன்.

''ஹேமா, நீயும் பெரியவர்களிடம் கொஞ்சம் பணிந்து தான் போகவேண்டும் அம்மா,'' என்றாள் கௌரியம்மாள், ரொம்பக் கரிசனமாக. ''அந்தத் தினகரா கம்பெனியில் நீ வேலைக்குப் போகப் போவதாகச் சொன்னதும் எப்படிப்பட்ட இடமோ என்னவோ என்று நான்தான் விசாரித்தேன். அவ்வளவு சரியில்லை என்று காதில் விழுந்தது. நான்தான் உன் அம்மாவிடம் சொன்னேன், வேறிடத்தில் வேலை தேடிக் கொள்ளலாமே என்று. ஆனால் அந்த இடம் உனக்குப் பிடித்திருக்கிறதென்றால் அப்புறம் பேச்சென்ன? இதற்குப் போய் ஏன் வீண் பூசல்?''

அவளுடைய ஒவ்வொரு சொல்லும் சர்க்கரை பூசிய நச்சு மாத்திரையாக எனக்குப் புலப்பட்டது. மௌனமாக சூட்கேசுக்குள் துணிகளைத் திணித்துக் கொண்டிருந்தேன்.

''பெட்டியை எடுத்து ஓரமாய் வைத்துவிட்டுப் படுக்கப் போம்மா, ஹேமா,'' என்றாள் கௌரியம்மாள். ''சாரதாம்மா, சொல்லிவிட்டேன். ஹேமாவிடம் மறுபடி சண்டை கிண்டை போட்டாயோ, தெரியும் சேதி. அவள் என்ன பச்சைக் குழந்தையா பாப்பாவா? அவள் மனசுக்குப் பிடித்த வேலைக்குப் போய்க் கொள்ளட்டும். விட்டு விடு. தெரிகிறதா?''

''சரியம்மா,'' என்றாள் அம்மா.

''கதவைத் தாழிட்டுக் கொள். என்று கௌரியம்மாள் போய்விட்டாள். அம்மா விளக்குகளை அணைத்தாள், படுத்துக்கொண்டாள் என்னிடம் எதுவும் மேற்கொண்டு பேசாமல்.

என் இஷ்டத்துக்கு விட்டுவிட்டதுபோல் கௌரியம்மாள் பேசியதை நான் நம்பத் தயாராயில்லை. தினகரா கம்பெனியில் நான் வேலைக்குப் போவதில் அவளுக்கு ஏதோவொரு சங்கடம் இருக்கிறது. சரி, போகட்டும் என்று இப்போது வெறும் நடிப்பு! பாசாங்கு!

சற்றைக்கெல்லாம் அம்மாவிடமிருந்து குறட்டை யோசை கேட்டது.

என்னால் தூங்க முடியவில்லை. பொழுது விடிந்தால் தினகரா பிரைவேட் லிமிடெட்டுக்குப் போவதா வேண்டாமா என்று முடிவு செய்தாக வேண்டுமே! என்னால் முடிவெடுக்க இயலவில்லை. எந்த ஒரு விஷயத்தையும் எவரேனும் அழுத்தமாகச் சொன்னால் அதை எதிர்த்து நிற்பது என் ரத்தத்தில் ஊறிப்போயிருந்தது. அதன்படிதான் கௌரியம்மாளை எதிர்த்துக்கொண்டு தினகரா நிறுவனத்துக்குப் போக

நினைக்கிறேனே தவிர, எனக்காக உள்ளூர ஆசையொன்றும் கிடையாதோ என்று எண்ணிக் கொண்டேன்.

அம்மாவின் கவலையற்ற நித் திரை எனக்கு எரிச்சலாக இருந்தது. நெஞ்சுக்குள் வறட்சியாக உணர்ந்ததால் ஒரு வாய் தண்ணீர் குடிக்கலாமென்று எழுந்தேன்.

சமையலறையின் ஜன்னல் திறந்திருந்தது. குளுகுளு வென்று தோட்டத்துக் காற்று என் தேகத்தை வருடிக் கொடுத்தது. கழுத்தை வளைத்து வானத்தைப் பார்த்தேன். நட்சத்திரக் குவியல்களும் நிலவுப் பிறையும் என்னை வெளியே வாவென்று அழைத்தன. சமையலறை விளக்கை அணைத்துவிட்டு, வாசல்புறத்துக்கு நடந்தேன்.

அறைக் கதவைத் திறக்கும்போதுகூட அம்மா எழுந்திருக்கவில்லை. வெளியே சிறிய வெராந்தா இருந்தது. கம்பியும் மரச் சட்டமும் போட்ட கதவு உண்டு. அந்தக் கதவின் தாழ்ப்பாள்களை விலக்கினேன்.

ஆனால் திறக்க முடியவில்லை.

ஏதாவது அடைத்துக்கொண்டிருக்கிறதோ என்று துழாவிப் பார்த்தேன். எதுவும் தட்டுப்படவில்லை. திகைப் புடன் மறுபடியும் இழுத்துப் பார்த்தேன். வெளிப்பக்கத்தில் தான் என்னவோ பிடித்துக்கொண்டிருந்தது.

கம்பியிடுக்கு வழியே கையை விட்டு, அந்தண்டைப் புறத்தைத் தடவிப் பார்த்தேன்.

ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது எனக்கு.

வெளியே தாழ்ப்பாளை மாட்டி, அதற்கு ஒரு பூட்டும் போடப்பட்டிருந்தது!

ஒரு நிமிடத்தில் எனக்குப் புரிந்துவிட்டது, அது யார் செய்த வேலை என்று.

கௌரியம்மாள்தான்! அவளை மீறி நான் எங்கும் போய்விடக்கூடாதென்பதற்காக, நானும் அம்மாவும் படுத்துக்கொண்ட பிறகு ஓசைப்படாமல் வந்து வெளியே பூட்டிக்கொண்டு போயிருக்கிறாள்!

ஆங்காரமும் சிரிப்பும் கலந்து எழுந்தன என் இதயத்துக்குள்.

விலை கொடுத்து வாங்கிய மாடு போலல்லவா என்னைக் கருதிவிட்டாள் இந்தக் கௌரியம்மாள்! அதை நினைக்கையில் ஆத்திரம் சீறிக்கொண்டு புறப்பட்டது.

அதே சமயம், இது எவ்வளவு சிறுபிள்ளைத்தனமான முயற்சி என்று நினைத்துச் சிரிப்பும் வந்தது. அம்மாவுக்காகவாவது காலையில் திறந்துதானே ஆகவேண்டும் கதவை? அதன்பின்னர் நான் என் இஷ்டப்படி வெளியேறுவதை யாரால் எப்படிக் கட்டுப்படுத்த முடியும்?

வெளியே நீட்டிய கையை எடுக்காமல், பூட்டை அழுத்திக்கொண்டேயிருந்த போது-

தோட்டத்தின் வழியே ஒரு கார் நுழைந்தது. ஷெட்டை நோக்கி அது திரும்பியதும், அதன் கூரிய வெளிச்சம் வளைந்து வந்து என் முகத்தில் அடித்து என் கண்களைக் கூசவைத்தது.

காரை ஓட்டி வந்தவர் யாரென்று எனக்குத்தான் தெரியவில்லையே தவிர, கதவின்மீது பொழிந்த ஒளி வெள்ளத்தில், என்னையும் வெளிப்புறப் பூட்டைத் துழாவும் என் கையையும் அவர் கவனித்திருக்க வேண்டும்.

ஷெட்டுக்குச் செலுத்தாமல், பாதியிலேயே காரை நிறுத்தி, விளக்கை அணைத்துவிட்டு என்னை நோக்கி வந்த போதுதான், அது ஹரியென்று கண்டு கொண்டேன்.

இந்த நடுநிசி நேரத்தில் எங்கே போய்விட்டு வருகிறான் என்று ஆச்சரியமாயிருந்தது.

அதற்குள் அவன் என்னை நெருங்கி, ''என்ன ஹேமா, எதற்காக இங்கே நிற்கிறாய்? யார் வெளிப்பக்கம் பூட்டியது?'' என்று திகைத்தான்.

''உங்கள் அக்காவாகத்தான் இருக்கும்,'' என்றேன்.

''அவளுக்குத் திருட்டுப் பயம் ஜாஸ்தி,'' என்றான் ஹரி.

''இந்த வீட்டில் என்ன இருக்கிறது திருடனுக்கு?''

''ஏன், நீ இல்லையா - கோடி பெறுமானமுள்ள தங்கச் சிலை!'' என்று சிரித்தவன், ''நான் நைட் ஷோ போய்விட்டு இப்போதுதான் வருகிறேன்... ரேடியோ ஸ்டாண்டருகில் தான் சாவி வைத்திருப்பாள் அக்கா. உனக்கு வெளியே வரவேண்டுமா?'' என்றான்.

''ப்ளீஸ். உள்ளே ஒரே புழுக்கம். தூக்கமே வரவில்லை. சிறிது நேரம் தோட்டத்தில் உலாவலாம் என்று பார்க்கிறேன்,'' என்றேன் கெஞ்சலாக.

அவன் திரும்பி வருவதற்குள் நான் முடிவு செய்து விட்டேன் - கௌரியம்மாளின் பசப்பலுக்கோ, அம்மாவின் கண்டிப்புக்கோ மசிவதில்லையென்று. எப்போது அம்மாவின் எஜமானி என்னை வைத்துப் பூட்டுமளவுக்குச் சிறுமைப் படுத்திவிட்டாளோ, இனி ஒரு நிமிடம்கூட இங்கே தங்கி யிருக்கலாகாது என்று என் நாடி நரம்புகளனைத்தும் ஒருங்கே கூவின.

ஹரி பூட்டைக் கழற்றினான். ''வெளியே வந்து சுதந்திரக் காற்றைச் சுவாசி,'' என்றான் சிரித்துக்கொண்டே.

ஆனால் அவனுடன் சேர்ந்து சிரிக்குமளவுக்கு என் மனத்தில் உல்லாசம் இருக்கவில்லை. சூழ்நிலை மொத்தமும் நிசப்தமாயிருந்தது. மரங்களும் செடிகளும் அசைவற்று நின்றிருப்பது, எங்களையே கொட்டக் கொட்டக் கவனித்துக் கொண்டிருக்கிறமாதிரி தோன்றியது. நூலிழைபோல மெல்லிய காற்று எங்கிருந்தோ வீசிக்கொண்டிருந்தது.

வேளைகெட்ட வேளையில் நானும் ஹரியும் தனித்துத் தோட்டத்தில் நின்றிருப்பதை யாரேனும் பார்த்தால் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணமே ஏற்படவில்லை எனக்கு. சிறைப்படுத்தப்பட்டிருந்த கேவலமொன்றுதான் எல்லா வற்றையும் காட்டிலும் பெரிதாய்த் தோன்றியது.

''இன்று காலையில் என்னென்னவோ திடுக்கிடும் காரியங்கள் செய்தாயே, அதற்கெல்லாம் கொஞ்சம் பொருள் சொல்லேன்,'' என்றான் ஹரி.

''எது... என்ன?'' என்றேன்.

''சமையலறைக்கு வந்தாய். உன் அம்மா எங்கேயும் வழுக்கி விழவில்லை என்று நான் சொன்னதும் கன்னடத்தில் ஏதோ அர்த்தம் கேட்டாய். உடனே ஓடிவிட்டாய். இப்போது ஞாபகம் வருகிறதா?'' பாண்ட் பையில் கைவிட்டுக் கொண்டு, கழுத்தைச் சாய்த்து அவன் விளையாட்டாகக் கேட்ட விதம் இன்னொரு சந்தர்ப்பமாயிருந்தால், என்னைக் கவர்ந்திருக்கும். நிலவின் வெளிச்சத்தின் தென்பட்ட அவனுடைய சிவந்த முகத்தின் ஒரு பாதி, குடந்தை ராமர் கோவிலில் நான் பார்த்திருக்கிற சிற்பங்களின் நேர்த்தியையும், சீர்மையையும் நினைவூட்டி என்னைச் சிலிர்க்க வைத்திருக்கும், என் இதயத்தில் மட்டும் வேறுபல உணர்ச்சிகள் குமைந்துகொண்டு இருந்திராவிட்டால்.

அப்போதிருந்த மனநிலையில் சுருக்கமாக, ''இன்று முதல் நான் வேலைக்குப் போக ஆரம்பித்துவிட்டேன்,'' என்றேன்.

''கங்கிராகுலேஷன்ஸ்! எங்கே?'' என்றான் ஹரி.

''தினகரா பிரைவேட் லிமிடெட். மவுண்ட் ரோடில் இருக்கிறது. ஆனால் அங்கே நான் வேலைக்குச் செல்வது உங்கள் அக்காவுக்குப் பிடிக்கவில்லை. என் அம்மாவை வற்புறுத்தி என்னை நின்றுவிடும்படி சொல்லிக் கொண்டிருக்கிறார்.''

ஹரி மௌனமாக, தலைக்கு மேல் தொங்கிக் கொண்டிருந்த ஒரு புளியங்கிளையிலிருந்து இலைகளைக் கிள்ளி கொண்டிருந்தான். பின்னர், ''இந்த வீட்டில் இரண்டு அடிமைகள் போதும் ஹேமா. நீயும் அந்தக் குழுவில் சேராதே,'' என்றான்.

''யார் அந்த இரண்டு பேர்?'' என்றேன்.

''உன் அம்மாவும் நானும்தான். வேறு யார்? இதிலே நீயும் சேர வேண்டாம்,'' என்றான் ஹரி. ''ஒரிஜினல் அடிமை ஒருவர் இருந்தார் - என் அத்தான் - அக்காவின் கணவர். ஆனால் விலங்கை முறித்துக்கொண்டு போய்விட்டார் - கிராமத்திலே பண்ணை விவசாயம் செய்கிறேன் என்று. அதுபோல நீயும் வெட்டிக்கொண்டுவிடு.''

தோட்டத்துப் புற்களை காலால் கெந்தியவண்ணம் ஹரி போய்விட்டான். ஷெட்டில் நிறுத்தப்படாமல் விட்டுச் சென்றுவிட்ட கார், 'அடுத்து என்ன செய்யப்போகிறாய்?' என்று என்னைக் கேட்கிறமாதிரி என் எதிரே நின்றிருந்தது.

நான் முடிவுக்கு வந்துவிட்டேன். வீட்டுக்குள் திரும்பியவள், சூட்கேசை எடுத்துக் கொண்டேன்.

ஆனால் உடனே புறப்பட்டுவிடவில்லை. மணி இரண்டாகிக் கொண்டிருப்பதைக் கடிகாரம் காட்டியது. மனத்திலே தைரியம் இருந்தபோதிலும், கையில் ஒரு சூட்கேசுடன் ஒரு பெண் தனித்துச் செல்வது அசட்டுத் துணிச்சல் என்று எனக்குப் பட்டது. கொஞ்சமாவது பொழுது விடியட்டும் என்று காத்திருந்தேன்.

நீலவானம் கொஞ்சம் கொஞ்சமாக மங்கி, பிறகு கருமை பூத்து, இறுதியில் வெளிறத் தொடங்கியது. ஐந்து மணிக்கெல்லாம் அம்மா எழுந்துகொண்டுவிடுவது வழக்கமாகையால் அதற்கு முன்பே புறப்பட்டுவிட்டேன், வீட்டைவிட்டு.

நிலைப்படியில் நின்று ஒருமுறை திரும்பிப் பார்த்த போது அம்மாவின்பால் பரிதாபம் ஏற்பட்டது. கௌரியம்மா ளிடம் இவள் எந்த வகையில் சிக்கியிருக்கிறாள் என்பதைக் கண்டறிந்து, கூடிய விரைவில் விடுவிக்க வேண்டும் என்றும் நினைத்துக் கொண்டேன்.

பலபலவென்று பொழுது விடிந்து கொண்டிருந்தது. பால்புட்டிகளைச் சுமந்து செல்லும் வேலைக்காரிகள் என்னையும் என் பெட்டியையும் வியப்புடன் பார்த்தார்கள். ஒரு சைக்கிள் ரிக்ஷாக்காரன் மணியடித்தபடி என்னை நெருங்கி, ''டேசனுக்கா அம்மா?'' என்று விசாரித்தான்.

பக்கத்திலேயே ஒரு பஸ்ஸடாப் இருந்தது. ஆனால் பஸ் பிடித்துப் போவதற்குள் அம்மா தேடிக்கொண்டு வந்து, நடுத்தெருவில் ஏதாவது மன்றாடப் போகிறாளே என்று பயமாயிருந்ததால், நாலு தெரு தாண்டிச் சென்று பஸ் ஏறினேன்.

வனஜாவின் வீட்டுக்குப் போவதுதான் என் ஒரே உத்தேசம். வேறு யார் இருக்கிறார்கள் சென்னையில்?

வனஜாவின் வீட்டினருகில் என்னை இறக்கி விட்டு விட்டுப் பஸ் சென்றபோது, என் தைரியத்தையும் எடுத்துக் கொண்டு சென்றுவிட்டாற் போலிருந்தது. வனஜாவுக்கும் எனக்கும் என்ன சம்பந்தம்? அவளுடன் தங்கிக் கொள்ள முடியும் என்று நம்புகிற அளவுக்கு எனக்கு என்ன உரிமை இருக்கிறது அவளிடம்? 'ஹேமா! என் வீட்டில் நீ இருப்பதாவது! அது எப்படி சாத்தியம்?' என்று அவள் சொல்லிவிட்டால் திரும்பி நான் எங்கே போகமுடியும்?

அம்மாவிடமா?

# 7

**வ**னஜாவின் வீட்டை நெருங்க நெருங்க என் நம்பிக்கை பலவீனமடையத் தொடங்கியது. திரும்பி விடு, திரும்பி விடு என்று எனக்குள் ஒரு குரல் இரைச்சலிட ஆரம்பித்தது. எப்படியோ ஒரு வழியாக அவள் வீட்டை அடைந்து, படியும் ஏறிவிட்டேன்.

உள்ளே கசமுசவென்று பேச்சுக்குரல்கள் கேட்டுக் கொண்டிருந்தன. காலை நேரமானாலும் எல்லோரும் எழுந்து கொண்டுவிட்டார்களே என்று நினைத்தேன். கட்டுப்பாடும் சுறுசுறுப்பும் நிறைந்த அந்த மாதிரி குடும்பத்தில்தான் எனக்கு மனம் பொருந்தும் என்று எண்ணுகையில் மறுபடியும் ஆசைகள் துளிர்விட்டன. வனஜா ஓடிவந்து என்னை வரவேற்று, இரு கை நீட்டி அழைத்துச் சென்று, ஒரு கேள்வியும் கேட்காமல் தங்களோடு ஒருத்தியாய் என்னைச் சேர்த்துக் கொண்டுவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும் என்று மனக்கோட்டை கட்டினேன்.

மனக்கோட்டை என்று நான் குறிப்பிட்டது தவறு. ஏனென்றால் இடிந்து விழுவதுதான் மனக்கோட்டைகளின் இயல்பு. இது இடியவுமில்லை, விழவுமில்லை. கிட்டத்தட்ட நான் ஆசைப்பட்டபடியே நடந்தது.

வனஜாவின் தங்கை நான் படியேறும் போதே பார்த்துவிட்டாள். ''அக்கா, ஹேமா அக்கா வர்றாங்க,'' என்று வனஜாவுக்குக் குரல் கொடுத்தாள்.

உள்ளே பேச்சு சப்தங்கள் சட்டென நின்றன. நடையில் சிறிது இருட்டாக இருந்ததால் பளிரென்று விளக்குப்போடப் பட்டது. வனஜா எல்லோரையும் ஏதோ அதட்டுகிற மாதிரி இருந்தது.

அடுத்த நிமிடம் தன் கடைக்குட்டித் தம்பியைக் கையில் பிடித்தவாறு வனஜா வெளியே வந்தாள்.

சூட்கேசும் கையுமாக நான் அசடு வழியத் தடுமாறிக் கொண்டு நின்றிருந்தேன். என்ன கேட்பது, எப்படிக் கேட்பது என்று தெரியவில்லை. தப்புப் பண்ணிவிட்டு ஆசிரியையின் முன்னால் நிற்கும் குழந்தையைப்போல் நான் மலங்க மலங்க விழித்துக் கொண்டு என் தோழியின் முன்னே நின்றேன்.

எப்பேர்ப்பட்ட முட்டாள் நான்! நட்பென்றால் என்னவென்று புரிந்து கொள்ள அகராதிகளைப் போய்ப் புரட்டினேனே!

''ஒன்றும் நீ சொல்ல வேண்டாம், ஹேமா. வா உள்ளே,'' என்று வனஜா சொன்னதும், பொத்தென்று சூட்கேஸைத் தரையில் போட்டுவிட்டு அவளை அணைத்துக் கொண்டு கழுத்தைக் கட்டிக் கொண்டுவிட்டேன். குப்பெனக் கண்ணீர் பொங்கி வந்தால் எப்படியிருக்கும் என்பதை அன்றுவரை உணர்ந்திராதவள் இன்று அவள் தோள்களை ஈரமாக்கினேன். அவள் மார்பின் படபடப்பு எனக்கு எட்டியதைப் போலவே என் இருதயத்தின் ரகசியங்களை அவள் வாங்கிக் கொண்டாள்.

''இந்த அக்காவும் இங்கேயே இருக்கப் போறாங்களா?'' என்று வனஜாவின் தம்பி மழலையில் கேட்டு, நான் சொல்ல வேண்டியிருந்த வார்த்தைகளைத் தேவையற்றதாக்கி விட்டான்.

''பெட்டியை இப்படி வை.'' என்ற வனஜா என் சூட்கேஸை வாங்கி மரப் பெஞ்சுக்கடியில் வைத்தாள், ''பல் விளக்கிவிட்டு வா. காப்பி கலக்குகிறேன் உனக்கு. காப்பி தானே உனக்குப் பழக்கம்? இல்லை, வேறே ஏதாவதா?''

''காப்பிதான்,'' என்று சிரித்துக்கொண்டே பதிலளித்து விட்டுக் குழாயடிக்குச் சென்றேன். வனஜாவின் தங்கை தம்பிகள் என்னைச் சுற்றிச் சுற்றி வந்து, இதோ பல்பொடி, அதோ அங்கே இருக்கிறது சோப்பு, இந்தாருங்கள் அக்கா டவல் என்றெல்லாம் மனம் நிறைந்த மகிழ்ச்சியுடன் உபசரித்தார்கள்.

முகத்தின் ஈரத்தைத் துடைத்துக்கொண்டு சமைய லறைக்கு நான் திரும்பியதும், பட்பட்டென்று கை தட்டினாள் வனஜா. ''அட்டென்ஷன்! எல்லாரும் இப்படி வந்து நில்லுங்கள்,'' என்றதும் குழந்தைகள் அணி வகுத்தாற்போல் நின்றன.

''இந்த வீட்டுக் காபினெட்டை உனக்கு அறிமுகம் செய்து வைக்க வேண்டாமா, ஹேமா? நான்தான் பிரஸிடெண்ட். இவள் சாவித்திரி. பிரைம் மினிஸ்டர். இவன் சீனா - அலயஸ் சீனிவாசன் - ஹோம் மினிஸ்டர். இவன் பெயர் பாபா - சாயி பாபா - ஃபாரின் மினிஸ்டர். அதாவது அண்டை அயல் வம்புகளையெல்லாம் வம்புக்கு இழுத்துக் கொண்டு வருவான்,'' என்றாள் வனஜா.

''ஹௌ டு யூ டூ,'' என்று ஒவ்வொருவரையும் கை குலுக்கினேன். புகையும் இரும்பும் சூழ்ந்த தொழிற் சாலையிலிருந்து வெளிப்பட்டுப் பசுமை குலுங்கும் வயல் வெளியில் பிரவேசித்தாற் போல ஒரு புத்துணர்ச்சி பரவியது என் உள்ளத்தில்.

அப்புறம்தான் ஞாபகம் வந்தது. ''உன் அப்பா எங்கே வனஜா?'' என்று கேட்டேன்.

''ஓ! அவரை மறந்துவிட்டேனா...'' ஃபில்ட்டரிலிருந்து டிகாக்ஷனை எடுத்துக் கொண்டிருந்த அவள் முகத்தை நான் கவனிக்க முடியவில்லை. ''ஒரு சினேகிதருக்கு உடம்பு சரியில்லை என்று நேற்று ராத்திரி போனார். வரவில்லை.''

''அவருடைய இலாகா என்னவென்று நீ சொல்ல வில்லையே?''

''அவரா... ரிடையராகிவிட்ட கமாண்டர் இன் சீஃப்,'' என்றாள் வனஜா நகைத்துக்கொண்டே.

''அக்கா, அக்கா! அந்த டிகாக்ஷனில்லை. இதோ இங்கே எடுத்து வைத்திருக்கிறேன்,'' என்று குறுக்கிட்ட சாவித்திரி,

அடுப்பு மேடையிலிருந்து இன்னொரு டம்ளரை எடுத்துத் தன் தமக்கையிடம் கொடுத்தாள்.

''ஓகே! ஓகே!'' என்ற வனஜா எனக்கும் காப்பி கொடுத்து, தன் உடன் பிறந்தவர்களுக்கும் வழங்கினாள். ''மினிஸ்டர்களெல்லாம் வெளியே போய்ப் படிக்க ஆரம்பிக்கலாம். எட்டரை மணிக்கு நான் கூப்பிடுகிற வரை யாரும் இங்கே தலை காட்டக்கூடாது.

அவர்களை வெளியேற்றியது எனக்காகத்தான் என்று எண்ணியவளாக நான், ''வனஜா, என்னதான் நீ என்னை ஆருயிர்த் தோழியாக ஏற்றுக் கொண்டுவிட்டாலும், எங்கே வந்தேன், ஏன் வந்தேன் என்று கேட்காதிருக்கலாமா? அல்லது நான்தான் சொல்லாமல் இருக்கலாமா?'' என்றேன்.

''அவசியமில்லாததால் நான் கேட்கவில்லை,'' என்று வனஜா பதிலளித்தாள். ''ஓரளவு எனக்குத் தெரியும். ஓரளவு ஊகித்துவிட்டேன்.

''சும்மா அளக்காதே.''

''இதில் அளப்பதற்கென்ன இருக்கிறது, ஹேமா? உன் அம்மாவும் அவளுடைய எஜமானியம்மாளும் உன்னை எதற்கோ கட்டுப்படுத்த முயன்றிருக்கிறார்கள். உனக்குப் பிடிக்கவில்லை. வந்து விட்டாய். அதுதானே?''

நான் திகைத்துப் போனேன். முந்தின தினம் நான் பேச்சோடு பேச்சாக ஏதாவது சொல்லியிருப்பேன் போலும். அவைகளை மனத்தில் வாங்கிக்கொண்டிருக்கிறாள் அழுத்தக்காரி! ''கரெக்ட்!'' என்றேன்.

''அதற்கு மேல் சொல்ல வேண்டாம்,'' என்ற வனஜா ''உனக்குக் காரெட்டைத் துண்டமாய் நறுக்கினால் பிடிக்குமா, தேங்காய்ப் பூ மாதிரி துருவினால் பிடிக்குமா?'' என்றாள்.

அவள் சமையல் வேலையில் இறங்கிவிட்டதை அப்போதுதான் உணர்ந்தேன். ''காரெட்டே எனக்குப் பிடிக்காது,'' என்று பதில் கூறிவிட்டு அரிவாள் மணையை

எடுத்துப்போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன். பிளாஸ்டிக் கூடையிலிருந்த வெண்டைக் காய்களைத் தரையில் கொட்டிக்கொண்டு நுனியை ஒடித்து ஒடித்து முற்றல்களை அகற்றிக் கொண்டிருந்த சமயம்-

நடையில் ணங்கென்ற ஓசை கேட்டது. ஏதோ டம்ளர் விழும் ஓசை.

கடைக்குட்டிப் பையனான பாபா உள்ளே ஓடிவந்து, ''சீனா காப்பியைக் கொட்டிட்டான்! அப்பாவுக்காக எடுத்திட்டுப் போன காப்பியை அப்படியே கொட்டிட்டான்!'' என்று கூவினான்.

அதன் பொருள் எனக்கு விளங்கவில்லை. வனஜாவைப் பின் தொடர்ந்தேன்.

''கை வழுக்கிட்டுது அக்கா'' என்று கண்கலங்கத் தெரிவித்தான், சீனா. சிமெண்டுக் குழம்பு போன்ற 'திக்' கான காப்பி அவன் கால்களைச் சுற்றி ஓடிக் கொண்டிருந்தது.

''பரவாயில்லை, ஒரு கோணி எடுத்து வந்து துடைத்து விடு,'' என்றாள் வனஜா.

பெரியவள் சாவித்திரி குறுக்கிட்டு, ''ஏனக்கா, வேறே காப்பி போட வேண்டாம்?'' என்று கேட்டாள் தயக்கத்தோடு.

''வேண்டாம். இன்றைக்கு ஒருநாள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்ளட்டும் அவர்,'' என்று சொல்லிவிட்டு வனஜா உள்ளே திரும்பினாள்.

முளைக்கும் ஆயிரம் கேள்விகளை யாரிடம் கேட்பதென்று தெரியாதவளாக நானும் குழம்பிய மனத்துடன் திரும்பினேன். 'அக்கா, அக்கா, அந்த டிகாக்ஷனில்லை' என்று சற்று முன் சாவித்திரி கூவியதும், 'அப்பாவுக்கு எடுத்திட்டுப் போன காப்பியை சீனா கொட்டிட்டான்!' என்று பாபா குதித்ததும் என் நினைவில் எழுந்தன. 'இன்றைக்கு ஒருநாள் ஓட்டலில் சாப்பிட்டுக் கொள்ளட்டும்' என்று வனஜா கூறியதற்கு என்ன பொருளென்றும் எனக்குப் புரியவில்லை.

ஒன்று நிச்சயம். எதையோ வனஜா என்னிடம் மறைக்க முயன்றாள். தம்பி, தங்கைகளை எச்சரித்து வைத்திருந்த போதிலும் அது வெளிப்பட்டுவிட்டது.

''ரொம்ப வஞ்சனையான உலகம் இது ஹேமா, ரொம்ப வஞ்சனையான உலகம்.'' அரிசியைக் களைந்து கழுநீரைக் கொட்டிய வண்ணம் வனஜாதான் பேசிக் கொண்டிருந்தாள்.

தரையில் உட்கார்ந்திருந்த நான் எதுவும் சொல்ல மாட்டாமல் அவளை ஏறிட்டுப் பார்த்தேன். அரிசிப் பாத்திரத்தை ஒருபுறமாக வைத்துவிட்டாள் அவள். சமையலறையின் மேடையில் இரு கைகளையும் ஊன்றிக் கொண்டு ஜன்னல் வழியே வெளியே பார்த்தவாறு நின்றிருந்தாள். வெளிப்பக்கம் தொட்டியில் வளர்ந்திருந்த செடியிலிருந்து இரண்டு பால்ஸம் பூக்கள் மெல்லத் தசையசைத்துக் கொண்டிருந்தன.

''இவ்வளவு பொய்யர்களை, இவ்வளவு புரட்டர்களை, இவ்வளவு நம்பிக்கைத் துரோகிகளை வைத்துக் கொண்டு இந்த உலகம் எப்படி வெடித்துத் தூள் தூளாகாமல் இருக்கிறது! ஒவ்வொரு நாளும் எனக்கு அதுதான் ஹேமா பெரிய ஆச்சரியம்!''

அவள் குரலில் கோபத்தைக் காட்டிலும் ஆழம் காண முடியாத துயரம்தான் நிரம்பியிருந்தது. நான் எழுந்து சென்று அவள் தோளைத் தொட்டேன். அவள் தேகத்துக்குள் எரிமலைக் குழம்பு கொதித்துக் கொண்டிருப்பதைப் போல - தளதளவென்ற ஓசைகூடக் கேட்பது போல - எனக்குப் பிரமை தட்டிற்று.

''உன்னிடம் மறைக்கப் பார்த்ததைப் பற்றித் தப்பாக நினைக்காதே, ஹேமா!'' என்றாள் இறைஞ்சும் கண்களால் என்னைப் பார்த்து.

''எதையும் நீ மறைக்கவில்லை, வனஜா. நானே ஊகித்துக்கொள்ளும்படி விட்டிருக்கிறாய்,'' என்றேன்.

''உன்னால் இதை மட்டும் ஊகிக்க முடியாது. பல நாட்கள் என்னுடன் கூடவே தங்கியிருந்தால் ஒருவேளை கண்டு கொள்ளலாம்.''

அவளாகவே தொடரட்டும் என்று காத்திருந்தேன். தொடர்ந்தாள்.

''இவ்வளவு வயதுக்குப் பிறகு , அம்மா போன பிறகு, குடும்பம் இப்படிப் பெருகிய பிறகு, என் அப்பாவுக்கு வாழ ஆசை வந்திருக்கிறது. ஹேமா, வாழ ஆசை வந்திருக்கிறது. அடுத்த தெருவில் ஒரு பெண்ணுடன் குடித்தனம் நடத்துகிறார். அவளைக் கலியாணம் பண்ணிக் கொண்டு இங்கே அழைத்துவர அவருக்குத் தைரியமிருந்தாலும் அவளுக்கு இஷ்டமில்லை. பாதி நாள் அங்கேதான் தங்கியிருப்பார். சாப்பாடு, காப்பி, டிபனெல்லாம் குழந்தைகள் கொண்டு போய்க் கொடுக்கும்.''

நான் விக்கித்து நின்றேன். எரிமலை என்று நான் நினைத்தது எவ்வளவு உண்மையாகிவிட்டது! ''வனஜா...'' என்று ஆறுதலாக ஏதோ சொல்ல வாயெடுத்தேன். வார்த்தை வரவில்லை.

ஆபீசை அடைந்ததும் வனஜா எப்படிப்பட்ட சுறுசுறுப்போடு வேலையில் மூழ்கிப் போனாள்!

'தினகரா பிரைவேட் லிமிடெட் - குட்மார்னிங்!' என்று போனில் அவள் உற்சாகத்துடன் விளித்த ஒவ்வொரு முறையும் இவளா ஆயிரத்தெட்டு வேதனைகளை மறைத்துக் கொண்டிருக்கிறாள் மன ஆழத்தில் - கல்லையும் முள்ளையும் வெல்வெட்டுத் தலையணையின் கீழே மூடிக் கொண்டிருக்கிற மாதிரி இவளா புன்னகையின் கீழே புதைத்துக் கொண்டிருக் கிறாள் - என்ற ஆச்சரியம் மேலோங்கியது என்னிடம்.

டக் டக்கென்ற ஷூக்களின் ஒலியோடு வந்தான் ஜனார்த்தனன். நேரே சென்றிருக்க வேண்டியவன் வேண்டு மென்றே எங்கள் அறைக்குள் எட்டிப் பார்த்து ''ஹார்பருக்குப் போடு வனஜா,'' என்றான். அத்தோடு நில்லாமல், ''ஓ! ஹேமா

வந்திருக்கிறாளா? குட் குட்!'' என்று என்னைப் பார்த்து இளித்தான்.

எதையும் கவனியாதவள் போல வனஜா, ''இதோ போடுகிறேன் சார். இங்கேயே பேசுகிறீர்களா, உங்கள் ரூமுக்குப் போடட்டுமா?'' என்று கேட்டபடி டயலில் விரலை வைத்தாள்.

''இங்கேயே பேசி விடுவேன். ஆனால் மிஸ் ஹேமா கூச்சப்படுவதாகத் தெரிகிறது,'' என்று சொல்லிவிட்டு மறுபடியும் சிரித்துவிட்டுச் சென்றான் ஜனார்த்தனன்.

வனஜாவின் முகத்தைப் பார்த்தேன். தணலாகச் சிவந்திருந்தது. அவள் தீர்க்க வேண்டியதாகச் சொன்ன கணக்கு இந்த ஜனார்த்தனனிடம் தானோ என்று நான் கொண்டிருந்த சந்தேகம் இப்போது வலுப்பட்டது.

அடுத்தடுத்துப் பலருக்குக் கனெக்ஷன்கள் கொடுத்து கொண்டேயிருந்தாள் அவள். நான் என் ஃபைலிங் வேலையில் முனைந்திருந்தேன். டெலிபோன் மேஜையின் டக் டக்கென்ற ஸ்விட்சு ஒலியும் கனெக்ஷன் கார்டுகளை செருகி இழுக்கும் ஓசையும் பின்னணி இசைத்துக் கொண்டிருந்தன.

''என்ன... நோ... இது தினகரா பிரைவேட் லிமிடெட்.. என்ன?'' என்று வனஜா யாரிடமோ வாதாடும் சத்தம் கேட்டுத் தலை நிமிர்ந்தேன்.

''இந்தா ஹேமா, நீயே கேள்,'' என்று ரிஸீவரை எரிச்சலுடன் என்னிடம் தந்தாள் வனஜா.

''ஹலோ, யார் வேண்டும்?''

''நான்தான் சோழன் பேசுகிறேன்.''

''சோ-'' திடுப்பென்று என் மூளை சுறுசுறுப்படைந்தது. ''ஸாரி, ராங் நம்பர்,'' என்று சொல்லிவிட்டு ரிஸீவரைக் கொக்கியில் மாட்டினேன்.

''யாராம்?'' என்றாள் வனஜா.

''வனஜா, அது-'' என்று நாக்கைக் கட்டவிழ்க்க விருந்தவள், ஞாபகப்படுத்திக் கொண்டேன் பிரகாசத்தின் எச்சரிக்கையை. ''ஒன்றுமில்லை. ராங் நம்பர்,'' என்று மட்டுமே கூறினேன்.

எனக்கே வெறுப்பாயிருந்தது, என் நிலைமையை எண்ணி. உள்ளும் புறமும் ஒளிவில்லாமல் இருக்கும் இந்தச் சினேகிதியின் முன்னே எத்தகைய கபட நாடகமாடுகிறேன் நான்! 'என்னை மன்னித்து விடு, வனஜா' என்று மானசீகமாகச் சொல்லிக் கொண்டேன்.

'நான்தான் சோழன் பேசுகிறேன்' என்ற குரல் வந்ததும் அன்றுபூரா அலுவலக நடவடிக்கைகளைக் கவனிக்கும்படி அல்லவா எனக்குக் கட்டளை?

பரபரவென்று கையையும் காலையும் சொறிந்து கொண்டேன். புடைவையை உதறிவிட்டுக் கொண்டேன். சுற்று முற்றும் பார்த்தேன்.

''என்ன ஹேமா?'' என்றாள் வனஜா.

''இங்கே முசுக்கட்டைப் பூச்சி உண்டா? வெளியே என்னென்னவோ மரங்கள் இருக்கிறதே?''

வனஜா என்னருகில் வந்து என் கைகளையும் கால்களையும், பிள்வுசைச் சற்று விலக்கித் தோளிலும் இடுப்பிலும் ஆராய்ந்தாள். ''முசுக்கட்டை கடித்திருந்தால் தடித்திருக்குமே? இதுவரை இந்த அறைக்குள் பூச்சி பொட்டும் எதுவும் வந்தது கிடையாது. வெறும் பிரமை,'' என்றாள்.

''இல்லை, நிச்சயமாய் முசுக்கட்டைதான்,'' என்று வீம்பு பிடித்தேன்.

''அப்படியே இருக்கட்டும். என்ன செய்யச் சொல்கிறாய் அதற்கு?''

''இந்தாப்பா,'' என்று ஒரு பியூனைக் கூப்பிட்டேன். ''இந்த அறையில் ஏகப்பட்ட பூச்சிகள் இருக்கும்

போலிருக்கிறது. என் மேஜையை இப்படி வெளியில் போடு. நாளைக்கு ரூமை நன்றாய்க் கூட்டிய பிறகு உள்ளே போடலாம்,'' என்றேன்.

''பயந்தாங் கொள்ளி,'' என்று வனஜா சிரித்தாள்.

பியூன் வெளியே எடுத்து வந்து மேஜையையும், நாற்காலியையும் போட்டான். 'மறுபடியும் உன்னை ஏமாற்றியதற்கு மன்னித்துவிடு. வனஜா' என்று சொல்லிக் கொண்டேன். என்ன செய்வது? நானும் வனஜாவும் இருந்தது தனியான சிறிய அறை. அங்கிருந்தபடி வெளியே நடப்பது எதையும் காண முடியாது. வருவோர் போவோரை எப்படிக் கண்காணிக்க முடியும்?

இப்போது அறைக்கு வெளியேயுள்ள வெராந்தாவுக்கு வந்துவிட்டேன். இந்தக் கோடியிலிருந்து அந்தக் கோடி வரை பார்க்க முடிந்தது. வாசலில் வந்து இறங்குவோரையும் காணுவதற்கு வசதியாக இருந்தது.

விழிகளைச் சுழல விட்டபடியே என் வேலையையும் செய்து கொண்டிருந்தேன். குறுகுறுப்பும் ஆவலும் என் உடம்பில் புது ரத்தம் பாய்ச்சிக் கொண்டிருந்தது. துப்பறியும் மங்கையாக வேலை பார்க்கப் போகிறோம் என்று அடிக்கடி எனக்கு நானே சொல்லிக்கொண்டேன். ஒரு திகிலுணர்வு என் புலன்களை சுண்டிவிட்டுக் கொண்டிருந்தது.

ஆனால் எதுவும் நடக்கவில்லை. கடிகாரம் ஓடிக் கொண்டும் அலுவலகம் இயங்கிக் கொண்டும் இருந்தது. எந்தப் பூகம்பமும் உண்டாகவில்லை.

அதாவது, பன்னிரண்டே கால்வரை.

பன்னிரண்டே காலுக்கு வாசலில் ஒரு கார் வந்து நின்றது.

அதிலிருந்து இறங்கி உள்ளே வந்து கொண்டிருந்தாள் கௌரியம்மாள்.

# 8

**நா**ன் எவ்வளவு பெரியமுட்டாள் என்பதைப் புரிந்து கொள்ள அந்த ஒரே நிமிடம் போதுமானதாயிருந்தது. என்னைப் போன்ற சராசரி நபர்களுக்கு டூ லேட்டாகத்தான் அறிவு உதிக்கும் போலும்!

கௌரியம்மாள் காரிலிருந்து இறங்கிய தோரணையையும், கட்டடத்துக்குள் உரிமையோடு நுழைந்த மிடுக்கையும், இரண்டொரு குமாஸ்தாக்கள் அவளுக்குப் பணிவோடு வணக்கம் போட்ட முறையையும் கண்டவுடன் நான், 'ஆகா! இப்படியா சமாசாரம்! இதை ஊகிக்காமல் போனோமே!' என்று மனத்துக்குள் கையை உதறிக் கொண்டேன்.

கௌரியம்மாள் என்னைப் பார்க்காதிருக்க முடியாது. எல்லோரையும் கவனிக்க வேண்டுமென்றுதான் நான் ஒரு முசுக்கட்டை நாடகமாடி என் மேஜையை வெளிப்புறம் போட்டுக் கொண்டிருந்தேனே! அப்படிச் செய்ததன் மூலம், என்னை எல்லோரும் கவனிக்கும்படியும் பண்ணிக்கொண்டு விட்டேன். ஆகையால் கௌரியம்மாள் என்னைக் கட்டாயம் பார்த்தேயிருப்பாள். இருந்தாலும் பார்க்காத மாதிரி என்னைத் தாண்டிக்கொண்டு சென்றாள்.

அவள் ஏன் என்னை இங்கே வேலைக்கு வரக் கூடாதென்று சொன்னாள் என்பது புரிந்துவிட்டது எனக்கு.

அவளைப் பொல்லாதவள், கொடுமைக்காரி, இதயமும், இரக்கமும் அற்றவள் என்றெல்லாம்தான் இது நாள்வரை நினைத்திருந்தேனே தவிர, பாவம் புண்ணியம், சட்டம் சட்ட விரோதம் என்றெல்லாம் பார்க்காமல் பணம் பண்ணுகிற பிஸினஸ்காரி என்பதை உணர மறந்துவிட்டேன்.

தினகரா பிரைவேட் லிமிடெட்டுக்குள் அவள் அடியெடுத்து வைக்கும்போதுதான் அதைக் கண்டு கொண்டேன்.

ஆம். இந்த நிறுவனத்தின் கள்ளக் கடத்தல் வேலை களில் இவளுக்கு ஒரு பங்கு இருக்கக்கூடும். இங்கே நான் வேலைக்கிருப்பதை அதனால்தான் அவள் விரும்பவில்லை. கஸ்டம்ஸ் அதிகாரியான பிரகாசம்தான் எனக்கு வேலைதேடிக் கொடுத்திருக்கிறார் என்று அவள் அறிவாள். அவர் என்னை வேவு பார்க்கச் சொல்லியிருப்பது அவளுக்குத் தெரிந்திருக்க நியாயமில்லை. ஆனால், நான் தற்செயலாக எதையேனும் அவர் காதில் போட்டுவிடப் போகிறேனே என்று அஞ்சியிருக்கலாம். அவளுடைய காம்பவுண்டுக்குள்ளேயே சமையல்காரியின் மகளாக நான் வசிப்பதால், மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாக நான் தெரிந்து கொள்ள வசதிகள் உண்டு என்பது தான் அவள் பயத்துக்குக் காரணம். அதற்காகத்தான் ஆரம்பத்தி லிருந்தே இங்கே நான் வரக்கூடாது என்று அப்படியொரு வீம்பு பிடித்திருக்கிறாள் போலும்.

தீர்மானமாக அப்படித்தான் தோன்றியது எனக்கு. எதற்கும் சந்தேகத்தைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றெண்ணி னேன். மேஜையை வெளியே கொண்டு வந்து போடுவதற்காக ஒத்தாசை செய்த பியூன் என் அருகிலேயே நின்றிருந்தான். ''யாரப்பா அந்த அம்மாள்?'' என்று ஒன்றும் தெரியாதவள் போல் கேட்டேன்.

''கௌரியம்மாள்னு பேருங்க. படா பணக்காரி,'' என்று பயபக்தியோடு தெரிவித்தான் பியூன்.

''நம்ம கம்பெனியிலே டைரக்டரா?'' என்றேன்.

''இல்லீங்க. ஆனால் எல்லா டைரக்டர்களுக்கும் தெரிஞ்சவங்க. கோயம்புத்தூரிலே ஒரு மில்லிலே பாதிப் பங்கு இந்தம்மாளுடையது. அந்த மில்லுக்காக ஏதாவது மெஷின் இல்லாட்டி ஸ்பேர் பார்ட்ஸ் வாங்குவதற்காக அடிக்கடி இங்கே வருவாங்க,'' என்றான் பியூன்.

'தினகரா பிரைவேட் லிமிடெட்டா...? கேள்விப்பட்ட பெயராக இல்லையே?' என்று கௌரியம்மாள் முன்னொரு

நாள் சொன்னது எனக்கு ஞாபகம் வந்தது. ஊர் பேர் தெரியாத கம்பெனி என்றால் நான் இளப்பமாகக் கருதி இந்த. வேலைக்குப் போகாமல் இருந்து விடுவேன் என்று நினைத்தாளோ என்னவோ?

பியூன் போய்விட்டான். எனக்கு நாற்காலியில் உட்காரவும் இருப்புக் கொள்ளவில்லை. நின்று கொண்டிருக்கவும் முடியாமல் கால்கள் கடுகடுத்தன. எல்லாவற்றுக்கும் மேலாக மனம் பரபரவென்று பறந்தது. சின்ன வயதில் ஒருமுறை காவிரியாற்றின் கொதிக்கும் மணலில் இறங்கி எதிர்க்கரைக்குப் போக முற்பட்டதும், பாதி வழி நடப்பதற்குள் செருப்பில்லாத கால் தணலாய் வெந்ததும், இப்படியும் திரும்ப முடியாமல் அப்படியும் தொடர முடியாமல் நான் தவியாய்த் தவித்ததும் நினைவு வந்தது. ஏறத்தாழ அதே நிலையில்தான் இப்போதும் இருந்தேன்.

டைரக்டர்களுக்குத் தெரிந்தவள் என்றால் நிச்சயமாய் என்னைப்பற்றிக் கோள் சொல்லத்தான் போகிறாள். நான் வேலையைப் பறி கொடுக்கத்தான் போகிறேன். அதிலொன்றும் சந்தேகமில்லை. ஆனால் அதற்கு முன்பு இவள் குட்டையும் நாம் உடைக்காமல் விடக்கூடாதென்று உறுதி பூண்டேன்.

சும்மா எனக்காக மட்டுமா இன்று வந்திருப்பாள்? ஒரு நாளும் இருக்காது. கள்ளக் கடத்தல் பொருள் இவளுக்கும் ஏதாவது வந்திருக்கும். இன்று காலையில்தான் கப்பலிலிருந்து கொண்டு வந்திருந்த பல கள்ளிப் பலகைக் கேஸ்களை லாரியிலிருந்து இறக்கிக் கொண்டிருந்தார்கள். சற்று முன்தான் ஆபீசுக்கு வரும்போதே கவனித்தேன். அதற்கேற்றாற்போல் 'நான்தான் சோழன் பேசுகிறேன்' என்ற குறிப்பும் வந்து விட்டது டெலிபோனில்.

கௌரியம்மா! இரு, இரு! கடைசியாகச் சிரிக்கப் போகிறவள் நீயல்ல, நான்தான்!

நேரே ஜனார்த்தனனின் அறையை நோக்கித்தான் சென்றிருந்தாள் கௌரியம்மாள். அங்கே என்ன பேசுகிறார்கள் என்பதைக் கேட்கத் துடித்தேன்.

''இதையும் ஃபைல் பண்ணி விடுங்கள், மிஸ் ஹேமா,'' ஒரு கற்றைக் காகிதங்களை என் மேசை மீது வைத்து விட்டுச் சென்றார் ஒரு குமாஸ்தா. பொம்மைபோல் அவைகளை அடுக்கினேன். சட்டென ஓர் எண்ணம் உதித்தது. ஜனார்த்தனனின் அறைக்குச் செல்ல ஒரு சாக்குக் கண்டுபிடிக்க வேண்டியதுதானே? அவனுடைய பெயர் போட்டதாக ஏதாவது கடிதம் வந்திருக்கிறதா என்று தேடினேன். ஏழெட்டு இருந்தன. ஆனால் அவை அலுவலகம் சம்பந்தப் பட்டவைதான். ஆகவே அந்தந்த ஃபைலில் சேர்க்கப்பட வேண்டியவைதான்.

கடைசியில் ஒரு கடிதம் பம்பாயிலிருந்து வந்திருந்தது. யந்திர பாகங்களைக் குறிப்பிட்டு விட்டு, கடைசியில் 'நீங்கள் கேட்டிருந்த பாண்ட் துணி அடுத்த வாரம் அகமதாபாத்தி லிருந்து வரும். வந்ததும் அனுப்பி வைக்கிறேன்', என்று ஒரு வரி தனிப்பட்ட முறையிலும் எழுதப்பட்டிருந்தது.

அதை எடுத்துக் கொண்டேன். ஜனார்த்தனனின் அறையை அடைந்தேன். வெளியே இரண்டு நிமிடம் நிற்கிற மாதிரி பாசாங்கு செய்தேன். நல்ல வேளையாக அறையின் வெளியே உட்கார்ந்திருக்கும் ஆபீஸ் பையனைக் காணோம். மற்றக் குமாஸ்தாக்களின் பார்வையிலும் படாமல் சற்றுத் தள்ளியிருந்தது அந்த அறை.

இரண்டு நிமிடம்தான் நின்றிருப்பேன். அதிலும் ஒரு நிமிடம் என் இதயத்தின் இரைச்சல் அடங்கி வெளி ஓசைகளைச் செவிமடுப்பதில் செலவழிந்துவிட்டது. மிஞ்சிய நிமிடத்தில் என் காதில் விழுந்தது-

''ஸீரியஸாய்ச் சொல்கிறேன். அவளை நீங்கள் வேலையில் வைத்துக் கொள்ளக்கூடாது.'' இது கௌரியம்மாளின் குரல். நான் எதிர்பார்த்ததைத்தான் சொல்கிறாள்.

ஆனால் ஜனார்த்தனனின் பதில் நான் எதிர்பாராதது. ''ஜி.எம். மிடமும் மற்றவர்களிடமும் நான் சொல்கிறேன், மேடம். நேற்றுதான் வேலைக்கு வந்திருக்கிறாள். உடனேயே நீக்குவதென்றால் கஷ்டம்.''

ஜனார்த்தனின் மறுப்புக்குக் காரணம் எனக்கல்லவா தெரியும்! என் மீது கண் வைத்திருப்பவனாயிற்றே! அவ்வளவு எளிதாக என்னை வீட்டுக்கு அனுப்பி விடுவானா - என்னதான் அபாயமென்று கௌரியம்மாள் எச்சரித்தாலும்?

''நாங்கள் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும் என்கிறீர்கள்! அவ்வளவுதானே?'' என்ற ஜனார்த்தனன், ''எஸ்! கம் இன்,'' என்று குரல் கொடுத்தான்.

தூக்கி வாரிப்போட்டது எனக்கு. அறைக்கு வெளியே நான் நிற்பதைக் கண்டுவிட்டானே! எப்படி?

ஓ! கனத்த கண்ணாடி போட்ட அந்த இரட்டைக் கதவு நன்றாகப் பொருந்திக் கொள்ளாமல் லேசாய்ப் பிரிந்திருந்தது. அந்த இடைவெளிதான் அவர்கள் பேச்சு என் காதில் விழ வகை செய்தது. அதேபோல் நான் வெளியே இருப்பதையும் அவனுக்குக் காட்டிக் கொடுக்கும் என்று உணராமல் போனேனே!

ஆனால் என் கையில்தான் தற்காப்பு ஆயுதமாக அந்தக் கடிதம் இருக்கிறதே! எதுவும் நேராதவள் போல் சகஜமாக உள்ளே நுழைந்தேன். ''எக்ஸ்க்யூஸ் மி சார், இது உங்கள் பர்ஸனல் கடிதம் போலிருக்கிறது. ஏதோ பாண்ட் துணியைப் பற்றியும் எழுதியிருக்கிறார்கள். என்னிடம் வந்திருக்கிறது. ஃபைல் செய்ய வேண்டியதுதானா?'' என்று கேட்டேன்.

என் முகத்தைப் பார்த்தபடியே வாங்கிக் கொண்டான் அவன். மேலோடு அதை வாசித்துவிட்டு, ''ஆமாம். அங்கேயே ஃபைல் பண்ண வேண்டியதுதான்,'' என்று ஒரு புன்சிரிப் போடு என்னிடம் திருப்பித் தந்தான். மெனக்கெட்டு நான் அவன் அறையைத் தேடி வந்திருக்கிறேன் என்பதில் அளப்பரிய ஆனந்தம் அவனுக்கு. அதை வெளிக்காட்டிக் கொள்ளவும் தயங்கவில்லை. ஆனால் எனக்கோ, கௌரியம்மாளின் குத்தீட்டியான பார்வை என் முதுகைத் துளைத்துக் கொண்டிருக்கின்ற உணர்வே நிரம்பியிருந்தது.

''தாங்ஸ் சார்,'' என்று சொல்லிவிட்டு வெளியேறி னேன். இம்முறை அறைக் கதவுக்கு நேரே நில்லாமல் சற்று நகர்ந்து நின்று கொண்டேன்.

''ஷிப் வந்திருக்கிறதாமே! நான் கேட்டது வந்து விட்டதா? அதற்குத்தான் முக்கியமாய் வந்தேன்,'' என்றாள் கௌரியம்மாள்.

''கார்டிங் எஞ்சின்தானே? பார்ட் பார்ட்டாய் வந்திருக்கிறது.''

''கேஸைப் பார்த்தால் நான் சொல்லி விடுவேன் - எது எனக்குச் சேர வேண்டியதென்று.''

''பியூனை அனுப்புகிறேன். போய்ப் பாருங்கள்,'' என்று மணியடித்தான் ஜனார்த்தனன்.

விடுவிடுவென்று என் இடத்துக்குத் திரும்பிவிட்டேன்.

கப்பலில் வந்திருக்கிற கள்ளிப் பெட்டிக் கேஸ்களை கௌரியம்மாள் பார்க்கப் போகிறாள். அவளுக்குத் தெரியுமாம், எது அவளுக்குச் சேர வேண்டியதென்று! அப்படியானால் அந்தக் குறிப்பிட்ட பார்சலில்தான் இருக்கிறது அவளை மாட்ட வைக்கப் போகும் பொருள்!

கட்டிடத்தின் பின்புறத்தில் ஒரு கிடங்கு இருப் பதை நான் பார்த்து வைத்திருந்தேன். அங்கேதான் கௌரியம்மாளைப் பியூன் அழைத்துச் சென்றிருப்பான்.

என்ன எடுத்துச் செல்கிறாள் அவள் என்பதை அங்கே போனால் பார்த்து விடலாம்.

மறுபடியும் ஒரு சாக்குக்காக அலைந்தது என் அறிவு.

ஒரு கண்ணாடி டம்ளரை எடுத்துக்கொண்டு கிடங்கை நோக்கிப் புறப்பட்டேன். அதனருகேதான் டிபன் அருந்தும் அறையும், வாட்டர் கூலர் அண்டாவும் இருந்தன. தண்ணீருக்காக வந்த மாதிரி இருக்கட்டுமே என்றுதான் டம்ளருடன் சென்றேன்.

கிடங்கை நெருங்கும்போதே மடேல் மடேலென்கிற ஓசை கேட்டது. கள்ளிப் பலகைகளைப் பெயர்க்கும் சத்தம்.

வாட்டர் கூலரின் தட்டில் டம்ளரை வைத்துவிட்டு அடிமேலடி வைத்துக் கிடங்கின் வாயிற்புறத்தை அடைந்தேன். சுவரோடு சுவராக ஒண்டிக்கொண்டு எட்டிப் பார்த்தேன்.

மிக முன்புறத்திலேயே கௌரியம்மாள் நின்றிருந்தாள். கள்ளிப் பலகைகளாலான ஒரு கேஸை உடைத்துக் கொண்டிருந்தான் ஓர் ஆள்.

அதனுள்தான் கௌரியம்மாள் கேட்டிருந்த யந்திர பாகம் இருக்கிறதென்று ஊகித்தேன். யந்திர பாகத்துக்குள் வேறு என்னென்ன கடத்தல்கள் வைக்கப்பட்டிருக்குமோ!

கொஞ்சம் பலமாக மூச்சுவிட்டால்கூட அவளுக்குக் கேட்டுவிடும் என்கின்ற அளவுக்குக் கிட்டத்தில் நான் இருந்தேன். ஜனார்த்தனனிடம் காட்டுவதற்காவது ஒரு கடிதம் இருந்தது. இங்கே எதுவும் கிடையாது. வேலையை விட்டுவிட்டு ஒரு பெண் இங்கே வந்து பார்த்துக் கொண்டு நிற்பானேன் என்று எவருக்கும் சந்தேகம் உதிக்கலாம். கள்ளக் கடத்தல்காரர்கள் எதற்கும் துணிந்தவர்கள். ஜனார்த்தனன் என்னை வேலையை விட்டு நீக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டாலும்கூட என்னைக் கண்காணிக்காமல்

இருக்கமாட்டான். ஆகவே இந்த இடத்தில் நிற்பது அபாயம் என்று என் உள்ளறிவு எச்சரித்துக் கொண்டிருந்தது. அப்படியும் நகராமல் நின்று கொண்டிருந்தேன்.

சுரீலென்று ஓர் அம்பு பாய்ந்தாற்போல் என் வலது கண்ணை எதுவோ தாக்கியது. கள்ளிப் பலகையின் ஒரு சில்லுதான். கேஸ் உடைக்கப்பட்ட வேகத்தில் தெறித்து வந்து, வாசற்புறமிருந்த என் கண்ணில் பாய்ந்துவிட்டது.

'ஆ அம்மா!' என்று எப்படித்தான் கத்தாதிருந்தேனோ! அப்படியொரு மன உறுதி எனக்கு இருக்குமென்று நானே நினைக்கவில்லை. மரண வேதனையைப் பொறுத்துக் கொண்டேன். ஆனால் ஒரு வினாடியும் அங்கே நிற்கமுடிய வில்லை. கண்ணைப் பொத்திக் கொண்டும் தேய்த்துக் கொண்டும் ஓட்ட ஓட்டமாகத் திரும்பினேன். கட்டடமும், மனிதர்களும், பீரோக்களும் அடியோடு சுழன்றாடுவது போலிருந்தது. விண் விண்ணென்று தலைக்குள் தெறித்தது.

''ஹேமா! உன்னை எங்கெல்லாம் தேடுவது?'' என்ற வனஜாவின் குரல் கேட்ட பிறகுதான் என் இடத்தை அடைந்துவிட்டேன் என்று அறிந்து கொண்டேன். ''என்ன உன் கண்ணில்? ஏன் இப்படித் தடுமாறுகிறாய்?'' என்று திகைத்தாள் அவள்.

''ஒன்றுமில்லை. ஒன்றுமில்லை. ஏதோ தூசி விழுந்துவிட்டது,'' என்று கூறிக் கண்ணைத் தேய்த்தேன்.

''கசக்காதே! கசக்காதே! இரு'', என்று வாயினால் ஊதினாள் வனஜா.

''எதற்கு என்னைத் தேடினாய்?'' என்று பேச்சை மாற்றினேன்.

''ஹேமா! எனக்காக நீ ஒரு பெரிய உதவி செய்ய வேண்டும். அதுவும் உடனே!''

''என்ன வனஜா?''

''என் வீட்டுக்குப் போக வேண்டும் இப்போதே. நான் மானேஜரிடம் சொல்லிக் கொள்கிறேன். நான் போக முடியாதிருக்கிறது.''

''விவரமாய்ச் சொல்லேன்.''

''டெலிபோனை ஆபரேட் பண்ண உனக்கு இன்னும் தெரியவில்லை. தெரிந்திருந்தால் உன்னை இங்கே விட்டு விட்டு நானே போவேன்.''

''மறுபடியும் மறுபடியும் தலைகால் இல்லாமல் பேசுகிறாயே?'' என்றேன் அதட்டலாக.

''சாவித்திரி - என் தங்கை இப்போதுதான் போன் பண்ணினாள். அப்பா வந்திருக்கிறாராம் வீட்டில்.''

''சரி?'' அவள் முகத்தைப் பார்த்தேன். என்னைக் காட்டிலும் பன்மடங்கு அதிகமான பதற்றமும் கலவரமும் அவளிடம் தென்பட்டன.

''நான் இல்லாத போது வீட்டுக்கு வந்தால் உடனே போன் பண்ணு என்று குழந்தைகளிடம் சொல்லி வைத்திருக்கிறேன். ஏனென்றால்... ஏனென்றால்...'' என் தோழியின் கண்களில் நீர் தளும்பிக் கொண்டிருந்தது. என்னுடைய கலங்கிய விழிகளின் வழியே பார்த்தபோது, கண்ணீர்க் குளத்தில் அவள் மிதந்து கொண்டிருக்கிறாள் போல் பிரமை ஏற்பட்டது.

''வனஜா...'' பரிவோடு அவள் தோளைத் தொட்டேன்.

கண்ணீரை விழுங்கிக்கொண்டு தழுதழுத்த குரலில் அவள் சொன்னாள்: ''ஏனென்றால், நான் இல்லாத போது வந்து எதையாவது எடுத்துக் கொண்டுபோய் விடுகிறார். பணம், பண்டம், துணிமணி, ஏதாவது! சீசீ! இந்த அளவுக்கு கேவலமான ஒரு தகப்பனாரை நீ

கேள்விப்பட்டே இருக்கமாட்டாய், ஹேமா! கேள்விப் பட்டேயிருக்க மாட்டாய்!''

என்ன சொல்வதென்று தெரியாமல் மௌனமாய் இருந்தேன்.

''என் அம்மா வைத்துவிட்டுப் போன ஒன்றிரண்டு நகைநட்டு, புடவைகள், சின்ன சின்னப் பாத்திரங்கள் - ஏன், சில சமயம் என் சம்பாத்தியத்தில் நான் மிச்சம் பிடித்து வைத்திருக்கிற பணம்கூட - திருட்டுத்தனமாய் எடுத்துப் போய் விடுகிறார். இனிமேல் அதற்கு இடம் கொடுப்பதில்லை என்று தீர்மானம் செய்துவிட்டேன். அதனால் நான் அவர் வந்தால் உடனே போன் பண்ணு என்று சாவித்திரியிடம் சொல்லி வைத்திருந்தேன்.'' என்னிடம் விவரிக்க விவரிக்க, அவள் பேச்சே ஒரு சிறு நெருப்புப் பொறியாய் ஜனித்து, காட்டுத் தீயாய்த் தலைவிரித்தாடும் கோரத்தைக் கண்டேன். ''வனஜா, நான் எப்படி அங்கே...'' என்று தயங்கியதும், ''ஆமாம், ஆமாம். நீ போக வேண்டாம். தெரியாமல் சொல்லிவிட்டேன். நானே போகிறேன். டெலிபோன் எக்கேடோ கெடட்டும். இந்த அவமானத்துக்கு ஒரு முடிவு கட்டி விட்டுத்தான் மறு வேலை பார்க்கப் போகிறேன்,'' என்று வனஜா ஆத்திரத்துடன் தன் ஹாண்ட் பாக்கை எடுத்துக் கொண்டாள்.

பயந்து போனேன் அவளுடைய ஆங்காரக் கோலத்தைக் கண்டு. அந்த மனநிலையில் அவள் கொலையே செய்து விடுவாள் போலிருந்தது.

''வேண்டாம் வனஜா. நீ போக வேண்டாம். நானே போகிறேன். உனக்கு அப்பா எனக்கும் அப்பா மாதிரிதான். இதமாய்ப் பேச முடியுமா என்று பார்க்கிறேன்,'' என்றேன்.

''பேசினால் போதாது. அந்த வீட்டிலிருந்து ஒரு துரும்பும் வெளியே போகும்படி விடக்கூடாது.''

''போகாது. போகாதபடி பார்த்துக் கொள்கிறேன். நீ அமைதியாய் இங்கேயே இரு. உன் அப்பாவை நல்ல விதமாய்

அனுப்பிவிட்டு அரை மணியில் வந்து விடுகிறேன். சரிதானே?''

சித்தப் பிரமை கொண்டவள்போல் தலையையாட்டும் வனஜாவுக்குச் சிரித்துக்கொண்டே முதுகில் தட்டி ஆறுதல் கூறிவிட்டுக் கிளம்பினேன்.

அடிபட்ட வலது கண்ணில் வினாடிக்கு வினாடி வலி அதிகரித்துக் கொண்டிருந்தது. அது மட்டுமல்ல. கௌரியம்மாளைக் கையும் களவுமாய்ப் பிடித்துப் பிரகாசத்திடம் ஒப்படைக்கக்கூடிய பெரும் வாய்ப்பைக் கை நழுவவிட்டு விட்டுர சம்பந்தமில்லாத விஷயத்தில் போய்த் தலையிடுகிறோமே என்ற உறுத்தல் வேறு பெரிதாயிருந்தது. ஆனால் வனஜாவின் வீட்டில் ஒரு கொலை விழாமல் தடுப்பதுதான் முக்கியம் என்று எனக்கு நானே சமாதானம் கூறிக் கொண்டேன்.

வனஜாவின் வீட்டுப் படியேறினேன். முன்னறையில் வாசலில் கையைப் பிசைந்து கொண்டிருந்த சாவித்திரி, ''ஹேமாக்கா!'' என்று ஓடிவந்து என் இடுப்பைக் கட்டிக் கொண்டாள்.

அறைக்குள்ளே மர பீரோவைத் திறந்து கொண்டிருந்த நபர் என்னை நோக்கித் திரும்பினார்.

## 9

ஓடிவந்து என்னைக் கட்டிக்கொண்ட சாவித்திரியை, கையை மெதுவே அழுத்தி, 'ஒன்றுமில்லை, சும்மா இரு, நான் பார்த்துக் கொள்கிறேன்,' என்று சாடை காட்டித் தைரியம் சொன்னேன்.

உண்மையில் நான்தான் அவள்மூலம் தைரியம் பெற்றேன். ஆபத்தான சமயங்களில், மனம் கலங்கி

பார்க்குமிடமெல்லாம் இருளாகத் தோன்றுகின்ற வேளை களில் பக்கத்திலே ஒரு குழந்தை பயமற்று விளையாடிக் கொண்டிருப்பதைக் கண்டோமானால் ஒரு தெம்பும் ஆறுதலும் உண்டாகுமே, அதுபோல இருந்தது எனக்கு, வீட்டில் நுழைந்தவுடனே வனஜாவின் தங்கையைக் கண்டதால். முன்பின் தெரியாத வனஜாவின் அப்பாவிடம் - மட்டமான இயல்பு கொண்டவர் என்று வேறே கேள்விப்பட்ட பிறகு - எப்படிப் பேசப் போகிறோம் என்று குழம்பிக் கொண்டிருந்த நான், இரண்டும் கெட்டான் சிறுமியான சாவித்திரியை ஒரு பெரிய துணையாகக் கருதியது வேடிக்கைதான்.

பீரோவில் எதையோ குடைந்து கொண்டிருந்த மனிதர் என்னை நோக்கித் திரும்பினார். கச்சலான நபர். ஸிந்திக் காரர்களின் துணிக் கடைகளில் உள்ள ஸேல்ஸ்மேன்களைப் போலத் தொள தொளவென்ற பைஜாமாவும் முழுக்கை ஷர்ட்டும் அணிந்திருந்தார். ஆனால் அவர்களைப் போலச் சுறுசுறுப்போ, வளப்பமோ காணப்படவில்லை. சிறிது மாநிறமாயிருந்ததால், பற்கள் பளீரென்று வெளுப்பாய்த் தெரிந்தன.

'போ வெளியே!' என்று அவர் சொல்லி நானும் அதுதான் சாக்கு என்று போய்விடப் போகிறேனே என்று சாவித்திரி பயந்தாளோ என்னவோ! நான் அந்த வீட்டில் இருப்பதற்கு உரிமை கொண்டவள்தான் என்று கூறுகிற மாதிரி ''இவங்க நம்ம வனஜாவோட ஆபீசில் வேலை செய்யறாங்க,'' என்று என்னைத் தன் தகப்பனாருக்கு அறிமுகம் செய்து வைத்தாள்.

கொஞ்சமும் எதிர்பாராத நல்ல சுபாவத்தைக் காட்டினார் ஜம்பு— வனஜாவின் அப்பா. பல் தெரியச் சிரித்தபடி, ''அட அப்படியா? உள்ளே வா, அம்மா,'' என்றார் என்னைப் பார்த்து. கடுமையான முஸ்தீப்புக்கள் செய்து கொண்டிருந்த

என்னை நிராயுதபாணியாக்கி விட்டது அவருடைய இந்த வரவேற்பு. துராக்கிருதமாக வீட்டுக்குள் நுழைந்திருப்பது நான்தானே தவிர அவரல்ல என்றுகூட எண்ண வைத்து விட்டது என்னை.

ஏதாவது சமாதானமாகக் கூறவேண்டும் என்று நினைத்து, ''ஆபீசுக்கு எடுத்துப் போக வேண்டிய ஃபைலொன்றை மறந்து வைத்துவிட்டேன். எடுத்துப் போவதற்குத் தான் வந்தேன்,'' என்றேன்.

''ஓ, தேடி எடுத்துக் கொள்ளேன்,'' என்று எனக்கு அனுமதி வழங்கினார் தாராளமாக. பிறகு சாவித்திரியின் பக்கம் திரும்பி, ''உள்ளே பால் இருக்கிறதா பார். சும்மா நிற்கிறாயே! வருகிறவர்களுக்குக் காப்பி தரவேண்டாமா?'' என்று கட்டளையிட்டார். அந்த வீட்டின் எஜமானன் தான்தான் என்பதை எனக்குச் சுட்டிக் காட்டுவதாகவேயிருந்தது அவருடைய தோரணை.

சாவித்திரி தயக்கத்துடன் சமையல்கட்டுக்குச் சென்றாள். நான் மேஜையின் இழுப்பறைகளை ஆராய்கிற மாதிரி பாசாங்கு செய்தேன்.

ஜம்பு பழையபடி பீரோவில் ஏதோ தேடலானார்.

என்னை நானே உசுப்பிக் கொண்டேன். அவருடைய வேடத்துக்கெல்லாம் மயங்கக்கூடாது என்று உறுதி பூண்டவளாக, ''சார், தயவு பண்ணி பீரோ அலமாரி எதையும் திறக்க வேண்டாம். வனஜா சொல்லச் சொன்னாள்,'' என்றேன் கண்டிப்புத் தொனிக்கும் குரலில்.

அவர் முகத்தைத் திருப்பி என்னை ஆச்சரியத்துடன் பார்த்தார். ஒரு வினாடி தன்னையும் மறந்து கோபம் கொண்டவராக, ''இது என் வீடு,'' என்றார்.

''உண்மையில் நீங்கள் அப்படி நினைக்க வேண்டும் என்றுதான் வனஜா ஆசைப்படுகிறாள். அப்படி இல்லையே

என்றுதான் வருத்தப்படுகிறாள். அப்படி இல்லாத வரையில் இந்த வீட்டிலிருந்து நீங்கள் ஒரு துரும்பையும் எடுத்துச் செல்ல உரிமையில்லை என்று சொல்கிறாள். ஸாரி சார்,'' என்றேன் நான்.

காப்பி எடுத்து வந்த சாவித்திரி நானும் அவள் அப்பாவும் எதிரெதிராக நின்று சண்டைக் காளைகள் போல் முறைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு மிரண்டு போனாள். டபரா டம்ளர்களை அலமாரித் தட்டில் வைத்துவிட்டு வாசல்புறம் அகன்றுவிட்டாள்.

''ஹூம்!'' என்ற பெருமூச்சுடன் பொத்தென்று நாற்காலியில் விழுந்தார் ஜம்பு. ஒரு காலைத் தூக்கி நாற்காலி மீது குந்தினாற்போல் வைத்துக்கொண்டு முழங்காலின் மீது தலையைக் கவிழ்த்துக் கொண்டார்.

நான் மேஜையின் விளிம்பில் தொற்றினாற் போல் நின்றபடி அவரையே பார்த்துக் கொண்டிருந்தேன். பல நிமிடங்களுக்குப் பிறகு அவர் முகத்தை நிமிர்த்தினார். கண்கள் ஈரத்தினால் மினுமினுத்துக் கொண்டிருந்தன.

''வனஜா என்னை ரொம்பத் தப்பாய் நினைத்துக் கொண்டிருக்கிறாள்,'' என்று அவர் கூறியபோது தொண்டை கரகரத்திருந்தது. ''வெட்கத்தை விட்டுக் கேட்கிறேன் - நான் மனோன்மணி என்கிற பெண்பிள்ளையுடன் வசித்து வருகிறேன் என்றுதானே உன்னிடம் வனஜா சொல்லி யிருக்கிறாள்?''

''பெயரைச் சொல்லவில்லை,'' என்றேன்.

''எவ்வளவோ நாள் வனஜாவிடம் கெஞ்சியிருக்கிறேன், உண்மையைக் கேள் என்று. அவள் காதில போட்டுக் கொள்ளவேயில்லை. நீயாவது கேள்,'' என்றார் ஜம்பு.

நான் கடிகாரத்தைப் பார்த்தேன். மணி பன்னிரண்டை நெருங்கிக் கொண்டிருந்தது. நான் ஆபீசுக்குத் திரும்பிச்

செல்லவேண்டும். அப்படிச் செல்லுமுன் ஏதாவது பேச்சுக் கொடுத்து இந்த மனிதரை விரட்டிவிட வேண்டும் என்று எண்ணி, ''சொல்லுங்கள்.'' என்றேன்.

உட்கார்ந்திருந்த நாற்காலியின் கைகளைக் கசக்கியபடி அவர் சிறிது நேரம் மௌனமாயிருந்தபின் சொன்னார்: ''நான் கார்ப்பரேஷனில் வேலைக்கு இருக்கிறேனென்று உனக்குத் தெரியுமில்லையா?''

தெரியும் என்று தலையாட்டினேன்.

''மனோன்மணியும் அவள் அம்மாவும் பெரம்பூரில் ஒரு சின்ன வீட்டில் குடியிருந்து வந்தார்கள். அப்போது ஒருநாள் கார்ப்பரேஷன் குப்பை லாரிகளில் ஒன்று அவள் வீட்டின்மீதுமோதி வீட்டை இடித்து, வாசல்புறம் உட்கார்ந்திருந்த மனோன்மணியின் அம்மாவையும் கொலைசெய்துவிட்டது. குய்யோ முறையோ என்று கூச்சலிட்டாள் மனோன்மணி. கார்ப்பரேஷனைத் திட்டினாள் கண்டபடி. போனால் போகிறதென்று ஆயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கொடுத்தார்கள் கார்ப்பரேஷனில். வீடும் சேதமடைந்து, அம்மாவும் இறந்துவிட்டதால் பத்தாயிரம் ரூபாய் வேண்டுமென்று வழக்குப் போட்டாள் அவள்.''

வாசலுக்குப் போயிருந்த சாவித்திரி அச்சத்துடன் நடையில் நின்று எட்டிப் பார்த்தாள். தன் அப்பா தலையைக் குடைந்து கொண்டு முணுமுணுவென்று ஏதோ சொல்லிக் கொண்டிருப்பதைக் காண அவளுக்குப் பெரும் வியப்பாயிருந்தது. நான் சாடை காட்டி அவளைத் திருப்பினேன்.

ஜம்பு தொடர்ந்தார்: ''அவ்வளவு தொகை கொடுக்க வேண்டிய தேவையில்லை என்று கார்ப்பரேஷன் எதிர்த்து வாதாடியது. கார்ப்பரேஷனின் லீகல் அட்வைஸருக்கு பாயிண்ட்டுகள் எடுத்துக் கொடுத்து உதவிகள் செய்தேன் நான். அனேகமாய் மனோன்மணியின் கோரிக்கை அரோகராவாகி விட்ட சமயம் திடீரென்று ஒருநாள் என்னைத் தேடிக் கொண்டு

வந்தாள். 'ஒரேயடியாய் இல்லையென்று கையை விரிக்காமல் முடிந்த அளவுக்குப் பணம் வாங்கிக் கொடுங்கள்,' என்று மன்றாடினாள். தொலையட்டும் என்று கமிஷனர், மேயர், கவுன்ஸிலர் எல்லாரிடமும் சிபாரிசு செய்து, எட்டாயிரம் ரூபாய் வாங்கித் தந்தேன்...''

நான் அவரை ஒரு கேள்வி கேட்பதற்காக வாயைத் திறந்தேன். அதற்குள் அவரே, ''அத்துடன் மனோன்மணியின் தொடர்பு விட்டுவிட வேண்டியதுதானே என்று நீ நினைக்கிறாய் இல்லையா? சொல்லுகிறேன் மிச்சத்தையும்,'' என்றார். பிறகு மேலே கூறலானார்:

''நானே எட்டாயிரம் ரூபாய் செக்கைப் பாங்க்கில் மாற்றி நானே ரொக்கத்தை அவளிடம் கொடுத்தேன். கைச் செலவுக்காக ஆயிரம் ரூபாயை வைத்துக்கொண்டு மீதியை என் இஷ்டப்படி இன்வெஸ்ட் பண்ணும்படி சொன்னாள். பிக்ஸட் டெபாஸிட்டில் போடுவதற்காகப் பணத்தை எடுத்துக்கொண்டு போனபோதுதான் ஒரு விபத்து நேரிட்டது. நீயே பாரம்மா இந்தத் தழும்பை.'' என்று தன் கையைக் காட்டினார்.

மணிக் கட்டுக்குக் கொஞ்சம் மேலே ஒரு பெரிய தழும்பு தெரிந்தது.

''வழியில் ஒரு பிக்பாக்கெட் அந்தப் பணத்தை அடித்துக்கொண்டு ஓடினான். துரத்தினேன். கத்தியால் ஒரு வெட்டு வெட்டிவிட்டு ஓடிவிட்டான். பணம் போய்விட்டது என்றேன் மனோன்மணியிடம். 'பரவாயில்லை. நீங்கள் உயிர் பிழைத்தது பெரிது. உங்களால் எப்போது முடியுமோ அப்போது கொடுங்கள்,' என்று சொல்லி விட்டாள் பெருந்தன்மையாக. அன்றுமுதல் அவளிடம் எனக்கு ஒரு தனி விசுவாசம். அவளுக்கு நான் கடன்பட்டிருக்கிறேன். கடமைப் பட்டிருக்கிறேன். முடிந்த போதெல்லாம் பணமாய்த் தருகிறேன். போகிறபோது வருகிறபோது தலையைக் காட்டி

'சௌக்கியமா' என்று விசாரிக்கிறேன். இதெல்லாம் உன் சினேகிதிக்குப் பிடிக்கவில்லை. என்னைப் பற்றித் தப்புத் தப்பாய் எல்லாரிடமும் சொல்லிக் கொண்டிருக்கிறாள்,'' என்று கூறி முடித்துவிட்டு எழுந்து கொண்டார் ஜம்பு.

என்ன பதில் கூறுவதென்று எனக்கும் புரியவில்லை. பேசாமல் அவரை வழியனுப்பத் தயாரானேன்.

''உன் தோழியிடம் என் நிலைமையை எடுத்துச் சொல்லு. அவள் தப்பெண்ணத்தை மாற்று. உன்னை என் ஆயுளுக்கும் மறக்கமாட்டேன்,'' என்றார் அவர்.

''செய்கிறேன் சார்,'' என்று மனப்பூர்வமாகவே வாக்களித்தேன்.

''வனஜாவுக்காக இல்லாவிட்டாலும் உனக்காகவாவது இங்கே வரத்தான் போகிறேன். இருக்கத்தான் போகிறேன். உன்னைக் கண்டது முதல் எனக்கு ஒரு தனி இது உண்டாகிவிட்டது,'' என்று சோகமாய்ப் புன்னகை செய்தார் ஜம்பு.

''எனக்கும்தான் சார்,'' என்றேன். ஆனால் எந்தத் தனி 'இது'வும் அவரிடம் எனக்கு உண்டாகவில்லை, பரிதாபத்தைத் தவிர.

நடையில் விட்டிருந்த செருப்பை மாட்டிக்கொண்டார் ஜம்பு. சாவித்திரியிடம், ''பரீட்சை வருகிறதே? ஒழுங்காய்ப் படி,'' என்று சொல்லிவிட்டுத் தெருவில் இறங்கினார்.

உள்ளே வந்த சாவித்திரியிடம், ''உன் அப்பாவைப் பார்த்தால் பாவமாயிருக்கிறது,'' என்றேன்.

''நீங்களும்கூட ஏமாறுகிறீர்களே, அக்கா!'' என்று சிரித்தாள் அவள்.

''சே, சே! அப்படியில்லை,'' என்று கூறி அவள் அப்பா சொன்னதையெல்லாம் சுருக்கமாகத் தெரிவித்தேன். ''கையில் காயத்தைக்கூடக் காட்டினாரே?'' என்றேன்.

"ஓஹோ! அந்தக் காயமா!" என்று மேலும் பரிகாசமாய்ச் சிரித்தாள் சாவித்திரி. "நாலைந்து மாசத்துக்கு முன்னாலே ஒருநாள் அக்கா அப்பளம் பொரிக்கிறதுக்காக அடுப்பில் எண்ணெய் வைத்திருந்தாள். அப்பாவுடன் சண்டை முளைத்துவிட்டது அப்போது. அப்பா ரொம்பக் கோபமாய் 'இந்த எண்ணெயை எடுத்து உன் மூஞ்சியில் அடிப்பேன், தெரியுமா?' என்று கத்தினார். கையை ஓங்கி வீசியதில் தவறி அவர் கையிலேயே சுட்ட எண்ணெய் பட்டுவிட்டது. வாள் வாளென்று கத்தினார். அக்காதான் இரக்கப்பட்டு ஆயிண்ட்மென்ட் வாங்கிக் கொடுத்துக் கைக்குப் போட்டுக் கொள்ளச் சொன்னாள்." ஒரு தகர டப்பாவை எடுத்துவந்து காட்டினாள் சாவித்திரி. "இதோ பாருங்கள், அக்கா. மிச்ச மருந்துகூட இருக்கிறது," என்றாள்.

எப்படியிருக்கும் எனக்கு! முட்டாளடிக்கப்பட்டோம் என்ற ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது. அடக்கிக் கொண்டு, "தொலைகிறார் போ; இந்தத் தடவை ரூபாயோ, பண்டமோ, எடுத்துக்கொண்டு போகாமல் தடுத்துவிட்டோம். அது போதும்," என்றேன்.

"அது எப்படியக்கா நிச்சயமாய்ச் சொல்ல முடியும்?" என்று கூறிய வண்ணம் மர பீரோவைத் திறந்த சாவித்திரி, மேல் தட்டில் மடித்து வைக்கப்பட்டிருந்த ஒரு புடைவையை எடுத்தாள். பிரித்து உதறினாள். "போச்சு! எடுத்துக் கொண்டு போய்விட்டார்!" என்று கூச்சலிட்டாள்.

"என்னது?" என்று திகைத்தேன்.

"ஐம்பது ரூபாய் பணம்! பத்து ரூபாய் நோட்டு ஐந்து வைத்திருந்தாள் அக்கா. இந்தப் புடவை மடிப்புக்குள் எப்போதும் மறைத்துவைக்கிறது வழக்கம். நேற்று காலை வைத்தாள். என் கண்ணால் பார்த்தேன்."

"இரு, சரியாய்ப் பார்த்திருக்கமாட்டாய்," என்று சொல்லி மற்றத் துணிமணிகளையும் எடுத்து உதறினேன். எதிலேயிருந்தும் ஒரு பைசாக் காசுகூட விழவில்லை.

''வனஜாவோ கையில் எடுத்துக்கொண்டு போய் விட்டாளோ, என்னவோ? நான் கேட்கிறேன். நீ பத்திரமாய் வீட்டைப் பார்த்துக்கொள்,'' என்று சாவித்திரியிடம் சொல்லிக்கொண்டு ஆபீசுக்குப் புறப்பட்டேன்.

''என்ன! ஒன்றும் விபரீதமில்லையே?'' என்று என்னைக் கண்டதுமே கேட்டாள் வனஜா.

''புடவைக்குள் ஐம்பது ரூபாய் வைத்திருந்தாயா?' என்றேன்.

''ஆமாம்.... அது?''

''போய் விட்டது,'' என்றேன் கசப்புடன்.

நான் வீட்டுக்குள் நுழையுமுன்பே அந்தப் பணத்தை எடுத்துக் கொண்டிருந்திருக்க வேண்டும் அவள் அப்பா. திருடிய பணத்தைப் பையில் வைத்துக்கொண்டே ஒன்றுமறியாத அப்பாவிபோல என்னிடம் பேசி என் இரக்கத்தைச் சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்! சே! பிச்சுவாவினால் இருதயத்தில் குத்தப்பட்டாற் போலிருந்தது எனக்கு. நான் சொன்ன விவரங்களைக் கேட்டுப் பெருமூச்சு விட்டாள் வனஜா.

''இருக்கட்டும். கடவுள் ஒரு நாள் கூலி கொடுப்பார் அவருக்கு. இல்லாவிட்டால் நானே கொடுக்கிறேன்,'' என்று தேறுதல் கூறினேன்.

மணி இரண்டாகிக் கொண்டிருந்தது. வரும்போதே கவனித்து விட்டேன். ஆபீஸ் வாசலில் கௌரியம்மாளின் கார் காணப்படவில்லை. அவள் போய்விட்டாள்.

கௌரியம்மாள், தான் தேடி வந்த பார்சலைக் கண்டு பிடித்திருப்பாளா? என்ன பார்சல் அது? அதை எங்கே எடுத்துச் சென்றிருப்பாள்? இப்படியே என் சிந்தனை சுழன்று கொண்டிருந்தது.

இறுதியில் ஓர் ஐந்து நிமிஷம் இடைவெளி பறித்துக் கொண்டு, கிடங்கை நோக்கி ஓட்டமும் நடையுமாகச் சென்றேன். அங்கே எனக்கு ஏமாற்றம் காத்திருக்கவில்லை. குழப்பம் காத்திருந்தது.

மொத்தம் நான்கு கேஸ்கள் அங்கே பிரிக்கப் பட்டிருந்தன. உருண்டையாக, நீள் சதுரமாக, முக்கோணமாக வெவ்வேறு வடிவத்தில் இருந்தன.

நான் யோசித்துக் கொண்டு நின்றிருக்கையில், பெட்டிகளை உடைத்த ஆள் நொண்டிக்கொண்டே வந்தான். வலது கால் பெருவிரலில் துணி சுற்றியிருந்தது.

''என்னப்பா காலிலே? காலையில் சரியாய்த்தானே இருந்தாய்?'' என்று விசாரித்தேன்.

''கேஸ்களை உடைக்கிறப்போ காலிலே பட்டிடுச் சும்மா,'' என்றான் அவன்.

''அடப் பாவமே, என்ன மருந்து போட்டாய்?'' என்றேன்.

''மருந்து எதுக்குங்க? சுண்ணாம்பை வைச்சு அழுத்தினேன்,'' என்றான்.

''காயங்களையெல்லாம் அப்படிச் சும்மா விடக் கூடாதப்பா. ஆபீசிலே முதலுதவி பெட்டி வைத்திருப் பார்களே?'' என்றேன்.

''தெரியாதுங்க,'' என்றான் அவன். ஹெட் கிளார்க்கிடம் சென்று மருந்தும் பஞ்சும் வாங்கி வந்து, அவன் பெருவிரல் காயத்துக்குக் கட்டுப்போட்டேன்.

''கௌரியம்மாள் வந்திருந்தார்களே அவர்களுக்காகப் பெட்டியை உடைக்கும் போது காயம் பட்டுக்கொண்டாயா?'' என்று விசாரித்தேன். சாதாரண மனிதாபிமானத்தோடு செய்ய வேண்டிய உதவியை, உள்நோக்கத்துடன் சுயநலத்துக்காகச் செய்கிறோமே என்று நினைக்கையில் வெட்கமாயிருந்தது.

''ஆமாம்மா, கசுமாலம்! இந்தக் கேஸ் இல்லேப்பா, இந்தக் கேஸ் இல்லேப்பான்னு நாலு பெட்டியை உடைச்சுக் காட்டச் சொன்னாங்க!''

''கடைசியில் அந்தம்மாள் தேடிய கேஸ் இருந்ததா, இல்லையா?'' என்றேன்.

''ஏன் இல்லாமல்? அதோ சாக்பீசாலே குறி போட்டு விட்டுப் போயிருக்கிறாங்களே, தெரியலை?'' என்று ஒரு மெஷின் பார்ட்டைக் காட்டினான்.

ஆம். நான்தான் கவனிக்கவில்லை. நீண்ட சதுரமான ஒரு கருவியின் விலாப்புறத்தில் பெருக்கல் குறி போடப் பட்டிருந்தது.

அதைக் கண்ட போது எனக்கு உள்ளத்திலே ஒரு படபடப்பேற்பட்டது. இந்த வார்ப்பிரும்பு யந்திரத்தின் உட்புறம் குழாய் போல் பொந்தாக இருக்கக்கூடியது. அதனுள்ளே வைரமும் இருக்கலாம், அபினும் இருக்கலாம், சிறிய தங்கக் கட்டிகள்கூட வைத்திருக்க முடியும்.

சுறுசுறுவென்று திரி எரிகின்ற வெடிகுண்டைப் பார்க்கிற மாதிரி எனக்கு ஒரு திகில் ஏற்பட்டது.

''அப்பாலே வந்து எடுத்திட்டுப் போறேன்னு சொல்லியிருக்கிறாங்க,'' என்றான் அவன்.

ஒருவேளை கௌரியம்மாள் என் கண்ணெதிரே அதை எடுத்துப் போக வேண்டாமென்று நினைத்திருப் பாளோ?

''சில பேர் சித்திரங்களை ரசிப்பார்கள். சில பேர் சிற்பக் கண்காட்சிக்குப் போவார்கள். ஹேமாவுக்கு மெஷின் பார்ட்டுகள் என்றால் பித்துப் போலிருக்கிறது?'' கிண்டலான கேள்வியுடன் எதிர்பாராத வகையில் ஜனார்த்தனன் வந்துவிட்டான்.

''கலைக்கண் இருந்தால் எதையும் ரசிக்கலாம்,'' என்று கூறிவிட்டு நழுவ முயன்றேன்.

''ஆனால் இப்படி ஆசையோடு பார்க்கிற கண், கலைக் கண்ணாகத்தான் இருக்க வேண்டுமென்பதில்லை,'' என்றான் ஜனார்த்தனன். ''எதை அடித்துக் கொண்டு போகலாம் என்று பார்க்கிற கண்ணாகவும் இருக்கலாம்!''

ஜிவ்வென்று என்முகம் சிவப்பதை அவன் கவனித் திருக்க வேண்டும். ஆனால் அதைப் பொருட்படுத்தாதவன் போல, ''உன்னிடம் எச்சரிக்கையாக இருக்கும்படி கௌரியம்மாள் சொல்லியிருக்கிறாள்,'' என்றான்.

வேலையை விட்டு வெளியேறவேண்டிய கட்டம் வந்தாயிற்று என்று எண்ணினேன்.

ஜனார்த்தனன் தொடர்ந்து, ''அவர்கள் வீட்டில் நீ கொஞ்ச காலம் இருந்தாயாம். அப்போது கடிகாரம், பேனா, பர்ஸ் இந்த மாதிரி பல சில்லறைப் பொருள்கள் காணாமல் போயிற்றாம். ஆசவே இங்கே உன்னை வேலையில் வைத்துக் கொள்ள வேண்டாம் என்று சொன்னாள். அறைக்கு வெளியே நீ கேட்டுக் கொண்டுதானே நின்றாய் ஹேமா?''

''நான் அதையெல்லாம் கேட்கவில்லை,'' என்றேன். அதே சமயம் கௌரியம்மாள் சொன்னதாக அவன் கூறிய தகவல் வேடிக்கையாயும், வியப்பாயும் இருந்தது. ஏன் பொய்யான அற்பமான குற்றச் சாட்டுக்களைச் சுமத்தி என்னை வேலையிலிருந்து நீக்க முயலுகிறாள்? பிரகாசத்தின் கையாள் நான் என்ற உண்மையை ஏன் சொல்லியிருக்கக்கூடாது? அல்லது அந்தச் சந்தேகம் அவளுக்கு உதிக்கவேயில்லையா?

''கவலைப்படாதே. ஹேமா. உன்னைப் பற்றி யார் எதைச் சொன்னாலும் நான் எடுத்துக் கொள்ளமாட்டேன். யார் சொன்னாலும் உன்னை வேலையிலிருந்து போகச் சொல்லவும் மாட்டேன். காரணம்... காரணம்கூடச் சொல்ல வேண்டுமா

ஹேமா?'' அவன் உதடுகள் அசட்டுத்தனமாய் இளித்தன. அவன் பார்வையில் விகாரமான கோணல் இருந்தது.

அந்தப் பழைய கிடங்கு அறையில் என்னையும் அவனையும் தவிர யாருமில்லை. காயத்துக்குக் கட்டுப் போட்டுக்கொண்ட வேலையாள், ஜனார்த்தனத்தைக் கண்டதுமே போய்விட்டான்.

எனக்கு ஒரே ஒரு துணைதான் இருந்தது.

சுவரின் மூலையில் சாத்தி வைக்கப்பட்டிருந்த ஓர் இரும்புத் தடி. அதை நோக்கி மெதுவாய் நகர்ந்தேன்.

## 10

''காரணம் தெரியவில்லை உனக்கு?'' என்று மறுபடியும் கேட்டுக்கொண்டே என்னை நோக்கி நெருங்கிக் கொண்டிருந்தான் ஜனார்த்தனன்.

ஜனார்த்தனனின் வெட்கத்தை விட்டொழித்த பார்வை என் மேனியில் எங்கெங்கெல்லாம் பாய்கிறது என்பதைக் கண்ணால் கண்டபோது, உடம்பெல்லாம் பற்றியெரிகிற மாதிரி இருந்தது. காப்பி கொஞ்சம் நன்றாயிருந்துவிட்டால் அகமகிழ்கிறவர்கள், சட்டைப் பொத்தான் கெட்டுப்போய் விட்டால் மனமொடிந்து போகிறவர்கள் - இப்படிப்பட்ட சாதாரண நபர்கள் எப்படித் திடீரென்று நொடி நேரத்தில் மகாபயங்கரமான கொலைகாரர்களாக மாறுகிறார்கள் என்கின்ற பெரிய மர்மம், அந்தக் கிடங்கு அறையில் துல்லியமாக எனக்கு விளங்கிற்று. கொலை செய்யப் போகும் அந்த நிமிடத்தில் அவர்களுடைய உள்ளங்கள் எப்படிப்பட்ட எரிமலைகளாகக் கொந்தளிக்க முடியும் என்பதை அனுபவ பூர்வமாக நான் கண்டுகொண்டேன்.

ஆனாலும், "கிட்டே வரவேண்டாம்," என்று எச்சரிக்கை செய்யுமளவுக்கு என்னிடம் நிதானம் இருந்தது. அவனிடம் இல்லை. "உன்கிட்டே வராமல் நான் யார்கிட்டே வருவேன் ஹேமா?" என்று அருவருப்பாக இளித்துக் கொண்டே மேலும் முன்னேறி வந்தான்.

மூலையில் இருந்த இரும்புத் தடியை மீண்டும் நோக்கினேன். எனக்காகவே அங்கு காத்திருப்பது போலிருந்தது.

மயிரிழை தப்பியிருந்தால் அந்த இரும்புத் தடியை என் கைகள் பற்றியிருக்கும். பிறகும் ஒரு வினாடி தாமதித்திருந்தால் ஜனார்த்தனனின் தலை சுக்கு நூறாகச் சிதறியிருக்கும். அதற்குள் டக் டக்கென்று யாரோ வருகின்ற காலடிச் சத்தம் கேட்டது.

கள்ளிப் பெட்டிகளை உடைத்த வேலையாள்தான் வருகிறான் என்று முதலில் நினைத்தேன். ஆனால் அவனைக் காட்டிலும் பெரிய துணையாக -

"குட்மார்னிங்!" என்று சொல்லிக்கொண்டு உள்ளே வந்தான் ஹரி.

'ஹரி!' என்று கூவிக் கொண்டு அவன் காலடியில் விழுந்துவிட வேண்டும் போல ஓர் ஆறுதல். அம்மா! அம்மா சொல்லக்கடங்காத நிம்மதி உள்ளத்தில் பிறந்தது.

ஜனார்த்தனனின் நடிப்புத் திறமையை இப்போதுதான் கண்டேன். எதுவும் நிகழாதது போல, ஒரு பாவமும் அறியாதவனைப் போல, "ஹலோ!" என்று ஹரியின் கையைக் குலுக்கினான்.

ஹரி என்னை வியப்புடன் பார்த்து, 'நீ இங்கா இருக்கிறாய்?' என்று கண்ணாலேயே ஒரு வினாவை வீசிவிட்டு, "ஸிஸ்டர் அனுப்பினாள். டெக்ஸ்டைல்

மெஷினரியில் ஏதோ பார்ட் வந்திருக்கிறதாமே? சாக்பீசால் மார்க் பண்ணியிருக்கிறாளாம்'' என்று ஜனார்த்தனனிடம் சொன்னான். கௌரியம்மாளுக்காக அவனும் இங்கே வருவது உண்டு என்பது அவனுடைய இயல்பான பேச்சிலிருந்து புலப்பட்டது.

''இதோ இருக்கிறதே!'' என்று சுட்டிக் காட்டினான் ஜனார்த்தனன், அந்த எஃகுச் சாமானை.

ஹரி கிடங்குக்கு வெளியே போய், ''இந்தாப்பா! இதை எடுத்துப் போய்க் காரில் வை'' என்று எவரையோ அழைத்தான். ஒருவருக்கிருவராக வந்து அதைத் தூக்கிச் சென்றார்கள்.

எனக்குச் சொரேர் என்றிருந்தது. எதற்காக நான் இங்கே வந்தேனோ, எதைக் கவனிப்பதற்காக நான் இங்கே அமர்த்தப்பட்டேனோ, அந்தத் தடயம் என் கண்ணெதிரே அப்புறப்படுத்தப்படுகிறது! எப்படி அதைத் தடுப்பது?

''வருகிறேன் மிஸ்டர் ஜனார்த்தனன்,'' என்று மீண்டும் கை குலுக்கிவிட்டு விடை பெற்றுக் கொண்டான் ஹரி. மறுபடி என் மீது ஒரு பார்வை. போய்விட்டான்.

இவ்வளவுக்குமிடையில் நான் சத்தம் போடாமல் நழுவியிருக்கலாம். பத்திரமாக என் இடத்துக்குத் திரும்பியிருக்கலாம். செய்யவில்லை. என் ரத்தத்தோடு பிறந்த அகங்காரம் அதற்கு அனுமதிக்காததே காரணம். 'பயந்து நடுங்கிக் கொண்டு ஓடிவிட்டாள்' என்று ஜனார்த்தனன் நினைக்க இடம் தரக்கூடாது. தந்துவிட்டால், இதேபோல் இன்னொரு சந்தர்ப்பம் வரும்போது மறுபடி தன் சொரூபத்தைக் காட்டுவான்.

''ஹூம்இதற்கு வேலையில்லாமல் போய்விட்டது!'' என்று அந்த இரும்புத் தடியைக் காட்டிச் சொல்லிவிட்டு என் மேஜைக்குத் திரும்பினேன். இன்னும் கொஞ்ச நாளைக்

கேனும் என் வழிக்கு அவன் வரமாட்டான் என்று நிச்சமாய்த் தோன்றியது.

'எங்கே போயிருந்தாய் இத்தனை நேரம்!' என்று வனஜா கேட்பாளென நினைத்தேன். கேட்கவில்லை.

டெலிபோன் யந்திரத்தில் தானும் ஒரு பகுதிபோல வேலை செய்து கொண்டிருந்த வனஜா, மணி ஐந்தடித்ததும் தலையை உயர்த்தி, ''என்ன, போகலாமா?'' என்று கேட்டாள்.

''நான்... நான் கொஞ்சம் வெளியே போய்விட்டு வருகிறேன்... நீ போ,'' என்றேன்.

''புரிகிறது,'' என்று புன்னகை செய்தாள் வனஜா. எனக்குத் திகீரென்றது முதலில். பிறகு அவளே தொடர்ந்து, ''என்னதான் சண்டை என்றாலும் அம்மா அம்மாதானே? போய்ப் பார்க்க வேண்டுமென்று தோன்றிவிட்டதாக்கும்?'' என்றாள்.

'சே, சே, அதெல்லாமில்லை,' என்று மறுக்கவிருந் தேன். ஆனால், பிரகாசத்துக்குத் தகவல் தெரிவித்ததும் அவர் எங்கே செல்லச் சொல்வாரோ, எப்போது திரும்ப வேண்டி யிருக்குமோ என்று தோன்றியதால், ''எப்படி வேண்டுமானா லும் வைத்துக்கொள்,'' என்றேன்.

சோர்வும் களைப்புமாக வனஜா புறப்பட்ட போது எனக்குப் பரிதாபமாக இருந்தது. ''ஏய்! சும்மா சும்மா நடந்ததையே நினைத்து மனம் குழம்பாதே! எல்லாம் சரியாகிவிடும் தன்னாலே!'' என்று அவள் தலையில் ஒரு குட்டுக் குட்டி அனுப்பினேன்.

வெளியே வந்தேன். தொலைவில் வனஜா போய்க் கொண்டிருப்பது தெரிந்தது. அவள் போகட்டுமென்று காத்திருந்த பின் கிளம்பினேன். கண்ணில் பட்ட முதல் டெலிபோன் கூண்டுக்குள் நுழைந்து பிரகாசத்துக்கு போன் செய்தேன்.

''மிஸ்டர் பிரகாசம் வெளியே போயிருக்கிறார். நீங்கள் யார்?'' என்று கேட்டார் ஒருவர்.

''நான்...'' என்று என்ன சொல்வதெனத் தயங்கினேன். அதற்குள், ''சரி,'' என்றவர் மறுமுனையில் போனை வைத்துவிட்டார்.

இப்படிக் கூடவா ஒருத்தர் விவரத்தைக் கேட்டுக் கொள்ளாமல் பேச்சை முறிப்பார் என்று அந்தச் சமயத்தில் எனக்குத் திகைப்பாயும் கோபமாயும் இருந்தது. பிற்பாடுதான் தெரிந்து கொண்டேன். கஸ்டம்ஸ் துறையில் பணியாற்றும் ஒவ்வோர் அதிகாரிக்கும் கீழே, அவருடைய பொறுப்பில், 'இன்ஃபார்மர்கள்' இருப்பார்கள். எந்தக் கள்ளக் கடத்தல் பொருள் எங்கே சென்றிருக்கிறது என்ற ரகசியச் செய்தியைத் தெரிவிக்கும் இந்த 'இன்ஃபார்மர்'களுக்கு அவர்கள் தரும் செய்திக்குத் தக்கபடி டெல்லி அரசினர் பணமும் தருகிறார்கள். குறிப்பிட்ட இன்ஃபார்மர் குறிப்பிட்ட அதிகாரியைத் தவிர வேறொருவரிடம் தன் தகவலைத் தெரிவிக்கமாட்டார். அல்லது அப்படி ரொம்ப அவசரமான தகவலென்றால் வேறு யாரிடம் தெரிவிக்கலாம் என்பதை அவரிடமே கேட்டுத் தெரிந்து வைத்துக் கொண்டிருப்பார்.

நான் என் பெயரைச் சொல்லத் தயங்கியதாலும் வேறு அதிகாரி இருக்கிறாரா என்று விசாரிக்காததாலும், நான் பிரகாசத்தின் இன்ஃபார்மர் என்றும், வேறு யாரிடமும் பேச விரும்பவில்லை என்றும் ஊகித்துக் கொண்டு அவர் டெலிபோனை வைத்துவிட்டார். வெகு நாட்களுக்குப் பிறகு, பிரகாசத்துடன் ஒருமுறை சாவகாசமாய்ப் பேசிக் கொண்டிருந்தபோது இந்த விவரத்தைச் சொன்னார்.

அப்போது எனக்கு இதெல்லாம் தெரியாதாகையால் சிறிது நேரம் மனத்துக்குள் பொருமினேன். பிறகு திடுதிப் பென்று வேறோர் எண்ணம் உதித்தது.

பிரகாசத்துக்காகக் காத்துக் கொண்டிருப்பானேன்? நானே நேரில் கௌரியம்மாளின் பங்களாவுக்குள் நுழைந்தாலென்ன? அவள் வாங்கிச் சென்ற எஃகுப் பொருளைக் கண்டுபிடித்து, எடுத்து வந்து விட்டாலென்ன? அப்படி அதைத் தூக்கி வர முடியாவிட்டால் அங்கேயே அதைத் திறந்து பார்த்து உள்ளே என்ன இருக்கிறது என்று குடைந்து விட்டாலென்ன?

அம்மாவைப் பார்க்கப் போகிறேன் என்று வனஜா நினைத்துக்கொண்டதும் நல்லதற்குத்தான். இரவு நான் திரும்பாமலே இருந்தால்கூட அம்மாவுடன் தங்கியிருக்கிறேன் என்று எண்ணிக் கொள்வாள். தேட மாட்டாள்.

மணி ஏழாகிக் கொண்டிருந்தது. மவுண்ட் ரோடில் நெரிசல் குறைகிற நேரமல்ல. என்றாலும், பிசுபிசு வென்ற தூறல் வரவரப் பலத்துக் கொண்டேயிருந்ததால் ஆங்காங்கே ஒதுங்கிக் கொள்வோரின் எண்ணிக்கை அதிகரித்தது. மழை நிற்கும் என்று நானும் காத்திருந்தேன். மழை நின்று, நான் நடையாகவே கௌரியம்மாளின் வீட்டை அடைந்தபோது மணி எட்டே முக்காலாகியிருந்தது.

அது வரையில் எப்படி உள்ளே நுழையப் போகிறோம் என்ற திட்டம் எதுவும் என்னிடமில்லை. வீட்டுக்குள் புகுந்து விட்டால் ஒருவர் கண்ணிலும் படாமலே மறைந்திருக்கப் பல இடங்கள் உண்டு என்பதை மட்டும் நான் அறிவேன். அவ்வளவு பெரிய பங்களாவுக்கு வேலையாட்கள் குறைவு தான். பின்புறமுள்ள சில பழைய அறைகளின் பக்கம் யாருமே வருவதும் கிடையாது. நள்ளிரவில் எல்லாச் சந்தடிகளும் அடங்குகின்ற வரையில் அங்கே எங்காவது ஒளிந்து கொண்டிருந்துவிட்டு, பிறகு வெளிப்பட்டு அந்த எஃகு பொருளைத் தேடத் தொடங்கலாம் என்று நினைத்திருந்தேன்.

என் நினைப்பு மொத்தமும் வீணாயிற்று - பங்களா வாசலில் ஒரு முக்காலியைப் போட்டுக்கொண்டு உட்கார்ந் திருந்த கூர்க்காவைக் கண்டதும்.

ஏமாற்றம் உள்ளத்தை உலுக்க, மேலே தொடர்ந்து நடந்தேன். நாலைந்து வீடுகள் தள்ளி ஒரு வெற்றிலை பாக்குக் கடை இருந்தது. ஒரு சோடா வாங்கிக் குடித்தேன். ஒரு சூயிங் கம் வாங்கி, பிரித்து வாயில் போட்டுக்கொண்டு மென்றேன். ஆண்பிள்ளையாயிருந்தால் அனாவசியமாக எத்தனை நேரம் வேண்டுமானாலும் நிற்கலாம். இரவின் இளம் பருவம் தாண்டுகிற நேரத்தில், வயதுப் பெண்ணான நான் தனியே நிற்பதைப் பல பேர் சந்தேகத்துடன் பார்த்துக் கொண்டு சென்றார்கள்.

கடையிலிருந்து நகர்ந்து ஓரடி சாலையில் வைத் திருப்பேன்-

சர் என்று வேகமாக ஓடிய காரொன்று இரண்டு கை மழைச் சேற்றை என் ஸாரி மீது வாரியிறைத்துவிட்டது.

''முட்டாள்!'' என்று அக்கணமே நான் வாய்விட்டுத் திட்டியதும் காரோட்டிக்குக் கேட்டிருக்க வேண்டும். வண்டியை நிறுத்தியதோடல்லாமல் பின்னோக்கியும் வந்தார்.

''ஹேமு!'' என்று வியப்புடன் அழைத்த போதுதான் அது ஹரி என்று அறிந்தேன்.

''இங்கே வந்தேன் ஒரு வேலையாக,'' என்று நான் சொல்லத் தொடங்கும்போதே அது சப்பாணிச் சமாதானம் என்று என் குரல் காட்டி கொடுத்துவிட்டது. நடுச் சாலையில் ஹரியுடன் உரையாடிக் கொண்டு நிற்பது சரியல்ல என்று மனத்துக்குப் பட்டதால், ''சரி, ஏறிக்கொள்,'' என்று ஹரி தன் பக்கத்துக் கதவைத் திறந்துவிட்டதும், மறுமொழியின்றி ஏறிக் கொண்டேன்.

''மவுண்ட்ரோடில் ஒரு பாங்க்குக்குத்தான் போகிறேன். உன்னை எங்கே இறக்க வேண்டும் என்று சொல். இறக்கி விடுகிறேன்!'' என்றான் ஹரி, கார் சிறிது தூரம் சென்றதும்.

''பாங்க்கா!'' என்றேன், அவன் பொய் சொல்லுகிறான் என்ற கோபத்துடன்.

''ஏன்? சில மருந்துக் கடைகள் ராத்திரி வேளைகளில் திறந்திருக்கிற மாதிரி சில பாங்குகளும் உண்டு,'' என்று பதிலளித்த ஹரி, ''காலையில் சில பேருக்குப் பணம் தர வேண்டும். தரச் சொல்லிவிட்டுப் போயிருக்கிறாள் அக்கா,'' என்றான்.

''போயிருக்கிறாள் என்றால்? வெளியூரா?''

''ஆமாம், திருத்தணிவரையில் போயிருக்கிறாள். நாளை பகல்தான் திரும்புவாள்,'' என்றான் ஹரி.

மௌனத்தில் ஓடிக் கொண்டிருந்தது கார். மவுண்ட் ரோடின் நியான் விளம்பரங்கள் பளிச் பளிச்சென்று சிரித்தன.

வனஜாவைப் போல 'அம்மாவைப் பார்க்க வந்தாயா?, என்று இவன் கேட்கவில்லை. அதற்காக வந்திருக்கமாட்டேன் என்று அறிந்திருக்கிறான். வனஜாவைக் காட்டிலும் நன்றாய் என்னைப் புரிந்து கொண்டிருக்கிறான் என்று ஒரு மகிழ்ச்சி ஏற்பட்டது எனக்கு. இன்னொன்றும் உண்டு. அவன் என்னை 'ஹேமு' என்று சுருக்கிக் கூப்பிட்டது. ரொம்ப ரொம்ப அந்தரங்கமான உரிமையை அவன் என்னிடம் கொண்டாடு கிறான்.

இதையெல்லாம் கருதித்தான் அவனிடம் என் ரகசியங்களைச் சொல்லிவிடத் தீர்மானித்தேன். தாயிடம் கூறாததை, வனஜாவிடம் மறைத்ததை, ஹரியிடம் கூறுவது பற்றி இம்மியளவு தயக்கமும் எனக்கு ஏற்படவில்லை.

''ஹரி,'' என்றேன்.

''உம்?'' என்றான். எந்தக் கட்டத்திலும் என்னை அவன் அவசரப்படுத்தவில்லை. முரட்டுத்தனமாக என்னைக் குடைந்து என் ரகசியங்களைத் தெரிந்து கொள்ள ஆவல் காட்டவில்லை. 'உன் ரகசியங்கள் உன்னுடையவை' என்கின்ற அவனுடைய பண்பாடே, மேன் மேலும் அவனிடம் புகல் கேட்க வைத்தது.

பூட்டிக் கிடந்த அறையைத் திறந்து குப்பை கூளங்களை கூட்டி வெளியே தள்ளுவதுபோல, கடகடவென்று எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன் ஹரியிடம்.

நான் பேசி முடித்ததும் ஹரி ஒரு கேள்வி போட்டான்.

''ஹேமு, என் அக்கா கள்ளக் கடத்தலில் ஈடுபட்டவளா இல்லையா என்று எனக்குத் தெரியாது. ஆனால் எனக்காக நீ அவளைக் காட்டிக் கொடுக்காமல் இருக்க வேண்டும் என்று நான் கேட்டால் அப்படியே செய்வாயா?''

''நீங்கள் அப்படிக் கேட்கமாட்டீர்கள் என்று நம்புவதால்தான் இவ்வளவு ரகசியங்களையும் உங்களிடம் சொன்னேன்.''

''அதெல்லாம் வேண்டாம். செய்வாயா மாட்டாயா?''

''மாட்டேன் ஹரி,'' என்றேன் உறுதியாக.

''அதைத்தான் உன்னிடம் நானும் எதிர்பார்த்தேன்,'' என்று புன்னகை செய்தான் அவன்.

பாங்க் வாசலை அடைந்தோம்.

''இரு, வருகிறேன்,'' என்று சொல்லிவிட்டு அவன் பாங்குக்குள் சென்றான். பதினைந்து நிமிடங்களில் திரும்பியவன், ''பின் ஸீட்டில் ஏறிக் கொள்,'' என்றான்.

நான் திகைத்தேன்.

''யாருக்கும் தெரியாமல் என் வீட்டுக்குள் நுழைய வேண்டும் என்றாயே. பின்ஸீட்டில் குனிந்துகொண்டு விட்டால் வாட்ச்மேன் பார்க்கமாட்டான். பங்களாவிற்குள் நுழையலாம். கார் ஷெட்டின் கதவைப் பூட்டாமல் வைக்கிறேன். பன்னிரண்டு மணிக்கு மாடிக்கு வா. அக்காவின் அறையைத் திறந்து காட்டுகிறேன்,'' என்றான் ஹரி.

நான் பின் ஸீட்டில் ஏறிக்கொண்டு ''ஹரி...'' என்று வியப்புடன் ஏதோ சொல்லத் தொடங்கினேன்.

''நானே அந்தப் பொருளைப் பார்த்துச் சொல்லலாமே என்று கேட்கப் போகிறாய்! அப்படித்தானே?'' என்றான்.

''ஆமாம். எனக்கு உங்கள் மீது முழு நம்பிக்கை இருக்கிறது,'' என்றேன்.

''எனக்கென்னவோ நீ வருவதற்குப் பதிலாக, அந்தக் கஸ்டம்ஸ் அதிகாரி பிரகாசமே நேரில் வந்து சோதனை போடுவதுதான் நலமென்று தோன்றுகிறது,'' என்றான் ஹரி.

சட்டென எனக்கு அவன்மீது சந்தேகம் உதித்தது.

என் எண்ணத்தை ஊகித்தவன்போல ஹரி, ''பிரகாசம் வருவதற்குள் நான் ஏதாவது மாற்றிவிடப் போகிறேனே என்று பயப்படுகிறாய், இல்லையா?'' என்றான்.

நான் தலை குனிந்தேன். ''அப்படியில்லை. ஒரு பெரிய கேஸைப் பிடித்துக் கொடுத்த பெருமை எனக்கு இருக்கட்டுமே என்றுதான்...''

''ஹேமு'', என்றான் ஹரி, இரண்டாம் முறையாக அந்தரங்கத்துடன்.

பின்ஸீட்டின் விளிம்பில் நான் அமர்ந்திருந்தேன். அவனுடைய விரிந்த தோள்களைத் தொடக்கூடிய அளவுக்கு என் கைகள் அவனை நெருங்கியிருந்தன. என்னுடன் பேசுவதற்காக லேசாய் என்பக்கம் திரும்பியிருந்ததால்,

அவனுடைய தீர்க்கமான மூக்கும், மெல்லிய உதடும், கூரிய மோவாயும் செதுக்கிக் கடைந்தாற்போல தனித்துத் தெரிந்தன.

''என் அக்காவுடன் நான் அதிகமாகப் பழகியதில்லை,'' என்று கூறினான் ஹரி. ''படிப்புக் காலங்களில் நான் ஹாஸ்டல்களிலேயே அதிகம் தங்கிவிட்டேன். அதற்கு முன்னால், சின்ன வயதில், அப்பா அம்மா இல்லாத அனாதைகளாக நாங்கள் இரண்டு பேரும் யார் யாரோ உறவினர்களின் வீடுகளில் தங்கியிருந்தோம்.

''அனாதைகளா!'' என்று திகைத்தேன் நான். ''இவ்வளவு செல்வமும் செல்வாக்கும் உங்கள் அக்காவுக்குச் சேர்ந்ததெல்லாம்...''

''பதினைந்து இருபது வருஷத்துக்கு முன்னால்தான்,'' என்றான் ஹரி. ''நான் திருநெல்வேலியிலும் என் அக்கா மதுரையிலுமாக வெவ்வேறு உறவுக்காரர்களின் வீட்டில் தங்கிக் கொண்டிருந்தோம். திடீரென்று என் அக்கா அந்தமானுக்குப் போய்விட்டாள் என்று காதிலே விழுந்தது. அங்கே எங்கள் பெரியப்பா ஒருத்தர் ரொம்பக் காலமாய்ப் பெரிய ஆபீசராக இருக்கிறார் என்று சொன்னார்கள். அவர்தான் கூப்பிட்டிருந்தாராம். இரண்டு வருஷம் கழித்துத் திரும்பி வந்தாள்- நிறையப் பணம் காசுடன். அந்தப் பெரியப்பா எல்லாவற்றையும் இவளுக்குக் கொடுத்துவிட்டுக் கண்ணை மூடிவிட்டாராம். பணம் வந்ததும் சாமர்த்தியம் வந்தது; ஆள்கட்டு கிடைத்தது; பிஸினஸில் கெட்டிக்காரியானாள்; கல்யாணம் செய்து கொண்டாள்; என்னை உயர்தரமான ஹாஸ்டலில் சேர்த்துப் படிக்க வைத்தாள். தன்னுடைய கம்பெனிகளைக் கவனிக்கிற மேற்பார்வையாளர் என்ற ஒரு அனாவசியப் பதவியை எனக்குக் கொடுத்து மாதம் ஐயாயிரம் ரூபாய் சம்பளமும் அலவன்ஸுகளும், காரும் தந்திருக்கிறாள். எனக்கும் அக்காவுக்கும் உள்ள உறவு இவ்வளவுதான்.''

அவன் சொல்லச் சொல்ல நான் ஆச்சரியத்துடன் கேட்டுக்கொண்டிருந்தேன். உடன் பிறந்த சகோதரியைப் பற்றி ஒரு வார்த்தை வெறுப்பாக அவன் கூறவில்லை. ஆனால் சம்பந்தமில்லாத மூன்றாம் மனிதரைப் பற்றிப் பேசுவதைப் போல ஒட்டுதலில்லாமல் அவன் பேசியதைக் கேட்க விந்தையாக இருந்தது.

''வீடு வந்துவிட்டது. குனிந்து கொள் ஸீட்டின் கீழே,'' என்றான் ஹரி.

வாட்ச்மேனின் சந்தேகத்தைத் துளியும் கிளறாமல் உள்ளே நுழைந்துவிட்டோம். அவுட்ஹவுசும் கார் ஷெட்டும் பக்கத்தில் இருப்பதால் ஒருவேளை அம்மா கண்ணில் பட்டு விடுவோமோ என்று சற்றுப் பயந்திருந்தேன். அப்படியும் எதுவும் நேரவில்லை.

''தூங்கிவிடாதே,'' என்று சொல்லிவிட்டு, காரை ஷெட்டில் விட்டு விட்டுச் சென்றான். கதவைப் பூட்டுகிற மாதிரி சில ஓசைகளை அவன் எழுப்புவது என் காதில் விழுந்தது.

பிறகு ஒரே நிசப்தம்தான்.

## 11

**கா**ரின் பின்ஸீட் கதவுகளைத் திறந்து வைத்துக் கொண்டு காலை நீட்டிப் படுத்தேன். ஈர மண்ணில் காலடித் தடங்கள் தெள்ளத் தெளிவாய்ப் பதிவது போல, பதைப்புடன் காத்திருக்கும் என் நெஞ்சில், வெளியுலகத்தின் ஓசைகள் அழுத்தமாய் ஒட்டின. சிறு சப்தத்தையும் ஆராய்ந்து அது என்னவாயிருக்கும் என்று ஊகிப்பதில் என் பொழுதைக் கழிக்கலானேன்.

அடுத்தாற்போலவே உள்ள அவுட் ஹவுசுக்கு அம்மா வருவதும் கதவைத் திறப்பதும் காதில் விழுந்தது. பெட்ரூம் விளக்கை ஏற்றுவதற்காக நெருப்புக் குச்சியைச் சரக்கென்று கிழிப்பதைக்கூடக் கேட்டேன். பிறகு ஜமுக்காளத்தை உதறுவதையும் தலையணையைத் தட்டுவதையும் குழாயைத் திறந்து தண்ணீர் பிடித்துப் படுக்கையின் அருகில் எவர் சில்வர் ஜக்கை டொக்கென்று வைத்துக் கொள்வதையும் பாசுர மொன்றை முணுமுணுப்பதையும் கைவிரல்களை நெட்டி முறித்துக் கொள்வதையும் தொடர்ந்து வந்த ஓசைகளின் மூலமே ஊகித்தேன்.

அவ்வளவு சமீபத்தில் தூங்கிக் கொண்டிருக்கும் அம்மாவை நினைக்கையில் என் கண்களை உறுத்தியது கண்ணீர். 'நகர்ந்து படுத்துக்கொள்ளேண்டி, சனியனே!' என்று அம்மா எவ்வளவு தரம் பிடித்துத் தள்ளினாலும் திரும்பத் திரும்ப அவள் கழுத்தைக் கட்டிக்கொண்டு தூங்குவேனே, அந்தக் குழந்தைப் பருவத்தை எண்ணிக் கொண்டேன். அடி வயிற்றைப் பிசைகிற மாதிரி உணர்வேற்பட்டது. இவ்வளவு அண்மையில் நாம் இருப்பதை அவள் கண்டுவிடக் கூடாது என்று எண்ணுகிற அளவுக்கு இன்று அவள் யாரோ நான் யாரோ என்று ஆகிவிட்டது! ஏன்? எங்கிருந்தோ முளைத்த ஒருத்தி எனக்கும் என் தாய்க்கும் நடுவே அவ்வளவு பெரிய பள்ளத்தை வெட்டியிருக்கிறாள்! கௌரியம்மா. இரு. இரு. உனக்கு வட்டியும் முதலுமாய்த் திருப்பிக் கொடுக்கிற நாள் அதிக தூரத்தில் இல்லை...

சந்தடிகள் இன்னும் முழுதாக ஓயட்டும், உலகம் இன்னும் ஆழமாகத் துயிலில் மூழ்கட்டும் என்று கண்ணை மூடிக் கொண்டே காத்திருந்தேன். அதுதான் தப்பாயிற்று. உடம்பின் அசதி அதற்குண்டான விலையை வாங்கிவிட்டது. என்னையறியாமலே கடுந்தூக்கத்தில் விழுந்துவிட்டேன்.

எத்தனை நேரமாகியிருக்குமோ தெரியவில்லை. திடீரென்று ஓர் உஷ்ணமான மூச்சுக் காற்று என் கன்னத்தையும் நெற்றியையும் தாக்கியது. என் முகத்தை ஏந்தினாற்போல் இரண்டு கரங்கள் மெல்லப் பிடித்தன.

பிடியின் விசையை அழுத்தியதும் சரேலெனப் பிரிந்து கொள்ளும் குடைபோல, அபாய வேளையில் என் புலன்கள் ஐந்தும் சிலிர்த்து விழித்துக் கொண்டன. யாரோ என் முகத்தினருகே குனிந்து தன் முகத்தை வைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை உணர்ந்தேன் ஒரே வினாடியில்.

''சீ!'' என்று தள்ளினேன், பலம் கொண்ட மட்டும்.

''ஹேமு... நான்.. நான் தான்!''

ஹரி! ஹரியா!

என் படபடப்பு பன்மடங்கு அதிகரித்ததே தவிர, ஹரி என்று உணர்ந்ததால் அடங்கவில்லை. ஆண் என்று வந்துவிட்டால் கடைசியில் எல்லோருமே ஈனப் பிறவிகள் தானா என்ற ஆயாசம் என் சினத்தை மேலும் பெருக்கியது. ''பிரமாதம் ஹரி! ரொம்பப் பிரமாதம்!'' என்றேன் பல்லைக் கடித்துக் கொண்டு.

''உஷ். சத்தம் போடாதே ஹேமா!'' என்றான் ஹரி ரகசியக் குரலில். ''நான் செய்தது தப்புத்தான். ஒரு நிமிஷத்தில் என்னவோ என் வசம் இழந்துவிட்டேன். என்னை மன்னித்துவிடு. இன்னொரு சமயம் என்ன தண்டனை வேண்டுமானாலும் கொடு. ஆனால் இப்போது சத்தம் போடாதே. நீ வந்திருக்கிற வேலையை மறந்துவிடாதே.''

நான் குரலைத் தணித்துக் கொண்டேன். ஆனால் குமுறலைக் குறைக்கவில்லை. ''உதவி செய்கிறேனென்று சொல்லி என்னை இங்கே அழைத்து வந்தது இந்த நோக்கத்துடன்தானா?'' என்றேன்.

''ஐயோ, அப்படியில்லை, ஹேமா, இல்லவே இல்லை... நீ இன்னும் அங்கே வரக் காணோமே என்பதால் தேடிக் கொண்டு வந்தேனே தவிர...''

''எனக்கு உங்கள் துணையும் வேண்டாம், விளக்கமும் வேண்டாம், போங்கள் வெளியே,'' என்றேன்.

அந்தக் கார் ஷெட்டுக்குள் இருள் அடைத்துக் கொண்டிருந்தது. கதவுகளைச் சாத்தி வைத்திருந்தான் ஹரி. பிளவுகளின் வழியே நூல் போலச் சிறிது வெளிச்சம்தான் வந்து கொண்டிருந்தது. ஆகவே ஹரியின் உருவம்தான் புலப் பட்டதே தவிர அவனுடைய முகத்தின் உணர்ச்சிகளையோ போராட்டங்களையோ என்னால் காண முடியவில்லை. பல நிமிடங்கள் அவன் மௌனமாயிருந்தான். பிறகு, ''சரி, நீ வந்த காரியத்தைப் பார்க்கலாம் வா. அந்த மெஷினரி பார்ட் மாடியில் அக்காவின் படுக்கையறைக்கு அடுத்த அறையில் இருக்கிறது. அதைச் சொல்லி உன்னை அழைத்துப் போகத்தான் வந்தேன்,'' என்றான்.

''ரொம்ப நன்றி. நானே போய்ப் பார்த்துக் கொள்கிறேன்,'' என்றேன்.

''ஹூம்.'' தன்னைத்தானே நொந்து கொண்டாற் போல் வெறுப்புடன் சிரித்தான் ஹரி. ''நல்லது. பங்களாவைச் சுற்றிக் கொண்டு பின்புறமாய்ப் போ. கதவைத் திறந்து வைத்திருக்கிறேன். உள்ளே நுழைந்தால் ஹாலுக்கு வரலாம். அங்கே மாடிப்படி இருக்கிறது. மாடி வெராந்தாவை அடைந்ததும் முதல் அறை அக்காவின் படுக்கை அறை,'' என்று சொல்லிவிட்டு இரண்டடி வைத்தான். என்ன தோன்றியதோ திரும்பவும் என்னிடம் வந்து, ''கட்டாயம் என்னை நீ மன்னிக்கத்தான் வேண்டும், ஹேமா,'' என்றான்.

நான் பதில் கூறுவேனென்று இரண்டொரு வினாடி காத்திருந்துவிட்டு ஏமாற்றத்துடன் திரும்பினான் அவன்.

அடிபட்டுத் தப்பிய புலிபோல என் உள்ளம் தன் ரணங்களை நக்கிக் கொண்டிருந்தது. ஆடி முடிந்து விட்ட பூகம்பமாக என் உணர்ச்சிகள் ஒன்றோடொன்று மோதுண்டு சிதறிக் கிடந்தன.

ஹரி என்மீது காட்டி வந்த அன்பையும் பரிவையும் எண்ணிப் பார்த்தேன். அவனைக் காணுந்தோறும் வேறெந்த ஆடவரைப் பார்க்கும்போதும் ஏற்பட்டிராத கிளர்ச்சியும், நெகிழ்ச்சியும் என் இதயத்தில் உதித்துள்ளன என்ற உண்மையை ஆராய்ந்தேன். அவனுடைய அருகில் இருக்கும் போதெல்லாம் என் மனம் ஆனந்தக் கூத்தாடியது உண்டா இல்லையா என்று என்னை நானே கேட்டுக் கொண்டு, ஆமாம் ஆமாம் என்று பதில் பெற்றுக் கொண்டேன்.

அவ்வளவுக்குப் பின்னரும் ஹரியின் செயல் சரியானதென்று என் மனம் ஒப்பவில்லை. என் உடம்பின் அமைப்பு அப்படியோ என்னவோ, திருமணம் என்கிற புனிதமான பந்தம் ஏற்படுமுன்பே எல்லா உரிமைகளையும் கோருகின்ற ஆண்களைக் காணும்போது எனக்குக் குமட்டுகிறது. அந்த உரிமைகளைத் தடையின்றி வழங்கும் பெண்களைக் காட்டிலும் கேவலமானவர்கள் இருக்க முடியாது என்று ஆத்திரம் மூள்கிறது...!

எங்கேயோ ஒரு மணிக்கூண்டு ஒலித்தது. எவ்வளவு என்று எண்ணுவதற்குள் ஒய்ந்துவிட்டது.

சந்தடி செய்யாமல் கார்ஷெட்டைத் திறந்துகொண்டு வெளியே வந்தேன். உடம்பை வருடிக் கொடுத்துச் சென்றது சிலுசிலுவென்ற காற்று. சாத்திக் கிடந்த அவுட்ஹவுஸ் வாசலையும் கடந்து பங்களாவை நோக்கி நடந்தேன். இடது புறமாகச் சுற்றிக் கொண்டுபோய் பின்புறக் கதவைத் தொட்டேன். திறந்து கொண்டது. வெராந்தாவில் அடிமேலடி

வைத்து ஹாலின் கதவைத் தள்ளினேன் மெதுவாய். உள்ளே நுழைந்தேன். கையால் துழாவியபோது மாடிப் படிக்கட்டின் கைப்பிடிச் சுவர் தென்பட்டது. புடைவை தடுக்கிவிடாமல் தூக்கிப் பிடித்துக் கொண்டு இரண்டு படி ஏறினேன். திக்திக்கென்றது. அந்தப் பினனிரவுக் குளிர் வேளையிலும் நெற்றியில் முத்து முத்தாய் வியர்த்தது. கைக்குட்டையை எடுத்து ஒற்றிக் கொண்டேன்.

என் அச்சத்தை நினைத்து எனக்கே கோபம் வந்தது. 'அடியே ஹேமா, நீ ஒரு முரண்பாடுகளின் மூட்டை!' என்று என்னை நானே திட்டிக்கொணடேன். ஒரு நிமிடம் மகா பெரிய வீராங்கனையாகப் பாய்வதென்ன, இன்னொரு நிமிடம் கைகால் உதறலெடுத்துக் கோழையாய் உட்காருவதென்ன!

திடுமென்று என் செவிகள் கூர்மையாயின. என்ன ஒலி அது? ஹாரன் ஒலி! ஆமாம். ஒரு கார் வருகிறது. பங்களாவுக்குள்! டயரும் பூமியும் உரசும் சர்ரென்ற சத்தம் தொடர்கிறது. அதன் ஹெட்லைட் வெளிச்சம் எந்த இடுக்குகள் வழியாகவோ பங்களாவுக்குள் புகுந்து, ஹாலின் சுவர் மீது பிரஷினால் ஒரு தீற்றுத் தீற்றினாற் போல் பாய்ந்து மறைகிறது. ஷெட்டில் ஏற்கெனவே ஒரு கார் இருப்பதால் நேரே போர்டிகோவுக்கு வந்து நிற்கிறது.

அடுத்துக் கேட்ட குரல்:

''என்னப்பா வாட்ச்மேன், நன்றாய்த் தூங்கினாயா? வேலைக்கு அமர்த்தி இரண்டு நாள் ஆகவில்லை. ஹாரன் அடித்து எழுப்ப வேண்டியிருக்கிறது உன்னை!''

கௌரியம்மாள்தான்!

எதிர்பாராத விதமாகத் திரும்பிவிட்டாள் ஊரிலிருந்து.

எந்த வினாடியும் அவள் ஹாலின் கதவுகளைத் திறந்துகொண்டு உள்ளே நுழைவாள் என்று என் அறிவு

உணர்த்தியது. திரும்பி ஓடலாமென்றால் பின்புறக் கதவைச் சட்டெனக் கண்டுபிடிப்பேனா என்பது சந்தேகம்தான். இருட்டில் மோதிக்கொண்டு கையும் களவுமாய் அகப்பட்டுக் கொள்ளக்கூடும். கிடுகிடுவென்று படிகளில் ஏறி மாடியை அடையலாம். ஆனால் அங்கே ஒளிவதற்கு வாட்டமாக என்ன இடம் இருக்கும் என்று தெரியவில்லை.

படிக்கட்டு வளைவின் கீழே ஒரு சிறிய ஸ்டீல் பீரோ இருப்பது அரை குறை வெளிச்சத்தில் புலனாயிற்று. ஒரே தாவலில் அதன் பின்னே சென்று மறைந்து கொண்டேன்.

ஹாலின் கதவுகள் திறந்து கொண்டன. பளீர் பளீரென்று விளக்குகள் எரிந்தன. நான் சர்வ ஜாக்கிரதையானேன்.

கௌரியம்மாள் இரண்டுமூன்று படி ஏறியிருப்பாள்.

சட்டென்று அவள் நடை நின்றது. வேலைக்காரன் காத்துக் கொண்டிருந்தான், எஜமானி மாடியை அடைந்ததும் விளக்குகளை அணைத்துக் கதவுகளைத் தாழிடுவதற்காக. அவனுடைய உருவம்தான் ஓரளவு என் பார்வைக்குத் தெரிந்ததே தவிர, கௌரியம்மாள் எங்கே நின்றிருக்கிறாள் என்பதை என்னாலே பார்க்க முடியவில்லை. அவள் குரல் கேட்டது.

''சமையற்கார அம்மா தூங்கிக் கொண்டிருப்பாள். எழுப்பி அழைத்து வா நான் சொன்னேனென்று.''

வேலைக்காரன் சென்றான். கௌரியம்மாள் மாடிக்குப் போகாமல் கீழேயும் வராமல் அதே இடத்திலேயே நின்றிருந்தாள். எதற்காக இந்த நேரத்தில் அம்மாவைக் கூப்பிடுகிறாள் என்று புரியவில்லை.

விசுக் விசுக்கென்ற அம்மா விரைந்து வரும் சத்தம் கேட்டது. வரும் போதே, ''ராத்திரியே திரும்பிவிட்டீர்களா?''

நாளைக் காலைதானே வருவதாய்ச் சொன்னீர்கள்?'' என்று கேட்டுக்கொண்டே வந்தாள்.

''எத்தனை நாளாய் இது நடக்கிறது?'' என்றுதான் திரும்பக் கேட்டாள் கௌரியம்மாள்.

''எது?'' என்றாள் அம்மா திகைப்புடன்.

''இந்தத் திருட்டு நாடகம்.''

''திருட்டா?'' அம்மா மேலும் மேலும் பரிதாபமாய்த் திணறுவதை என்னால் கற்பனையில் காண முடிந்தது.

''என் எதிரில் பிரமாதமாக நடிக்க வேண்டியது—பெண்ணைக் கண்டிக்கிற மாதிரி. என் தலை மறைந்ததும் அவளை வரவழைத்துக் கொண்டு சீராட்ட வேண்டியது! அப்படித்தானே?'' கௌரியம்மாள் உறுமினாள்.

''வந்து... யார்?... ஹேமாவையா சொல்கிறீர்கள்? அவள் வரவில்லையே...'' திணறினாள் அம்மா.

''ஓகோ! அப்படியானால் இந்தக் கைக் குட்டைக்குக் கைகால் முளைத்து இங்கே பறந்து வந்ததாக்கும்?''

நான் கையை ஓர் உதறல் உதறி நாக்கைக் கடித்துக் கொண்டேன். வியர்க்கிறது என்று நெற்றியை ஒற்றிக் கொண்டவள் அந்தக் கைக்குட்டையைக் கைப்பிடிச் சுவர் மீதே வைத்து விட்டேன் போலிருக்கிறது! அந்தப் பிரமிப்பின் நடுவே, கைக்குட்டை போன்ற ஒரு சிறிய பொருளைக்கூட என்னுடையது என்று எப்படிப் பிரித்தறிந்தாள் என்ற ஆச்சரியமும் எனக்கு ஏற்பட்டது.

அம்மா தன் எஜமானியின் அருகில் வந்து கைக் குட்டையைப் பரிசீலனை செய்தாள் போலும். ''ஆமாம்... இது ஹேமாவினுடையதுதான்... ஆனால் அவள் இங்கே வரவில்லையே!'' என்ற அவளது பதில் எனக்குச் சமீபமாக ஒலித்தது.

''நிச்சயமாய்த்தான் சொல்கிறாயா, சாரதா? நிஜமாய் ஹேமா இங்கே வரவில்லையா?'' என்று மீண்டும் துருவினாள் கௌரியம்மாள். ஆனால் கோபம் சற்றுக் குறைந்திருந்தது.

''சத்தியமாய்ச் சொல்கிறேன், கௌரியம்மா,'' என்றாள் அம்மாவும் சாந்தமாக. ''இரண்டு மூன்று நாள் இங்கே நடமாடியவள்தானே? அப்போது போட்டிருப்பாள். அவள் வந்திருந்தால் உங்களிடம் மறைப்பேனா?''

''சரி சரி. எனக்கு ஒரே தலைவலி. ஒரு டம்ளர் காப்பி போட்டு மாடிக்கு எடுத்து வா. ஒரே தலைவலி.''

கௌரியம்மாள் மாடிக்குச் சென்றுவிட்டாள். ஹாலின் இன்னொரு புறத்திலிருந்த கதவைத் திறந்து கொண்டு சமையலறையை நோக்கி நடந்தாள் அம்மா.

கடிகாரம் இரண்டு மணி அடித்தது. இந்த நள்ளிரவுக் காலத்தில் எஜமானியம்மாளுக்குத் தலையை வலிக்கிறதாம்! இந்தச் சமையற்காரி காப்பி போட்டு எடுத்துவர ஓடுகிறாளாம். எனக்குக் கௌரியம்மாளின் மீதுகூடக் கோபம் வரவில்லை. ஆட்டுவித்தபடியெல்லாம் ஆடுகின்ற அம்மா மீதுதான் அடங்காச் சினம் ஏற்பட்டது.

நான் பீரோவின் பின்னாலேயே இருந்தேன். வெளிவரவில்லை. சந்தடிகள் அடங்கிய பின்னர் வந்த வேலையைக் கவனிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் உறுதியாக இருந்தேன். உடம்பை அசைக்காமல் நிற்பது வரவரப் பெரும் கஷ்டமாயிருந்தது. மூட்டுக்களில் வலிக்கத் தொடங்கியது.

அம்மா காப்பி எடுத்துக் கொண்டு மாடிக்குச் சென்றாள். போகும்போதே விளக்குகளை அணைத்துவிட்டுச் சென்றாள். வெகு நேரம் காத்திருந்தேன். அம்மா திரும்பி வரக்காணோம். மாடியிலிருந்து முன்புறமாகச் செல்லக்கூடிய இன்னொரு

படிக்கட்டும் இருந்ததால் அப்படியே அவுட் ஹவுசுக்கு இறங்கிப் போய்விட்டாள் போலிருக்கிறது என்று எண்ணிக்கொண்டு என் இடத்தைவிட்டு வெளிவந்தேன். இருட்டு முன்னைக் காட்டிலும் அதிகமிருப்பது போல் தோன்றியது. முன்போலவே கைகளால் துழாவிக் கொண்டு படிக்கட்டின் வழியே மேலே ஏறினேன்.

முதல் அறை கௌரியம்மாளின் படுக்கையறை என்று ஹரி கூறியது நினைவு வந்தது.

அங்கே ஏதோ பேச்சுக் குரல் கேட்கிற மாதிரி இருந்தது. இன்னுமா கௌரியம்மாள் தூங்கவில்லை? சரி, யாருடன் பேசிக் கொண்டிருக்கிறாள்?

ஜன்னல் கதவுகள் ஒன்று திறந்திருந்தது. உள்ளிருந்து விடி விளக்கின் நீல ஒளி கசிந்து வந்து கொண்டிருந்தது.

சுவரோடு சுவராய் ஒட்டிக் கொண்டு தலையை மிக மெதுவாய் நீட்டி உள்ளே பார்த்தேன்.

பெரிய கட்டிலில் குப்புறக் கவிழ்ந்தாற் போல் படுத்திருந்தாள் கௌரியம்மாள். ரொம்ப மென்மையான மெத்தையாக இருக்க வேண்டும். தேகத்தில் ஒரு பாதிதான் வெளியே தெரிந்தது. மறுபாதி மெத்தையின் ஆழத்தில் புதைந்திருந்தது.

அவளுடைய கால் மாட்டில், கட்டிலின் விளிம்பில் உட்கார்ந்திருந்தாள் அம்மா - என்னைப் பெற்றவள்.

சும்மா உட்கார்ந்திருக்கவில்லை. எஜமானியின் கால்களையும், முதுகையும் பிடித்து விட்டுக் கொண்டிருந்தாள்.

என்ன கேவலம்! என்ன இழிவு! என்ன சிறுமை!

ஒருபுறம் எனக்கு ரத்தம் கொதித்தது ஆத்திரத்தால்! மறுபுறம் ரத்தம் உறைந்தது அவமானத்தால். பெரிய மிட்டா மிரசுகள், ஜமீன்தார்கள் ஆகியோருக்கு எடுபிடி வேலைக்

காரர்கள் உடம்பு பிடித்து விடுவார்கள் என்று கேள்விப் பட்டிருக்கிறேன். அதே ஆண்டை மனப்பான்மையுடன் கௌரியம்மாள் என்னைப் பெற்ற அன்னையைக் கேவலப் படுத்திக் கொண்டிருக்கிறாள்.

என் நெஞ்சில் துக்கம் அடைத்துக் கொண்டது. அம்மா! அம்மா! எத்தனை காலத்துக்கு இந்த அவலத்தையெல்லாம் பொறுத்துக் கொண்டிருக்கப் போகிறாய்? அப்படியென்ன அடிமைச் சீட்டு எழுதிக் கொடுத்திருக்கிறாய் இந்தக் கௌரியம்மாளுக்கு! கொடுத்திருந்தால்கூடக் கிழித்து அவள் முகத்திலே விட்டெறிந்துவிட்டு வரமுடியாதபடி உன்னைத் தடுப்பது எது?

நான் குமைந்து கொண்டிருந்த போது கௌரியம்மாளின் பேச்சுக் கேட்டது. தூக்கக் கலக்கத்தில் இருந்ததால் உச்சரிப்பு அவ்வளவு தெளிவாயில்லை.

''சாரதா, இப்படியெல்லாம் விட்டுவைக்கக்கூடாது ஹேமாவை.''

''ஆமாம்மா,'' என்றாள் அம்மா.

''ரொம்ப ஆபத்து. அவளைப் பிடித்து வைத்துக்கொள்ள நான் முயற்சி பண்ணினேன். நடக்கவில்லை. நீ விட்டு விடாதே.''

''விட மாட்டேம்மா.''

சிறிது நேரம் மௌனம்.

''சாரதா, நீ அவளை இங்கே அழைத்து வந்ததே தப்பு என்று தோன்றுகிறது.''

''ஆமாம்மா,'' என்றாள் அம்மா. எஜமானியின் ஒவ்வொரு பேச்சுக்கும் ஆமாம் போட வேண்டியிருக்கும் அவளுடைய பரிதாப நிலையை நினைத்து நான் புழுங்கினேன்.

''எப்படியாவது நாளை மறுநாளைக்குள் அவளை இங்கே அழைத்து வந்துவிடு,'' என்றாள் கௌரியம்மாள்.

அத்தனை கொந்தளிப்புக்கும் நடுவில் எனக்குச் சிரிப்பும் வந்தது.

கௌரியம்மாள் எதற்காக என்னைக் கண்டு நடுங்குகிறாள் இப்படி? சர்வ வல்லமையும் பணம் காசும், பதவியும் பலமும், செல்வாக்கும் படைத்தவள் இந்த அற்ப ஹேமாவை மடக்கிப் பிடித்து வைத்துக்கொள்ள வேண்டும் என்பதிலேயே ஏன் குறியாக இருக்கிறாள்? யோசிக்க யோசிக்க, இவளுடைய சதிகளை அம்பலப்படுத்துவதுதான் எனக்குக் கடவுள் இட்ட பணியாகும் என்ற கருத்து என் மனத்திலே வலுப்பட்டது. அப்படியானால், இப்போது செய்ய முயன்றது போன்ற சிறுபிள்ளைத் தனமான காரியங்களில் இறங்கவே கூடாது. இறங்கி, பிரகாசம் போன்ற அனுபவசாலிகள் திட்டமிட்டு வைத்துள்ள ஏற்பாடுகளைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிவிடக் கூடாது. விஷயத்தைப் பிரகாசத்திடம் தெரிவித்து, பொறுப்பை ஒப்படைத்துவிட வேண்டும். பிறகு அவருடைய ஆணைப்படி நடக்க வேண்டும். அப்போதுதான் இந்தத் திமிங்கிலங்களின் திமிரை அடக்க முடியும்...

இந்த எண்ணம் எழுந்தவுடன் வந்த வழியே இறங்கினேன். வாசலுக்குத் திரும்பினேன். கேட்டருகில் இப்போது விழிப்புடன் உட்கார்ந்திருக்கும் வாட்ச்மேனை எப்படிச் சமாளிப்பது என்றுதான் புரியவில்லை. அதற்கு முன் இன்னொன்றும் ஞாபகம் வந்தது. ஷெட்டுக்குள் இருக்கும் காரில் என் கைப்பையை விட்டு வைத்திருந்தேன். கைக் குட்டையை விட்ட மாதிரி அதையும் விட்டுவிடக் கூடாதென்று ஷெட்டுக்குள் சென்றேன்.

ஹாண்ட் பாக்கை எடுத்துக்கொண்டு திரும்பிய சமயம், முகத்தில் பளீரென்று டார்ச் வெளிச்சம் அடித்தது.

அம்மா.

# 12

அம்மாவை அந்த வேளையில் அந்த இடத்தில் நான் எதிர்பார்க்கவில்லையென்றாலும், அதைக் காட்டிக் கொள்ளாமல், ''வழியை விடு. நான் போக வேண்டும்,'' என்றேன்.

அம்மா டார்ச் விளக்கை அணைத்துவிட்டு, என் கைகளை இறுகப் பற்றிக்கொண்டு, ''ஹேமா! வர வர நீ செய்வது ஒரு பெண் செய்கிற காரியமாகவே இல்லை. எந்த வேளையில் எங்கே வருவது, எந்த வேளையில் எங்கே இருப்பது என்று ஒன்றுமே கிடையாதா? வேண்டாம். சொல்வதைக் கேள். வெளியே போகாதே. இங்கேயே இரு.'' என்றாள்.

''ஏன்? எஜமானியம்மாளின் உடம்பைப் பிடித்துவிட இன்னோர் ஆள் தேவைப்படுகிறதா?'' என்றேன் குத்தலாக.

அந்த இருட்டிலும்கூட அம்மாவின் முகம் வெளிறுவதை என்னால் காண முடிந்தது. ''ஹேமா! நீ என்னைவிட்டுப் பிரியாமல் என்னோடு இருக்க வேண்டுமென்பதற்காக நான் எந்தச் சிறுமையையும் ஏற்றுக் கொள்ளத் தயங்கமாட்டேன். என் இருதயம் பதைக்கிற பதைப்பு உனக்குத் தெரியாது. கௌரியம்மாள், ஒரு கைக்குட்டையை வைத்துத்தான் நீ இங்கே வந்திருக்கிறாய் என்று ஊகித்தாள். எனக்கு அந்த மாதிரி எந்தச் சாட்சியும் தேவைப்படவில்லை. என் மனமே சொல்லிவிட்டது, இங்கே எங்கேயோ நீ உலவிக்கொண்டிருக்கிறாய் என்று. அதனால்தான் எஜமானி கொஞ்சம் கண்ணயர்ந்ததும் ஓடி வந்தேன் உன்னைப் பார்ப்பதற்காக.''

''ஏன் இவ்வளவு துன்பமும் திருட்டுத்தனமும் தேவையில்லாமல்? இப்போதே புறப்பட்டு வா, என்னோடு. நான் நல்ல வேலையில்தான் இருக்கிறேன். ராணி மாதிரி

உன்னை வைத்துக் காப்பாற்றுகிறேன். புறப்படு. ஒரு மாற்றுப் புடவைகூட எடுத்துக் கொள்ள வேண்டாம். வா. உனக்குச் சமைத்துப் போட ஒரு சமையற்காரியை அமர்த்துகிறேன். ஊம். கிளம்பு.'' என்றேன்.

அம்மா புடவைத் தலைப்பால் வாயைப் பொத்திக் கொண்டு விம்மி அழுதாள். வரட்டுப் பிடிவாதக்காரியாகவும் முன்கோபக்காரியாகவும் அவள் இருக்கும்போது ஏற்படாத இரக்கம் இப்போது ஏற்பட்டது எனக்கு.

''ஹேமா, நடவாததையெல்லாம் பேசாதே,'' என்றாள் சில நிமிடங்கள் கழித்து. ''ஒன்று செய். நீ பேசாமல் ஊருக்கே திரும்பிவிடு. தஞ்சாவூரிலிருந்து பாட்டிகூட எழுதியிருக்கிறாள். நீ இல்லாமல் கஷ்டமாயிருக்கிறதாம். போய்விடு. முன்போல நான் வருஷத்துக்கு ஒரு தடவை வந்து பார்த்துக் கொள்கிறேன். இன்றைக்கே ரயிலேறி விடு. டிக்கெட்டுக்காகப் பணம் வேண்டுமானால் தரட்டுமா?''

''நீயும் நடவாததைத்தான் பேசுகிறாய்,'' என்று சிரித்தேன். ''சரி, பொறுத்ததுதான் பொறுத்தாய், இன்னும் இரண்டொரு நாள் பொறு. உன் எஜமானியம்மாளுக்குச் சரியான பொறி வைத்தாயிற்று. இன்னும் ஒரு நாளோ இரண்டு நாளோதான், மாட்டிக்கொண்டு விடுவாள் அப்புறம் உனக்கும் விடுதலை? எனக்கும் விடுதலை!''

''என்ன ஹேமா சொல்கிறாய்? என்ன செய்யப் போகிறாய்?'' என்று திடுக்கிட்டாள் அம்மா.

''நீ ஓர் ஓட்டைவாய்! உன்னிடம் சொல்வேனா!'' என்று சொல்லிவிட்டு, ''எனக்கு ஒரே ஓர் உதவி செய் இப்போதைக்கு,'' என்றேன். ''அந்த வாட்ச்மேனை ஐந்து நிமிஷம் உள்ளே கூப்பிட்டுக்கொள். நான் வெளியேறி விடுகிறேன்.''

''போகத்தான் வேண்டுமா, ஹேமா?''

''கட்டாயமாய்,'' என்றேன்.

''நான் கோபத்தில் ஏதேதோ சொல்லியிருப்பேன், ஹேமா. அதற்காக என்னை ரொம்பத் தண்டிக்காதே,'' என்றாள் அம்மா.

''தண்டனை இல்லையம்மா. வெகுமதி கொண்டு வருகிறேன் பார். கொஞ்ச நாளில். இப்போது நான் கேட்டதைச் செய்.''

என்னைப் புரிந்து கொள்ள முடியாதவளாக தயங்கித் தயங்கிப் பார்த்துக்கொண்டே வெளியே சென்றாள் அம்மா. நான் இருட்டோடு இருட்டாகப் பதுங்கிக் கொண்டேன்.

அம்மா கேட்டினருகே சென்று ''வாட்ச்மேன்! இந்தாப்பா இப்படி வா,'' என்று அழைப்பது கேட்டது.

''என்னம்மா?'' என்று அவன் எழுந்து வந்தான்.

''வீட்டுக்குப் பின்புறம் யாரோ நடமாடுகிற மாதிரி சத்தம் கேட்கிறது. வந்து பார் கொஞ்சம்! சீக்கிரம்.''

''இதோம்மா,'' என்று புறப்பட்டுச் சென்றான் காவல் காரன். நல்ல வேளை, வாசல் கேட்டைப் பூட்டிக்கொண்டு செல்லவில்லை.

அவன் தலை மறைந்ததும் நான் விறுவிறுவென்று வெளியேறினேன். தெருக் கோடியில் ஒரு சைக்கிள் ரிக்ஷா கிடைத்தது. அதில் ஏறிக்கொண்டு வனஜாவின் வீட்டுக்குப் போகச் சொன்னேன்.

விடிகாலையில் எழுந்து கொள்ளும் வழக்க முள்ளவர்கள்தான் வனஜாவின் வீட்டில் எல்லோரும். ஆனால் கும்மென்று இருளடைந்து கிடக்கும் நாலு மணிப்பொழுதில் அங்கே நடமாட்டமும் வெளிச்சமும் இருக்குமென நான் எதிர்பார்க்கவில்லை.

நடையில் ஏறும்போதே சாவித்திரி ஓடிவந்து என் கையைப் பிடித்துக் கொண்டு, ''தம்பிக்கு உடம்பே

சரியில்லை, அக்கா ராத்திரியெல்லாம் வனஜா தூங்கவே யில்லை.'' என்று தெரிவித்தாள்.

சுவரில் சாய்ந்தாற்போல் உட்கார்ந்திருந்தாள் வனஜா. அவள் மடியில் கடைக்குட்டித் தம்பி பாபா மலங்க மலங்க விழித்துக்கொண்டு கிடந்தது. ''பாபா! பாபாக் கண்ணு! இங்கே பார். கண்ணா, கண்ணைத் திறந்து என்னைப் பார்டா கண்ணா,'' என்று வனஜா அதனிடம் புலம்பிக் கொண்டிருந் தாள்.

''என்ன வனஜா அவனுக்கு? இப்படி என்னிடம் கொடு,'' என்றேன்.

ஆனால் வனஜா என்னிடம் அவனைக் கொடுக்க வில்லை. யாரோ அவளிடமிருந்து அதைப் பறித்துக் கொண்டு போக முயலுகிற மாதிரி இறுக்கி அணைத்துக் கொண்டாள். ''இப்படித்தான் இரண்டு மூன்று மாதங்களுக்கொருமுறை வந்துவிடுகிறது. விளையாடிக்கொண்டேயிருப்பான். திடீரென்று ஃபிட்ஸ் வந்துவிடும்,'' என்றாள்.

''என்ன மருந்து கொடுத்திருக்கிறாய் இப்போது?'' என்றேன்.

''பிராந்திதான் மருந்து. மவுண்ட் ரோடுக்குப் போய் வாங்கி வந்தேன்,'' என்ற வனஜா மறுபடியும் ''பாபா... பாபா...'' என்று கண்ணீருகுத்தாள்.

தஞ்சாவூரில் என் பாட்டிக்குக் கொஞ்சம் கை வைத்தியம் தெரியுமாகையால் அக்கம் பக்கத்தில் உள்ள குழந்தைகளைக் கொண்டு வந்து காட்டுவார்கள். வேப்பெண்ணெயைத் தடவி உருவி விடுவாள் பாட்டி. சிறிது நேரத்தில் விலாப்புறத்தில் இசிப்பு நின்றுவிடும்.

அந்த அனுபவத்தில், வனஜாவின் மடியில் கிடக்கும் குழந்தையைக் கவனித்தேன். உடம்பு சுட்டுக்கொண்டிருந்ததே தவிர வலிப்பு எதுவும் தென்படவில்லை.

''இப்போது ஃபிட்ஸ் நின்றிருக்கிறது, வனஜா... கொஞ்ச நேரம் கீழே விடு பாயில்,'' என்றேன்.

''அதுதான் அக்கா நானும் சொல்லிக் கொண்டிருக்கிறேன்.'' என்றாள் சாவித்திரி. ''நேற்று ராத்திரி ஏழு மணிக்கு மடியில் வைத்துக் கொண்டவள் இன்னும் விடமாட்டேன் என்கிறாள். சாப்பிடவில்லை. தண்ணீர்கூடக் குடிக்கவில்லை.''

''பாபாவுக்கு உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால் வனஜாக்கா இப்படித்தான்,'' என்று சீனாவும் குற்றம் சாட்டினான். இரண்டு குழந்தைகளும் இரவு பூராவாக விழித்துக்கொண்டிருந்தார்கள் என்பது அவர்களுடைய சிவந்த கண்களிலிருந்து தெரிந்தது. இந்தத் திக்கற்ற குடும்பம் இப்படித் தவிக்கும்போது, எங்கேயோ எவளுடனோ ஒழுக்கம் கெட்ட வாழ்க்கை நடத்திக் கொண்டிருக்கும் அந்தக் குடும்பத் தலைவனைப் பற்றி எண்ணினேன். உடம்பெல்லாம் பற்றியெரிந்தது.

''குழந்தைக்கு ஒன்றுமில்லை. கீழே விடு, சொல்கிறேன்,'' என்று பாபாவை வனஜாவிடமிருந்து பலவந்தமாகப் பறித்துப் பாயில் கிடத்தினேன். ''மெதுவாய், மெதுவாய்,'' என்று பதறினாள் வனஜா.

''எழுந்து முகம் கழுவிக் கொள். பல் விளக்கு. பால் வருகிற நேரம். சாவித்திரி, நீ போய் ஸ்டவ்வைப் பற்ற வை. நான் காப்பி போடுகிறேன்,'' என்று அந்த வீட்டின் அதிகாரங்களை நானாகவே மேற்கொண்டேன்.

எல்லோரும் சோகமாய்க் கிடக்கும் ஒரு வீட்டில் யாராவது ஒருவர் தைரியமாக அதட்டிப் பேசினால் மொத்த வீட்டுக்கும் அது தொற்றிக் கொள்வது வழக்கம்தானே? உரிமையுடன் நான் போட்ட அதட்டலில் அந்தச் சூழ்நிலை மாறியது. குழந்தை பாபாவைத் திரும்பத் திரும்பப்

பார்த்துக்கொண்டே எழுந்து சென்றாள் வனஜா. மற்றவர்களும் தங்கள் தங்கள் அலுவல்களைக் கவனிக்கலானார்கள்.

வெந்நீர் கொதித்துக் கொண்டிருந்தபோது சாவித்திரி பால் வாங்கி வந்துவிட்டாள். வனஜா பல் விளக்கிவிட்டு வந்து காப்பி கலப்பதில் ஈடுபட்டவாறே, ''இன்றைக்கு ஆபீசில் எனக்கு லீவு சொல்லிவிடு, ஹேமா,'' என்றாள்.

''பாபாவுக்கு இனிமேல் ஒன்றும் இருக்காது, வனஜா. வழக்கம்போல் அடுத்த வீட்டம்மாளிடம் அவனை விட்டுவிட்டு நீ தைரியமாக வரலாம்,'' என்றேன்.

''இல்லையில்லை. என்னால் முடியாது. குழந்தைக்கு எப்படியிருக்கிறதோ என்னவோ என்று ஆபீசில் தவித்துப் போய்விடுவேன். அவனை விட்டுவிட்டு ஒரு நிமிஷம்கூட நான் பிரியமாட்டேன்,'' என்றாள் வனஜா பிடிவாதமாக.

''உன் இஷ்டம். ஆனால் நானும் இன்று ஆபீசுக்குப் போகப் போவதில்லை,'' என்றேன்.

நான் பிரகாசத்தைச் சந்தித்து எல்லாவற்றையும் கூறத் துடித்துக் கொண்டிருப்பது வனஜாவுக்கு எப்படித் தெரியும்?

''ஏன்?'' என்று ஆச்சரியத்துடன் பார்த்தாள்.

''ஒரு முக்கியமான வேலை இருக்கிறது. அப்புறம் சொல்கிறேன்.''

''பார்த்தாயா, என் கவலையில் உன்னைப் பற்றிக் கேட்க மறந்தே போனேன். அதென்ன அத்தனை விடிகாலையில் புறப்பட்டு வந்தாய்? உன் அம்மாவைப் பார்த்தாயா இல்லையா?'' என்று அடுக்கடுக்காக வினவினாள் வனஜா.

''இன்று சாயந்தரம் சொல்கிறேன். அதுவரையில் நீ பாபாவைப் பற்றிய ஒரே கவலையுடன் இரு. போதும்,'' என்றேன்.

'பாபா' என்று நான் குறிப்பிட்டதுமே மறுபடி அவள் எண்ணங்கள் அந்தக் குழந்தையிடம் ஓடிவிட்டன. ''சூடாய் அவனுக்குக் காப்பி தரவேண்டும்,'' என்று சொன்ன வண்ணம் உள்ளே போய்விட்டாள்.

**பா**ரிஸ் முனையில் நான் பஸ்ஸை விட்டு இறங்கிய போது மணி பத்துதான் ஆகியிருந்தது. அதற்குள் பிரகாசம் தன் அலுவலகத்துக்கு வந்திருப்பாரோ இல்லையோ? கொஞ்ச நேரம் பர்மா பஜாரில் பராக்குப் பார்த்துக் கொண்டிருந்து விட்டு மணி பதினொன்றடிக்கும் சமயம் கஸ்டம்ஸ் ஆபீசுக்குள் நுழைந்தேன். லிஃப்ட் பையனிடம் பிரகாசம் வந்துவிட்டாரா என்று விசாரித்தேன். வந்துவிட்டார் என்று கூறி மூன்றாவது மாடிக்கு என்னை ஏற்றிச் சென்றான்.

''சார் இல்லை? மிஸ்டர் பிரகாசம்?'' என்றேன் முன்புறம் இருந்த குமாஸ்தாவிடம். பிரகாசத்தின் நாற்காலி காலியாக இருந்ததே காரணம்.

''அதோ,'' என்று உட்புறம் கை காட்டினார் அவர். ''போகலாம், போங்கள்.''

ஹாலின் மறு கோடியில் ஒரு சிறு கண்ணாடி பீரோவினருகே நின்றிருந்த பிரகாசம், என் காலடி யோசையைக் கேட்டதும் தலைநிமிர்ந்து ''வா வா'' என்றார். அவர் கையில் ஒரு கனமான கறுப்புப் பூட்ஸ் இருந்தது.

''நேற்று டெல்லியிலிருந்து எங்கள் மந்திரி வந்திருந்தார். அவருக்காக இந்த எக்ஸிபிட்டுகளைக் கொண்டு வந்து வைத்திருந்தோம். நீ பார்த்ததில்லையே?'' என்றார்.

என் அவசரம் எனக்கல்லவா தெரியும்? இருந்தாலும் மரியாதையை முன்னிட்டு ''எதைச் சொல்கிறீர்கள் சார்,'' என்றேன்.

''இந்தப் பூட்ஸின் அடிப்புறத்தைப் பார்,'' என்று திருப்பிக் காட்டினார் அவர். ஆணியால் அடித்தாற்போலச்

சின்னச் சின்னக் குழிகள் நிறையத் தென்பட்டன. "இந்தக் குழிகளுக்குள்ளே வைரக் கற்களைப் போட்டு மேலே தோல் வைத்து மூடி வைத்து விடுவார்கள். கள்ளக் கடத்தலில் இப்படி ஒரு வகை," என்றவர் கண்ணாடி பீரோவுக்குள்ளிருந்து ஒரு புத்தகத்தை எடுத்துக் காட்டினார். அகராதிபோல் நிறையப் பக்கங்களுடன் தடியாயிருந்தது அது. ஆனால் பிரித்ததும்-

நடுவில் அத்தனை பக்கங்களையும் துளைத்துக்கொண்டு கச்சிதமாய், சதுரமாய் ஒரு பள்ளம் வெட்டப்பட்டிருந்தது.

"இதுவும் வைரங்களுக்காகத்தான்," என்று விளக்கிய பிரகாசம் அடுத்தாற்போல் ஒரு டிரான்சிஸ்டரை எடுத்து, "இது..." என்று ஆரம்பித்தார்.

அதற்குள் நான் பொறுமை இழந்துவிட்டேன். "சார், இதையெல்லாம் தூக்கி அடிக்கிற மாதிரி ஒரு ஸ்மக்களின் வித்தையை இன்றைக்குப் பார்க்கப் போகிறீர்கள்," என்றேன்.

பிரகாசம் வியப்புடன், "எங்கே ஹேமா?" என்றார்.

"தினகரா பிரைவேட் லிமிடெட்," என்றேன் சுருக்கமாய். அருகில் எந்தக் குமாஸ்தாவும் இல்லை என்றாலும் நான் எச்சரிக்கையுடன் மெதுவாகவே பேசினேன்.

"தினகரா பிரைவேட்?" என்று நெற்றியைச் சுருக்கிக் கொண்ட பிரகாசம், "ஆமாம், ஆமாம். ஏதாவது கண்டு பிடித்தாயா என்ன?" என்றார்.

"விவரம் முழுவதும் தெரிந்தால் அசந்தே போய் விடுவீர்கள்," என்றேன் பெருமையுடன். "மாட்டிக் கொண் டிருக்கிற இன்னொரு புள்ளி யார் தெரியுமா? கௌரியம்மாள்! என் அம்மா வேலைக்கிருக்கிறாளே, அதே அம்மாள்!"

"நிஜமாகவா?" என்றார் பிரகாசம் பிரமித்துப் போனவராக.

கௌரியம்மாள் தினகரா கம்பெனிக்கு வந்ததையும் ஒரு மெஷின் பார்ட்டைக் குறிப்பாகப் பார்த்து எடுத்துக்கொண்டு

போனதையும் சொன்னேன். ''மாடியில் அந்த அம்மாளின் படுக்கையறைக்குப் பக்கத்தில் அந்தப் பார்ட் இருக்கிறது. தயவுபண்ணி உடனே புறப்படுங்கள். கையும் களவுமாக மடக்கிவிடலாம்,'' என்று துரிதப்படுத்தினேன்.

''உஷ்! நீ நினைக்கிறபடியெல்லாம் தடால் மடாலென்று எதுவும் செய்துவிட முடியாது, ஹேமா,'' என்றார் பிரகாசம். அவருடைய நிதானத்தை என்னால் நம்ப முடியவில்லை. ''ரெய்ட் பண்ணுவதற்கு முன் சில ஃபார்மாலிடிகள் இருக்கின்றன. அதையெல்லாம் செய்துகொண்டுதான் வரவேண்டும்,'' என்றார்.

''சரி, இப்போதே செய்யுங்களேன் சார். எவ்வளவு பெரிய தகவல் கொண்டு வந்திருக்கிறேன் நான்! நீங்கள் என்னடாவென்றால் 'அப்படியா?' என்று கொட்டாவி விடுகிறீர்களே!'' உரிமையுடன் நான் வரம்பு மீறியே கோபித்துக் கொண்டுவிட்டேன்.

ஆனால் பிரகாசம் தப்பாக எடுத்துக் கொள்ளவில்லை. ''ஹாஹா'' என்று வாய்விட்டுச் சிரித்தபின் ''ஹேமா, தினம் பத்துக் கேஸ் பிடிக்கிறவர்கள் நாங்கள். ஆகவே எப்படிப்பட்ட கேசும் எங்களுக்குப் பரபரப்பு ஏற்படுத்தாது. உனக்கு அப்படியில்லை. இது முதல் அனுபவமாகையால் பதற்றப்படுகிறாய். ஆனால் நான் உன் சாமர்த்தியத்தைக் குறைத்து மதிப்பிடுவதாக நினைக்காதே. யூ ஹாவ் டன் எ ஒண்டர்ஃபுல் ஜாப். கங்கிராசுலேஷன்ஸ்,'' என்றார்.

''தாங்ஸ் சார்,'' என்றேன். ''சரி, எப்போது புறப்படலாம்? நான் இப்போதே ரெடி.''

''தகவல் சொல்லிவிட்டாயல்லவா? இனி என்னிடம் விட்டுவிடேன். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்,'' என்றார் பிரகாசம்.

''நோ! நோ! ரெய்டின் போது நானும் இருக்க வேண்டும் சார். அந்தச் சமயத்தில் அந்தக் கௌரியம்மாளின் முகத்தை நான் பார்த்தாக வேண்டும்,'' என்று பிடிவாதம் பிடித்தேன்.

''ஆல்ரைட். சாயந்தரம் வருகிறேன் அங்கே. எங்கள் மந்திரி இன்று பிற்பகல்தான் டெல்லிக்குத் திரும்புகிறார். அதுவரை அவர் பின்னாலேயே நான் போய்க் கொண்டிருக்கவேண்டும்.''

''சாயந்தரமா?'' என்றேன் சிறிது ஏமாற்றத்துடன். ''சரி, எத்தனை மணிக்கு?''

''நாலு மணிக்கு என்று வைத்துக் கொள்ளேன்.''

''ஓகே!'' என்று அவரிடம் விடை பெற்றுக் கொண்டேன். என் உடம்பெல்லாம் உற்சாகம் பரவியிருந்தது. லிப்டைப் பயன்படுத்தாமல், வழுவழுப்பான மாடிப்படி கைப்பிடிகளைக் கீச்சென்று தேய்த்து ஓசைப்படுத்தியவாறே கீழே இறங்கி வந்தேன். எதிர்ப்பட்டவர்கள் என்னை வேடிக்கையாகப் பார்ப்பதைக்கூட லட்சியம் பண்ணவில்லை.

சாயந்தரம் நாலு மணிவரையில் அவகாசம் கொடுக்கப் பிரகாசம் தயாராயிருந்தாரே தவிர நான் 'ரிஸ்க்' எடுத்துக் கொள்ளத் தயாராக இல்லை. அதற்குள் கௌரியம்மாள் அந்த எஃகுப் பொருளை வேறெங்காவது அப்புறப்படுத்திவிட்டால் என்ன ஆவது என்று கவலை கொண்டேன். பங்களாவுக்குப் போய் அதற்குக் காவலிருப்பதெனத் தீர்மானித்தேன்.

நடுவில் ஐந்து நிமிடம் வனஜாவின் வீட்டில் எட்டிப் பார்த்தேன். குழந்தைக்கு விளையாட்டுக் காட்டிக் கொண் டிருந்தாள் வனஜா. ''நீ சொன்னபடியே ஆயிற்று, ஹேமா! பாபாவுக்கு ஒன்றுமேயில்லை. ஜோராய் விளையாடிக் கொண்டிருக்கிறான்,'' என்று அவள் சொன்ன போது அந்த முகத்தில் என்ன பரவசம்! எப்படிப்பட்ட நிம்மதி! இந்தக் குழந்தையிடம் அவள் எத்தகைய பாசம் கொண்டிருக்கிறாள்

என்ற வியப்பு மேலிட, ''இனிமேலும் ஒன்றுமிராது. கவலைப் படாமல் இரு. ராத்திரி வந்து விடுகிறேன்,'' என்று கூறிவிட்டுக் கிளம்பினேன்.

அவுட் ஹவுஸ் பூட்டிக் கிடந்தது. அம்மா பங்களாவில் வேலையாயிருக்கிறாள் என்று ஊகித்தேன். கொஞ்சமும் தயங்காமல் நானும் அங்கேயே போனேன்.

சிங்கத்தைக் குகையிலேயே பிடித்து அதன் வாலை முறுக்கிப் பார்த்து விடுவது என்ற உறுதி என் மனத்தில் நிரம்பியிருந்தது.

சமையலறை ஜன்னலிலிருந்து அம்மா என் வருகையைக் கவனித்துவிட்டாள் போலிருக்கிறது. எதிர் கொண்டு ஓடிவந்து, ''ஹேமா! இப்போதாவது உன் புத்தியில் உறைத்ததே? ரொம்ப சந்தோஷம். ஆனால் பங்களாவுக்கு வரவேண்டாம். அவுட் ஹவுசில் போய் இரு,'' என்று பதறினாள்.

''சும்மா இரு,'' என்று அவளை அடக்கிவிட்டு, ஹாலில் போடப்பட்டிருந்த சோபாவில் கால்மேல் கால்போட்டுக் கொண்டு உட்கார்ந்தேன்.

## 13

என்னுடைய ஆணவமான பேச்சையும், கால்மீது கால் போட்டுக் கொண்டு நட்ட நடு ஹாலில் உட்கார்ந்து கொண்ட செருக்கையும் கண்டு அம்மா பயந்து போனாள். வேகமாக உட்புறம் ஓடி, பக்கத்து அறைகளில் புகுந்து புகுந்து வெளி வந்து யாருமில்லையென்பதை உறுதிப்படுத்திக் கொண்டாள். அதே வேகத்தில் என்னிடம் திரும்பியோடி வந்து, கையைப் பிசைந்து கொண்டு, ''என்ன ஹேமா சொல்கிறாய் நீ? கௌரியம்மாள் எதற்காக மாட்டிக் கொள்ளப் போகிறாள் என்கிறாய்?'' என்றாள் படபடப்புடன்.

''கள்ளக் கடத்தல்!'' என்றேன் அழுத்தந்திருத்தமாக. ''வைரம், தங்கம், ரிஸ்ட் வாட்ச், துணிமணி இவைகளை யெல்லாம் வெளிநாடுகளிலிருந்து ரகசியமாய் இறக்குமதி செய்தால் நன்றாய்ப் பணம் பண்ணலாம். அந்த வித்தையில் உன் எஜமானி ஆனர்ஸ் டிகிரி வாங்கியிருக்கிறாள். கொஞ்ச நேரத்தில் கையும் களவுமாகப் பிடித்துத் தரப் போகிறேன். உன் கண்ணாலேயே பார்க்கப் போகிறாய்!'' என்று சொன்னதும் பத்திரகாளியாக மாறிவிட்டாள் அம்மா.

அவள் என் கையை இறுகப் பிடித்தபோது, எலும்புகளெல்லாம் முறிந்து பொலபொலவென்று விழுந்து விடும்போலாயிற்று. அவள் முகம் குங்குமத்தை அப்பினாற் போல் செக்கச் செவேலென்று சிவந்தது. பல்லைக் கடிக்கிற சப்தம் என் செவிக்குத் தெளிவாய்க் கேட்டது. ''இதோ பார், நீ மட்டும் அந்த மாதிரி ஏதாவது செய்தாயோ, உயிரோடு விட்டு வைக்கமாட்டேன் உன்னை! ஜாக்கிரதை! அரிவாள்மனை இல்லை, அரிவாள்மனை? அதாலேயே ஒரே வெட்டுதான்! ஆமாம்!'' என்றாள்.

''சாரதா!'' என்று ஓர் அதட்டல் பின்னாலிருந்து கேட்டது.

இருவரும் திரும்பினோம்.

கௌரியம்மாள்தான் வந்து கொண்டிருந்தாள் மாடியிலிருந்து.

''நீ ரொம்ப மோசம் சாரதா, ரொம்ப மோசம்!'' என்ற வண்ணம் அவள் எனக்குப் பக்கத்தில் வந்து நின்று கொண்டாள். அவள் கை என் தோளைத் தொட்டபோது, அதை அருவருப்புடன் உதறிவிட நினைத்தேன். பிறகு வாழ்க்கையில் சில விஷயங்களைப் பொறுத்துக் கொள்ளவும் வேண்டியது தான் என்று பேசாதிருந்தேன்.

எஜமானியம்மாள் எல்லாவற்றையும் கேட்டு விட்டாளா இல்லையா என்பதை ஆழம் பார்க்க விரும்பிய

அம்மா, "பாருங்களேன் பின்னே இவளை? ஏதாவது கன்னா பின்னாவென்று பேசிக்கொண்டிருக்கிறாள்!" என்றாள்.

"நீ அவளை நடத்துகிற விதத்துக்கு அவள் உன்னிடம் இவ்வளவு மரியாதை காட்டுவதே பெரிது!" என்றாள் கௌரியம்மாள். "வீட்டுக்குள் பூட்டி வைத்தால்கூட இருக்க மாட்டேன் என்று போய் விடுகிறாளே! ஏன் என்று ஒரு நாளாவது யோசித்துப் பார்த்தாயா? ஊம்!"

எனக்கு அவளுடைய கரிசனத்தைக் காண அடிவயிற்றில் பற்றிக் கொண்டு வந்தது. ஏதோவொரு தந்திரம் செய்து என்னைக் கைக்குள் போட்டுக் கொள்ளப் பார்க்கிறாள் என்று முடிவு செய்தேன்.

"நீ சாப்பிட்டாயிற்றா ஹேமா?" என்றாள் கௌரியம்மாள்.

"இன்னும் இல்லை," என்றேன். மனத்துக்குள், உன்னை உன்னுடைய ஆட்டத்திலேயே தோற்கடிக்கிறேன் இரு!' என்று சொல்லிக் கொண்டேன்.

"சாரதா, மணி ஒன்றாகப் போகிறது. நீ போய் டைனிங் ஹாலில் எல்லாம் தயார் செய். உன் பெண் இன்று என்னோடேயே சாப்பிடப் போகிறாள்!" என்றாள் கௌரியம்மாள். "என்ன ஹேமா, உனக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லையே?" என்றாள் என்னிடம்.

"நோ நோ," என்று போலியாய்ச் சிரித்தேன்.

"அப்பாடா! இத்தனை நாளில் இப்போதுதான் உன் முகத்தில் சிரிப்பைப் பார்க்கிறேன்," என்றாள் அவள். "உலகத்தில் ஒரு பெரிய துரதிர்ஷ்டம் பார், யாரெல்லாம் சிரித்தால் அழகாயிருக்குமோ அவர்கள் சிரிப்பதில்லை. யாரெல்லாம் சிரித்தால் அழகாயிருக்காதோ அவர்கள் சிரிக்கிறார்கள்! அதிருக்கட்டும். வெராந்தா கடைசியில் பாத்ரூம். வாஷ் பேசின் எல்லாம் இருக்கிறது! கை முகமெல்லாம் கழுவிக் கொண்டு வா, சாப்பிட்டுக் கொண்டே பேசலாம்."

என் சந்தேகம், நானும் கௌரியம்மாளும் சாப்பிட்டுக் கொண்டிருக்கும் சமயத்தில் அந்த எஃகுப் பார்ட்டை ரகசியமாய் அப்புறப்படுத்திவிடத் திட்டமிட்டிருக்கிறாள் என்பதே. அதை எப்படித் தடுப்பது அல்லது கண்காணிப்பது?

யோசித்துக்கொண்டே கை கழுவும் அறைக்குள் நுழைந்தேன்.

வாஷ் பேசினுக்காகத் தொங்கிக் கொண்டிருந்த துவாலையில் முகத்தைத் துடைத்துக் கொண்டிருந்தான் ஹரி.

என் இதயம் குளிர்ச்சியுற்றது.

தொழிற்சாலையின் ராட்சச இரைச்சல்களுக்கு நடுவே ஒரு புல்லாங்குழலின் மெல்லிய இசையைக் கேட்டாற்போல, தீப்பற்றி எரிகின்ற வீட்டின் நடுவே அழகிய ஓவியமொன்றைக் கண்டாற்போல, என்னுடைய குரோதங்களுக்கும் குமுறல் களுக்கும் நடுவே ஹரி என்ற மென்மையான நினைவுக்கும் இடமுண்டு என்று என்னை நானே புரிந்து கொண்டபோது மனத்தில் ஒரு நெகிழ்ச்சி பிறந்தது.

''ஹரி!'' என்று நான் குரல் கொடுத்ததும், புசுபுசுவென்ற துவாலையிலிருந்து பாதி முகத்தை மேலெடுத்து என்னை நோக்கினான். நெற்றியின் மேலே கிராப்புச் சுருள்களின் நுனிகளிலும் இடுக்குகளிலும் முத்து முத்தாய் ஒட்டிக் கொண்டிருந்த நீர்த் துளிகள் எண்ணற்ற வண்ணங்களில் சிரித்தன. அவன்மீது ஏற்பட்டிருந்த கோபம் மாறைந்து விட்டது.

''வணக்கம் மிஸ் நாட் நாட் ஸெவன்!'' என்று புன்னகை செய்தவன், ''என்ன? கிளைமாக்ஸ் கட்டம் வந்துவிட்டாற் போலிருக்கிறது! அக்காஸ்வைப் பிடித்தாயிற்றா, இனிமேல் தானா?'' என்றான்.

ஹரி! நீ அந்த ஒரு வாக்கியத்தைச் சொல்லி, நான் வந்துள்ள காரியத்தை நினைவூட்டாமலே இருந்திருக்கக் கூடாதா? என்னை என்னுடைய போதையான எண்ணங்

களிலே தோய்ந்து கிடக்க ஒரே ஒரு நிமிடமாவது கொடுத்திருக்கக் கூடாதா?

நான் என் நோக்கத்துக்குத் திரும்பினேன். ''ஹரி, உன்னால் ஓர் உதவி ஆக வேண்டும்,'' என்றேன்.

''என்னை மன்னித்துவிட்டாய் என்று தெரிகிறது. என்ன உதவி, சொல்லு,'' என்றான்.

''குற்றவாளியும் போலீஸ்காரரும் இப்போது சேர்ந்து அமர்ந்து விருந்து உண்ணப் போகிறார்கள். அதாவது உங்கள் அக்காவும், நானும்,'' என்றேன். ''நிஜம்தான். என்மீது அலாதி அன்பு காட்டி, தன்னோடு சாப்பிடும்படி அழைத்திருக்கிறார்கள் எஜமானியம்மாள். ஆனால் அந்த நேரத்தில் அந்தக் கடத்தல் பொருள் சாமர்த்தியமாய் அப்புறப்படுத்தப் பட்டுவிடுமோ என்று எனக்குப் பயம்...''

''ஊம்?'' என்று ஹரி என்னை ஊக்கினான்.

''அந்த ஸ்டீல் பார்ட் வெளியேறி விடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். அப்படியே வெளியேறினாலும் எங்கே போகிறது என்பதைக் கவனித்து வைத்துக்கொள்ளுங்கள்.''

ஹரி, தன் கால்களின் ஈரத்தைத் துடைத்துக் கொள்ளும் சாக்கில் பார்வையைத் தாழ்த்திக் கொண்டான். ''என்னை மன்னித்துக் கொள், ஹேமா,'' என்றான் குரலையும் தாழ்த்திக் கொண்டு. ''உன் அட்வெஞ்சர்களில் என்னால் தொடர்ந்து பார்ட்னராக இருக்க முடியாது. அக்கா குற்றவாளியா, இல்லையா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாதிருந்தாலும், என்னாலான உதவிகளை இதுவரை உனக்குச் செய்து விட்டேன். உப்பிட்டு வளர்த்தவளுக்குத் துரோகம் செய்வதில் ஒரு லிமிட் இருக்க வேண்டுமில்லையா?''

அவன் போய் விட்டான்.

நான் யோசனையுடன் கைகளைக் கழுவிக் கொண்டேன். அவன் துடைத்துக் கொண்ட துவாலையின் ஈரத்தை என் முகம் ஸ்பரிசித்த போது, சில்லென்று ஓர் உண்மை உறைத்தது.

என்னை நானே 'அடி பைத்தியக்காரி!' என்று சொல்லிச் சிரித்துக் கொண்டேன். 'கார் ஷெட்'டில் இதே ஹரி தன் அந்தரங்கங்களையெல்லாம் திரட்டி உன் காலடியில் கொட்ட முனைந்தபோது எப்படிப்பட்ட சூட்டுக்கோலால் அவன் முகத்தைத் தீய்த்தாய்! இப்போது 'மறந்துவிடு' என்று நீ கட்டளையிட்ட மாத்திரத்தில் அந்தத் தழும்பையும் ரணத்தையும் பூ என்று ஊதியெறிந்துவிட்டு ஓடிவந்து விடுவானா உனக்கு உதவி செய்ய!' என்று என் மனம் நகைத்தது. அந்த எண்ணம் உதித்ததும் எனக்கு ஹரியின் மீது கோபமே வந்தது. 'எனக்கு அற்ப உதவி செய்வதற்காக எவ்வளவு பெரிய கூலியை எதிர்பார்த்திருக்கிறான் இவன்!' என்ற நினைப்புடன், 'இவனிடம் போய் உதவி கேட்டோமே!' என்று வருத்தமும் கொண்டேன்.

''பரிமாறுங்களேன்,'' என்று கௌரியம்மாள் கட்டளையிட என் அம்மாவே எங்கள் இருவருக்கும் பரிமாறத் தொடங்கினாள்.

ஜன்னல் வழியாக வாசலையே நான் நோக்கிக் கொண்டிருந்தேன். நல்ல வேளையாக, நான் உட்கார்ந்திருந்த இடத்திலிருந்தே வாசலைக் கண்காணிக்க முடிந்தது.

பளபளவென்று மின்னும் வெள்ளித் தட்டுக்களும் எவர்சில்வர் பாத்திரங்களும் மேசை மீது கொலுவீற்றிருந்தன.

''புதிய இடம் எப்படி இருக்கிறது? நான் அங்கே வந்திருந்தபோது உன்னைக் கவனிக்காமலில்லை. ஆனால் உன்னைத் தெரிந்ததாகக் காட்டிக் கொண்டால் உனக்குப் பிடிக்குமோ பிடிக்காதோ என்றுதான் பேசாதிருந்தேன்,'' என்று கௌரியம்மாள் பேச்சுக் கொடுத்தாள்.

என்னை வேலைக்கு வைத்துக் கொள்ளாதே என்று அங்கே சொல்லிவிட்டு இங்கே என்ன அருமையான நாடகம்! ''வேலையொன்றும் அதிகமில்லை. டெலிபோன்

ஆபரேட்டராகப் போட்டால் ஒருகால் அதிகமிருக்கலாம்,' என்றேன்.

''பிட்ளை போட்டுக் கொள்ளவில்லையே! ரொம்ப நன்றாக இருக்கிறது,'' என்று கூறிய கௌரியம்மாள், தூக்கிலிருந்து தானே எடுத்து - அம்மா சட்டெனக் கை நீட்டி எடுக்க வந்ததைக்கூடக் கவனிக்காத மாதிரி - என் தட்டில் வட்டித்தாள்.

சாதத்துடன் பிசைந்து ஒரு விள்ளல் வாயில் போட்டுக் கொண்டேன். விசுக்கென்று ஒரு விக்கல் வந்தது.

அதே வினாடி ஒரு பயங்கரமான சந்தேகம் என்னுள் முளைத்தது. முளைத்த கணத்திலேயே கிடுகிடுவென்று கிளைத்துப் படர்ந்து தலைவிரித்தாடியது.

சாப்பாட்டில் என்ன கலந்திருப்பாளோ யார் சொல்ல முடியும்?

''பிட்ளை அவ்வளவு உறைப்பாகவா இருக்கிறது! ஏன் உனக்கு விக்கலெடுக்கிறது?'' என்று சொல்லிக் கொண்டே கரண்டியில் கொஞ்சம் எடுத்து வாயில் போட்டுக் கொண்டு பார்த்தாள் கௌரியம்மாள். ''அப்படியொன்றும் காரமாய் இல்லையே?'' என்று அவள் கூறியதும் என் சந்தேகம், பயமும் ஆதாரமற்றவை எனக் கண்டுகொண்டேன்.

சாப்பாடு முடிந்ததும், ''இன்றைக்கு லீவு போட்டு விட்டாய் இல்லையா? வா, என் ரூமுக்குப் போகலாம். கொஞ்ச நேரம் கார்ட்ஸ் ஆடலாம்,'' என்றாள் கௌரியம்மாள்.

தன் பார்வையிலிருந்து நான் விலகிப் போய் விடாதபடி பிடித்து வைத்துக் கொள்கிறாள் என்று நான் புரிந்து கொண்டேன். அதையே நானும் செய்ய விரும்புகிறேன் என்று ஏன்தான் அவளுக்குத் தெரியவில்லையோ!

அம்மா மறுபடியும் தன் பார்வையினாலேயே இறைஞ்சினாள், 'பதவிசாக நடந்துகொள்,' என்று சொல்கிற

மாதிரி. 'எதற்கும கவலைப்படாதே' என்று நானும் விழிகளாலேயே பதில் கொடுத்துவிட்டு, கௌரியம்மாளைப் பின்தொடர்ந்து சென்றேன்.

இரவில் நான் பார்த்த அதே படுக்கையறைதான். இப்போது பிற்பகல் வெளிச்சத்தில் பார்க்கும்போது ஒரு பழங்கால ஜமீன்தாரிணியின் அறைக்குள் பிரவேசித்த மாதிரி இருந்தது. நவீன காலத்து அலமாரிகளோ கட்டில்களோ இல்லாமல், வேலைப்பாடமைந்த மர பர்னிச்சர்களாகவே இருந்தன அறையெங்கும். அதனாலேயே அடைசலும் அதிகமாகத் தோன்றியது.

''இது உனக்குப் பாந்தமாக இருக்கிறதா பார்,'' என்று பெரிய பீரோவைத் திறந்து ஒரு டிஷ்யூ புடைவையை எடுத்து வந்தாள் கௌரியம்மாள். ''நேற்றுதான் அனுப்பியிருக்கிறார் தியாகராயநகர் கடைக்காரர். எனக்கென்னவோ சிறு வயதுக்காரர்கள் கட்டிக் கொண்டால் நன்றாயிருக்கும் என்று தோன்றியது. திருப்பிவிட நினைத்திருந்தேன்...''

என் தோள்மீது அந்தப் புடைவையை மேலோடு பிரித்துத் தொங்கவிட்டாள். நான் முகம் சுளித்தேன்.

''உன் நிறத்துக்கும் உடம்புக்கும் ரொம்ப நன்றாய் மாட்ச் ஆகிறது ஹேமா. வைத்துக்கொள். இங்கே நீ வந்ததற்கு ஞாபகார்த்தமாக இருக்கட்டும்.''

''வேண்டாம். தாங்ஸ். ஞாபகார்த்தமாக வேறு எவ்வளவோ இருக்கிறது'' என்று புன்சிரிப்புடன் கூறினேன். ''என் அந்தஸ்துக்குப் பொருத்தமில்லாத இது எதற்கு?''

''அந்தஸ்து என்ன ஹேமா பிரமாதம்! எந்த முட்டாளாலும் நாலு காசு சேர்த்துவிட முடியும். ஐந்தாகச் சேர்த்து விட்டால் அந்தஸ்தும் வந்துவிடுகிறது,'' என்றாள் கௌரியம்மாள்.

நான் புடைவையை ஒழுங்காக மடித்துக் கட்டில்மீது வைத்தேன். தலைமாட்டிலேயே ஒரு முக்காலியின் மீதிருந்தது சீட்டுக்கட்டு. எடுத்து வந்து வட்ட மேஜையின் மேல் வைத்துக் கலைக்கலானேன்.

மூன்றே முக்காலுக்குக் காலடியோசை கேட்டது. ஆவலுடன் பார்த்தேன்.

வந்தவள் அம்மாதான்.

கோபத்துடன் பொத்தென்று சீட்டுக்கட்டை மேஜைமீது போட்டாள் கௌரியம்மாள். ''உன் பெண்ணை எங்காவது கடத்திக்கொண்டு போய்விடுவேன் என்று பார்க்க வந்தாயாக்கும்? இல்லை, கடித்துத் தின்றுவிடுவேன் என்று நினைத்தாயா?'' என்று அவள் சீறிய போது அம்மா நடுங்கிப் போனாள்.

''இல்லை... டீ கொண்டு வரலாமா என்று கேட்கத்தான் நான் வந்தேன்...'' என்று தடுமாறினாள்.

''அதைக் கேட்பதற்காக ஒரு தடவை வர வேண்டுமாக்கும்? எல்லாம் எடுத்து வா,'' என்று உறுமினாள் கௌரியம்மாள்.

ஏற்கெனவே பதற்ற நிலையில் இருந்த எனக்கு ரத்தம் கொதிக்கத் தொடங்கியது. எப்படித்தான் பேசாதிருந்தேனோ!

அம்மா தடதடவென்று கீழிறங்கிப் போனாள். எறிந்த சீட்டுக்களைத் திரும்ப எடுத்துக் கொண்ட கௌரியம்மாள், ''ஸாரி,'' என்று என்னைப் பார்த்துச் சிரித்தாள். ''உன் அம்மாவைச் சொல்லிவிட்டேனே என்று தப்பாக நினைக்காதே ஹேமா. நடுநடுவில் இப்படியொரு அதட்டல் போட்டால்தான் அவள் நிதானத்துக்கு வருவது வழக்கம். இல்லாவிட்டால் காரணமில்லாமல் ஒரு பதைப்பு, ஒரு தவிப்பு, ஒரு முழிப்பு! சட்!''

என் குமுறலை நானும் சிரிப்பால் மறைத்துக்கொண்டு ஆடத் தொடங்கினேன்.

படுக்கையறையிலிருந்த பிங்பாங் கடிகாரம் நாலு அடித்தது. அதே சமயம் ஒரு கார் சர்ரென்று உள்ளே வருவதைக் கண்டேன். தோட்டத்தின் வளைவில் திரும்பிப் போர்ட்டி கோவில் நின்றுவிட்டதால், வந்தவர் யார் என்பது தெரிய வில்லை. இருந்தாலும், பிரகாசம்தான் என்று நிச்சயமாகப் புரிந்து கொண்டேன். நாலு என்றால் நாலுக்கு வந்துவிட்டாரே!

அதே சமயம் அம்மா ஒரு டிரேயைத் தூக்கமாட்டாமல் தூக்கிக் கொண்டு அறைக்குள்ளே வந்தாள். டீத்தூள், பால், கொதிக்கும் வெந்நீர், சர்க்கரை முதலியன அதில் இருந்தன.

அறையின் தரையில் விரிக்கப்பட்டிருந்த சிவப்புக் கம்பளம் ஒரு முனையில் சற்றே தூக்கிக் கொண்டு நின்றது போலும். அம்மாளின் காலை அது தடுக்கவே, ஒரு வினாடி சாய்ந்துவிட்டாள்.

கொதிக்கும் வெந்நீர் ஜக் சட்டென்று கவிழ்ந்து காலில் சுரீரென்று கொட்டியது.

கண் இமைப்பதற்குள் நான் போய்த் தாங்கிக் கொண்டிராவிட்டால் 'டிரே' மொத்தமும் கவிழ்ந்திருக்கும்.

''ஒன்றுமில்லை, ஒன்றுமில்லை,'' என்றாள் அம்மா. ஆனால் வெந்நீர் அவள் பாதத்தை வதங்க வைத்துவிட்டதைக் கண்டேன்.

''சாரதா! அறிவில்லை உனக்கு?'' என்று பாய்ந்தாள் கௌரியம்மாள்.

அவ்வளவுதான். வந்ததே ஆங்காரம் எனக்கு. ''ஆமாம் கௌரியம்மா! அறிவிருந்தால் அவள் ஏன் இந்தச் சமையற்காரி வேலைக்கு வந்து திண்டாடுகிறாள்? ஜம்மென்று உங்களைப் போலக் கள்ளக்கடத்தல், திருட்டு வியாபாரங்களில் ஈடுபட்டு

உங்களைப் போலவே லட்சாதிபதியாக ஆகியிருக்க மாட்டாளா?'' என்று சொல்லிவிட்டேன்.

''என்ன! என்ன சொன்னாய்?'' என்றாள் கௌரியம்மாள். அதற்குள் என் அம்மா குறுக்கிட்டு, ''வேண்டாம், வேண்டாம். அவள் ஏதோ அறியாப் பெண். அறியாத்தனமாய்ச் சொல்கிறாள்,'' என்றாள்.

நான் அவளைத் தடுத்து, ''நான் அறிந்த பெண்தான் அம்மா. அறிந்துதான் சொல்கிறேன். ஒரு நிமிடம் முன்னால் கீழே காரில் வந்திருக்கிறார் பிரகாசம். அவரை அழைத்துவா. உன் எஜமானியம்மாளின் கள்ளக் கடத்தல் பொருளைக் கண் முன்னால் அவரே காட்டுவார்,'' என்றேன்.

கௌரியம்மாளின் முகம் வெளிறியது. ''பிரகாசமா கீழே வந்திருப்பவர்... நான் சொன்ன... இரு...'' என்றவள் மாடிப்படியருகே சென்று, ''யார் அங்கே?'' என்று குரல் கொடுத்தாள்.

''நான்தான். வருவதாகச் சொல்லியிருந்தேனே?'' என்று சொன்னவாறு தலைப்பாகையும் கோட்டும் அணிந்த ஒரு பெரியவர் படியேறி வந்தார். அவர் பின்னாலேயே ஓர் இளைஞனும் வந்தான்.

வந்தவர் பிரகாசம் இல்லையா? சட்டென டெலிபோனை எடுத்தேன். பிரகாசத்தைக் கூப்பிட்டேன்.

''மிஸ்டர் பிரகாசம் பாண்டிச்சேரி போய் விட்டாரே - இன்று பகல் பன்னிரண்டு மணிக்கு?'' என்று பதில் கிடைத்தது.

''ஓகோ, திடீரென்று ஏதாவது வேலையா...'' என்றேன்.

''அவர் மைத்துனனுக்கு நாளைக்குக் கல்யாணம். இன்றைக்குப் புறப்படவேண்டுமென்று ஒரு மாதமாய் ஏற்பாடாயிற்றே!''

பட்டென்று டெலிபோனை வைத்தேன்.

அதற்குள் கௌரியம்மாள் அந்தத் தலைப்பாகைக் காரரிடம் ''நல்ல சமயத்துக்குத்தான் நீங்கள் இருவரும் வந்தீர்கள் சார். இந்தப் பெண் ஏதோ சொல்கிறாள் கேளுங்கள்,'' என்றாள்.

''என்னம்மா விஷயம்? ஏன் இப்படியெல்லாம் கலாட்டா செய்கிறாய்? பார்ப்பதற்கு நல்ல பெண்ணாகத் தோன்றுகிறாயே?'' என்றார் பெரியவர் அமைதியாக.

நான் அமைதிக்கு வெகுதூரத்தில் இருந்தேன். ''கலாட்டா செய்யவில்லை, பெரியவரே! கள்ளக் கடத்தல் களைக் கண்டுபிடிப்பதற்காக வந்திருக்கிறேன்,'' என்று கூறி அடுத்த அறைக்கு நடந்தேன்.

''ஹேமா!'' என்று என் கைகளைப் பிடித்தாள் அம்மா முரட்டுத்தனமாய். ''விடம்மா,'' என்று உதறிவிட்டு முன்னேறினேன்.

அந்த எஃகுக் கருவி பளபளவென்ற வெண்மையுடன் அறையின் மூலையில் இருந்தது.

''அதற்குள் வைரம் இருக்கிறதா, தங்கக் கட்டி இருக்கிறதா, ரிஸ்ட் வாட்ச் இருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் கள்ளக் கடத்தல் பொருள் ஏதோவொன்று இருக்கிறது'' என்றேன் அழுத்தமாக. நால்வரும் என்னையே பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

''இதிலா?'' என்று அந்த எஃகுப் பொருளை நோக்கிச் சென்றாள் கௌரியம்மாள். சிரமத்துடன் புரட்டினாள். நகர்த்தினாள்.

இரும்புக் கம்பி யொன்றை எடுத்து வந்து குழாய்களின் ஓட்டைகளுக்குள் குத்தினாள். தட்டினாள். மறுபடியும் புரட்டிக் கவிழ்த்தாள்.

''இங்கே வந்து காட்டம்மா ஹேமா. எந்த இடத்தில் என்ன ஒளித்து வைத்திருக்கிறது? சொல் பார்க்கலாம்!'' என்று என்னை அழைத்தாள்.

திகைப்புடன் அருகில் சென்றேன். அணு அணுவாக ஆராய்ந்தேன். அதற்குள் எதையும் ஒளித்திருக்க முடியாது. அப்படிப்பட்ட வார்ப்படம் அது. இடுக்குகளிலும் துவாரங்களிலும் எதையும் காணோம்.

''இவள் என்மீது மிகப் பயங்கரமான குற்றச்சாட்டு சுமத்தியிருக்கிறாள். அதற்கு நீங்களும் உங்கள் ஜூனியரும் சாட்சி. இல்லையா வக்கீல் சார்?'' என்றாள் கௌரியம்மாள்.

''ஆமாம் அம்மா'' என்றார், அந்தத் தலைப்பாகைப் பெரியவர்.

## 14

ஒரே சமயத்தில் இரண்டு அதிர்ச்சி எனக்கு ஏற்பட்டது.

நான் பெரிதும் நம்பிக் கொண்டிருந்த அந்த எஃகுப் பொருளுக்குள் கடைசியில் ஒன்றுமேயில்லை.

இரண்டாவதாக, பிரகாசம்தான் டாணென்று நாலு மணிக்கெல்லாம் வந்துவிட்டார் என்று நினைத்திருக்க, வந்தவர் வேறு யாரோ ஒருவர் என்பதோடல்லாமல், கௌரியம்மாளின் வக்கீல் என்று வேறு தெரிகிறது.

அந்த அறையெங்கும், மாடியெங்கும், தோட்டமெங்கும், உலகமெங்கும் பயங்கரமான நிசப்தம் ஏற்பட்டுவிட்டாற்போல இருந்தது எனக்கு. உணர்ச்சி வசப்பட்டிருந்ததாலும், குழம்பிப் போனதாலும் என் மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளும் ஓசையை நானே கேட்க முடிந்தது. சகல ஜீவராசிகளும் ஸ்தம்பித்து ஊமையாகிச் சலனமற்று நின்றுவிட்ட அந்த ஒரு வினாடிக்குள் என்னை நானே ஆராய்ந்து கொண்டேன். தோல்வியிலே துவளுகிறவள் - முதல் ஏமாற்றம் கண்ணில் பட்டவுடனேயே சுருண்டு விழுகிறவள் - இந்த ஹேமா அல்ல என்று சொல்லிக் கொண்டேன். என்

உடம்பு அமைப்பை, மன அமைப்பை, அப்படித்தான் படைத்திருக்கிறான் ஈசன். சீண்டச் சீண்டச் சீறுகின்ற சர்ப்பத்தைப்போல, அடிவிழ அடிவிழ செஞ்சிவப்பை உமிழ்கின்ற உலையிரும்பைப்போல, தோற்கத் தோற்கத் திமிர் கொண்டு மோதுகிறவளாய் இந்த ஹேமா படைக்கப் பட்டிருக்கிறாள். அதற்கு யார் என்ன செய்ய முடியும்?

பல ஜோடிக் கண்கள் என்னையே பார்த்துக் கொண் டிருப்பதை உணர்ந்தேன். அந்தக் கண்களில் எக்காளத்தை. ஏளனத்தை, அனுதாபத்தை, பரிதாபத்தை, திகைப்பை, அச்சத்தை - எல்லாவற்றையும் கண்டேன். எப்படி அந்தத் திறமை எனக்கு வந்ததோ எனக்குச் சொல்லத் தெரியவில்லை - ஆனால் அந்த இடத்தில், அந்த வேளையில், ஒவ்வொரு நபரின் உள்ளத்தினுள்ளும் என்ன வகையாக எண்ணங்கள் ஓடுகின்றன என்பதைப் புத்தகம் படிக்கிற மாதிரி என்னால் படிக்க முடிந்தது.

கௌரியம்மாள் விலகி நின்றிருந்தாள். டெக்ஸ்டைல் யந்திரத்தில் ஒரு பகுதி என்று சொல்லப்பட்ட அந்த இரும்புப் பார்ட், எல்லாக் கூத்தையும் ரசித்தவாறு நட்ட நடுவே அப்படியே கிடந்தது. என் பங்குக்கு நானும் ஒரு முறை அதை ஆராய்ந்து பார்த்தேன். புரட்டுவதற்குக் கனமாயிருந்த அதை நானே பரீட்சை செய்தேன். தட்டியும், ஆட்டியும், குலுக்கியும் பரிசோதித்தேன். அதற்குள் எதுவும் இப்போது இருக்க வில்லை என்பது உறுதியாகிவிட்டது. ஆனால் எதுவும் இருந்திருக்க முடியாது என்றும் சொல்வதற்கில்லை. கடந்த இருபத்து நாலுமணி நேரத்துக்குள் தாராளமாய் அப்புறப் படுத்தியிருக்கலாமே!

''என்னவோ பித்தலாட்டம்,'' என்றேன் வெறுப்புடன்.

மொத்தையாக மொய்த்துக் கொண்டிருக்கும் எறும்பு கள், ஒரு தட்டுத் தட்டியதுமே பரபரவென்று சிதறிக் கலைந்து ஓடுமே, அதுபோல, சூழ்நிலையிலிருந்த மௌனத்தை என் பேச்சு உடைத்தது.

''போதும் ஹேமா! நிறுத்து, உன் அமர்க்களங்களை!'' என்று அம்மா ஆங்காரத்துடன் ஓடிவந்து என் கைகளை முறுக்கினாள். அந்த முறுக்கலுடன் கூடவே, என்னைப் பரிதாபமாகக் கெஞ்சுவதற்கு அடையாளமாக மணிக் கட்டருகே அழுத்திச் சாடையும் காட்டினாள்.

நான் கையை உதறி விடுவித்துக் கொள்வதற்குள் கௌரியம்மாள், ''விடு அவளை, சாரதா,'' என்று அம்மாவை விலக்கிவிட்டாள். பிறகு என்னை நோக்கி, ''எதைப் பித்தலாட்டம் என்கிறாய், ஹேமா? ஆத்திரப்படாமல் மெதுவாய்ப் பேசு,'' என்றாள்.

''இங்கே நடக்கிற ஒவ்வொரு காரியமும் பித்தலாட்டம் தான். வேறு என்ன?'' என்றேன். ''ஸ்மக்ளிங் மூலம் வந்த பொருளை அப்புறப்படுத்திவிட்டு, ஒன்றுமே தெரியாத மாதிரி பாசாங்கு செய்வது; வக்கீலைத் தயாராய் வரவழைத்து வைத்துக்கொண்டு மிரட்டுவது...''

''இந்தாம்மா, கொஞ்சம் இரு,'' என்று சொல்லிக் கொண்டு அந்த வக்கீல் முன்வந்தார். ''உன்னைக் காட்டிலும் மூன்று மடங்கு வயசிலே பெரியவன் நான். அறிவிலேயும் ஏதோ கொஞ்சம் பெரியவனாக இருக்கக்கூடும். அந்த முறையிலும், சட்டம் தெரிந்தவன் என்கிற முறையிலும் சொல்கிறேன்- கன்னாபின்னாவென்று வார்த்தைகளை விடாதே.''

''உங்கள் அட்வைசுக்கு ரொம்ப நன்றி, சார்,'' என்றேன் கிண்டலாக.

அதைப் புரிந்து கொண்ட வழக்கறிஞர், ''என்னைத் தயாராக வரவழைத்ததாகச் சொன்னாயே, அது தப்பு என்று தெரிந்துகொள். உன்னிடம் எதுவும் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. இருந்தாலும் சொல்கிறேன். கொடைக் கானலிலே ஓர் எஸ்டேட் வாங்கவிருக்கிறார் கௌரியம்மாள். அதன் ஸேல் டீடைப் பரிசீலனை செய்வதற்காக இன்று நாலு

மணிக்கு வரச்சொல்லியிருந்தார். வந்தேன். மற்றப்படி உன்னைப் பற்றி எனக்கு எதுவும் இந்த நிமிடம்வரை தெரியாது.''

கௌரியம்மாள் சிரித்துக்கொண்டே, ''அதுதான் இப்போது நிறையத் தெரிந்து கொண்டுவிட்டீர்களே,'' என்று சொல்லிவிட்டு அறைக்கு வெளியே சென்றாள். உடனேயே, ''இருங்கள் எல்லோரும் அப்படியே,'' என்று அவளுடைய உரத்த குரல் கேட்டது. யாரிடம் அவள் அப்படிச் சொல்கிறாள் என்பதை, அறைக்குள்ளிருந்த என்னால் காண முடியவில்லை.

திரும்பவும் உள்ளே வந்து, ''கள்ளக்கடத்தல் என்று ஏதேதோ என்னைப்பற்றிச் சொன்னாயே, அது தவறென்று ஒப்புக் கொள்கிறாயா?'' என்று கேட்டாள்.

''தவறுதான், தவறுதான்,'' என்று நான் கூறவில்லை. அம்மாதான் பாவம், சிறகொடிந்த கிளிப்பிள்ளைபோல் கத்தினாள். பிறகு என் கன்னங்களை இரு கைகளாலும் ஏந்திக் கொண்டு, ''தெரியாமல்தானே அப்படிச் சொல்லிவிட்டாய்? இல்லையா ஹேமா? அப்படித்தானே? என் கண்ணல்ல?'' என்று கெஞ்சினாள்.

அவளைப் பொருட்படுத்தாமல், ''ருசுப்பிக்க முடியவில்லை என்பதால் குற்றமில்லை என்று ஆகிவிடாது,'' என்றேன் நான் விடாப்பிடியாக.

கௌரியம்மாளின் முகம் சிவந்தது. ''அதாவது நான் கள்ளக்கடத்தல் செய்கிறவள்தான் என்கிறாய்?''

''ஆமாம்,'' என்றேன்.

''வேண்டாம் ஹேமா,' என்றாள் அம்மா.

''விவரம் தெரியாத பெண்ணாயிருக்கிறாளே! உங்கள் மகளா?'' என்று அம்மாவிடம் கேட்டார் வக்கீல்.

''நான் செய்த பாவம் எனக்குப் பெண்ணாய்ப் பிறந்திருக்கிறது,'' என்று பதில் கூறினாள் அம்மா.

கௌரியம்மாள் இமைகொட்டாமல் என்னையே பார்த்துக் கொண்டு நின்றாள். பிறகு மறுபடி அறைக்கு வெளியே போய் நின்றுகொண்டு "ஹேமா, இப்படி வா. இங்கு வந்து பார்," என்றாள்.

என்ன சொல்கிறாள் என்பது புரியாமல் வெளியே சென்று பார்த்தேன்.

வெராந்தாவின் பல இடங்களில் பலபேர் நின்று கொண்டிருந்தார்கள். மாடிப் படிக்கட்டில் நின்றுகொண்டே எட்டிப்பார்க்கும் சில தலைகளும் தென்பட்டன. வேலைக்காரர்கள், வேலைக்காரிகள், தோட்டக்காரர்கள், டிரைவர், அவனுடைய குடும்பத்தினர், இப்படிப் பல பேர், பல இடங்களில் நின்று கொண்டிருந் தார்கள். சற்றுமுன்பு, "எல்லாரும் அப்படியே இருங்கள்," என்று கௌரியம்மாள் சொன்னது இவர்களிடம்தான் என்று புரிந்துகொண்டேன்.

"பார்த்தாயா?" என்றாள் அம்மாவின் எஜமானி. "நன்றாகப் பார்த்துக்கொள். இவ்வளவு பேரும், இத்தனை நேரமாக இங்கேதான் நின்று கொண்டிருக்கிறார்கள். இவர்களையும்கூட நான் தயாராகக் கூப்பிட்டு வைத்திருந்தேன் என்று சொல்லாதே. எஜமானியம்மாளின் மானம் போகிறாற் போல் ஏதோ நடக்கப் போகிறதென்று எதிர்பார்த்து, ஆசையோடு, ஆவலோடு வந்து நின்றிருக்கிறார்கள்..."

"இல்லீங்கம்மா..." என்று தோட்டக்காரன் ஏதோ சொல்ல முயன்றான்.

"பயப்படாதே, பயப்படாதே. உங்களை ஒன்றும் தண்டிக்கப் போவதில்லை." என்று அமைதியாகவே சொல்லி அவனை அடக்கினாள் கௌரியம்மாள். "என்ன சொல்கிறாய் ஹேமா? இவ்வளவு பேர் பார்த்துக் கொண்டிருக்க, கேட்டுக் கொண்டிருக்க, என்னைக் கள்ளக் கடத்தல் செய்கிறவள் என்று சொல்லியிருக்கிறாய்! புரிகிறதா இதன் ஸீரியஸ்னஸ்?"

''கிடக்கிறாள் விடுங்கள்,'' என்று வழக்கறிஞர் எனக்காகப் பரிந்து கொண்டு பேசினார்.

''விட்டுவிடாமல் இந்தச் சின்னப் பெண்மேலே கேஸா போடப் போகிறேன்?'' என்றாள் கௌரியம்மாள். ''தொலை கிறது என்று விட்டுவிடுகிறேன். ஆனால் இவ்வளவு பேருக்கு முன்னால் இவள் இழைத்த அவமானத்துக்கு இவளே மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும்.''

''ஒருநாளுமில்லை,'' என்றேன் சீறிவந்த சினத்துடன்.

''மன்னிப்புக் கேட்பது என்றால் காலில் விழ வேண்டுமென்று அர்த்தமில்லை. 'ஸாரி' என்று சொல்லேன். போதும்,'' என்று வக்கீலின் ஜூனியர் முதல் தடவையாக வாய் திறந்து பேசினார். பிறகு அப்படிப் பேசியது சரிதானோ இல்லையோ என்று பயந்தவராக ஸீனியரின் முகத்தைப் பார்த்தார். ''ஆமாம், ஆமாம்,'' என்று பெரிய வக்கீல் ஆமோதிக்கவே ஜூனியரின் முகம் மலர்ந்தது.

நான் பிடிவாதமாக, ''மன்னிப்புக் கேட்கும்படி நான் எந்தத் தவறும் செய்யவில்லை. என்ன வேண்டுமானாலும் பண்ணிக் கொள்ளுங்கள்,'' என்றேன்.

கௌரியம்மாள் என் கையைப் பிடித்துக்கொண்டு, ''ஹேமா, இதோ பார். வீணாக...'' என்று ஏதோ பேச முயன்றாள்.

''விடுங்கள் என்னை!'' என்று அந்தக் கையை உதறினேன். வேலைக்காரர்களின் கூட்டத்தை விலக்கிக் கொண்டு வெளியேறினேன்.

தெருக் கோடியை அடைந்த போது, ''ஹேமா!'' என்று என்னை யாரோ பின்னாலிருந்து அழைப்பது கேட்டது.

திரும்பிப் பார்த்தபோது ஹரிதான் வேகமாக வந்து கொண்டிருந்தான்.

வேண்டா வெறுப்பாக நின்றேன். அருகில் வந்தவன், ''அடுத்த அறையில் இருந்தபடி எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்தேன், ஹேமா. வந்து... எப்போது தப்பாய்க் குற்றம் சுமத்திவிட்டோம் என்று தெரிகிறதோ - அப்போது மன்னிப்புக் கேட்பதுதான் பெருந்தன்மை. 'ஸாரி' என்று ஒரு வார்த்தை நீ சொல்லியிருக்கலாம்,'' என்றான்.

நான் கோபமாக, ''உங்கள் அக்காவுக்கு ஒரு வக்கீல்தான் இருக்கிறார் என்று நினைத்தேன். இரண்டு பேர் இருப்பது இப்போதுதான் தெரிகிறது,'' என்று கூறினேன். ''ஸப்போஸ், நான் சொன்ன குற்றச்சாட்டு உண்மைதான் என்று நாளைக்குத் தெரியவந்தால்? நான் கேட்டுக்கொண்ட மன்னிப்பு என்னிடமே திரும்பி வருமாக்கும்?''

எனக்குப் பதிலளிக்கத் தெரியாமல் திகைத்தான் ஹரி. பிறகு, ''அக்கா உன்னிடம் இவ்வளவு மதிப்புக் கொடுத்துப் பணிந்து நடந்து கொண்டதே பெரிது. அவள் கோபக்காரி. வீம்புக்காரி. அவள் பகைமையை நீ சம்பாதித்துக் கொள்ள வேண்டாமே என்பதற்காகச் சொன்னேன்,'' என்றான்.

''யாருடைய கோபம் என்னை என்ன செய்துவிடும் என்றுதான் பார்த்து விடுகிறேனே!'' என்று சொல்லிவிட்டுப் போய்விட்டேன்.

அந்தக் கள்ளக் கடத்தலை அபபுறப்படுத்த இந்த ஹரியேகூடத் தன் அக்காவுக்கு உடந்தையோ என்னவோ, யாருக்குத் தெரியும்? எவர் யோக்கியர், எவர் அயோக்கியர் என்று சொல்ல முடியாமற் போய்விட்டதே!

**வ**னஜாவின் வீட்டை அடைந்து, பத்து நிமிடம் சேர்ந்தாற்போல் புலம்பினால்தான் என் கொந்தளிப்பு குறையும் என்று தோன்றிற்று.

அவள் ஒருத்திதான் இந்த உலகத்தில் எனக்கு ஒரே துணை; அவள் ஒருத்திதான் என் உள்ளத்தை நன்கு புரிந்து

கொண்டவள்; அவள் ஒருத்திதான் எனக்குத் தைரியமும் ஆறுதலும் வழங்கக் கூடியவள்.

''வனஜா... வனஜா..'' என்று வாய்விட்டு ஜபித்துக் கொண்டே நுழைந்தேன்.

அப்போதுதான் இருட்டத் தொடங்கிய வேளை யென்றாலும், வீட்டுக்குள் கும்மிருட்டாக அடைந்து கிடந்தது. ஸ்விட்சைத் தட்டினேன்.

முழங்காலில் முகத்தைப் புதைத்துக் கொண்டு சுவரில் சாய்ந்து உட்கார்ந்திருந்தாள் வனஜா. சிறு சிறு கேவல் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது அவளிடமிருந்து. சாவித்திரியும் அவள் தம்பியும் பெஞ்சில் உட்கார்ந்தபடி, அழும் சகோதரியைத் தேற்றுவது எப்படி என்று தெரியாதவர்களாய்ப் பரிதாபத் தோற்றம் தந்தார்கள்.

சுற்றுமுற்றும் பார்த்தேன். வனஜாவின் கடைக்குட்டித் தம்பியான பாபாவை மட்டும் காணவில்லை.

திகீரென்றது எனக்கு. நான் வெளியே போயிருந்த நேரத்தில் ஒரு வேளை...? விபரீதமான சந்தேகம் என்னை இடிபோலத் தாக்கியது.

என் காலடியோசை கேட்டதுமே தலைநிமிர்ந்தாள் வனஜா.

''வனஜா... பாபா... பாபா.. எங்கே?'' என்றேன் பதற்றத்துடன்.

வனஜா பதில் கூறாமல் தலையைக் குனிந்து கொண்டாள். கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

சாவித்திரிதான் முன்வந்து, ''சாயந்தரம் அப்பா வந்திருந்தார்... அக்காவோடு என்னவோ சண்டை போட்டு விட்டு, பாபாவைத் தூக்கிக்கொண்டு போய்விட்டார்,'' என்றாள்.

'அம்மாடி' என்று ஆறுதல் அடைந்தேன் நான். ''என்ன வனஜா இதெல்லாம்? உன் அப்பா வருகிறவரை, சண்டை போடுகிறவரை, பாபாவை எடுத்துக்கொண்டு போகிறவரை சும்மாவா இருந்தாய்? ஒரு சத்தம் போட்டு அக்கம் பக்கத்தைக் கூட்டி அவர் மானத்தை வாங்குவதற்கென்ன?'' என்றேன்.

ஒரு பெருமூச்சுடன் எழுந்து கொண்டாள் வனஜா. ''உள்ளே போய் வேலையைப் பாருங்கள்,'' என்று தங்கையையும் தம்பியையும் அனுப்பி வைத்தாள். பின்னர் என்னிடம், ''செலவுக்குப் பணமே இல்லாமல் கஷ்டப்படுகிறாராம் அப்பா. ரேஸ் சீசன் வேறே ஆரம்பமாகிவிட்டதே? ரொம்பக் கஷ்டமாய்த்தான் இருக்கும், பாவம். ஐம்பதோ, நூறோ இருந்தால் கொடு என்று கேட்டார். ஐந்து பைசா பத்துப் பைசாகூடக் கிடையாது என்று சொல்லிவிட்டேன்.''

''சரி. அதற்காகப் பாபாவை எடுத்துக்கொண்டு போவதா? குழந்தை என்ன வெள்ளியா, தங்கமா, மார்வாடிக் கடையில் அடகு வைக்க?''

''வெள்ளியையும், தங்கத்தையும்விட அதற்குப் பெறுமானம் அதிகம் என்று அவருக்குத் தெரியும். எனக்கு அதனிடம் அலாதிப் பாசம். கொஞ்சம்கூட அதைப் பிரிந்திருக்க என்னால் முடியாது. ஆகவே, அவர் கேட்பதைக் கொடுத்து பாபாவை மீட்டுக் கொள்வேன் என்று அவருக்குத் தெரியும். இதற்கு முன்பும் இரண்டு மூன்று தடவை இப்படிச் செய்திருக்கிறார்,'' என்றாள் வனஜா.

''என்ன ஆனாலும் சரி, இந்தத் தடவை ஒரு காசுகூடக் கொடுக்காதே!'' என்றேன்.

''ஆமாம், ஹேமா. அப்படித்தான் செய்யப் போகிறேன், இந்தத் தடவை,'' என்று உறுதியாகச் சொன்னாள் வனஜா.

அது போலியான உறுதி என்பதும், அவளுடைய பலவீனமே அவளைத் தின்று கொண்டிருக்கிறது என்பதும்

அப்போது எனக்குத் தெரியவில்லை. ஒன்றும் நடவாததுபோல் பேசிக் கொண்டிருந்தோம், சாப்பிட்டோம், ரேடியோ கேட்டோம், படுத்துக் கொண்டோம்.

நான் என்னுடைய சொந்தப் பிரசினைகளிலேயே முழுகியிருந்தேன். அவைகளைப் பற்றிக் கேட்க வனஜா எப்போதுமே ஆர்வம் காட்டியதில்லை. என்றாலும் இன்று அவள் 'என்ன நடந்தது உன் அம்மா வீட்டில்?' என்று இரண்டு வார்த்தை கேட்கமாட்டாளா என ஏங்கினேன்.

வனஜா கேட்கவில்லை. சரி, அவளாவது மன நிம்மதியுடன் தூங்கட்டும் என்று எண்ணிக் கொண்டேன். ஆனால் என்னைக் காட்டிலும் அவள் மனத்தில்தான் அதிகக் கொடுமையாகப் புயல் வீசிக்கொண்டிருக்கிறது என்பதைச் சிறிது நேரத்தில் புரிந்துகொண்டேன்.

''பாபா... பாபா...'' என்று முனகிக் கொண்டே வனஜா படுக்கையில் புரண்டாள். ''ஸ்... வனஜா! சும்மா இரு,'' என்று அவளை மெல்லத் தட்டினேன்.

சில நிமிடங்கள் சும்மாயிருந்தாள். பிறகு மறுபடி புலம்பத் தொடங்கினாள். ஆனால் முழு விழிப்புடன் இருக்கவில்லை. தூக்கக் கலக்கம்தான்.

**கா**லையில் கண் விழித்தபோது என்னுள் ஒரு திட்டம் உருவாகியிருந்தது.

சாவித்திரி, பிளாஸ்கில் காப்பி எடுத்துக்கொண்டு புறப்பட்டாள், அப்பாவுக்குக் கொண்டுபோய்த் தருவதற்காக. ''இரு, சாவித்திரி. நானும் வருகிறேன்,'' என்றேன்.

வனஜா திடுக்கிட்டு, ''எங்கே போகப்போகிறாய்?'' என்றாள்.

''உன் அப்பாவிடம் சொல்லி, பாபாவை அழைத்து வருகிறேன்,'' என்றேன்.

''வேண்டாம், ஹேமா. அந்த வீட்டுக்கெல்லாம் நீ போவது நன்றாயிராது,'' என்று தடுத்தாளாயினும், குழந்தையை அழைத்து வருவேன் என்று சொன்னதைக் கேட்டு அவள் முகம் மலராமலில்லை.

அது ஒரு 'டீஸண்ட்'டான வீடுதான். வனஜாவின் அப்பாதான் ஐந்துக்கும் பத்துக்கும் அலைந்து தன் கௌரவத்தைக் குலைத்துக் கொள்கிறாரே தவிர, அவருடைய 'காதலி' வசதியாகவும், மதிப்பாயும் வாழ்க்கை நடத்துகிறவள் என்று தோன்றியது. 'அப்பா' என்று நடையில் நின்றவாறே சாவித்திரி குரல் கொடுத்ததும் அவர் உள்ளேயிருந்து வந்தார். என்னைக் கண்டதும், ''அட, ஹேமாவா! வா, வா,'' என்று வரவேற்றார்.

உட்புறம் எட்டிப் பார்த்தேன். பெண்கள் யாரையும் காணோம். கூடத்தில் ஒரு ஜமுக்காளத்தின் மீது குழந்தை பாபா தூங்கிக் கொண்டிருந்தது. விருட்டென்று உள்ளே சென்றவள் அதைத் தூக்கித் தோளில் சாய்த்துக் கொண்டேன்.

ஜம்பு என்னை எதிர்ப்பார், கோபிப்பார், தடுப்பார் என்றெல்லாம் எண்ணியது தவறாயிற்று. ஒரு பெருமூச்சுடன் சிரித்தவர், ''பாபாதான் வேண்டுமாக்கும் உன் சினேகிதிக்கு? அப்பாவையும் அழைத்து வா என்று சொல்லவில்லையா?'' என்றார்.

அவர் முகத்தை ஏறிட்டுப் பார்த்தேன். என்ன காரணத்தாலோ மனமிடிந்து போயிருக்கிறார் என்று தோன்றியது. ''வனஜா கூப்பிட வேண்டிய அவசியமே கிடையாது. உங்கள் வீட்டுக்கு நீங்கள் எப்போது வேண்டுமானாலும் வரலாமே!'' என்றேன்.

''ஆமாம், ஹேமா. வரவேண்டியவன்தான். வரத்தான் நினைத்திருந்தேன். நான் செய்த பாவங்களையெல்லாம் இப்போதுதான் உணர ஆரம்பித்திருக்கிறேன். நீயும் வந்து

கூப்பிட்டுவிட்டாய்! வந்துவிடுகிறேன்,'' என்றார், புறப்பட்டு விட்டார்.

வீட்டுக்கு வந்தோம். ஐந்தே நிமிடத்தில் அந்த வீடு மொத்தமும் என்ன கும்மாளம்! எத்தனை கலகலப்பு! ஜம்பு, ஒரு துணிப்பையில் தன் வேட்டி சட்டைகளை அடைத்து வைத்துக்கொண்டு வந்து சேர்ந்தபோது அவரே எதிர் பார்த்திருக்க மாட்டார் அப்படிப்பட்ட கோலாகலமான வரவேற்பை! எப்படி மனம் மாறியது என்று யாருக்குமே புரியவில்லை.

இதற்காக நான் ஒன்றும் செய்யவில்லையென்றாலும், ஒரு மாபெரும் காரியத்தைச் சாதித்தோம் என்கிற கர்வம் என் தலையைக் கனக்க வைத்தது. அதே சமயம் எனக்குக் கை கால்களெல்லாம் களைத்து, சோர்வு ஆட்கொண்டது. முந்தின இரவு கண் விழித்ததும், பகல் பூரா என்னைச் சூழ்ந்திருந்த பிரச்சினைகளும் என் தேகத்தை வாட்டின.

''மத்தியானத்துக்கு மேல் நான் ஆபீசுக்கு வருகிறேன். வனஜா,'' என்றேன்.

''ஆமாம், நீ ரெஸ்ட் எடுத்துக்கொள்,'' என்று கூறிவிட்டு, தன் தந்தையிடமும் விடைபெற்றுக் கொண்டாள். காயத்திரியும் சீனாவும் பள்ளிக்கூடம் புறப்பட்டார்கள். குழந்தை பாபாவைப் பக்கத்தில் விட்டுக்கொண்டு, முன்புறத்து அறையில் நான் படுத்துக்கொண்டேன்.

''நான் சமையலைக் கவனிக்கிறேன்,'' என்று சொல்லிவிட்டு ஜம்பு உள்ளே சென்றார்.

எவ்விதமான பயங்கரத்தையும் நான் உணரவில்லை - அப்போதைக்கு.

# 15

எனக்குத் தெரியாத கலைகள் பல உண்டு இந்த உலகத்தில். ஒப்புக்கொள்கிறேன். ஆனால் அடியோடு தெரியாதது என்று ஒன்று உண்டென்றால் அது அழும் குழந்தையைச் சமாதானப்படுத்துவதுதான். அண்ணன் தம்பிகளுடன் வளராமல் ஒன்றியாகவே இருந்ததாலோ என்னவோ, எந்தக் குழந்தையுடனும் விளையாடவோ, பழகவோ எனக்குச் சந்தர்ப்பம் நேர்ந்தது கிடையாது.

ஆகவேதான், வனஜாவின் வீட்டில், அவளுடைய கடைக்குட்டித் தம்பியான பாபாவை அணைத்தாற் போல் படுத்திருந்தவள் அவன் திடுப்பென விசித்து விசித்து அழ ஆரம்பித்ததும் தடுமாறிப் போனேன்.

''ஏம்பா பாபா? என்னடா வேணும் கண்ணா?'' என்று குழந்தையைத் தட்டிக் கொடுத்தேன்.

ஆனால் பாபா ஓயக் காணோம். ''அக்கா... அக்கா வேணும்'' என்று முனகிக் கொண்டே பலமாக அழத் தொடங்கினான். அவனை எடுத்துத் தோளில் சாத்திக்கொண்டு வாசலில் போய் நின்றுகொண்டேன். ''அதோ பார் நாய்! இதோ பார் பலூன்காரன்!'' என்று வேடிக்கை காட்டினேன்.

எதைக் காட்டினாலும் ஒரு வினாடி வேடிக்கை பார்ப்பான்; அவன் விழிகள் அகலத் திறந்து ஆச்சரியிக்கும் மறுவினாடி தன் அழுகையில் பழையபடி இறங்கிவிடுவான்.

மறுபடி உள்ளே வந்தேன்.

முன்னறைக்கும் சமையலறைக்கும் நடுவேயிருந்த கூடத்தில் படுத்திருந்தார் ஜம்பு - வனஜாவின் அப்பா. அயர்ந்து தூங்குகிறார் என்று நான் நினைத்திருக்க அவரோ எழுந்து உட்கார்ந்து கொண்டிருந்தார்.

''அழுகிறானா? அவன் எப்பவும் இப்படித்தான். திடீரென்று வனஜாவை நினைத்துக்கொண்டு விடுவான். பிறகு அவனை ஓயவைக்க யாராலும் முடியாது,'' என்றார் என்னைக் கண்டதும். பிறகு, ''பசிக்கிறதோ, என்னவோ, கொஞ்சம் சாப்பிடுவதற்கு ஏதாவது கொடுத்துப் பார்,'' என்றார்.

அதுவும் நல்ல யோசனைதான் என்று சமையலறைக்கு எடுத்துச் சென்றேன். செலவழிந்தது போக மீதமுள்ள பதார்த்தங்களைக் கச்சிதமாக மூடி வைத்துவிட்டுச் சென்றிருந்தாள் சாவித்திரி. ஒரு கிண்ணத்தில் சாதத்தைப் போட்டு, ரசத்தை விட்டுப் பிசைந்தேன், பாபாவை இடுப்பில் வைத்துக்கொண்டே.

''ஊகூம். வேணாம்,'' என்று தலையைப் பலமாக அசைத்தான் பாபா. ஆனால் அழுகை நின்றிருந்தது.

''ரசம் சாதம் அவனுக்குப் பிடிக்காது,'' என்று சொல்லிக் கொண்டே சமையலறைக்குள் வந்தார் ஜம்பு.

''பின்னே எது பிடிக்கும்?'' என்றேன்.

''சாம்பார் சாதம்,'' என்றவர் வேறொரு தட்டில் சாதம் போட்டுச் சாம்பார் ஊற்றிப் பிசைந்து கொடுத்தார், ''சாப்பிடுடா!'' என்று சொல்லி என் இடுப்பிலிருந்து குழந்தையை வாங்கிக் கொண்டார்.

முதன் முறையாக எனக்குச் சிலீரென்று உறைத்தது, என் இடுப்பில் அவர் கை பட்டதும். வேண்டுமென்றே அப்படிக் கைபடும்படி குழந்தையை வாங்கிக் கொண்டார் என்று நினைத்தேன். உடனேயே 'அப்படி இருக்காது' என்று எண்ணிக்கொண்டேன்.

பாபாவைக் கீழே உட்கார்த்தி வைத்து, தட்டையும் வைத்தார் ஜம்பு. பசிதான் போலிருக்கிறது பாவம். சாப்பிடத் தொடங்கினான் குழந்தை. அழுகை மறைந்துவிட்டது.

''நான் என்ன சொன்னேன்?'' என்றார் ஜம்பு பெருமையுடன்.

''உண்மைதான்,'' என்று பாராட்டிவிட்டு வெளியேற முயன்றேன்.

''இரு, இரு. எனக்குத் தலைவலி மண்டையைப் பிளக்கிறது. ஒரு வாய் காப்பி போட்டுக் கொடேன்,'' என்றார் அவர். அந்தச் சிறிய எட்டடி அறையின் வாசலில் அவர் நின்றிருந்த விதம், சாதாரணமாயும் தோன்றியது; வழி மறித்திருக்கிற மாதிரியும் இருந்தது.

''பால் இருக்கிறதோ இல்லையோ,'' என்று நழுவப் பார்த்தேன்.

''அதோ அந்த டம்ளரில் மூடி வைத்திருக்கிறாள் பார். இதோ காப்பிப் பவுடர் இருக்கிறது,'' என்றார் ஜம்பு. உடனே என் மனத்தில் எழக்கூடிய எண்ணத்தை ஊகித்தவர்போல, ''நானே போட்டுக் கொள்வேன். பிரமாதமில்லை. ஆனால் நன்றாகவே இராது. என்னவோ உன் கைக்கு வாசகை இருக்குமென்று தோன்றுகிறது,'' என்று அசட்டுச் சிரிப்பு சிரித்தார்.

அந்த நிமிடமே நான் விடுவிடுவென்று வெளியேறியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால் அடுத்துப் பல அதிர்ச்சிகளும் இடிகளும் ஏற்படாமலே போயிருக்கும்.

என் விதி என்னை அங்கே மேலும் தாமதிக்கச் செய்துவிட்டது.

''அடுப்பு வேண்டுமானால் நான் மூட்டித் தருகிறேன்,'' என்று கூறிய ஜம்பு பிரஷர் ஸ்டவ்வைப் பற்ற வைத்துத் தந்தார்.

அதற்குமேல் எதுவும் செய்ய முடியாமல் வெந்நீர் வைத்தேன். சர்க்கரை டப்பா, ஃபில்ட்டர், டபரா டம்ளர் என்று ஒவ்வொன்றாய் எடுத்து என் பக்கத்திலே வைக்கலானார் ஜம்பு.

ஒரே சமயத்தில் இருவர் இருந்தால் இடித்துக் கொள்ளாமல் காரியம் பார்க்க முடியாத அறை அது. இந்தண்டையும் அந்தண்டையுமாக என்னைச் சுற்றிச் சுற்றி அவர் நடமாடியபோது எனக்குப் பெரும் சங்கடமாயிருந்தது. எப்போது அவர் வேண்டுமென்று என்னை உரசுகிறார், எப்போது தற்செயலாகப் படுகிறார் என்று தெரியவில்லை. அந்தச் சமையலறையில் நிற்பது வரவரத் தணல்மீது நிற்பது போலாயிற்று.

ஒரு வழியாகக் காப்பியைக் கலந்து, அவர் பக்கமாக நகர்த்தினேன்.

''உனக்கு?'' என்றார்.

''எனக்கு வேண்டாம். வேளைகெட்ட வேளையில் காப்பி சாப்பிட்டால் வயிற்றை என்னவோ செய்யும்,'' என்று கூறிவிட்டு வெளியே போக முயன்றேன்.

அவரைத் தாண்டிக் கொண்டுதான் செல்ல வேண்டியிருந்தது. அவருக்கும் சுவருக்குமிடையேயிருந்த ஓரடிச் சந்துக்குள் என் தேகத்தை நுழைத்து மறுபுறம் சென்றுவிடப் பார்த்தேன்.

அதே நொடியில் எதிர்பாராத காரியமொன்று செய்தார் ஜம்பு. ''உனக்கில்லாமல் எனக்கு மட்டும் காப்பியா?'' என்று இளித்துக்கொண்டே சொன்னவர் ஒரு டம்ளரில் காப்பியை ஊற்றி என் உதட்டில் தானே வைத்தார்!

வந்ததே எனக்கு ரௌத்ராகாரமான ஆவேசம் பட்டெனத் தட்டிவிட்டேன் அந்தக் கையை. டம்ளர் காப்பியும் அவர் சட்டை மீது வழிந்தது.

அந்த மிருகம் அதைப் பொருட்படுத்தவில்லை. ''ஹேமா... ரொம்ப அழகான பெயர்! இல்லை?'' என்று அசடு வழியப் பேசியபடி என் கையைப் பிடித்தது!

ஒரு திமிறல் திமிறி விடுவித்துக் கொண்டபோது கொதிக்கும் ரத்தம் என் உச்சந்தலையில் குப்பெனப் பாய்வதை உணர்ந்தேன். என் கண்கள் கொள்ளிக் கட்டையாய்ச் சிவந்திருந்திருக்க வேண்டும். அப்படி எரிந்தன. ''இப்போது வழியை விடப் போகிறீர்களா? இல்லை, ஒரு கூச்சல் போட்டு அக்கம் பக்கத்தைக் கூட்டி உங்கள் மானத்தை வாங்கட்டுமா?'' என்று பல்லைக் கடித்துக் கொண்டு சொன்னேன்.

அவர் முகத்தில் பயமேதும் தோன்றவில்லை. ஆனால் மறுபடி என்கையைத் தொடாமல் நிறுத்திக் கொண்டார். ''அடேயப்பா! இவ்வளவு கோபம் வருகிறதே உனக்கு! வேலை மெனக்கெட்டு உனக்காக இந்த வீட்டுக்கு வந்தேன் பார்!'' என்றார்.

கிடைத்த சமயத்தைப் பயன்படுத்திக்கொண்டு, வெளியேற வேண்டிய நான், அப்படிச் செய்யாமல் ''ஓகோ! எனக்காகத்தான் வந்தீர்களா?'' என்று கேட்டேன்.

''ஆமாம். முதல் தடவை உன்னைப் பார்த்தபோதே 'அட, என்ன அழகான பெண்!' என்று நினைத்துப் பிரமித்தேன். பிறகுதான் தெரிந்தது, நீ இங்கேயே வனஜாவோடு தங்கியிருக்கிறாய் என்று. சரி, ஹேமா இருக்கிற இடம்தான் சொர்க்கம் என்று தீர்மானம் பண்ணி உன்னோடு புறப்பட்டு வந்துவிட்டேன்.''

''தூ!'' என்றேன் அருவருப்புடன். ''இந்தக் கிழட்டு வயதில், வெட்கமாயில்லை இப்படியெல்லாம் பேச! வனஜாவுக்கு அப்பாவா நீங்கள்! எவ்வளவு பதவிசான, கண்ணியமான பெண் அவள்! நீங்கள் நடந்து கொண்ட விதத்தைச் சொன்னால் துடித்துப் போய் விடுவாளே!''

''அதெல்லாம் துடிக்கவும் மாட்டாள், இடிக்கவும் மாட்டாள்! சொல்லித்தான் பாரேன்!'' என்றார் ஜம்பு.

எதற்காகவோ அவர் என்னை வேண்டுமென்றே சீண்டுகிறார் என்று புலப்பட்டது. விளக்கை வட்டமிடும்

விட்டிலைப் போல, வரப் போகிற ஆபத்தை என் புலன்கள் உணர்ந்தும், அந்த இடத்தை விட்டு நகர மறுத்தன என் கால்கள்.

''வனஜாவிடம் சொல்லிப் பார் என்றா சொல்கிறீர்கள். சொன்னால் தெரியும் உங்கள் கதி! துடைப்பக்கட்டையை எடுத்துக்கொண்டு துரத்தியடிப்பாள் உங்களை!'' என்றேன்.

''ஹாஹாஹா!'' என்று அட்டகாசமாய்ச் சிரித்தார் ஜம்பு. ''துடைப்பக் கட்டையா எடுத்துக்கொள்வாள், துடைப்பக் கட்டை! அதை அவள் தொடும்போதே நான் சொல்ல மாட்டேன, 'நீ என்னடி வாழ்ந்தாய், கெட்டழிந்த கழுதை!' என்று?''

மார்பை அடைத்துக் கொண்டது எனக்கு. நாக்குப் புரள மறுத்தது. ''எ...என்ன...'' என்று குழறினேன்.

இத்தனை நேரமாய்ப் பேசாது சாப்பிட்டுக் கொண்டிருந்த பாபா இந்த அமளியைக் கண்டு பயந்துபோய் மறுபடி அழ ஆரம்பித்தது.

''ஓகோ! வனஜா உன் உயிர்த் தோழியாயிருந்தும் உன்னிடம் சொல்லவில்லையா!'' என்று மீண்டும் சிரித்தார் ஜம்பு.

நான் திகைத்து நின்றேன் எதிர்மொழி பேசாமல்.

குழந்தையின் அழுகை பலப்பட்டது.

ஜம்பு தொடர்ந்தார், தன் எரிச்சலூட்டும் நகைப்பை விடாமல். ''இதோ அழுகிறதே, இந்தக் குழந்தை, இது யாருடையதென்று நினைக்கிறாய்?''

எனக்குக் கண்கள் இருண்டன. ''ஏன்... வந்து...'' பேச்சு வராமல் தவித்தேன்.

''வனஜாவின் தம்பி - என் கடைசிக் குழந்தை என்று நினைத்திருக்கிறாய் இல்லையா! ஹாஹ்ஹா!'' என்று

எக்காளமிட்டார் அவர். "இது வனஜாவின் சொந்தக் குழந்தை! அவளுக்கே அவளுக்குப் பிறந்தது! ஊரையெல்லாம் ஏமாற்றிக் கொண்டிருக்கிறாள் தன் தம்பி என்று! இந்தக் கதை தெரியாமல் என்னிடமே நீ அளக்கிறாய்! பதவிசானவளாம்! கண்ணிய மானவளாம்! அவள் வந்து என்னைத் துடைப்பக் கட்டையால் அடித்துத் துரத்துவாளாம்!"

"பொய்! பொய்!" என் அடிவயிற்றிலிருந்து வார்த்தைகள் திரண்டெழுந்து உருண்டு உருவாகி நாக்கில் புரண்டு வரப் பல வினாடிகள் பிடித்தன. அதற்குள் அவர் சமையலறையை விட்டு வெளியே போய்விட்டார். அவரைப் பின்தொடர்ந்து சென்று "பச்சைப் பொய்யைச் சொல்லிவிட்டு எங்கே ஓடுகிறீர்கள்?" என்று கத்தினேன்.

சமையலறையில் பாபாவின் அழுகை பலப்பட்டது.

"பொய்யா! ஏன்? உன் தோழி எங்கே போய் விட்டாள்? அவளையே போய்க் கேளேன். பொய்யா மெய்யா என்று!" டபராவில் மிஞ்சி, ஆறிப் போயிருந்த காப்பியை உறிஞ்சிக்கொண்டே ஜம்பு சொன்னார்.

என் உடம்பின் உட்பகுதிகள் யாவும் உலர்ந்து காய்ந்து மரத்துவிட்டாற் போல இருந்தது. தலை சுழன்று, கால்கள் தள்ளாடின. "தெய்வமே! இது மெய்யாயிருக்கக் கூடாது! பொய்யாயிருக்க வேண்டும்!" என்று என் உள்ளம் ஓலமிட்டது.

'பொய்யல்ல ஹேமா! ஏன் உன்னையே நீ ஏமாற்றிக் கொள்கிறாய்?" என்று இடித்துரைத்தது அறிவு.

வாசலுக்கு வந்தேன். தெருவில் இறங்கி நடந்தேன். உயிர்போகிற மாதிரி பாபா அலறிக் கொண்டிருந்தது. ஓடுகிற வண்டியைப் பின் தொடர்ந்து வரும் பிள்ளைகள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பின்தங்கி மறைந்து விடுவது போல, அந்த அழுகையொலி சிறிது சிறிதாய்த் தேய்ந்து அழிந்துவிட்டது.

தெருக்கோடியை அடையும்வரை எனக்கு எதுவுமே புரியவில்லை. ஒரே குழப்பமாக இருந்தது. எனக்கென்று ஓர் இடம் பிடித்து, கொஞ்ச நேரம் அங்கே மறைந்திருந்து, எந்த இரைச்சலும் காதில் விழாதபடி இருந்து கொண்டு, இருதயம் நிறைய நல்ல காற்றை இழுத்துக்கொள்ள வேண்டும் போல அப்படியொரு அடைசல் என் உடம்பு பூராவிலும் நிறைந் திருந்தது. எந்தத் தெய்வத்தையும் நம்ப முடியாதிருந்த நாத்திகனுக்குத் திடீரென்று நெருக்கடி உதித்த மாதிரி, யாரு மற்ற அனாதையாக, எல்லாப் பலத்தையும் இழந்தவளாக, நட்ட நடுச் சாலையில் நான் நிற்பது போன்ற அச்சம் ஏற்பட்டது.

வனஜாவைப் பற்றிக் கேள்விப்பட்டது உண்மையாகவா இருக்கும்? உண்மை இல்லாவிட்டால் என்னதான் ஆத்திர வசப்பட்டாலும் ஒரு பெற்ற தந்தை தன் பெண்ணைப்பற்றி அப்படிப்பட்ட கொடிய அபாண்டத்தைச் சுமத்துவாரா?

நினைத்து நினைத்துப் பார்த்தேன். முதல் முறை வனஜாவின் வீட்டுக்குப் போனபோது குழந்தையை அவள் வாரியணைத்துக் கொண்ட காட்சியும், வலிப்பில் அது படுத் திருந்தபோது கண்ணீரும் கம்பலையுமாய் அதை மடியில் போட்டுக்கொண்டு அவள் புலம்பிக் கொண்டிருந்த காட்சியும் என் கண்முன் தோன்றின. கேட்டபொழுதில் பணம் தராவிட்டால் பாபாவைத் தூக்கிக் கொண்டு போய்விடுகிறார் தன் அப்பா என்று வனஜா சொன்னதையும் எண்ணிப் பார்த்தேன். அவளுடைய பாசம் எப்படிப்பட்டது என்பதை அறிந்திருப்பதால்தானே நிச்சயம் பணம் கிடைக்கும் என்று ஜம்பு நம்புகிறார்?

அப்படியானால் வனஜாவின் கணவன் யார்? எங்கே இருக்கிறான்? அல்லது கணவன் இல்லாமலே...

சே! வனஜா அவ்வளவு மோசமானவளா? எண்ணுகை யிலேயே எனக்குக் கசந்தது. அவளை என் அருமைத் தோழி

என்று நினைப்பதை நிறுத்திக்கொண்டு வெகு நேரமாகி விட்டது என்று உணர்ந்தேன். வனஜா என்ற ஓர் ஒழுக்கம் கெட்ட பெண் என்றுதான் அவளைப்பற்றி நினைக்க முடிந்தது.

அப்படி நினைப்பது நியாயமில்லை என்று என் மனச்சாட்சி கூறியபோதிலும் என்னால் வேறு விதத்தில் சிந்திக்க முடியவில்லை.

அம்மாவிடமும் திரும்ப முடியாமல், இவளுடனும் தங்க முடியாமல், இருக்க இடமற்ற அனாதையாகிவிட்டோம் என்ற நினைவு என்னுள் தலை தூக்கிற்று. தப்பு, தப்பு. கௌரவமான சம்பளம் வாங்கக்கூடிய வேலையில் நான் இருக்கிறேன். தனித்துச் சுதந்திரமாக எங்கு வேண்டுமானாலும் இருந்து கொள்ள முடியும்...

இந்த எண்ணம் உதித்ததும் மற்றக் குழப்பங்களை ஒதுக்கிவிட்டு தினகரா கம்பெனிக்கே விரைந்தேன். நேரே ஆபீஸ் மானேஜரிடம் சென்று தாமதமாக வந்ததற்காக மன்னிப்புக் கேட்டுக் கொண்ட பின்னர் என் மேஜைக்குச் சென்றேன்.

என்னைக் கண்டதுமே வேகமாக வந்தாள் வனஜா. முதல் கேள்வி என்ன கேட்கிறாள் பார்ப்போம் என்று காத்திருந்தேன். நான் நினைத்தபடியே, ''பாபாவை என்ன செய்தாய்? அப்பா வீட்டில் இருக்கிறாரா? பார்த்துக் கொள்கிறாரா?'' என்றுதான் விசாரித்தாள்.

''ஆமாம்,'' என்று சுருக்கமாகக் கூறிவிட்டுக் கடிதங் களைப் பஞ்ச் பண்ண ஆரம்பித்தேன்.

''ஹேமா! ஏன் என்னவோ போல் பேசுகிறாய்?'' என்றாள் வனஜா.

''ஒன்றுமில்லையே!'' என்றேன்.

என்னைச் சந்தேகத்துடனும் கவலையுடனும் பார்த்து விட்டு நகர்ந்தாள். அதன் பின்னரும் நடுநடுவே என்னிடம் வந்து பேசினாள். நான் சுருக்கமாகவே பதில் கொடுத்தேன்.

இடைவேளை மணியடித்தது. எல்லா ஊழியர்களும் காண்ட்டீனுக்குச் சென்றுவிட்டார்கள். எங்கள் பக்கத்தில் யாருமே இல்லாததால், வனஜா மறுபடி என்னை அணுகி, ''என்ன விஷயம்? என்ன நடந்தது? சொல்லு,'' என்றாள்.

அமைதியாகக் கூறினேன்:

''எதுவும் நடக்கவில்லை. உன் அப்பாதான் சொன்னார் பாபா உன் தம்பியல்ல, சொந்தக் குழந்தை என்று.''

விக்கித்துச் சிலையாகி நின்றாள் வனஜா. அவள் அப்பா கூறியது சரிதான் என்று எனக்குப் புரிந்துவிட்டது. இருந்தாலும், ''அது உண்மைதானே?'' என்று கேட்டேன்.

''உண்மைதான். ஹேமா,'' என்று தலை குனிந்தாள் வனஜா. ''ஆனால் அந்த அவக்கேடு எப்படி நடந்தது, எப்போது என்ற விவரமெல்லாம் உனக்குத் தெரிய வேண்டும்...''

நான் குறுக்கிட்டு, ''வேண்டாம், வேண்டாம்,'' என்றேன்.

''பாபாவின் அப்பா யார் என்பதுகூடத் தெரிய வேண்டாமா?'' என்றாள்.

''யார்?'' என்றேன்.

''ஜனார்த்தனன்,'' என்றாள்.

திகைத்து அவளையே பார்த்துக் கொண்டிருந்தேன்.

''இந்த ஆபீசில் நான் தீர்க்க வேண்டிய கணக்கொன்று இருக்கிறது, அதற்கு ஒத்தாசையாக நீயும் இரு என்று முன்பு சொன்னேனே, நினைவிருக்கிறதா? அது இதுதான். என்னை நயவஞ்சகமாய் ஏமாற்றிவிட்டான் ஜனார்த்தனன். நல்லவேளை, அம்மா அப்போது உயிருடன் இருந்தாள். என்னை வெளியூருக்கு அழைத்துச் சென்று, ரகசியமாய்ப்

பிரசவம் பார்த்து என்னைக் காப்பாற்றினாள். திரும்பி வந்ததும் என் குழந்தையைத் தன் குழந்தை என்று சொல்லிக் கொண்டாள். இங்கே என் தங்கை தம்பியுடன், தங்கியிருந்தார் என் அப்பா. அவருக்கு மட்டும்தான் என் ரகசியம் தெரியும். கொஞ்ச நாளில் அம்மா என்னைப் பற்றிய துயரத்திலேயே நைந்து நைந்து உயிர் விட்டு விட்டாள்...''

வனஜா சற்று நிறுத்தி என் முகத்தைப் பார்த்தாள். ''நான் சொல்வதையெல்லாம் நீ நம்பவில்லையா ஹேமா?'' என்றாள் திகைப்புடன்.

''நம்பாமலென்ன? நம்புகிறேன். தாராளமாய் நம்புகிறேன். ஆனால் கேட்பதற்கு, அருவருப்பாக இருக்கிறது'' என்றேன்.

வனஜா என்னிடம் மேற்கொண்டு பேசுமுன், ''ஹேமா என்பது யாரம்மா?'' என்று ஒரு குரல் கேட்டது.

தபால்காரர் ஒரு ரிஜிஸ்தர் உறையுடன் நின்றிருந்தார். கையெழுத்துப் போட்டு வாங்கி பிரித்தேன்.

கௌரியம்மாளின் வக்கீல் நோட்டீஸ் அது.

## 16

என் முகத்தைப் பார்த்து வனஜா கவலையுடன், ''என்ன ஹேமா, ரெஜிஸ்தர் கடிதம் யார் அனுப்பியிருக்கிறார்கள்?'' என்று கேட்டாள்.

அவளிடம் எதையும் பேசக்கூடிய மனநிலையில் நான் இல்லை. அப்படியே பேசுவதானாலும் ஆதியோடந்தமாய் எல்லா வரலாற்றையும் சொல்லியாக வேண்டும். அதற்கான பொறுமையும் நிதானமும் எனக்கில்லை.

கடிதத்தை மறுபடி படித்தேன்.

''என் கட்சிக்காரியான திருமதி கௌரியம்மாளைப் பலர் முன்னிலையில் நீங்கள் இழித்தும், பழித்தும் பேசியிருக்கிறீர்கள். சமூகத்தில் மிக உயர்ந்த அந்தஸ்தில் உள்ள அவரைக் கள்ளக் கடத்தல் செய்கிறவர் என்று ஆதாரமில்லாமல் குற்றம்சாட்டியிருக்கிறீர்கள். அதை நிரூபிக்கும்படி சொன்ன போது நிரூபிக்க முடியாமல் நழுவியிருக்கிறீர்கள். இதனால் என் கட்சிக்காரிக்குப் பலத்த மனச் சங்கடம் விளைந்துள்ளது. உங்கள் செய்கைகளுக்காகவும் பேச்சுக்காகவும் நீங்கள் நேரில் வந்து கௌரியம்மாளிடம் மன்னிப்புக் கேட்டுக் கொள்ள வேண்டும். அவ்வாறு நீங்கள் பதினைந்து தினங்களுக்குள் செய்யத் தவறினால், மான நஷ்டம் ஏற்படுத்தியதற்காக உங்கள் மீது ஐம்பதாயிரம் ரூபாய்க்குக் கேஸ் போடப்படும். கிரிமினல் நடவடிக்கையும் எடுக்கப்படும்.''

ஐம்பதாயிரம் ரூபாய்! என்னிடம் வசூலிக்கப் போகிறார்கள்! சிரிப்பதா அழுவதா என்று தெரியவில்லை. புரட்டிப் புரட்டி அடித்தாலும் என்னிடம் ஐம்பதாயிரம் பைசாவைத் திரட்ட முடியாதே!

கடிதத்தை மடித்து பிளவுசுக்குள் செருகிக் கொண்டேன். வனஜா என் மீது வைத்த விழியை எடுக்காமலே இருந்தாள். பிரியமாய் தட்டிக் கொடுக்கும் எஜமானன் ஒருநாள் சற்று முறைப்பாக இருந்து விட்டால், நாய்க்குட்டி ஏக்கமாய்ப் பார்க்குமே, அதுபோல இருந்தது அவள் பார்வை.

''டிபன் சாப்பிடப் போகலாம், வாயேன்,'' என்று அழைத்துப் பார்த்தாள்.

''எனக்குப் பசியில்லை.'' என்றேன் சுருக்கமாக. 'நீ வேண்டுமானால் போய்ச் சாப்பிட்டு விட்டு வா' என்று சொல்லத் தோன்றியது. அவ்வளவு அதிகமாக அவளுடன் பேசுவதற்குக் கசப்பாக இருந்ததால் சொல்லாமல் நிறுத்திக் கொண்டேன்.

அவள் போகவில்லை, ''ஹேமா? என்னைப் பற்றி நீ ரொம்ப மட்டமாக நினைத்துவிட்டாய், இல்லையா?'' என்றாள் திரும்பவும்.

வெடுக்கென்று 'ஆமாம்!' என்று கூற நினைத்ததையும் அடக்கிக் கொண்டு, ''கொஞ்ச நேரம் என்னை சும்மா விடேன். உன் பிரச்சினை ஒன்றுதானா எனக்கு இருக்க முடியும்? எனக்கும் சொந்தக் கவலைகள் உண்டு,'' என்றேன்.

''இல்லையென்றா சொன்னேன். என்னிடம் சொல்லு என்றுதானே அப்போது பிடித்துக் கேட்கிறேன்?'' என்றாள் வனஜா.

அவளை அங்கேயே விட்டுவிட்டு நான் மட்டும் மெல்ல நடந்தேன். பலவிதமான சிந்தனைகள் என் உள்ளத்தைக் குழப்பின. வக்கீல் நோட்டீசுக்குப் பதில் போடாமலே இருந்தால் என்ன நேரும்? எனக்குத் தெரியவில்லை. இதைப் பற்றி யாரிடம் போய்க் கேட்பது என்றும் தெரியவில்லை.

காண்டீனை நோக்கிப் போய்க் கொண்டிருந்தவள், ''பணம் நிறைய வைத்திருந்தால் என்னிடம் வேண்டுமானால் கொடம்மா. நான் சம்சாரி, சந்தோஷமாய் வாங்கிக் கொள்கிறேன்,'' என்ற குரலைக் கேட்டு நின்றேன்.

அவர் தினகரா கம்பெனியின் வயதான ஊழியர்களில் ஒருவர். பெயர் சிவசிதம்பரம். கடிதங்களை 'பைல்' செய்யும்போது அவர் பெயரைக் கவனித்திருக்கிறேன். சட்ட சம்பந்தப்பட்ட அலுவலகக் கடிதங்களை அனேகமாய் அவர்தான் எழுதுவது வழக்கம். சில பேர் வக்கீலுக்குப் படிக்காமலே சட்டத்தைப் பற்றி நிறையத் தெரிந்து வைத்திருப்பார்கள். அப்படிப்பட்டவர்களில் இவரும் ஒருவர்.

''என்ன சொல்கிறீர்கள்?'' என்றேன். நான் கீழே தவற விட்டிருந்த சிறிய பிளாஸ்டிக் பர்சை சுட்டிக் காட்டினார் அவர்.

''ரொம்ப நன்றி சார்,'' என்று கூறி அதைத் திரும்பக் கையில் எடுத்துக் கொண்டேன்.

''கான்ட்டீனுக்குப் போகிறாயா? தோசை சாப்பிடாதே. காலையில் போட்டதையே திரும்ப ஒருதரம் புரட்டிப் போட்டுத் தருகிறான். வயிற்றைப் புரட்டுகிறது அது,'' என்றார் சிவசிதம்பரம்.

நான் என் துன்பங்களை மறந்து சிரித்தேன். உடனே இவரிடம் கேட்டாலென்ன என்ற எண்ணம் உதிர்ந்தது. ''சார், ஒரு லா பாயிண்ட் தெரிந்து கொள்ள வேண்டும்,'' என்றேன்.

''ஷூட் இட். நோ கன்ஸல்ட்டேஷன் சார்ஜ்,'' என்றார்.

''எனக்குத் தெரிந்த ஒருத்தர் ஒரு மான நஷ்டக் கேஸில் மாட்டிக் கொண்டிருக்கிறார். நாலு பேருக்கு எதிரில் ஒருவரை அவர் ஏதோ குற்றம் சாட்டிவிட்டார். மான நஷ்டமாக ஆயிரக்கணக்கில் ரூபாய் தர வேண்டுமென்று நோட்டீஸ் கொடுத்திருக்கிறார் அந்தப் பேர்வழி. என்ன செய்வது அதற்கு?'' என்று கேட்டேன்.

சிவசிதம்பரம் தன் பாக்கெட் நோட்டைப் பிரித்து, அதில் செருகியிருந்த குண்டூசியை எடுத்துப் பல்லைக் குத்திய வண்ணமே கொஞ்ச நேரம் யோசித்தார். பிறகு, ''தான் சுமத்திய குற்றம் உண்மையானதுதான் என்று நிரூபித்து விட்டால் வம்பே இல்லை,'' என்றார்.

''அது முடியவில்லை என்றால்?''

''ஸிவில் கேசாக இருந்தால் அவர்கள் கேட்கிற நஷ்ட ஈட்டைத் தரவேண்டியிருக்கும். கிரிமினல் கேசானால் ஜெயில் தண்டனை கிடைத்தாலும் கிடைக்கும்,'' என்றார் சிவசிதம்பரம்.

திக்கென்றிருந்தது எனக்கு. ''தாங்க்ஸ் சார்,'' என்று கூறிவிட்டு நகர்ந்தேன். ''மாட்டிக் கொண்டிருப்பவர்

யாரென்று சொல்லாமலே போகிறாயே?'' என்று அவர் கேட்பது என் காதில் விழவில்லை.

பிற்பகல் முழுதும் வனஜா என்னிடம் நெருங்கவே யில்லை. அதனால் எனக்கும் அவளைப்பற்றி எண்ணம் செல்லாதிருந்தது. ஆனால், மாலையில் ஆபீஸ் நேரம் முடிந்து, எல்லோரும் வீட்டுக்குப் புறப்பட்டபோது, வனஜா என்னிடம் ''போகலாமா ஹேமா?'' என்று கேட்டவுடனே எனக்கு விழிப்பு ஏற்பட்டது.

''போகலாமா ஹேமா?''

எங்கே போவது? வனஜாவுடன், அவள் வீட்டுக்கா? எப்படி எனக்கு அங்கே இருப்புக் கொள்ளும்? அறிவுள்ள, வயது வந்த எந்தப் பெண்ணும் செய்யக் கூடாத பெரும் பாவத்தைச் செய்துவிட்டவளோடு கூட எப்படி என்னால் சேர்ந்து வாழ இனிமேல் முடியும்? அப்படி வாழ்ந்தால், அவள் தவற்றை நான் மன்னித்ததாக அல்லவா பொருள்! மன்னிக்கக் கூடாத குற்றம் என்று அதை நான் கருதுகிறேனே!

அதே சமயம் எனக்கு வேறு வழியில்லை என்பதையும் ஞாபகப்படுத்திக் கொண்டேன். வேலை செய்து சம்பாதிக்கிற, தனியான பெண்களுக்காக விடுதிகள் பல இருக்கின்றன. உண்மை. ஆனால் அதைப்பற்றி விசாரித்தறிய வேண்டும். இரண்டொரு நாளாவது ஆகும். இன்று ராத்திரியே கிளம்புவதென்றால் முடியாத காரியம்.

என் கையாலாகாத்தனத்தைக் கண்டு எனக்கே என் மீது கோபம் வந்தது. குழம்பிய மனநிலையுடன், ''நீ போய்க் கொண்டிரு. வருகிறேன்,'' என்றேன்.

என் பேச்சை வனஜா நம்பத் தயாராயில்லை, ''கொஞ்ச நேரம் இருக்கிறேன். வேலையை முடித்துக் கொண்டு வா,'' என்று வற்புறுத்தினாள்.

''போ என்றால் தயவு செய்து போயேன். நான் பாட்டுக்கு வருகிறேன். பொய் சொல்லவில்லை. எனக்கு அந்தப் பழக்கம் கிடையாது,'' என்றேன்.

வனஜா என்னைப் பரிதாபமாக நோக்கிய வண்ணம், ''ஹேமா, நான் மட்டமான பெண்தான். சமூகத்தினால் ஒதுக்கி வைக்கப்பட வேண்டிய ஈனப் பிறவிதான். தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று எவ்வளவோ தரம் நினைத் திருக்கிறேன். அதற்குத் துணிச்சல் வரவில்லை. நீ கண்ணிய மான பெண். கௌரவமான குடும்பத்தில் பிறந்து நாலுபேர் மதிக்கும்படி வாழுகிறவள். என்னைப் போன்ற பெண்ணுடன் பழகுவதும் சினேகிதம் வைத்துக் கொள்வதும் உனக்கு மதிப்புக் குறைவான காரியம்தான். ஆனால் ஒன்றே ஒன்று சொல்கிறேன். கேட்கிறாயா?'' என்றாள்.

''என்ன?'' என்றேன்.

''உன் சிநேகிதம் கிடைத்த பிறகுதான் எனக்கு மனசுக்கு ரொம்ப ஆறுதலாக இருக்கிறது. கோடை வெய்யிலில் அலைந்த பிறகு நிழலைக் கண்டாற் போல் அமைதியும், நிம்மதியும் அடைந்திருக்கிறேன். எவ்வளவு பிழைகள் நான் செய்திருந்தாலும் என்னை ஒதுக்கி விடாதே, ஹேமா. ஆலமரத்தைப் போல விசாலமானது உன் இருதயம். அதிலே நான் ஒண்டிக்கொண்டிருக்க எனக்கு அனுமதியும் இடமும் கொடு.''

அவளுடைய பேச்சு எதுவும் எனக்கு ரசிக்கவில்லை. வேண்டாவெறுப்பாய்ச் சிரிப்பு வரவழைத்துக்கொண்டு, ''நாடகம் எழுதுகிற மாதிரி என்னென்னவோ பேசுகிறாயே? நிஜமாகவே கொஞ்ச நேரம் பொறுத்து வருகிறேன். நீ போ,'' என்றேன்.

அந்த வார்த்தையைக் காப்பாற்ற வேண்டும் என்ற உறுதி சத்தியமாக என்னிடத்தில் இருக்கவில்லை. ஆனால் அதை

முற்றிலும் நம்பியவளாக வனஜா புறப்பட்டுச் சென்ற போது எனக்கு மனம் குறுகுறுத்தது.

அரைமணி சென்றிருக்கும். பியூனை அழைத்து அறையைப் பூட்டலாம் என்று தெரிவித்துவிட்டு வாசலுக்கு வந்தவள் நிலைகுத்தி நின்றேன்.

''ஹேமா! உன் ஆபீஸ் எதுவென்று தெரியாமல் அப்போது பிடித்துத் தடுமாறுகிறேன்,'' என்று சொன்னபடி ஓடிவந்தவள் வேறு யாருமில்லை. அம்மாதான்.

எனக்கேற்பட்ட முதல் எண்ணம் என் மேலுள்ள கோபத்தால் அம்மாவைத் துரத்திவிட்டாள் கௌரியம்மாள் என்பதுதான். நன்றாய் வேண்டும் இவளுக்கு என்று ஒரு குரூரமான மகிழ்ச்சியும் ஏற்பட்டது. ''என்ன? சீட்டுக் கிழித்து விட்டாளா எஜமானியம்மாள்?'' என்றேன் குத்தலாக.

''இந்தப் பரிகாசத்தையும் இடக்கையும் எப்போதுதான் விடப் போகிறாயோ?'' என்றாள் அம்மா மனக்குறையுடன். ''இப்படிக் கொஞ்சம் ஓரமாய் வா. உன்னோடு பேச வேண்டும்.'' என்று அந்த மவுண்ட் ரோடு கும்பலிலிருந்து என்னைத் தனியே அழைத்துச் செல்ல அவள் முயன்றபோது, சரி, பழைய புலம்பலுக்காகத்தான் வந்திருக்கிறாள் என்று புரிந்து கொண்டேன்.

''சீக்கிரமாய்ச் சொல்,'' என்றேன், தியேட்டரைத் தாண்டி ஓர் ஓரமாக நின்றுகொண்டு.

''வக்கீல் நோட்டீஸ் அனுப்பியிருக்கிறாளாமே, கிடைத்ததா?'' என்று அம்மா பதைத்தாள்.

'கிடைத்தது. அப்புறம்?''

''ஐம்பதாயிரம் ரூபாய் நஷ்ட ஈடு கேட்டிருக்கிறாளாமே?''

''கேட்டிருக்கிறாள்.''

''அதைத் தவிர ஜெயிலில்கூடப் போட்டாலும் போடுவார்களாமே?''

''போடுவார்கள்.''

''என்னடி கொஞ்சம்கூடப் பதற்றப்படாமல், நாக்குக் கூசாமல், சொல்லிக் கொண்டே போகிறாய்?''

''நீ கேட்டுக்கொண்டே போகிறாய். நான் சொல்லிக்கொண்டே போகிறேன். வேறென்ன செய்யச் சொல்கிறாய்?'' என்றேன் அடக்கிக் கொண்ட கோபத்துடன்.

அம்மா என் இரு கைகளையும் பிடித்துக் கொண்டாள். ''சொல்வதைக் கேளடி, ஹேமா. கௌரியம்மா என்னிடம் எல்லாம் சொன்னாள். 'உன் பெண்ணோட பிடிவாதம்தான் எனக்குப் பிடிக்கவில்லை, சாரதா. தப்பாகப் பேசியதற்காக என்னை மன்னியுங்கள் என்று ஒரு வார்த்தை கேட்கட்டும். அத்தோடு விட்டுவிடுகிறேன். அப்புறம் அவளும் நீயும் அவுட் ஹவுசில்கூட இருக்க வேண்டாம். இங்கே பங்களாவுக்கே வந்து, என்னோடேயே தங்கியிருக்கலாம்,' என்கிறாள்.''

''அட, அப்படியா!'' என்றேன் கேலியாக.

''நீ அவளைக் கன்னாபின்னாவென்று பேசியதும் தப்புத்தானே? தப்புச் செய்துவிட்டு மன்னிப்புக் கேட்டுக் கொள்வதில் அவமானம் என்ன?''

''நேரமாகிறது. அப்புறம் பஸ்ஸில் ரொம்பக் கூட்டமாகி விடும். உன்னால் ஏறவே முடியாது. சீக்கிரமாய் புறப்படு. அதோ இருக்கிறது பஸ் ஸ்டாப்,'' என்றேன். கொஞ்சம் முன்னால் வரையில் வனஜாவின் வீட்டில் தங்குவதைக் காட்டிலும் அம்மாவிடமே சென்றுவிடலாமா என்ற எண்ணமொன்று எனக்கு இருந்தது. இப்போது அம்மா சொன்னதைக் கேட்டதும் அந்த எண்ணம் பறந்தே போய்விட்டது.

''அப்படியானால் நீ வரப்போவதில்லையா?'' என்று அம்மா கேட்டாள் கசப்பும், வெறுப்பும் கலந்த குரலில்.

''ஊகூம்,'' என்றேன்.

''சரி, மகாராஜியாய் எங்கே உனக்கு இஷ்டமோ, அங்கே போ,'' என்றாள் அம்மா. ''ஆனால் நீ இல்லாமல் எனக்கு அங்கே நரக வாழ்க்கைதான் கிடைக்கப் போகிறது. இன்றைக்கு ஆரம்பித்துவிட்டது. நீ சண்டை போட்டுவிட்டுப் போன பிறகு வேண்டுமென்றே கண்ட கண்ட வேலைகளை யெல்லாம் கொடுத்து என்னை எவ்வளவு கொடுமைப்படுத்த முடியுமோ அவ்வளவும் செய்து கொண்டிருக்கிறாள் கௌரியம்மாள்,'' என்னும்போது அவள் கண்களில் நீர் துளித்தது. ''சந்தேகமானால் என் பின்னாலேயே வந்து பார்,'' என்பதற்கு மேல் பேச முடியாமல் அவள் தொண்டை கரகரத்தது.

எனக்குக் கோபம் வந்தது.

''இவ்வளவு சொல்கிறவள் ஏன் அங்கே தங்கியிருக்க வேண்டும்? நீயுமாச்சு உன் வேலையுமாச்சு என்று ஸ்டவ்வைத் தூக்கி அவள் மூஞ்சியில் அடித்துவிட்டு வந்துவிடு என்று எத்தனை தரம் சொல்லிவிட்டேன் நான்! வருவதற்கென்ன?'' என்றேன்.

''அது முடியவில்லை ஹேமா. முடியவில்லை.'' புடவைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டாள் அம்மா.

''முடியவில்லை என்றால் அனுபவி! உன்னோடு சேர்ந்துகொண்டு நானும் ஊமையாயிருக்கத் தயாராயில்லை,'' என்றேன்.

மேலும் கொஞ்ச நேரம் மன்றாடிப் பார்த்துவிட்டு அம்மா போய்விட்டாள்.

நான் வனஜாவின் வீட்டையடைந்தபோது இருட்டி வெகு நேரமாகிவிட்டது. வாசலிலேயே அவளும் அவள் தங்கை சாவித்திரியும் நின்றிருந்தார்கள்.

வீட்டில் இருக்கும் நேரங்களில் வனஜாவின் இடுப்பில் குழந்தை பாபா இல்லாமல் நான் பார்த்தது கிடையாது. இப்போது அது உள்ளே பாயில் உறங்கிக் கொண்டிருப்பதைக் கண்டேன். பாபா காரணமாக எங்களுக்குள் கசப்பு வளருவதை வனஜா விரும்பவில்லை என்று ஊகித்துக்கொண்டேன். அதனால்தான் நான் வரும் சமயத்தில் அதை இடுப்பில் வைத்துக் கொண்டிராமல் உள்ளே தூங்க வைத்திருக்கிறாள் என்றும் புரிந்து கொண்டேன்.

''நீ வராமல் இருந்துவிடுவாயோ என்று பயந்து கொண்டேயிருந்தேன்,'' என்றாள் வனஜா. என்னைக் கண்டதும் அவளுடைய இருதயத்துக்குள் ஒளியேறியதற்கு அடையாளமாக அவள் முகத்தில் காந்தியும் பளபளப்பும் படர்ந்தன.

''என் அம்மா வந்திருந்தாள். பேசிக் கொண்டிருந்தேன்,'' என்று சுருக்கமாகச் சொல்லிவிட்டு, கைகால் கழுவிக் கொள்ளச் சென்றுவிட்டேன். குழந்தை பாபாவிடம் ஒரு வினாடி நான் நின்றபோது, சட்டென வனஜா கண் சாடை காட்டினாள் - தங்கை சாவித்திரியின் எதிரில் அதைப் பற்றிப் பேச வேண்டாம் என்று.

ஒப்புக்காக ஒரு வாய் மோர் சாதம் சாப்பிட்டேன். பிறகு ஜமுக்காளத்தை விரித்துக் கொண்டு படுத்துவிட்டேன். ''ஹேமா அக்காவுக்கு உடம்பு சரியில்லையா? ஏன் கலகலப்பாய்ப் பேசவில்லை?'' என்று சாவித்திரிகூடக் கேட்டாள். நான் புன்னகை செய்தேனே தவிரப் பதில் தரவில்லை.

வனஜாவின் அப்பா ஜம்பு தன் 'காதலியின்' வீட்டுக்கே திரும்பிவிட்டார் போலிருக்கிறது. ஆளைக் காணோம்.

நடந்ததை எல்லாம் நான் வனஜாவிடம் சொல்லியிருப்பேன் என்று அவருக்கா தெரியாது? பிறகு வனஜாவின் முகத்தில் விழிக்க அவருக்கு என்ன துணிச்சல் இருக்கும்? அவள் ஆபீசிலிருந்து வருமுன்னே ஓடியிருப்பார்...

''தூங்கடா கண்ணு, தூங்கு,'' என்று வனஜா கூறும் குரல் கேட்டது. தூக்கத்தில் பாபா சிணுங்கினான் போலிருக்கிறது. அவனை அணைத்துத் தட்டிக்கொடுத்தவள் சட்டென்று ஏதோ பயப்பட்டவளாக என்னைப் பார்த்தாள். நான் அதைக் கவனிக்காத மாதிரி கண்ணை மூடிக் கொண்டிருந்தேன். பாபாவைத் தட்டிக் கொடுக்கும் வேகத்தையும் ஓசையையும் அவள் மட்டுப்படுத்திக் கொண்டாள். எனக்கு அவள் எண்ணம் புரிந்தது. அந்தக் குழந்தையிடம் அவள் அதிகமாய் அன்பு காட்டுவதை நான் விரும்புகிறேனோ, இல்லையோ என்று பயப்படுகிறாள்!

பாவம் என்று பரிதாபப்படுவதற்குப் பதிலாக, என் கசப்புத்தான் அதிகரித்தது. இனிமேல் இந்த வீட்டில் தங்கக்கூடிய ஒவ்வொரு நிமிடமும் எனக்கும் அவளுக்கும் ஒரு மாபெரும் ஊமைப் போராட்டம் இதுபோல் நடந்து கொண்டேயிருக்கும் என்பதை உணர்ந்தேன். எனக்கென்ன உரிமை அப்படியொரு போராட்டத்தை இந்த வீட்டில் நடத்த? நாலு நாள் சினேகிதம் வனஜாவுடன். அவ்வளவே. அவள் தாயாகியிருக்கும் வகையும் விதமும் எனக்குப் பிடிக்காமல் இருக்கலாம். அதற்காக அவள் தன் குழந்தையுடன் சீராடிக் குலாவுவதைத் தடுக்க எனக்கென்ன அதிகாரம்?

வனஜா சீக்கிரம் தூங்கிப் போய்விட்டாள். ஆனால் இரவு முழுவதும் என் இமைகள் மூடவில்லை. பொழுது எப்போது விடியுமென்று காத்திருந்தவள், காலையின் முதல் வெளிச்சம் பரவும்போதே எழுந்து குளித்துவிட்டேன். வனஜா போட்டுக் கொடுத்த காப்பியை விழுங்கினேன். ''நான் அம்மாவைப் பார்க்க வேண்டும். நேரே அங்கிருந்து ஆபீஸ் வந்து விடுகிறேன்,'' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டேன்.

**யா**னை மிதித்த பிளாஸ்டிக் டப்பாவைப்போல என் உள்ளம் பொடிப் பொடியாகியிருந்தது கௌரியம்மாளின் வீட்டை நெருங்கியபோது. தன்மானம் என்பது தலையைச் சுற்றித் தூக்கி எறியக்கூடிய அற்பப் பண்டம்தான் என்ற உண்மையை அறிந்து கொண்டவளாக உடம்பு கூனிக் குறுக, பங்களாவின் காம்பவுண்டை அடைந்தேன்.

காம்பவுண்டுக்கு இப்பால் இருந்தவண்ணம் எட்டிப் பார்த்தபோது என் உடம்பு பதறியது.

அம்மா சொன்னது உண்மைதான். அவளுக்கு என்ன இழிவான வேலைகள் தர முடியுமோ அதையெல்லாம் கொடுத்திருந்தாள் கௌரியம்மாள். தோட்டமெங்கும் சிதறிக் கிடந்த சருகுகளையும் குப்பைக் காகிதங்களையும் குனிந்து குனிந்து பொறுக்கி, ஒரு கோணியில் அடைத்துக் கொண்டிருந்தாள் என்னைப் பெற்ற அன்னை.

அடுத்து ''இங்கே அடைச்சிட்டிருக்குது, பாரும்மா,'' என்று தோட்டக்காரன் அவளை அழைத்து ஒரு சாக்கடையைக் காட்டினான். நீண்ட இரும்புக் கம்பியால் அங்கே குத்தத் தொடங்கினாள் அம்மா.

உடம்பெல்லாம் பற்றியெரிந்தது எனக்கு. இப்படிப் பட்ட கொடுமைக்கும், இழிவுக்கும் அம்மாவை ஆளாக்கி விட்டிருக்கும் ஆணவக்காரியிடம் சென்று மன்னிப்புக் கேட்பதா? முடியாது, முடியாது! அவளுக்குச் சரியான தண்டனையை வாங்கிக் கொடுக்காமல் விடுவதா? ஒருநாளுமில்லை, இல்லை!

தண்டனை என்று எண்ணியதுமே பிரகாசம்தான் என் நினைவில் எழுந்து நின்றார். கௌரியம்மாள் வீட்டில் நடந்ததையெல்லாம் அவரிடம் நான் சொல்லவேயில்லையே! என்னதான் நான் ஆர்வத்தால் அவசரப்பட்டுக் காரியத்தைக் கெடுத்திருந்தாலும் அடுத்தபடி கௌரியம்மாளை மடக்க வழி கூறாமலா போவார்?

மணி என்ன, பாதை என்ன, இடமென்ன, மனிதரென்ன, சூழ்நிலையென்ன என்று எதையும் கவனியாமல் ஓடினேன் அவரது அலுவலகத்துக்கு.

பிரகாசம் இருந்தார். கை விட்டு அகலாமல் வைத்திருந்த வக்கீல் நோட்டீசைக் கொடுத்தேன் அவரிடம். அமைதியுடன் பிரித்துப் பார்த்தார். அவர் நெற்றியில் சுருக்கங்கள் விழுந்தன, புருவங்களில் முடிச்சுத் தோன்றின.

''கௌரியம்மாள் விஷயத்தை இந்த அளவுக்குப் பெரிசாக்கிவிட்டாயா?'' என்றார் திகைப்புடன்.

எனக்கு அதன் பொருள் புரியவில்லை. ''கள்ளக் கடத்தல் செய்கிறவள் என்று சொன்னேன். அவளுக்குக் கோபம் வந்துவிட்டது,'' என்றேன்.

''வராமல் என்ன செய்யும் ஹேமா? கௌரியம்மா கள்ளக் கடத்தல் செய்வதாக உனக்கு யார் சொன்னது? நான் சொல்லவில்லையே!'' என்றார் பிரகாசம்.

எனக்கு அந்த அறையே சுழன்றது.

## 17

பிரகாசம் சொன்னது உண்மைதான். கௌரியம்மாள் ஒரு கடத்தல்காரி என்று அவர் தன் வாயால் சொல்லவில்லை; கௌரியம்மாளை மடக்கும்படி எனக்கு உத்தரவிடவில்லை. மெஷின் பார்ட் என்ற பெயரில் கௌரியம்மாள் வரவழைத்துள்ள பொருளுக்குள் ஏதோ கள்ளக் கடத்தல் இருக்கிறது என்று குற்றம் சாட்டியவளும் நான்தான்; அந்தப் பொருளைச் சோதனையிட்டவளும் நான்தான். இவ்வளவும் உண்மைதான்.

ஆனால் அதற்காக இவ்வளவு பச்சையாய், இவ்வளவு சட்டென்று இவ்வளவு எளிதாய் என்னைப் பிரகாசம் கை

கழுவிவிட வேண்டுமா என்ன? எனக்கு அவர்மீது கோபம் வந்தது. அவருடைய இலாகாவுக்காக நானாக முன்கை எடுத்துக் கொண்டு எவ்வளவு காரியங்கள் செய்தேன்! ஒரு நொடியில் மனிதர் என்னை உதறுகிறாரே! சே!

இவ்வாறெல்லாம் நான் யோசித்துக் கொண்டிருக்கையில், பிரகாசம் சும்மா என்னை வேடிக்கை பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருக்கவில்லை. ஆபீஸ் பையனைக் கூப்பிட்டு, அவன் கையில் சில்லறை கொடுத்து ஏதோ சொல்லி யனுப்பினார். பையன் அன்றைய தமிழ்ப் பேப்பர் வாங்கி வந்தான்.

பிரகாசம் அந்தத் தினசரியின் இரண்டாம் பக்கத்தைப் பிரித்து, மேற்பகுதியில் மூன்று பத்தித் தலைப்புடன் வெளியிட்டிருந்த ஒரு செய்தியைக் காட்டினார்.

''பிரபல வியாபாரி கைது! ஐந்து லட்ச ரூபாய்க்குத் தங்கக் கட்டிகள் சிக்கின!'' என்ற தலைப்புடனிருந்த செய்தியைக் கிடுகிடுவென்று படித்தேன்.

காசிச் செட்டித் தெருவிலுள்ள லட்சுமணதாஸ் என்ற வியாபாரியொருவர் பிடிபட்டிருக்கிறார் என்று தெரிந்தது. அந்த லட்சுமணதாஸ் யாரென்று எனக்குத் தெரியாது. ஒருவேளை சென்னை வாசிகள் கேள்விப்பட்டிருக்கலாம்.

திகைப்புடன் பிரகாசத்தை நோக்கினேன்.

அவருடைய இள முறுவல், மலர்ந்த சிரிப்பாக விரிந்தது. ''இந்தக் கேஸ் பிடிபட்டது உன்னால்தான்,'' என்றார்.

திடுக்கிட்டவளாக மறுபடி ஒருமுறை பேப்பரைப் பார்த்தேன். அந்தச் செய்திக்கும் எனக்கும் கடுகத்தனை சம்பந்தமும் இருப்பதாகத் தோன்றவில்லை. ''அழுகிற குழந்தைக்கு ஆறுதல் சொல்கிற மாதிரி, என்னைத்

தேற்றுவதற்காக ஏதோவொரு அனாவசியப் பெருமையை என் தலையில் கட்டுகிறீர்களா?'' என்றேன்.

''இல்லை, ஹேமா. இவரைப் பிடிப்பதற்காகத்தான் உன்னை ஒரு திரையாகப் பயன்படுத்தினோம். மற்றப்படி தினகரா அண்ட் கோவையோ அதில் சம்பந்தப்பட்டவர்களையோ - குறிப்பாக, கௌரியம்மாளையோ - நாங்கள் சந்தேகிக்கவுமில்லை. அவர்களை மடக்குவதாகத் திட்டமும் கிடையாது,'' என்றார் பிரகாசம்.

பதற்றத்தில் நான் நாற்காலியை விட்டே சரக்கென்று எழுந்துவிட்டேன்.

''என்ன, என்ன! தினகரா அண்ட் கோவில் உளவு பார்ப்பதற்காக என்னை அமர்த்துவதாக நீங்கள் சொல்லவில்லை? 'சோழன் பேசுகிறேன்' என்று ரகசியக் குறிப்புக் கொடுக்கவில்லை? என்ன சார், ஒரேயடியாய் என்னை முட்டாளாக்குகிறீர்களே!''

''உட்கார், உட்கார்.'' பிரகாசம் ஒரு சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டார். அதுவரை அவர் சிகரெட் பிடித்து நான் பார்த்ததில்லை. நிதானமாகவும் அமைதியாகவும் பேச வேண்டி நேரிடும் போது அவருக்குச் சிகரெட் தேவைப்படும் போலும். ''முதலில் என்னை மன்னித்ததாகச் சொல்,'' என்றார் சிகரெட் கிண்ணத்தினுள் நெருப்புக் குச்சியைப் போட்டுவிட்டு.

''எதற்கு, சார்?''

''எங்கள் கஸ்டம்ஸ் இலாகா உன்னை ஒரு போர்வையாகப் பயன்படுத்திக் கொண்டதற்காக.''

நான் மன்னித்ததாகச் சொல்லவில்லை. ஆனால் பிரகாசம் அதை எதிர்பார்க்காமல் தொடங்கினார்: ''நீ இன்னும் கொஞ்சம் ஆழமாயும் விவேகத்துடனும் யோசனை செய்திருந்தால் உனக்கே சில உண்மைகள் புரிந்திருக்கும்.

ஹேமா! கஸ்டம்ஸ் என்பது நீ நினைத்திருக்கிற மாதிரி பாப்பாக்களைக் கொண்ட டிபார்ட் மெண்ட் அல்ல. பட்டப் பகலில், கப்பலில் என்னை வந்து நீ சந்தித்திருக்கிறாய், வேலை கேட்டாய். தினகரா அண்ட் கோ என்ற ஸ்தாபனத்தில் உளவாளியாக அமர்த்துகிறோம் என்று சொல்லி, நாங்கள் உன்னை அனுப்பியிருக்கிறோம். நீயும் உன் அம்மாவும் இருக்கிற வீட்டுக்கே நான் வந்திருக்கிறேன். கௌரியம் மாளுக்குக்கூடத் தெரியும், நான்தான் உனக்கு வேலை கிடைக்க ஏற்பாடு செய்தேன் என்பது. சாமர்த்தியமாக, தந்திரமாக், ரகசியமாகச் செயல்புரிய வேண்டிய கஸ்டம்ஸ் இலாகா, இப்படியா குழந்தைத்தனமாக நடந்து கொள்ளும் என்று நினைக்கிறாய்? இல்லை ஹேமா, ஒருநாளும் இல்லை,'' என்றார் பிரகாசம்.

''பின்னே?'' என்று கேட்டேன். அதைக்கூடச் சரியாக உச்சரிக்க முடியாமல் நாக்கு உலர்ந்திருந்தது.

''இதோ பிடிபட்டிருக்கிறானே, இந்த லட்சுமணதாஸ், இவன் மீதுதான் ஆரம்ப முதல் எங்களுக்குச் சந்தேகம். இவனுக்குக் கண்ணி வைத்துப் பிடிக்கத்தான் நாங்கள் முயற்சிகள் செய்து கொண்டிருந்தோம். அதற்காக இவன் கண்ணில் மண்ணைத் தூவவேண்டியது அவசியமாயிருந்த. கஸ்டம்ஸ்காரர்களின் சந்தேகம் தன்மீது இல்லையென்றும், நாங்கள் வேறு திசையில், வேறிடத்தில் தீவிரமாய் வேலை செய்து கொண்டிருக்கிறோம் என்றும் இந்த லட்சுமணதாஸ் நினைக்கும்படி செய்ய வேண்டும். அதற்காக யோசித்துக் கொண்டிருந்தபோதுதான் நீ வந்தாய். நீ கப்பலுக்கு வந்திருந்த அதே தினத்தில், அதே நேரத்தில் லட்சுமண தாஸின் ஆட்கள் சிலபேர் கப்பலில் நடமாடிக்கொண்டிருந்தார்கள். நடப் பதைப் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் இருந்தார்கள். உன்னை தினகரா அண்ட் கோவில் அமர்த்தியிருக்கிறோம் என்று அவர்கள் நம்பும்படி பேசிக் கொண்டது அதனால்தான். அதற்கேற்றபடி ஏற்பாடுகளை செய்தோம். நாங்கள் விரித்த

வலையில் முழுக்க விழுந்தான் இந்த லட்சுமணதாஸ். எங்கள் கவனமும் நடவடிக்கையும் வேறிடத்தில் இருக்கிறது என்ற அசட்டுத் தைரியத்தில் கொஞ்சம் அலட்சியமாக இருந்து மாட்டிக்கொண்டுவிட்டான் முட்டாள்! அதனால்தான் சொல்கிறேன், இந்த ஆள் பிடிபட்டதில் உனக்கும் பங்கு உண்டென்று.''

நான் கண்களைக்கூட இமைக்கவில்லை. அவருடைய விசாலமான அறையின் நான்கு சுவர்களும் என்னை நெருங்கி நெருங்கி வந்து, நசுக்குவது போலிருந்தது. பலவகையான குழப்டங்களும், சந்தேகங்களும் என் உடம்புக்குள் பூரான்கள் நெளிவது போல பிலுபிலுவென்று ஓடி, என் மூளையைக் குலுக்கியெடுத்தன. பிரகாசம் பொறுமையுடன் காத்திருந்தார், நான் சொல்லப் போவதைக் கேட்பதற்காக.

''அப்படியானால், 'சோழன் பேசுகிறேன்' என்று டெலிபோனில் குறிப்புக் கொடுத்தது? மவுண்ட்ரோடில் ஒரு நாள் நாம் சந்தித்தபோது, 'நேரே போ பேசாமல்' என்று நீங்கள் ரகசியமாய்ச் சொன்னது? புத்தகக் கடையில் என் முகத்தைப் பார்க்காமலே நீங்கள் என்னிடம் பேசியது?''

பிரகாசம் மறுபடி முறுவலித்தார். ''இந்த லட்சுமணதாசுக்கு ஆயிரம் கண்கள். ஆயிரம் காதுகள். உன்னை உளவாளியாக வைத்து வேறிடத்தில் துப்புத் துலக்கிக் கொண்டிருக்கிறேன் என்று அவன் தொடர்ந்து நம்பிக் கொண்டிருக்க வேண்டாமா? எங்கள் நாடகம் கடைசிக் காட்சி வரையில் வெற்றிகரமாக நடைபெற வேண்டாமா?''

''என்னை இவ்வளவு முட்டாளடிக்காமல், கொஞ்சம் சொல்லவும் சொல்லியிருக்கலாமே?'' என்றேன் ரோஷத்துடன்.

''உன் நடிப்புத் திறமை எப்படியோ என்னவோ எங்களுக்கு எப்படித் தெரியும்? நீ காரியத்தைக் கெடுத்திருந்தால்?''

''அதுதான் போகட்டும். தினகரா அண்ட் கோவில் எனக்காக வேலை கொடுத்து, தன் வேலையை இழந்தாரே குப்தா என்கிற அதிகாரி, அவர்?''

''அவர் நிஜமாகவே லஞ்சம் வாங்குகிற நபர்தான். உனக்காக ஒருவர் நிஜமாகவே லஞ்சம் கொடுத்து அவரைச் சரிக்கட்டி வைத்திருந்தார். கோபிக்கிறாயா ஹேமா? உன்னைக் கதாநாயகியாக வைத்து, ஆனால் உனக்கே தெரியாமல் ஒரு நாடகத்தை நடத்தியது தப்புத்தான். ஆனால் எப்படிப்பட்ட உதவியை நீ செய்திருக்கிறாய் என்பதற்கு இந்தப் பேப்பரே சாட்சி!'' என்று அந்த லட்சுமணதாஸ் செய்தியையே மறுபடி காட்டினார் பிரகாசம்.

என் பொருமல் அவருடைய பாராட்டினால் குறைய வில்லை. என் ஐயங்களும் ஓயவில்லை. ''அப்படியானால், கௌரியம்மாள் தினகரா அன் கோவுக்கு வந்ததும், ஒரு குறிப்பிட்ட பொருளைச் சாக்குக் கட்டியால் மார்க் பண்ணி வைத்ததும் சும்மாதானா?'' என்றேன்.

''அப்படித்தான் இருக்கும். அவள் வாடிக்கையாகத் தினகரா அன் கோவில் பொருள்கள் வாங்குகிறவள்தானே? ஒரே மாதிரியாக நாலைந்து பொருள்கள் இருந்தால், இதுதான் என்னுடையது என்று அடையாளம் செய்து வைப்பதும் தவறில்லையே! கள்ளக் கடத்தல் நடத்துகிற ஸ்தாபனத்தில் வேலைக்கிருக்கிறோம் என்று எண்ணிக் கொண்டதும், பார்க்கிற விஷயம் எல்லாமே சந்தேகமானவை என்று உனக்குத் தோன்ற ஆரம்பித்திருக்கிறது. கௌரியம்மாளை ஏற்கெனவே உனக்குப் பிடிக்கவில்லையாகையால் அவள் நடவடிக்கைகளையும் தப்பாக அர்த்தம் பண்ணி யிருக்கிறாய்...''

நான் தொய்ந்து கொண்டிருந்தேன்.

பிரகாசத்தின் சிகரெட் அணைந்துவிட்டது. இன்னொன்றைப் பற்ற வைத்துக்கொண்டு அவர் சொன்னார்: ''நீ

கௌரியம்மாளைக் கையும் களவுமாய்ப் பிடித்திருப்பதாகச் சொல்லி என்னை அவசரமாய்க் கூப்பிட்டபோது நான் அக்கறை காட்டாமல் பாண்டிச்சேரிக்குப் போய்விட்டதும் அதனால்தான். நான் வராதிருந்தால் நீயும் எதுவும் செய்யாமல் சும்மா இருந்து விடுவாய் என்று நினைத்தேன். அத்தோடு லட்சுமணதாஸ் மாட்டிக் கொள்கிற கட்டமும் நெருங்கிக் கொண்டேயிருந்தது. அந்தச் சமயத்தில் நீ பதற்றமும் அவசரமுமாய் இருப்பதுதான் இன்னும் நல்லது என்று தோன்றியது...''

மேஜைமீது, பேப்பர் வெயிட்டின் கீழே, எனக்கு வந்த கௌரியம்மாளின் ரெஜிஸ்தர் கடிதம் படபடத்துக் கொண்டிருந்தது மின்விசிறிக் காற்றில். 'ஹேமா! சரியான முட்டாளடி நீ!' என்று சொல்லிச் சொல்லிச் சிரிப்பது போலிருந்தது எனக்கு. என்னை இப்படிப் பயன்படுத்திக் கொண்ட பிரகாசத்தைக் கோபிப்பதா, குறை கூறுவதா என்று புரியவில்லை.

வெகுநேரம் நான் மௌனமாக இருக்கவே், பிரகாசம் எழுந்து வந்து என் தோளை மெல்லத் தட்டினார். ''ஸாரி ஹேமா... இப்போது எதுவும் கெட்டு விடவில்லை. லட்சுமணதாஸ் கேஸைப் பிடித்ததில் உனக்கும் ஒரு பெரும் பங்கு உண்டு. அதை நான் அரசாங்கத்துக்குத் தெரிவிக்காமல் இருக்கமாட்டேன். அதனால் உனக்குப் பலன் கிட்டாமலும் போகாது,'' என்றார்.

நான் வெடுக்கென்று, ''நீங்கள் சொல்கிற பலன் ஐம்பதாயிரம் ரூபாய் வடிவத்தில் இருக்குமா?'' என்றேன்.

முதலில் அவர் அந்தக் கேலியைப் புரிந்து கொள்ள வில்லை. புரிந்ததும் சிரித்துக்கொண்டே, ''இந்த வக்கீல் நோட்டீசைச் சொல்கிறாயா? அது சும்மா மிரட்டல்தான். வக்கீல்களுக்கு வேறு விதமான நடையில் எழுத வராது,'' என்றவர், ''ஏதோ தெரியாமல் சொல்லிவிட்டேன். மன்னித்து

விடுங்கள் என்று ஒரு வார்த்தை சொல்லிவிட்டுப் போயேன். எல்லாம் சரியாகிவிடும்,'' என்றார்.

என் கண்களுக்கு மட்டும் எரிக்கும் சக்தி இருந்திருக்குமானால் பிரகாசம் சாம்பலாகியிருப்பார் அந்த வினாடியே. ''என்னைப் பைத்தியக்காரியாக ஆக்கியது போதாதென்று தன்மானத்தையும் இழக்கச் சொல்கிறீர்களா?'' என்று கேட்டுவிட்டு, வக்கீல் நோட்டீசைப் பறித்து எடுத்துக்கொண்டு ''வருகிறேன், ரொம்ப நன்றி.'' என்று கூறிப் புறப்பட்டேன்.

''இரு ஹேமா,'' என்று பிரகாசம் சொல்லிப் பார்த்தார். நான் தடதடவென்று இரண்டு படிக்கு ஒரு காலாக எல்லா மாடிப்படிகளையும் கடந்து கீழே வந்துவிட்டேன்.

தெருவோரத்தில் நின்றேன். எதிரில் துறைமுகத்தின் பெரிய வாசலில் கட்டை வண்டிகளும், லாரிகளும் சாரி சாரியாக ஊர்ந்து நுழைந்து கொண்டிருந்தன. கிட்டத்தட்ட நடுப்பகல் நேரமாகையால் அவற்றின் நிழல்கள் அவற்றின் காலடியிலேயே விழுந்து கிடந்தன. அதைக் காணும்போது என்னைச் சுற்றித்தான் உலகம் இயங்குகிறது என்று நானாக ஏற்படுத்திக் கொண்டிருந்த பிரமைகள் என் நினைவில் எழுந்து என் அவமானத்தை வளர்த்தன. அந்தப் பரந்த சாலையில் குறுக்கும் நெடுக்குமாகப் பறந்து கொண்டிருக்கும் பஸ்களின் முன்னால் விழுந்து உயிரை விட்டுவிட்டால் என்ன என்றுகூட நினைத்தேன்.

இதமான, கனிவான குரலொன்று, ''ஹேமா!'' என்று என்னை அழைத்தது.

நிமிர்ந்து நோக்கியவள், ஹரியைக் கண்டேன்.

அவனைப் பார்க்க எனக்குக் கூச்சமாகத்தான் இருந்தது. அவனுடைய அக்காவை எதிர்த்து நான் தொடுத்த பிரம்மாண்டமான போர் கடைசியில் புஸ்ஸென்று

போய்விட்ட அவமானக் கதையை அவனிடம் சொல்வதா சொல்லாதிருப்பதா என்று யோசித்தபடி நின்றிருந்தேன். அத்துடன் முந்தின தினம் அவ்வளவு அமளிகள் அவன் வீட்டில் நடந்தபோது அவன் மட்டும் எங்கே போயிருந்தான் என்ற திகைப்பும் ஏற்பட்டது.

காரை ஓட்டிக்கொண்டு வந்து என்னருகில் நிறுத்தி யிருந்த ஹரி, ''உன்னை உன் ஆபீசில் தேடினேன், ஹேமா. அங்கே வரவில்லை என்றார்கள். இங்கே இருப்பாய் என்று எதிர்பார்த்தேன். என் ஊகம் கரெக்ட்,'' என்றான்.

''எதற்காக என்னைத் தேடினீர்கள்?'' என்றேன்.

''நான் தேடவில்லை. வேறொருவர் உன்னைத் தேடிக் கொண்டிருக்கிறார். எப்படியும் உன்னைப் பார்த்து அழைத்து வருவதாகச் சொல்லியிருக்கிறேன்.''

''யாரவர்?'' என்ற என் கேள்விக்கு ஹரி உடனே விடையிறுக்கவில்லை. காரின் முன்புறக் கதவைத் திறந்து விட்டு, ''ஏறிக்கொள். அழைத்துப் போகிறேன்,'' என்றான்.

''மன்னிக்க வேண்டும். யார் என்று தெரிந்து கொள்ளாமல் எப்படி வருவது?''

''ஹேமா! என்மீது அவ்வளவு அவநம்பிக்கையா உனக்கு? நீ அந்த நபரைப் பார்த்தால் சந்தோஷம்தான் படுவாய்,'' என்றான் ஹரி.

''எங்கே இருக்கிறார் அவர்?''

''ஒரு கல்யாண வீட்டில். என்னிடம் அட்ரஸ் இருக் கிறது. அங்கே அழைத்து வரும்படி சொல்லியிருக்கிறார்.'' உண்மையிலேயே எனக்கு ஒரு மகிழ்ச்சி ஏற்படுத்த வேண்டுமென்று ஹரி ஆர்வமாயிருக்கிறான் என்பதை அவன் முகத்திலிருந்தும் குரலிலிருந்தும் தெரிந்து கொண்டேன். எனினும் அன்றைய கார் ஷெட் சம்பவத்தை என்னால் மறக்க முடியவில்லை. எச்சரிக்கையில்லாத வனஜா

என்ன கதிக்கு ஆளானாள் என்பதையும் அறிந்திருந்தேனாகை யால் ஹரிக்கு ரொம்ப இடம் கொடுக்கக்கூடாது என்று முடிவு செய்து கொண்டேன். காரின் முன் கதவைச் சாத்திவிட்டு, பின் கதவைத் திறந்து ஏறிக் கொண்டேன்.

பர்மா பஜார் வழியே சென்று சைனா பஜாரில் திரும்பியது கார். ''எந்த இடத்துக்குப் போகிறோம் என்றாவது சொல்லலாமே?'' என்றேன்.

''எழும்பூருக்கு,'' என்று பதிலளித்த ஹரி கொஞ்சம் தயங்கினாற் போல், ''அக்காவிடமிருந்து ஏதோ கடிதம் வந்திருக்கிறதாமே?'' என்றான்.

''கடிதமில்லை. வக்கீல் நோட்டீஸ். ஐம்பதாயிரம் ரூபாய் கேட்டிருக்கிறார்கள்,'' என்றேன்.

மௌனத்தில் கார் ஓடியது சிறிது நேரம். பிறகு ஹரி, ''அக்கா கொண்டு வந்து வைத்திருந்த அந்த மெஷின் பார்ட்டை, அன்றைக்கு ராத்திரியே நானும் சோதனை செய்து பார்த்தேன். எதுவும் தப்பாகத் தென்படவில்லை. உன்னிடம் சொல்ல நினைத்தேன். ஆனால் உனக்கிருந்த உணர்ச்சி வேகத்தில் அதை நீ நம்புவாய் என்று தோன்றவில்லை,'' என்றான். ''ஹேமா, அக்காவின் கடிதத்தை நீ பெரிதாக எடுத்துக் கொள்ளாதே...''

''இல்லை. அது சிறியதாக, சுருக்கமாகத்தான் இருக்கிறது,'' என்றேன் கசப்பான சிரிப்புடன்.

ஹரி என்னுடன் சேர்ந்து சிரிக்கவில்லை. சாலை யோரமாகக் காரை நிறுத்தினான். என்புறம் திரும்பினான். ''ஹேமா, உன் வேதனை எனக்கு நன்றாகத் தெரிகிறது. இது நாமாக வருவித்துக்கொண்ட துன்பம்தான். இதிலிருந்து விடுபடுவது அப்படியொன்றும் கஷ்டமில்லை...''

''எங்கேயோ அழைத்துப் போவதாகச் சொல்லிவிட்டு, காரை நடுவழியில் நிறுத்திவிட்டீர்களே?'' என்று பேச்சை

மாற்றினேன். ஆனால் அதே நேரத்தில், 'ஹரியைக் காட்டிலும் சிறந்த துணைவன் உனக்குக் கிடைக்கமாட்டான். இவன் பேச்சைக் கேள். இவன் ஒருவனிடமாவது உன் தோல்விகளை ஒப்புக்கொள்!' என்று என் உள்மனம் அலறிக் கொண்டிருந்தது. அனுதாபம் ததும்பும் அவன் கண்களையும், ஆறுதல் கூறத் துடிக்கும் அவன் உதடுகளையும், என் முகத்தைப் புதைத்துக் கொள்ளக் காத்திருக்கும் அவனுடைய சிவந்த மார்பையும், என் தலையைக் கோதிக் கொடுக்கத் தவிக்கும் அவன் விரல்களையும் பார்த்தபோதிலும், நான் அவனிடம் தஞ்சம் புக மறுத்தேன். எல்லோரையும் போல இவனும் என்னைக் கௌரியம்மாளின் காலில் விழும்படிதானே சொல்கிறான் என்று வெறுப்பையே அடைந்தேன்.

ஒரு பெருமூச்சுடன் ஹரி காரைச் செலுத்தினான். ரயில்வே ஸ்டேஷனைத் தாண்டி, பல சிறிய பங்களாக்கள் உள்ள காலனியை அடைந்து, ஒரு கல்யாண மண்டபத்தின் எதிரே நிறுத்தினான்.

'என்னைத் தேடியவருக்கும் இந்தக் கல்யாணத்துக்கும் என்ன சம்பந்தம்?' என்று யோசித்தபடியே ஹரியின் பின்னால் நடந்தேன். முகூர்த்தம் முடிந்து, சாப்பாடு நடந்து கொண்டிருந்தது. கல்யாண வீட்டார் பலர் எங்களை உற்றுப் பார்த்தார்கள். அவர்களிலும் எனக்குத் தெரிந்த முகம் எதுவும் இல்லை.

பின்புறமுள்ள சமையற்கட்டை அடைந்தேன். ''இங்கே ஒரு டம்ளர் காப்பி கொடுங்கள்,'' என்று சமையற்காரரிடம் எனக்காகச் சிபாரிசு செய்தபின், ''பார்த்துக் கொண்டு வருகிறேன், இரு,'' என்று கூறிவிட்டுச் சென்றான் ஹரி.

சமையற்காரர் தந்த காப்பியை அருந்திக் கொண்டிருந்தவள் திடீரெனத் திகைத்துப் போனேன். மகிழ்ச்சி, உற்சாகம், வருத்தம், ஏக்கம் எல்லாம் ஒரே வினாடியில் என்னைப் பிடித்தன! காரணம், என் பாட்டி வந்துகொண்டிருந்தாள்!

''பாட்டி! பாட்டி! என்னைத் தேடியவள் நீதானா!'' என்று ஓடிப்போய்க் கட்டிக் கொண்டேன்.

ஆம். தஞ்சாவூரிலிருந்து என் பாட்டிதான் வந்திருந்தாள். இது யாரோ தூரத்து உறவினர் வீட்டுக் கல்யாணம் போலிருக்கிறது.

பாட்டி கோபமாக, என் அணைப்பை விலக்கி, ''ஏண்டி, என்னடி கூத்தடிக்கிறீர்கள் அம்மாவும் பெண்ணுமாய்? இதற்காகவா உன்னைப் பட்டணத்துக்கு அனுப்பி வைத்தேன்? ரயிலிலிருந்து இறங்கியதும் உன்னைப் பார்க்க ஆசையாய் அந்தக் கௌரியம்மாள் வீட்டுக்கு ஓடுகிறேன், 'உன் பேத்தி என்னோடு இல்லை' என்று உன் அம்மா சொல்கிறாள்! ஏண்டி, இரண்டு எழுத்துப் படித்துவிட்டால் இப்படியா தறிகெட்டுப் போகணும்?'' என்றாள்.

அளவற்ற ஆறுதலால் என் கண்களில் நீர் சுரந்தது. விரல் நுனியால் அதைச் சுண்டியெறிந்துவிட்டு, ''அதெல்லாம் அப்புறம் சொல்கிறேன். நீதான் வந்துவிட்டாயே! உன்னைப் பிரிந்து எங்கேயும் போகமாட்டேன். சரிதானே?'' என்றேன்.

''நாளைக்கே நான் ஊருக்குப் போகப் போகிறேன் - நாகப்பட்டணத்திலே பிள்ளை வீட்டுக்காரர்கள் கூப்பிட்டிருக்கிறார்கள். அங்கேயிருந்து தஞ்சாவூர் போகப் போகிறேன்,'' என்றாள் பாட்டி.

''நீ எங்கே போனாலும் நான் வந்துவிடுகிறேன்,'' என்று சொன்னேன், பாட்டியின் எலும்பெடுத்த கைகளைக் கெட்டியாகப் பற்றிக்கொண்டு.

'ஹேமா! கௌரியம்மாளின் காலில் விழமாட்டாய். கௌரவக் குறைவு. ஆனால் சட்டத்தின் பிடியிலிருந்து நழுவி ஓடலாம்? அது ரொம்பக் கௌரவம்? அப்படித்தானே?' என்று எனக்குள் ஒரு குரல் ஒலித்தது.

# 18

**நா**ன் அவளுடனேயே வந்து விடுகிறேன் என்று சொன்னதில் பாட்டிக்குச் சந்தோஷம்தான். இருந்தாலும் ''நீ ஏதோ வேலையில் இருப்பதாய் உன் அம்மா சொன்னாளே?'' என்றாள் சிறிது கோபமாக.

''அதை விட்டு விட்டேன்,'' என்றேன். வனஜாவும் ஜனார்த்தனமும் இருக்கிற இடத்தில் நானும் சேர்ந்து வேலை செய்வதில்லை என்ற முடிவுக்கு எப்போதோ வந்துவிட்டேன் நான்.

''என் உதவி இல்லாமலே பாட்டியும் பேத்தியும் சந்தித்துக்கொண்டு விட்டீர்களே,'' என்று கேட்ட வண்ணம் ஹரி வந்தான்.

''என்னோடு நாகப்பட்டணம் வருகிறாளாம். அவள் அம்மாவிடம் சொல்லிவிடப்பா தயவு பண்ணி,'' என்று பாட்டியே தெரிவித்தாள் அவனிடம்.

''சென்னை வெறுத்துவிட்டதா உனக்கு, ஹேமா?'' என்று வருத்தம் தோய்ந்த குரலில் கேட்டான் ஹரி. பாட்டியின் முன்னிலையில் அதற்குமேல் அவனால் கேட்க முடியவில்லை. ஆனால் அவனுடைய பார்வை ஆயிரம் சேதிகளைச் சொல்லியது எனக்கு.

நான் தலை குனிந்து கொண்டேன். அவனைப் பிரியவிருக்கும் அந்த வேளையில், பழைய கார் ஷெட் நிகழ்ச்சியின் கசப்பு அடியோடு நீங்கிவிட்டது. 'ஹரி, இந்த உலகத்தில் எதை வெறுத்தாலும் உன்னை வெறுக்கமாட்டேன். எதை மறந்தாலும் உன்னை மறக்க மாட்டேன். எதைத் துறந்தாலும் உன் அன்பைத் துறக்கமாட்டேன். என் மனத்தோட்டத்தில் பூத்த முதல் ரோஜா, ஒரே ரோஜா, நீதான் ஹரி,' என்று என்னென்னவோ சொல்ல வேண்டும் போலிருந்தது. அவ்வளவையும் அமுக்கிப் புதைத்துக் கொண்டேன்.

''கொஞ்ச நாள் கழித்துத் திரும்பி வருகிறேன்,'' என்று மட்டுமே சொன்னேன். அது பொய்யென்று நானும் உணர்ந்தேன். ஹரியும் அறிந்தான்.

அன்று இரவு எழும்பூர் ஸ்டேஷனில் ராமேசுவரம் எக்ஸ்பிரஸ் வருவதை எதிர்நோக்கிக் கொண்டு பிளாட்பாரத்தில் உட்கார்ந்திருந்த போதும் என் எண்ணங்கள் ஹரியைச் சுற்றியே சுழன்று கொண்டிருந்தன. நாகூர் கம்பார்ட்மெண்ட்டில் எங்களுக்காக டிக்கெட்டுகள் ரிசர்வ் செய்யப்பட்டிருந்தன. சென்னையில் திருமணம் முடிந்து, நாகப்பட்டணத்துக்குத் திரும்பிக்கொண்டிருந்தார்கள் அனைவரும். புதுமணத் தம்பதிகள் முன்னதாகக் காரில் சென்றுவிட்டார்கள் என்பதைத் தவிர கல்யாண வீட்டாரைப் பற்றி அறிந்து கொள்ள நான் அக்கறை காட்டவில்லை.

திடீரென்று ஓர் ஊளைச் சப்தம் எழுந்து, எழும்பூர் ஸ்டேஷனின் அத்தனை சந்தடிகளையும் அமுக்கியது. தாழ்ந்து ஆரம்பித்து உரத்து வடிவெடுத்த அந்த ஒலியை முதலில் ஏதோ ரயிலின் ஊதல் என்றுதான் நினைத்தேன். மறுவினாடியே டப் டப்பென்று ரயில் நிலையத்தின் விளக்குகள் அணைந்தன. பிளாட்பாரத்தில், ரயில் வண்டிகளில், உணவுச் சாலைகளில், டிக்கெட் கௌண்ட்டரில் - இப்படி எங்கெங்கும் இருளின் ஆட்சி ஓங்கியது. தூரத்தில் நீல வானத்தையும் அதன் நட்சத்திரப் புன்னகைகளையும் தவிர, பார்க்குமிடமெல்லாம் இருட்டில் அமுங்கின. மனிதர்கள் அடிமேலடி வைத்துப் பிசாசுகளைப் போல உலாவினார்கள். ''ஓரம்! ஓரம்! கொஞ்சம் நகர்ந்துக்குங்க!'' என்று குரல் கொடுத்த வண்ணம் நடமாடினார்கள் போர்ட்டர்கள்.

''என்னடி இது, திடீர்னு கஷ்ட காலம்? இவ்வளவு பெரிய ஸ்டேஷனிலே விளக்கைக் கூடவா ஒழுங்காய் வைத்துக் கொள்ள மாட்டார்கள்?'' என்று என் பாட்டி சற்று உரக்கவே சொல்லிவிட்டாள். பக்கத்திலிருந்த சிலர் கடகடவென்று சிரித்துவிட்டார்கள். எனக்கு அவமானமாய்ப் போய்விட்டது.

''உஷ்! சும்மா இரு கொஞ்ச நேரம்,'' என்று பாட்டியின் கைகளை அழுத்திக் கடிந்து கொண்டேன். ''விளக்குகள் தானாக அணைந்து போகவில்லை. வேண்டுமென்றேதான் அணைத்திருக்கிறார்கள்.''

''எதற்காக வேண்டுமென்றே அணைப்பது? பைத்தியம் பிடித்திருக்கிறதா என்ன?'' என்று பாட்டி விடாமல் துளைத்தாள்.

என்னதான் என் சொந்தப் பிரச்சினைகளிலும், போராட்டங்களிலும் நான் மூழ்கியிருந்தாலும், கடந்த சில நாட்களாக வெளியுலகத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த பூகம்பங்களையும் நான் கவனிக்காமல் இருக்கவில்லை. தேசத்தின் எல்லையில் யுத்தத்தின் கருமேகங்கள் கவிந்து கொண்டிருப்பதையும் விமானத் தாக்குதல் ஏற்பட்டால் சமாளிப்பதற்காக இருட்டடிப்பு ஒத்திகைகள் அடிக்கடி நடைபெற்று வருவதையும் நான் அறிந்தே இருந்தேன். அந்த ஒத்திகைதான் இப்போது நடக்கிறது என்றும் சில நிமிடங்களில் விளக்கு வந்துவிடும் என்றும் பாட்டிக்குச் சுருக்கமாக எடுத்துச் சொன்னேன்.

''அப்படியானால் ஒரு பத்து நிமிஷம் விளக்கு வருகிறவரையில் பொறுமையாய்ச் சிவனே என்று உட்கார்ந்திருக்கக் கூடாதோ? என்ன கொள்ளை போகிறது இந்த இருட்டிலே? எதற்குக் குறுக்கும் நெடுக்கும் பறக்கிறார்கள்?'' என்று எல்லோரையும் கோபமாய்த் திட்டிய பாட்டி, ''நீயாவது பெட்டியை ஓரமாய் நகர்த்திக் கொள். யாராவது இடித்துக்கொள்ளப் போகிறார்கள்,'' என்றாள்.

அவள் பேச்சைக் கேட்டதுதான் தப்பாயிற்று.

பெட்டியை ஓரமாய் இழுத்து எச்சரிக்கையாய் ஒதுக்கும்போது யாரோ ஒருவருடைய காலில் நானே இடித்து விட்டேன்.

''ஸ்! ஆ!'' என்று கூவிய குரலிலிருந்து அது ஒரு பெண்மணி என்று நான் கண்டு கொண்டேன். ஆனால் அதல்ல விசேஷம். இடிபட்டதால் காலை உதறியவர், தன் கையிலிருந்த பொருளையும் நழுவவிட்டுவிட்டார் போலிருக்கிறது.

கருங்கல் பிளாட்பாரத்தில் விழுந்தது ஒரு காகிதக் கட்டு. கூடவே சில பென்ஸில்களும் விழுந்து உருளுவதைக் கேட்டேன்.

பாட்டி பாட்டுக்கு, ''என்னடி ஹேமா அது? யார் என்னத்தைப் போட்டார்கள்?'' என்று ஒருபுறம் கேட்க, கீழே விழுந்த காகிதங்களைத் திரட்டுவதில் பல பேர்கள் ஒரே சமயத்தில் முனைய, ''பரவாயில்லை... பரவாயில்லை... நான் எடுத்துக்கொள்கிறேன்?'' என்று அந்தப் பெண்மணி சொல்ல, நான், ''ஸாரி... வந்து...'' என்று வார்த்தைகளை விழுங்க-

அம்மாடி! ஸைரன் மறுபடி ஒலித்தது. பளீர் பளீரென்று வெளிச்சம் வந்தது. நீலக் குழல் விளக்குகள் சிறிது முணுமுணுத்துவிட்டுப் பிறகு பிரகாசமாய் எரிந்தன.

என் முன்னே எப்படிப்பட்ட காட்சி!

புத்தம் புதிய நோட்டுப் புத்தகங்களும் பென்ஸில்களும் சமுத்திரமாய் இறைந்து கிடந்தன. உயிரைக் கையில் பிடித்துக் கொண்டிருக்கிற மாதிரி தோற்றமளித்த ஒரு நடுத்தர வயதுப்பெண்மணி, சற்றும் முகச்சுளிப்பு இல்லாமல், கோபம் காட்டாமல், புன்னகையோடு அவைகளைத் திரட்டிக் கொண்டிருந்தாள். பள்ளிக் குழந்தைகளுக்காக அவைகளை வாங்கிச் செல்லும் ஆசிரியை என்று ஊகித்துக்கொண்டேன்.

''நீங்கள் இருங்கள். நான் எடுத்துத் தருகிறேன் எல்லாவற்றையும். என்னால் நேர்ந்ததுதானே இந்தக் கலாட்டா!'' என்று கூறி, நோட்டுக்களை அடுக்கினேன்.

''நோ, நோ. உன் மீது தப்பில்லை. நான்தான் ஸைரன் ஒலித்ததும் கையைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திராமல் ரொம்ப ஜம்பமாய்ப் புறப்பட்டேன்,'' என்ற அந்தப் பெண்மணி, ''இந்தாப்பா, அந்த நாகூர் கம்பார்ட்மெண்ட்டில்

கொண்டு போய் இதையெல்லாம் வை. ஸகண்ட் கிளாஸ்,'' என்று ஒரு போர்ட்டரிடம் ஒப்படைத்தாள்.

மூலைக்கொன்றாய்ச் சிதறிக் கிடந்த பென்ஸில்களைத் தேடிக் கண்டுபிடித்து, கட்டுக் கட்டிக்கொண்டிருந்தேன் நான். பாட்டி வேறே கிசுகிசுவென்று என்னைத் திட்டிய வண்ணமிருந்தாள்.

''அடடா! என்ன மீனாட்சி இதெல்லாம்?'' என்ற ஆண் குரல் எனக்கருகில் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். இவரை எங்கேயோ பாரத்த மாதிரி இருக்கிறதே என்று ஒரு வினாடி யோசித்தவள் மறுவினாடியே நினைவு வந்தவளாக, ''வணக்கம் சார்,'' என்றேன்.

பிரகாசத்திடம் வேலை கேட்பதற்காக முதன் முதலில் சென்றிருந்த போது, அவர் சோதனையிட்டுக் கொண்டிருந்த கப்பலின் காப்டன்தான் அவர். என்னைத் தங்களுக்கு உளவாளியாக அமர்த்திக் கொள்ளலாமா என்று பிரகாசம் கலந்தாலோசித்த இரண்டு மூன்று பேரில் இவரும் ஒருவர்.

காப்டனும் என்னை உடனே அடையாளம் கண்டு கொண்டு, ''சாயந்தரம் பிரகாசத்தைப் பார்த்தேன். உன்னைப் பற்றிச் சொன்னார். அவர் திட்டமிட்டபடியே பெரிய கேஸ் பிடித்துக்கொடுத்துவிட்டாயாமே?'' என்றார்.

என்னுடைய மற்ற அவமானக் கதைகளைத் தெரிவிக்காமல் அத்துடன் நிறுத்திக் கொண்டாரே என்று பிரகாசத்துக்கு மனத்துக்குள் நன்றி செலுத்திவிட்டு, ''நான் ஒன்றுமே செய்யவில்லை சார்,'' என்றேன்.

''மீட் மை ஒய்ஃப் மீனாட்சி,'' என்று, அந்த நோஞ்சான் பெண்மணியை எனக்கு அறிமுகம் செய்துவிட்டு, ''மிஸ் ஹேமா. கஸ்டம்ஸ் டிபார்ட்மெண்ட்டில் பெரும் புள்ளி,'' என்று கண்ணைச் சிமிட்டிக்கொண்டே தன் மனைவியிடம் என்னைப் பற்றிச் சொன்னார்.

''ஆமாம். ரொம்பப் பெரிய புள்ளி. அதனால்தான் அவர்கள் காலையே இடற வைத்து இவ்வளவு நோட்டுப்

புத்தகங்களையும் பென்ஸில்களையும் சிதறப் பண்ணினேன்.'' என்றுசொன்னேன்.

உடனே பதறிப் போனார், காப்டன். ''இடறி விட்டதா? அடி கிடி பட்டதா என்ன?'' என்று மனைவியின் கையைப் பிடித்துக் கொண்டு கவலையுடன் கேட்டார். ஏன் அவர் அவ்வளவு பதைக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை.

''ஒன்றுமில்லை, சும்மா இருங்கள்,'' என்று கணவனைச் சமாதானப்படுத்திய மீனாட்சி ''மிஸஸ் ரங்க்னேகரைப் பார்க்கப் போயிருந்தேன். இல்லையா? நம்ம பள்ளிக் கூடத்துக்காக டொனேஷனாய்க் கொடுத்தார்கள்,'' என்று தெரிவித்தாள்.

''போகிற இடமெல்லாம் இவளுக்கு டொனேஷன் கலெக்ட் பண்ணுவதுதான் வேலை. சிங்கப்பூரில் ஒரு பள்ளிக்கூடம் நடத்துகிறாள், அனாதைக் குழந்தைகளுக்காக,'' என்று காப்டன் தெரிவித்தார் என்னிடம்.

''நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய்? படிக்கிறாயா?'' என்று மீனாட்சி என்னை விசாரித்தாள்.

''படித்து முடித்துவிட்டேன். வேலை ஒன்றும் சரியானபடி இல்லை,'' என்றேன்.

மற்றக் கல்யாண வீட்டுக்காரர்களுடன் சேர்ந்து கொண்டு கம்பார்ட்மெண்ட்டுக்குச் சென்றுவிட்டாள் என் பாட்டி. மீனாட்சி இரண்டாம் வகுப்புப் பெட்டியை நோக்கி நடந்தாள்.

''மெதுவாய்ப் போ! மெதுவாய்!'' என்று கூறிய காப்டன், பின் கை கட்டிய வண்ணம் தன் மனைவியையே பார்த்தபடி நின்றார். ஒரு மெல்லிய பெருமூச்சு அவரிடமிருந்து வெளிப்பட்டது. ''நான் கடற்படையில் இருந்திருக்க வேண்டியவன். இருந்திருந்தால் இப்போது தேசத்துக்காக ஏதாவது செய்திருக்க முடியும். பணம் சம்பாதிக்க வேண்டும் என்று ஆசைப்பட்டு, பிரைவேட் கப்பல் கம்பெனியில் சேர்ந்தேன். மீனாட்சிக்கு என்னைப் போல மனக்குறை

யொன்றும் கிடையாது. அவள் ஹார்ட் பேஷண்ட். இருதயம் ரொம்ப வீக். ஆனால் தன் பள்ளிக்கூடத்திலும் குழந்தை களிடத்திலும் அக்கறை செலுத்துவதன் மூலம் இருதயத்தைத் தெம்பாய் வைத்துக்கொண்டிருக்கிறாள்...'' என்றவர், சட்டென்று நினைவு வந்தவராக, ''உன்னைப் கூப்பிட்டிருப பாளே? ஐந்து நிமிஷம் பழக வேண்டியதுதான். கூப்பிட்டு விடுவாள்,'' என்றார் சிரித்துக்கொண்டே.

''கூப்பிடுவதா? எங்கே?'' என்றேன் திகைத்துப் போய்.

''சிங்கப்பூருக்குத்தான்! படித்த, இளம் பெண்களைக் கண்டால் அவளால் சும்மா இருக்க முடியாது. 'என்னோடு வந்து விடேன். என் பள்ளிக்கூடத்தில் வேலை பாரேன்,' என்று கேட்காமல் இருக்க மாட்டாள். உன்னையும் கூப்பிட்டிருப்பாள் என்று நினைத்தேன்.''

''இல்லை, கூப்பிடவில்லை,'' என்று நானும் சிரித்துக் கொண்டே பதிலளித்தேன். அந்தச் சமயத்தில் அவருடைய் வார்த்தைகள் ஒன்றும் பெரிதாய்த் தெரியவில்லை.

''நாகப் பட்டணத்தில்தான் நாங்களும் தங்கியிருக்கி றோம். இந்த மாதக் கடைசியில் நான் யு.கே.க்குப் போகிறேன். சிங்கப்பூர் போகிறாள் அவள். முடிந்தால் ஒருநாள் எங்களை வந்து பார்,'' என்று சொல்லி, தன் விஸிட்டிங் கார்டில் நாகப்பட்டணம் விலாசத்தைக் குறித்துக் கொடுத்துவிட்டு அவர் சென்றார். அப்போதும் அதைப் பற்றி நான் விசேடமாய் எதுவும் நினைக்கவில்லை.

ஆனால் நாகப்பட்டணத்தை அடைந்த அடுத்த நாளே காப்டனின் வார்த்தைகளை நினைவுபடுத்திக் கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது.

வேறொன்றுமில்லை. சம்பந்தி வீட்டாரைச் சேர்ந்த ஒரு பெரியவர் என்னைக் கண்டதும் என் பாட்டியிடம் ''உங்கள் பேத்தியா? என்ன செய்து கொண்டிருக்கிறாள்?'' என்று விசாரித்தார்.

''பட்டணத்தில் ஏதோ வேலையில் இருந்தாள். அதையும் தொலைத்துத் தலைமுழுகிவிட்டு நிற்கிறாள் இப்போது,'' என்றாள் பாட்டி. இப்படி மனத்தில் கசப்பு நிறைந்திருக்கிற மாதிரிதான் பாட்டி எப்போதுமே பேசுவது வழக்கம். அதில் விஷம் எதுவும் கிடையாதென்று எனக்குத் தெரியும். இருந்தாலும் அந்தச் சந்தர்ப்பத்தில் மூன்றாம் மனிதருக்கு எதிரில் அவள் அப்படிச் சொன்னதும் எனக்கு ரோஷமாயிருந்தது. என்ன வார்த்தை சொல்கிறோம் என்ற உணர்வு இல்லாமலே, ''கொஞ்ச நாளில் சிங்கப்பூர் போகலாமென்று இருக்கிறேன் - வேலைக்காக,'' என்று சொல்லிவிட்டேன். ஒருவேளை, என் மன ஆழத்தில் உறைந்திருந்த விருப்பம் ஒரு லேசான சாக்குக் கிடைத்தவுடனே வெளிப்பட்டு விட்டதோ என்னவோ?

''ஓகோ... தேவலையே...'' என்று சொல்லிவிட்டு அந்தப் பெரியவர் போய்விட்டார்.

பாட்டி அதிர்ச்சியுடன், ''சிங்கப்பூரா? என்னடி உளறுகிறாய்?'' என்றாள்.

''இன்னும் நிச்சயமாகவில்லை. ஆனதும் விவரமாய்ச் சொல்கிறேன்,'' என்று கூறிவிட்டு, முந்தின தினம் எங்கேயோ அலட்சியமாய் எறிந்துவிட்டிருந்த காப்டனின் விஸிட்டிங் கார்டைத் தேடிப் பிடித்தேன்.

சம்பந்தி வீட்டாரின் கல்யாண விருந்து அமோகமாய் நடைபெற்றுக் கொண்டிருந்த நேரத்தில், விட்டுவிட்டுப் பெய்து கொண்டிருந்த மழையையும் சிலுசிலுவென்று வீசிய குளிர் காற்றையும் லட்சியம் பண்ணாமல் சௌந்தரராஜப் பெருமாள் கோவிலின் சன்னிதித் தெருவில் ஒவ்வொரு வீட்டு இலக்கத்தையும் பார்த்தபடி சென்று கொண்டிருந்தேன். ''வண்டி வேணுமாம்மா?'' என்று விசாரித்துவிட்டுச் செல்லும் ஜட்காக்களையும், அவற்றின் சக்கரங்களுக்கிடையாகக் குடுகுடுவென்று ஓடும் பன்றிக் குட்டிகளையும் பொருட்படுத்தாமல் நான் காப்டனின் விலாசத்தைக் கண்டு பிடிப்பதிலேயே முனைந்திருந்தேன்.

கடைசியில் அவர் வீட்டைக் கண்டுபிடித்தபோது, ஏமாற்றம் ஏற்பட்டது. வாசலில் என்னை வரவேற்ற பூட்டுதான் காரணம்.

என் குழப்பங்களையும் பிரச்னைகளையும் இக்கரையில் கொட்டிவிட்டு, அக்கரைச் சீமைக்குக் கப்பலேறிவிடலாம் என்ற ஆசை அவ்வளவு சுலபமாய் நிறைவேறி விடுமா என்ன?

நல்ல வேளை, காப்டனின் மனைவி சிங்கப்பூருக்குப் பயணமாகிவிடவில்லை என்று தெரிந்தது. எதிர்வீட்டுப் பெண்ணொருத்தி, ''கணவனும் மனைவியும் ஹார்பருக்குப் போயிருக்கிறார்கள்,'' என்று தெரிவித்தாள்.

''எவ்வளவு தூரம்?'' என்று கேட்டேன்.

''அதோ தெரிகிறதே,'' என்று மணிக் கூண்டைக் காட்டினாள் அந்த அம்மாள். ''அந்த மணிக் கூண்டோடு நேரே போங்கள். பக்கம்தான்.''

அவள் காட்டிய வழியில் சென்றேன். பஸ் ஸ்டாண்டையும் அஞ்சலகத்தையும் கடந்து சென்ற போது, என் மனம் தெளிவடைந்திருந்தது. வானமும் கடலும் அளவளாவும் அடிவானத்தின் துல்லியமான பிரகாசம், என் உள்ளத்து அடைசல்களையும் தடுமாற்றங்களையும் விரட்டியடித்தது. பின்னி கம்பெனி கட்டடத்தில் வாசலிலுள்ள மாபெரும் வெள்ளைத் தூண்களைக் கண்டபோது, வாழ்வில் ஒரு நிறைவான நம்பிக்கை என் மனத்தில் கிளைத்தது. இளம் பச்சை நிறத்துடன் கடலோடு கலக்க அமைதியாகச் செல்லும் உப்பனாற்றைக் காணுகையில் என் உள்ளத்திலும் அந்த அமைதி படிந்தது.

குட்டைச் சுவரின் குறுக்கே போடப்பட்டுள்ள கேட்டைத் தாண்டிச் செல்லலாமா கூடாதா என்று யோசித்துக்கொண்டு நான் நின்றிருந்த சமயம், காப்டனே எதிரில் வந்து கொண்டிருந்தார் தன் மனைவியுடன்.

''ஹலோ,'' என்று என் கைகளைக் குலுக்கினார் காப்டன். ''இவள் திரட்டி வைத்திருக்கிற டொனேஷன்

மூட்டைகளைப் பத்திரப்படுத்தி வைப்பதற்காக வந்தோம். இருபதாம் தேதி கப்பல் புறப்படுகிறது. இங்கேயே ஏறி விடுகிறாள்,'' என்றார் காப்டன்.

''உங்கள் பள்ளிக்கூடத்தில் எனக்கு ஒரு வேலை தருகிறீர்களா? நானும் வந்துவிடுகிறேன்,'' என்றேன்.

''நிஜமாகவா சொல்கிறாய்? ரொம்ப சந்தோஷம். ரொம்ப சந்தோஷம்,'' என்று என்னை அணைத்துக் கொண்டாள் மீனாட்சி.

''ஆனால் நான் பாஸ்போர்ட் வைத்துக் கொள்ள வில்லையே?'' என்றேன்.

''கவலைப்படாதே. இந்த ஊரிலேயே அதையெல்லாம் வாங்கிக் கொள்ளலாம்,'' என்றார் காப்டன்.

ஆறேழு நாள் வரையில் பாட்டியிடம் மூச்சு விடவில்லை. நான் பாட்டியுடன் அவள் வசிக்கும் தஞ்சாவூருக்குத்திரும்பினேன். என் பழைய சிநேகிதிகளைச் சந்திப்பதும், ரொம்ப நெருங்கியவர்களிடம் மட்டும் என் சிங்கப்பூர் பயணத்தைப் பற்றி ரகசியமாகத் தெரிவிப்பதுமாக நாட்களை ஓட்டினேன்.

அவர்களிலே ஒருத்தி பாட்டியின் காதில் போட்டு விட்டாள் போலிருக்கிறது. ''ஏண்டி ஹேமா, என்னவோ என் காதில் விழுகிறதே உண்மைதானா?'' என்று என்னைப் பிடித்துக் கொண்டுவிட்டாள்.

''ஆமாம்,'' என்று ஒப்புக் கொண்டேன்.

''இதோ பார், நீ சிங்கப்பூருக்குத்தான் போவாயோ, லண்டனுக்குத்தான் போவாயோ உன் அம்மாவிடம் சொல்லிவிட்டு அதற்கப்புறம் இந்த வாசல் படியைத் தாண்டு. ஆமாம், சொல்லிவிட்டேன்,'' என்று கண்டிப்புடன் கூறினாள் பாட்டி.

''அம்மாவிடம் நானும் சொல்லமாட்டேன். நீயும் சொல்ல வேண்டாம். சும்மா இரு. அம்மாவுக்குத் தெரிவித்தால் உடனே வந்து தடுத்துவிடுவாள். அப்புறம் நான் என்ன

செய்வேனென்று எனக்கே தெரியாது,'' என்று கடுமையாகத் தடை போட்டு வைத்தேன் பாட்டிக்கு.

ஆனால் அந்தத் தடைக்குப் பாட்டி கட்டுப்படுவாள் என்று நான் நம்பவில்லை. ரகசியமாகக் கடிதம் எழுதிப் போட்டிருப்பாள் என்று எதிர்பார்த்தேன். கௌரியம்மாளின் வக்கீல் கொடுத்திருந்த பதினைந்து நாள் கெடுவும் தீர்ந்துவிட்டது.

எதுவும் நேரவில்லை. எனக்குப் புதிராயிருந்தது. திகைப்பாயிருந்தது. நாகப்பட்டணத்துக்காக நான் புறப்பட்ட போது, பாட்டி, ''சுவாமி படத்துக்கு ஒரு ஊதுவத்தி ஏற்றி வைத்து இரண்டு நமஸ்காரம் பண்ணிவிட்டுப் போ,'' என்றுதான் சொன்னாளே தவிர, குறுக்கே விழுந்து மறிக்கவு மில்லை; குய்யோ முறையோ என்று புலம்பவுமில்லை.

நாகப்பட்டணம் அடைந்ததேன். கடற்கரையில் படகில் ஏறினேன். சென்னை துறைமுகம் போல, அங்கேயே கப்பலேற முடியாது என்று அன்றுவரை எனக்குத் தெரியாது. படகில் ஏறி, சுமார் இரண்டு மைல் தள்ளிக் கடலில் நின்றிருந்த கப்பலில் ஏறிக் கொண்டோம்.

வசதிகள் நிறைந்த மேல் வகுப்பு அறையில் சிறிய கட்டிலில் படுத்துக்கொண்டபோது என் மனம் திக் திக்கென்றே இருந்தது.

'ஹேமா! ஹேமா! உன்னை நீயே ஏமாற்றிக் கொள்ளாதே. இந்த மன அமைதி தற்காலிகமானது. நீர்க்குமிழி போல எந்த நிமிடமும் பட்டென்று உடையப் போகிறது,' என்று எனக்குள் யாரோ சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

காலையில் வெளியே தளத்துக்கு வந்தேன். எதிரில் பார்த்தேன். திடுக்கிட்டவளாக, ''என்ன இது? எந்த இடம் இது? சென்னை மாதிரி இருக்கிறதே?'' என்றேன். அருகி லிருந்த ஒரு மாலுமியிடம்.

''ஆமாம், மதறாஸேதான். நாம் இப்போது மதறாஸ் துறைமுகத்தில் இருக்கிறோம். சிங்கப்பூர் கப்பல்கள்

நாகப்பட்டணத்திலிருந்து நேரே சிங்கப்பூருக்குப் போவது கிடையாது. சென்னைக்கு வந்துவிட்டுப் பிறகு அங்கிருந்து சிங்கப்பூர் கிளம்புவதுதான் வழக்கம். உங்களுக்குத தெரியாதா?'' என்றார் மாலுமி.

எனக்குப் பேசவே நாக்கு எழும்பவில்லை.

நான் 'காங்வே' யையே பார்த்துக்கொண்டு நின்றேன். பிரயாணிகளும் கூலிகளும் ஆபீசர்களும், ஒவ்வொருவராக வந்து கொண்டிருந்தார்கள்.

என் அச்சங்கள் உண்மையாகின.

அம்மா வந்து கொண்டிருந்தாள். அவள் பின்னே கௌரியம்மாளும் வந்து கொண்டிருந்தாள்.

## 19

அம்மாவும் கௌரியம்மாளும் வருவதைக் கவனித்த வுடனே எனக்குப் பாட்டியின்மீதுதான் கோபம் ஏற்பட்டது.

தஞ்சாவூரில் நான் இருந்தபோது ஏன் அவ்வளவு அமைதியாக இருந்தாள் என்று இப்போதல்லவா புரிகிறது! ஓசைப்படாமல் அம்மாவுக்கு ஒரு கடிதம் எழுதிப் போட்டு விட்டாள் போலிருக்கிறது. அம்மா என்னை இங்கே மடக்கிக் கொள்ளட்டும் என்றுதான் அவ்வளவு சாதுவாக, எனக்கு ஓர் எதிர்ப்பும் காட்டாமல் இருந்து வந்திருக்கிறாள்.

கப்பலின் ஒரு மூலையிலிருந்து நான் 'காங்வே'யைக் கவனித்துக் கொண்டிருந்தேனாகையால் நான் கவனித்த மாதிரி அவர்கள் என்னைக் கவனித்திருக்க முடியாது. வேகமாக எங்கள் அறைக்குத் திரும்பிவிட்டேன்.

ஒரு நாற்பது பக்க நோட்டுப் புத்தகத்தில் வரவு செலவுகளைக் குறித்துக் கொண்டிருந்த திருமதி மீனாட்சி,

''என்ன நேர்ந்தது?'' என்றாள் கவலையுடன். (பாஸ்போர்ட்டில் திருமதி மீனாட்சி சங்கர் என்றுதான் அவள் பெயர் கொடுத்திருந்தாள்)

''ஒன்றுமில்லையே,'' என்று சொல்லிவிட்டு அந்த அம்மாளுக்கு என் முகத்தைக் காட்டாமல் படுக்கையில் உட்கார்ந்து கொண்டேன். ஜன்னல் வழியே தெரிந்த நீலக் கடலில் கண்ணுக்கெட்டிய தூரம்வரை அமைதி தவழ்ந்து கொண்டிருந்தது. என் உள்ளமோ அதற்கு நேர்விரோதமாகக் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

எதற்காக இங்கே வந்தருக்கிறார்கள் அம்மாவும் அவள் எஜமானியம்மாளும் என்பது சந்தேகமற எனக்குப் புரிந்தது. கைப்பிடியாக என்னை இழுத்துக்கொண்டு போகத்தான் வந்திருக்கவேண்டும். அதற்கு இடம் தரக்கூடாது. நானொன்றும் அவர்களைக் கண்டு அஞ்சவில்லை. கௌரியம்மாளை அவதூறு செய்ததற்காகக் கோர்ட்டிலே வழக்கு நடந்து கொண்டிருக்கிறது என்றாலாவது நான் இப்படி ஓட்டம் பிடிப்பது சட்ட விரோதமாக இருக்கும். வக்கீல் மூலம் வெறுமே மிரட்டியிருக்கிறாள். அதற்கு நான் கட்டுப்படத் தேவையில்லை. என் சுதந்திரத்தைப் பறிகொடுக்க அவசியமில்லை.

''உம்... என்ன பண்ணினேன் என்று தெரியவில்லையே...'' பென்ஸிலால் நெற்றியைத் தட்டிக் கொண்டே முனகினாள் திருமதி மீனாட்சி. வெகு நேரமாய் அவளுடன் பேசாமல் இருந்திருக்கிறோம் என்று எனக்கு உறைக்கவே, ''என்ன மேடம்?'' என்றேன் மரியாதைக்காக.

''ஒரு ஏழே முக்கால் ரூபாய்க்குக் கணக்குத் தெரியவில்லை,'' என்று கூறிவிட்டுத் திருமதி மீனாட்சி தன் பிரச்சினையில் மூழ்கிவிட்டாள். நல்லவேளை, ''நீ ஏன் இப்படிப் பேயடித்தாற்போல் உட்கார்ந்திருக்கிறாய்?'' என்று

என்னைக் கேட்கவில்லை. ஆரம்ப முதலே என் சொந்த விஷயங்களைக் குடைந்து கேட்காமல் இருந்து வருகிறாள். எனக்குப் பாட்டியும் அம்மாவும் இருக்கிறார்கள் என்பதும், கஷ்டப்படுகிற குடும்பத்தைச் சேர்ந்தவள் நான் என்பதும் மட்டுமே அவளுக்குத் தெரியும். வயது வந்த பெண்ணாகையால் என் விருப்பப்படி வேலை பார்க்க உரிமை படைத்தவள் என்றெண்ணி அழைத்துப் போகிறாள் சிங்கப்பூருக்கு. அம்மாவோ, கௌரியம்மாளோ இப்போது வந்து இரண்டு கூச்சல் போட்டால் போதும். 'நல்ல வேளையில் நீ உன் வீட்டோடு போய்ச் சேரம்மா' என்று நடுக்கடலில் என்னை இறக்கிவிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த நிலைமையை ஏற்படக் கூடாதென்றுதான் நான் துடித்தேன்.

டொக். டொக்.

யாரோ கதவைத் தட்டினார்கள். திக்கென்றது. அம்மா இந்த அறையைக் கண்டுபிடித்து விட்டாளா என்ன?

''யார், பார்,'' என்றாள் திருமதி மீனாட்சி.

அச்சத்துடன் திறந்தேன். கப்பலில் வேலை பார்க்கும் ஒரு பையன்தான். ''பேப்பர் வேண்டுமா அம்மா? மெட்றாஸ் பேப்பர்,'' என்றான்.

எனக்கேற்பட்ட ஆறுதலில் அவன் கையிலிருந்த கட்டுத் தினசரிகளையும் வாங்கிக் கொள்ளலாம் போல் இருந்தது. ஒரு பேப்பர் வாங்கிக் கொண்டு சில்லறை கொடுத்துவிட்டு, ''ஏன் தம்பி, கப்பல் எத்தனை மணிக்குப் புறப்படுகிறது?'' என்று கேட்டேன்.

''மூணே முக்காலுக்குன்னு சொன்னாங்க. எப்படியும் அஞ்சு மணிக்குள்ளாற கிளம்பிடுங்க,'' என்று தெரிவித்தான்.

கதவைச் சாத்திக்கொண்டு கட்டிலில் அமர்ந்தேன். மணி பத்தாகிறது. இன்னும் ஏழுமணி நேரம் பல்லைக் கடித்துக் கொண்டு இங்கேயே உட்கார்ந்திருப்பது; சாப்பாட்டுக்குக்

கூடப் போவதில்லை. அம்மாவும் அவள் எஜமானியும் தேடிப் பார்த்துவிட்டுத் தொலைந்துவிட மாட்டார்களா அதற்குள்ளே?

இப்படித் தீர்மானம் செய்து கொண்டு தினசரியைப் பிரித்தேன். பொழுதைக் தள்ளுவதற்காக ஒரு வரிகூட விடாமல் படிப்பது என்று உறுதியும் பண்ணிக்கொண்டேன். ஆனால் இரண்டாம் பக்கத்தின் மேற்புறத்தில் கண்ட ஒரு செய்தி பேப்பரையே மூடும்படி செய்துவிட்டது!

வனஜா! வனஜாவா அப்படிச் செய்திருப்பாள்? என்னால் நம்பவே முடியவில்லை. மறுபடியும் பேப்பரைப் பிரித்துச் செய்தியைப் பார்த்தேன்.

> **சென்னை திருவல்லிக்கேணியைச் சேர்ந்த வனஜா என்ற 22 வயதுப் பெண், தன் தந்தை ஜம்பு என்பவரைக் குத்தியதற்காகப் போலீசாரால் கைது செய்யப்பட்டாள். சில காலமாகவே இவளுக்கும் இவள் தந்தைக்குமிடையே மனத்தாங்கல் இருந்து வந்ததாம். சம்பவ தினத்தன்று ஜம்பு தன் மகளை ஏதோ திட்டவே, ஆத்திரமடைந்து வனஜா கறிகாய் நறுக்கிக்கொண்டிருந்த கத்தியால் அவரைக் குத்தியதாகச் சொல்லப்படுகிறது. ஜம்பு சட்டென்று தடுத்துக் கொண்ட போதிலும் விலாவி்ல் பலத்த காயம் ஏற்பட்டு ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார். அவருடைய உயிருக்கு அபாயமில்லையென்று டாக்டர்கள் கூறினார்கள்...**

ஒரு கணம் பரிதாபமாயிருந்தது - வனஜாவின் குடும்பத்தை நினைக்க. சாவித்திரியும் மற்றக் குழந்தைகளும் இப்போது என்ன செய்து கொண்டிருப்பார்கள்? யார் அவர்களைப் பராமரித்துக் காப்பாற்றப் போகிறார்கள்? வனஜாவின் மீதுதான் என் முழுச் சினமும் பாய்ந்தது. மகள் கெட்டுப் போனதைப் பார்த்துத்தானே அப்பா கெட்டுப் போனார்? பிறகு அவரைக் கண்டிக்கவும் தண்டிக்கவும் இவளுக்கென்ன உரிமை இருக்கிறது? அதுவும் கத்தியால் குத்துமளவுக்கா? சே!

''ஹேமா, கொஞ்சம் தண்ணீர் எடம்மா.'' நான் திடுக்கிட்டேன். இரண்டாம் முறையாகக் கூவியிருக்க வேண்டும் திருமதி மீனாட்சி. நான் கவனிக்காமலே இருந்திருக்கிறேன்.

கூஜாவிலிருந்து தண்ணீர் சரித்து எடுத்துக்கொண்டு அவளை நெருங்கியபோது எனக்குத் தூக்கி வாரிப்போட்டது. நாற்காலியில் மல்லாந்தாற் போல் தலையைச் சாய்த்துக் கொண்டு கிடந்தாள் திருமதி மீனாட்சி. மூச்சுத் திணறுகிற மாதிரி இருந்தது.

''என்னம்மா? என்ன உங்களுக்கு?'' என்றேன் பதறிப்போய்.

''ஒன்றுமில்லை..'' வெளிறிய சிரிப்புடன் திருமதி மீனாட்சி பதிலளித்தாள். ''என்னவோ தலை சுற்றுகிற மாதிரி இருந்தது. பயப்படாதே.'' ஒரு வாய் தண்ணீர் குடித்துவிட்டுக் கண்களையும் துடைத்துக் கொண்டாள். ஆனால் பழையபடி கணக்கு எழுதத் தொடங்கவில்லை. களைப்புடன் கண்களை மூடிக் கொண்டாள்.

'அவள் ஒரு ஹார்ட் பேஷண்ட்' என்று எழும்பூர் ஸ்டேஷனில் காப்டன் சொன்னது எனக்கு நினைவு வந்தது. அதனால் என் பதற்றம் மேலும் அதிகரித்தது.

''கப்பலில் ஒரு டாக்டர் இருப்பார். அழைத்து வரட்டுமா?'' என்றேன்.

''வேண்டாம் ஹேமா. என் ஹாண்ட் பாக்கில் ஒரு மாத்திரை வைத்திருக்கிறேன். எடுத்துக் கொடு. அது போதும்,'' என்றாள் திருமதி மீனாட்சி.

மாத்திரையை எடுத்துத் தந்தேன். விழுங்கினாள். சற்றுத் தேவலைபோல் தோன்றியது. ஆனால் எனக்கு ஆறுதல் ஏற்படவில்லை. டாக்டரை அழைத்து வருவதுதான் மேலென்று எண்ணினேன். இருதய நோய் உள்ளவர்களுக்கு எப்போது என்ன நேருமென்று யாரால் சொல்ல முடியும்?

கதவைத் திறந்த பிறகே; வெளியே தலை காட்டாதிருப்பது என்ற என் எண்ணம் நினைவு வந்தது. ஒடுக்கமான அந்த வெராந்தாவை மேலும் கீழும் பார்த்தேன். ஒரு காக்கிச் சட்டை ஆள் அந்தப் பாதையைக் கூட்டிச் சுத்தப்படுத்திக்கொண்டிருந்தான். அவனைக் கூப்பிட்டு, விஷயத்தைச் சுருக்கமாகச் சொல்லி, டாக்டரை அழைத்து வரும்படி கூறினேன்.

''டாக்டர் கீழே இருக்கிறாங்க,'' என்று நீட்டி முழக்கிக் கொண்டு அவன் சென்றபோதே அவன் விரைவில் திரும்பி வருவது பற்றி எனக்குச் சந்தேகம்தான்.

திருமதி மீனாட்சியிடம் திரும்பினேன். இப்போது அவளுடைய உதட்டில் புன்னகையைக்கூடக் காணோம். அயர்ந்து தூங்கிவிட்டாளோ என்று எண்ணினேன். கூப்பிட்டுப் பார்க்கவும் தயக்கமாயிருந்தது.

இப்படித் திகில் பட்டுக் கொண்டிருப்பதைக் காட்டிலும் டாக்டரிடம் ஒப்படைப்பதுதான் புத்திசாலித்தனம். வருவது வரட்டும் என்று கதவை வெளிப்பக்கம் சாத்திக் கொண்டு கிளம்பினேன்.

கீழ்த் தளத்தில் 'டிஸ்பென்ஸரி' என்ற ஒரு பலகையைப் பார்த்தது எனக்கு நினைவு வந்தது. அங்கேதான் டாக்டரும் இருப்பார் என்று முடிவு செய்தவளாகப் படிகளின் வழியாக இறங்கிச் சென்றேன். கூட்டமாகப் பிரயாணிகள் தென்பட்ட இடங்களை ஒதுக்கிவிட்டு வேறு வழிகளில் போனேன். எங்கேயும் என் அம்மா முகமோ, கௌரியம்மாள் முகமோ தென்படக் காணோம். என்னைத் தேடிப் பார்த்துவிட்டு திரும்பிவிட்டாளோ? அந்த எண்ணம் உதித்ததும் சிறிது நிம்மதி ஏற்பட்டது.

'டிஸ்பென்ஸரி' என்ற பலகை தொங்கிக் கொண்டிருந்த இடத்தை அடைந்தேன். ஒரு பெரிய வெற்றிலை பாக்குக் கடைபோல் அகலமாக இருந்தது அது. கதவுகள் மூடப்பட்டிருந்தன.

''சாயந்தரம் நாலு மணிக்கு மேல்தான் திறப்பார்கள்,'' என்று அனுபவப்பட்ட பிரயாணி ஒருவர் எனக்குத் தெரிவித்துக் கொண்டே சென்றார்.

''டாக்டரை அவசரமாய்ப் பார்க்க வேண்டும். எங்கே இருப்பார்?'' என்று விசாரித்தேன்.

''அப்படிச் சுற்றிக் கொண்டு போய்ப் பாருங்கள். ஒரு சின்ன அறை இருக்கும்,'' என்றார் அவர்.

போய்ப் பார்த்தேன். டாக்டர்தானா அவர்! நம்புவதற்குக் கடினமாயிருந்தது. பழைய ஈர்க்குச்சியைப் போல் ஒல்லியாய், கறுவலாய் இருந்தார். வயது எழுபதுக்கு மேலிருக்கும். வெறும் பனியன் மட்டும் அணிந்துகொண்டு இடது கையால் கண்ணுக்குப் பந்தலிட்டவாறு ஒரு தடித்த புத்தகத்தைப் படிப்பதில் ஆழ்ந்திருந்தார்.

இந்த வயதும் தோற்றமும் உள்ளவர்கள் பொதுவாய்ச் சிடுசிடு வென்று இருப்பதையே நான் பார்த்திருக்கிறேன். டாக்டர் கணபதி அதற்கு நேர் விரோதமாகப் புன்சிரிப்புடன் இருந்தார். ''என்னம்மா குழந்தே?'' என்று அவர் கேட்ட இனிமையில் ஒரு தந்தையின் அன்பை உணர்ந்தேன்.

திருமதி மீனாட்சியின் உடல் நிலைபற்றிச் சொல்லி, ''தயவு பண்ணி என்னோடு ஒரு நடை வந்து பார்த்துவிட்டுப் போங்கள்,'' என்றேன்.

''படித்த பெண்ணாயிருக்கிறாய். இப்படிக் காரண மில்லாமல் கவலைப்படுகிறாயே குழந்தை?'' என்று சொன்னபடி சட்டையை மாட்டிக்கொண்டு, தன் 'கிட்'டை எடுத்துக் கொண்டு புறப்பட்டார். படிகளில் ஏறிவர அவரால் முடியுமோ முடியாதோ என்று கவலைப்பட்டேன். அதற்கு அவசியம் இருக்கவில்லை. சராசரி நடுவயதுக்காரரைப் போல என்னுடன் வந்தார்.

அப்போதும் அம்மாவையோ, கௌரியம்மாளையோ நான் பார்க்கவில்லை. அதாவது என் அறைக்குச் செல்லும் 'வெராந்தா'வை அடைகிற வரையில்.

அந்த நீண்ட 'வெராந்தா' இருட்டாகவும் குறுகலாகவும் இருந்தது. இரு பக்கமும் 'சுவர்'கள். இந்தண்டைக் கோடியில் ஒன்றும் அந்தண்டைக் கோடியில் ஒன்றுமாக இரண்டு வாசல்கள் இருந்தன. டாக்டர் கணபதியுடன் நான் இந்தப் பக்கம் நுழைந்த அதே சமயத்தில், மறுகோடியில் நுழைந்து எதிரே வந்து கொண்டிருந்தார்கள் அம்மாவும், கௌரியம்மாளும். திரும்பிப் போய்விட்டார்கள் என்று நான் நினைத்தது வெறும் கற்பனைதான்!

அந்தக் கோடியில்தான் என்அறை இருந்ததாகையால் அவர்களை நேருக்கு நேர் சந்திக்காமல் நான் தப்ப முடியாதிருந்தது. "நீங்கள் போய்க் கொண்டே இருங்கள்," என்று டாக்டரை மட்டும் அனுப்புவதும் நன்றாயிராது.

தலையைக் குனிந்தபடியே நடந்தேன். காலின் கீழேயுள்ள நிலத்தைத் தவிர வேறு எதையும் பார்க்கவில்லை நான். எப்படியும் ஒருவரையொருவர் இடித்து கொண்டுதான் கடக்க வேண்டும். ஒவ்வோர் அடியையும் அளந்துகொண்டே நடந்தேன். ஆனால்... நிமிர்ந்து நோக்கினேன்.

யாரையும் காணோம்! எங்கள் அறையும் வந்துவிட்டது!

இருவரும் வந்த வழியே திரும்பிச் சென்றுவிட்டார்களா? ஏன்? என்னைப் பார்ப்பதற்காக, பேசுவதற்காக, மடக்கு வதற்காக வந்தவர்கள் திடீரென்று திரும்பி விட்டதற்குக் காரணம் என்ன?

திருமதி மீனாட்சியை டாக்டர் பரிசோதித்துக் கொண்டிருந்தபோதுகூட இதுவே எனக்குப் பெரும் குழப்பமாக இருந்தது.

"ஒன்றுமில்லை உங்களுக்கு. குழந்தை பயப்பட்டு விட்டாள் பாவம்," என்று சொல்லிக் கொண்டிருந்தார் டாக்டர் கணபதி. மருத்துவப் பெட்டியிலிருந்து இரண்டு மாத்திரைகளை அவர் எடுத்துக் கொடுப்பதையும் கண்டேன்.

''இந்தக் கப்பல் இருக்கிறதே ஜமீலா, இதற்கு ஐம்பது வயதாகிறது. நான் நாற்பது வருஷமாக இருக்கிறேன். ரிடையர்மெண்ட்டாவது மண்ணாவது! என்னைப் போகச்சொன்னால், அதோ தெரிகிறதே சமுத்திரம், அங்கே குதிக்க வேண்டியதுதான். பிள்ளைகுட்டி, பெண்டாட்டி, குடும்பம் எல்லாம் எனக்கு இந்த ஜமீலாதான். இதிலே எவ்வளவு ஆபரேஷன் செய்திருப்பேன் தெரியுமா? எவ்வளவு பிரசவம்! எவ்வளவு பிரேத பரிசோதனை!...!''

ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார் டாக்டர். திருமதி மீனாட்சி இப்போது களைப்பு நீங்கியவளாக, நன்றாக உட்கார்ந்து கொண்டு அவர் சொல்வதை ஆர்வத்துடனும் மரியாதையுடனும் கேட்டவாறிருப்பதையும் கவனித்தேன். அப்போதும்கூட நான் என் சிந்தனையிலேயே மூழ்கி யிருந்தேன்.

''நான் வரட்டுமா குழந்தே?'' என்று என் முதுகில் தட்டிவிட்டுப் போய்விட்டார் டாக்டர் கணபதி.

''ஏன் ஹேமா என்னமோ போலிருக்கிறாய்? எனக்குத் தான் ஒன்றுமில்லை என்று டாக்டரே சொல்லிவிட்டாரே? அப்படியுமா கவலை?'' என்று திருமதி மீனாட்சி கேட்டபோதுதான் நான் விழித்துக் கொண்டேன். என்னைப் பற்றி எனக்கே வெட்கமாயிருந்தது. உலகம் மொத்தமும் ஓட ஓட என்னை விரட்டிக் கொண்டிருக்கும் வேளையில் எனக்கு ஆதரவு கொடுத்து அணைத்துக் கொண்டிருப்பவர் இந்த அம்மாள் ஒருத்திதான். அவளையும் அவளுடைய உடல் நிலையையும் மறந்துவிட்டு என்னைப்பற்றியே நினைத்துக் கொண்டிருக்கிறேனே! எவ்வளவு சுயநலக்காரி நான்!

''டாக்டர் சொன்னபிறகுதான் எனக்கு மனச்சுமை குறைந்தது அம்மா,'' என்று ஒரு பொய்யைச் சொல்லிச் சமாளித்தேன்.

''நீ டைனிங் ஹாலுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வாயேன். எனக்கு லிக்விட் டயட் என்று டாக்டர் சொன்னார்,'' என்றாள் திருமதி மீனாட்சி.

''எனக்குப் பசியே இல்லை. நீங்கள் படுத்துத் தூங்குங்கள்,'' என்று கூறி, கட்டிலில் அவருக்கு இடம்விட்டு விட்டு நான் நாற்காலியில் உட்கார்ந்து கொண்டேன்.

டாக்டர் கொடுத்த மாத்திரையின் விளைவோ என்னவோ திருமதி மீனாட்சி ஆழ்ந்த நித்திரை வசப்பட்டு விட்டாள்.

கடல் நீரின் மீது வெய்யில் விளைவித்துக் கொண்டிருந்த தகதகப்பு மெல்ல மெல்லக் குறைந்தது. பிற்பகலின் மங்கல் கொஞ்சம் கொஞ்சமாகப் படர்ந்தது. வெளியே சந்தடிகள் அதிகப்பட்டன.

கப்பல் புறப்படப் போகிறது என்பதை ஊகித்தேன். வெளியே பலர் கை வீசி விடை பெற்றுக் கொண்டிருப்பார்கள். கண்ணீர்கள் ஒற்றப்பட்டுக் கொண்டிருக்கும். சோகமான புன்னகைகள் பூத்துக் கொண்டிருக்கும். கைக்குட்டைகள் வேகமாகப் பறக்கும்.

அந்தக் கோலாகலங்களைக் காணக் கொடுத்து வைக்காதவள் நான்.

திடீரென என் காலுக்கடியில் பூமி அசைவது போல் உணர்ந்தேன். கப்பல் புறப்படத் தொடங்கிவிட்டது. அழகிய தமிழ்நாடே! என்னை ஆட்டி வைத்த சென்னையே! விடை கொடுங்கள் எனக்கு!

வெளியே ஓடிச்சென்று மேல் தளத்தின் பெரிய வெராந்தாவில் நின்றுகொண்டு வேடிக்கை பார்க்க ஆசை மேலிட்டது. அரைமணி நேரம் பொறுமையாய்க் காத்திருந்தபின்-

கதவைச் சாத்திக்கொண்டு படிகளில் தாவினேன். ஓடினேன்.

மேல் தளத்தின் வெராந்தாவை அடைந்ததும் என் கால்கள் சட்டென்று நின்றன. அதிர்ச்சி என்னை உலுக்கியது.

அங்கே உயரமான இரும்புக் கிராதியைப் பிடித்துக் கொண்டு கரையைப் பார்த்தபடி நின்றிருந்தார்கள் பல பிரயாணிகள். அவர்களிலே கௌரியம்மாளும் இருந்தாள்! என் அம்மாவும் இருந்தாள்!

அவர்களும் சிங்கப்பூருக்கு வருகிறார்கள் என்ற பிரமிப்பு ஒருபுறம் என்னை வதைக்க, இன்னொரு விசித்திரத்தையும் கண்டேன்.

இருவரும் கூலிங் கிளாஸ் அணிந்திருந்தார்கள். கௌரியம்மாள் அணிந்து கொண்டது சரி. என் அம்மா? அவளுக்கு ஏன் இந்த வேடம்? யாரோ தங்களை அடையாளம் காணக்கூடாதென்று நினைக்கிறார்களா இருவரும்?

குமுறி வந்த எண்ணங்களின் வேகம் தாளாமல் மூளை சிதறிவிடும் போலிருந்தது எனக்கு.

பதுங்கிப் பதுங்கித் திரும்பி நடந்தேன். வந்த வழியிலேயே சென்றேன் என்று சொல்ல முடியாது. எந்தப் படிகளின் வழியாக நடந்தேனோ, கப்பலின் இன்னொரு பகுதியை அடைந்துவிட்டேன். அது இஞ்சின் அறைச் சிப்பந்திகளுக்கான நான் - வெஜிடேரியன் சமையல் அறை. சடக்சடக்கென்று இறைச்சி வெட்டப்படும் காட்சியைக் கண்டதும் திரும்பினேன் வேகமாக.

உள்ளே இருந்த இரண்டு ஆட்கள் என்னைக் கவனிக்கவில்லை. ஆனால் அவர்களுடைய பேச்சு என் காதில் விழுந்தது.

''எனக்கென்னவோ காப்டன் காதிலே ஒரு பேச்சு சொல்லிடணும்னு தோணுதப்பா,'' என்றான் ஒருவன்.

''நீ போய்யா ஒரு இது! எவனோ எவனுக்கோ டெலிபோன் பண்ணினதை எவனோ ஒருத்தன் கேட்டுவிட்டு

என்னண்டை சொன்னான்னு நான் போய்ச் சொன்னால் காப்டன் என்னைப் பைத்தியக்காரன்னு சொல்லுவார்,'' என்றான் மற்றவன்.

''இது வார் டயம் தம்பி. சண்டை நடந்திட்டிருக்குது - கடல்லே, தரையிலே, ஆகாயத்திலே - எங்கே பார்த்தாலும். எங்கே வேணா எது வேணா நடக்கும். இந்தக் கப்பல் இன்னிக்குக் கிளம்பறதே சந்தேகமாயிருந்திச்சு. தெரியுமா? அப்படியிருக்கிறப்போ கப்பல்லே ஏதோவொரு மறைவான இடத்திலோ யாரோ டயம் பாம் வைச்சிருக்கிறாங்கன்னு உனக்குச் சேதி கிடைச்சிருக்குது. மேலிடத்திலே சொல்லிப் போடறதுதான் நல்லதப்பா'' என்றான் முதல் ஆள்.

என் ரத்தம் உறைந்தது.

## 20

உறைந்து கெட்டியாகிவிட்ட ரத்தம் மறுபடி திரவமாகி உடம்பிலே ஓடுவதற்குப் பல வினாடிகள் பிடித்தன எனக்கு.

'டயம் பாமாவது, ஒன்றாவது! எல்லாம் சிறுவர்களுக்காக எழுதப்படுகிற கட்டுக் கதைகள்!' என்று என்னை நானே ஏமாற்றிக் கொள்ளத் தயாராயில்லை. ஒரு மாதத்துக்கு முன்பு வேண்டுமானால் நான் அப்படி நினைத்திருக்கக்கூடும். ஜேம்ஸ் பாண்ட் படங்களைப் பார்க்கும்போதும், அலிஸ்டேர் மக்ளீனின் நாவல்களைப் படிக்கும்போதும் நான் அப்படி எண்ணியவள்தான் - இப்படிக்கூட ஓர் உலகம், இப்படிக் கூடச் சில சண்டைகள், வேட்டைகள், கருவிகள், கொலைகள் இருக்க முடியுமா என்று. ஆனால் பிரகாசத்தின் மூலமாகக் கள்ளக் கடத்தல் கதைகளைக் கேட்டபிறகு, அவர்களுடைய அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த ரகசியமான கள்ளக் கடத்தல் பொருள்களையும், கருவிகளையும் கண்டபிறகு, உலகில் எதுவும் நடக்கக்கூடியதுதான் என்று நம்பத்

தொடங்கினேன். ஒருமுறை மங்களூரிலிருந்து சென்னைக்குக் கள்ளக் கடத்தல் பொருள்களுடன் புறப்பட்ட ஒரு காரைத் துரத்தியதையும், மூன்று இடங்களில் அவர்கள் கஸ்டம் காரர்களின் கண்ணில் மண் தூவிவிட்டு வெவ்வேறு கார்களை மாற்றிக் கொண்டு தப்பி விட்டதையும் பிரகாசம் சொல்லி யிருந்தார். கதைகளில்கூட அவ்வளவு அதிசயமாக எழுதப் பட்டதில்லையே என்று ஆச்சரியப்பட்டேன்.

ஆகவேதான், இந்தக் கப்பலை எந்த நேரமும் தூள் தூளாகத் தகர்க்கக் கூடிய வெடிகுண்டை யாரோ எங்கேயோ மறைத்து வைத்திருக்கிறார்கள் என்று சமையலறை ஆட்கள் பேசிக் கொண்டதைக் கேட்டபோது நான் அவநம்பிக்கை கொள்ளவில்லை.

அதுவும் யுத்தம் மிக உக்கிரமாக நடைபெற்றுக் கொண்டிருந்த சமயம் அது. போர்க் கப்பலா, வர்த்தகக் கப்பலா, பிரயாணிக் கப்பலா என்ற வித்தியாசங்கள் பாராமல் எதுவானாலும் அழிப்பது என்ற விலங்கு வெறியுடன் எதிரி போராடிக் கொண்டிருந்த வேளை. பல ஊர்களில் அவனுடைய உளவாளிகள் பிடிக்கப்பட்டுக் கொண்டிருந்த செய்தியையும், பத்திரிகைகளில் படித்திருந்தேன்.

நினைத்ததைச் சொல்வதற்குத்தான் இவ்வளவு நேரமாகிறதே தவிர, இத்தனை எண்ணங்களும் ஒரு மின்னல் போல் என் மனத்தில் வெட்டிவிட்டு மறைந்துவிட்டன. உடனேயே என் கையும் காலும் பறந்தன. காப்டனிடம் போய்த் தெரிவித்துவிட வேண்டும் என்று தீர்மானித்தேன். அவர் கூப்பிட்டு விசாரிக்கட்டும் இந்த ஆட்களை. பொய்யா, மெய்யா என்று முடிவு செய்யட்டும். பிறகு ஆகவேண்டிய காரியங்களை நடத்தட்டும்.

ஒடுக்கமான அந்த இருட்டு வெராந்தாவின் வழியே ஓடினேன். எந்தப் பக்கம் திரும்பி, எந்தத் திசையில் சென்றால் காப்டனின் அறை வரும் என்று தெரியவில்லை.

நல்ல வேளையாக இளைஞனொருவன் என் எதிரில் வந்தான். மடிப்புக் கலையாத ஸூட்டும் கோட்டும் அணிந்து கல்யாண ரிஸப்ஷனில் நிற்கும் மாப்பிள்ளையைப் போலத் தோற்றமளித்த அவனிடம், ''காப்டனின் அறைக்கு எப்படிப் போக வேண்டும்? தயவு சொல்ல முடியுமா?'' என்று பதறினேன்.

''அதோ அந்தப் படியை பிடித்துக் கொண்டு ஏறினால்...'' என்று சொல்ல தொடங்கியவன் ''ஆமாம். ஏன் இப்படி உங்களுக்கு உடம்பு நடுங்குகிறது?'' என்றான் வியப்போடு.

''இந்தக் கப்பல்... இதற்கு ஏதோ ஆபத்தாம்... உடனே காப்டனின் காதில் போட வேண்டும்,'' என்றேன்.

அவன் கடகடவென்று சிரித்து, ''அப்பாடா! தரையில் இருக்கும்போதுதான் ஒரே வதந்தி மயமாய் இருக்கிறதென்று நினைத்தேன். நடுக்கடலில் அதற்கு மேல் இருக்கிறதே! என்னிடம் இந்தத் தகவலை இத்துடன் நாலு பேர் சொல்லிவிட்டார்கள்,'' என்றான்.

''இல்லை... வெடிகுண்டு...''

''அதையேதான் நான் கேள்விப்பட்டேன்!'' என்று மீண்டும் சிரித்தான் அவன்.

''நிஜமாகவா?'' என்றேன்.

''இன்னும் விவரமாக நான் சொல்லட்டுமா?'' என்றான் அவன். ''இந்தக் கப்பலில் ஒரு 'டயம் பாம்' வைத்திருக்கிறார்கள். அப்படித்தானே?''

பொசுக்கென்று என் வேகம் குன்றியது. ''ஆ...ஆமாம்...'' என்று தடுமாறினேன்.

''யாரோ வேண்டுமென்றே இந்தப் பிராக்டிகல் ஜோக்கைச் செய்திருக்கிறார்கள். நீங்கள் ஏமாறாதீர்கள்...'' என்றான் அவன்.

''நல்ல வேளை, முட்டாளாகாமல் தப்பினேன். ரொம்பத் தாங்ஸ்,'' என்றேன். ஆனால் என் சந்தேகம் முற்றிலுமாகத் தீரவில்லை.

''நான் கொஞ்சம் முன்பு ஒவ்வொரு ரூமாக வந்து தேடினேனே, உங்களை எங்கேயும் சந்திக்கவில்லை,'' என்றான் அவன். பிறகு பையிலிருந்து ஒரு சாக்லேட் எடுத்துத் தந்தான். ''என் பையன் கிரீஷுக்கு இன்று பிறந்த நாள் விழா. டெக்கில் ஒரு பார்ட்டி வைத்திருக்கிறேன், இரவு பத்து மணிக்கு. நீங்கள் கட்டாயம் வர வேண்டும்,'' என்றான்.

சாக்லேட்டைப் பிரித்து வாயில் போட்டுக்கொண்டேன். ''வருகிறேன்,'' என்று கூறிவிட்டு அவன் வேகமாக மறைந்தான்.

காப்டனின் அறைக்குத் திரும்புவதா, என் அறைக்குச் செல்வதா என்று சில வினாடிகள் குழம்பியபடி நின்றிருந் தேன். சாதாரணக் குழப்பம்தானே? இதற்கு ஏன் என் தலை சுற்ற வேண்டும்? ஏன் கண்கள் இப்படிச் செருக வேண்டும்? ஏன் கைகால்கள் எல்லாம் இப்படி நடுங்க வேண்டும்? ஏன் மார்பு இப்படிப் படபடக்க வேண்டும்?

உடனேயே புரிந்து கொண்டேன்.

வெடி குண்டைப் பற்றியும் கப்பலுக்கு நேர்ந்துள்ள ஆபத்தைப் பற்றியும் எவனிடம் சொல்லக்கூடாதோ அவனிடம் சொல்லிவிட்டேன் போலிருக்கிறது! கப்பலைத் தகர்க்கவிருக்கும் சதிகாரர்களில் அவனும் ஒருவன் போலும்! அவன் கொடுத்தது சாக்லேட் அல்ல - மயக்க மருந்து!

எப்படித்தான் என் புலன்களை ஒன்றுபடுத்திக் கொண்டேனோ! எப்படித்தான் மங்கி மழுங்கிப் பஞ்சடைந்து கொண்டிருந்த புத்தியை ஒருங்கு கூட்டித் தெளிவு பெற்றேனோ!

வினாடியும் தாமதியாமல் டாக்டரிடம் ஓடி எனக்குச் சிகிச்சை செய்து கொள்ள வேண்டும் என்ற உணர்வு ஏற்பட்டது. எப்போது என் வாயை அடைக்க ஒருவன் முற்பட்டானோ அப்போது என் காதில் விழுந்த தகவல் சரிதான் என்ற ஊர்ஜிதமும் ஏற்பட்டுவிட்டது. அதைச் சரியான

நபரிடம் சரியானபடி தெரிவிக்க வேண்டுமானால் முதலில் என்னை நானே காப்பாற்றிக் கொள்ள வேண்டும்...

டாக்டர் கணபதியின் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் வழி அதிர்ஷ்ட வசமாக நினைவில் இருந்தது. ஆனால் தள்ளாடித் தள்ளாடித்தான் அவருடைய அறையை அடைந்தேன். வழியில் தென்பட்டவர்கள் நான் மதுவின் ஆதிக்கத்தில் இருப்பதாகத் தான் எண்ணியிருப்பார்கள்.

டாக்டர் கணபதி சட்டையை மாட்டிக் கொண்டு எங்கோ கிளம்பவிருந்தவர், ''எப்போது இங்கே வந்தாலும் இப்படிப் பதற்றமாகவே வருகிறாயே, குழந்தே! உனக்கு இனிமேல் 'மிஸ் அலார்ம்!' என்று பெயர் வைத்துவிடப் போகிறேன்,'' என்றார்.

''டாக்டர்... இப்போது உண்மையாகவே... வந்து...'' என்னால் அதற்கு மேல் தாக்குப்பிடிக்கமுடியவில்லை. தொய்ந்து சுருண்டு என்னை நானே மடித்துக் கொண்டு கீழே விழுந்தேன்.

டாக்டர் கணபதி கையை நீட்டியபடி என்னை நோக்கி ஓடி வந்ததுதான் நான் கடைசியாகக் கண்ட காட்சி.

அதன் பிறகு எதுவுமே எனக்கு நினைவில்லை.

திரும்ப நான் கண்விழித்தபோது, தண்ணீருக்குள் முழுகி முழுகி எழுகிற மாதிரி இருந்தது. ஆனால் நான் தண்ணீரில் இல்லை. கட்டிலின் கடினத்தை என் முதுகு உணர்ந்தது. எங்கேயோ கண்ணுக்கெட்டாத வெகு தொலைவில் எரிகிற மாதிரி ஒரு விளக்குத் தென்பட்டது. என் நெஞ்சில் பொறுக்க முடியாத எரிச்சலும் வலியும் ஏற்பட்டிருந்தன. பல முறை நான் சிரமத்துடன் வாந்தி எடுத்திருக்க வேண்டும். அதனால்தான் அப்படிப்பட்ட வலியும் எரிச்சலும் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிந்து கொண்டேன்.

ஹோவென்று கப்பலெங்கும் நிசப்தம் சூழ்ந்திருந்தது. கடல் நீரைக் கிழித்துக் கொண்டு செல்வதால் ஏற்படும் ரீங்காரம் மட்டும் மெல்லியதாகக் கேட்டுக் கொண்டிருந்தது. அருகேயிருந்த அலாரத்தைக் கவனித்தேன். அதன் ஃப்ளாரஸெண்ட் முட்கள், மணி மூன்றரை என்று காட்டின. அதாவது விடிகாலை மூன்றரை!

எனக்குச் சாக்லேட் கொடுத்தவனின் நோக்கம் எனக்குப் புரிந்தது. என்னைக் கொல்லவேண்டுமென்பதுகூட இல்லை. சில மணி நேரத்துக்கு நான் மயங்கிக் கிடந்தால் போதுமென்றுதான் அவன் நினைத்திருக்கிறான். ஏனென்றால் நான் அவனைச் சந்தித்தபோது, சென்னையைவிட்டுப் புறப்பட்டுக் கொஞ்ச நேரம்தான் ஆகியிருந்தது. வெடிகுண்டு எங்கே இருக்கிறதென்று கண்டுபிடிக்க முடியாவிட்டாலும், உடனே துறைமுகத்துக்காவது திரும்பி, பிரயாணிகளையும், சரக்குகளையும் கிடுகிடுவென்று இறக்கியிருக்க முடியும். அதற்கு இடமில்லாதபடி அதிக தூரம் பயணம் சென்றுவிட வேண்டும் என்று அவன் நினைத்திருக்கிறான். எப்போதும் கைவசம் வைத்திருக்கும் 'மிட்டாய்'களில் ஒன்றைக் கொடுத்து அவன் என்னை நினைவிழக்கச் செய்தது அதற்காகத்தான்.

மணி மூன்றரை! காலம் கடந்துவிட்டது!

டாக்டர் கணபதி என்னைக் காப்பாற்றிவிட்டார். பலவந்தமாக நான் வாந்தியெடுக்கும்படி செய்து மயக்கத்தின் கடுமையை ஓரளவுக்குக் குறைத்துவிட்டார். ஆனால் நான் யாரையும் காப்பாற்ற முடியாது.

''தேவலையா, ஹேமா?'' என்ற குரல் கேட்டது. அந்தக் குரல் நான் எதிர்பார்த்ததுதான். திருமதி மீனாட்சியின் குரல்.

ஆனால் கண்ணை நன்கு திறந்து பார்த்தபோது, ஒன்றல்ல, மூன்று பெண் முகங்களைக் கண்டேன்.

''இதோ பார், உன் அம்மா. அவர், கௌரியம்மாள்..'' என்னவோ எனக்குத் தெரியாத நபர்களை அறிமுகம் செய்து வைக்கிற மாதிரி பேசினாள் திருமதி மீனாட்சி.

''என்னவெல்லாம் பண்ணிவிட்டாயடி ஹேமா! சிங்கப்பூர் வரையிலும் உன் பின்னாடியே போய், நல்ல புத்தி சொல்லி அழைத்து வருவது என்றுதான் நாங்கள் இரண்டு பேரும் வந்தோம்,'' என்றாள் அம்மா. கௌரியம்மாள் எதுவும் சொல்லவில்லை. என்மீதே அவளுடைய விழிகள் நிலைத்திருந்தன.

இருவரும் இப்போது கறுப்புக் கண்ணாடி அணிந்திருக்கவில்லை என்பதைக் கவனித்தேன். இரவு வேளையில் எதுவுமே தெரியாமல் போய்விடும் என்று நினைத்தார்களோ என்னவோ?

இருதய நோய் உள்ள திருமதி மீனாட்சிக்கு என்னென்ன பரபரப்பெல்லாமோ ஏற்படுத்திவிட்டோமே என்று நான் வருந்திய அதே நேரத்தில், அந்த அம்மாள் உரிமை கலந்த கோபத்துடன், ''ஹேமா! நீ இவ்வளவு பொல்லாத பெண்ணாயிருப்பாய் என்று நான் நினைக்கவேயில்லை. அம்மாவிடம் சொல்லிக் கொள்ளாமல், அவருடைய அனுமதி வாங்கிக் கொள்ளாமல் என்னோடு வந்திருக்கிறாயே! எவ்வளவு கெட்ட பெயர் ஏற்படும் எனக்கு! நான் என்னவோ இந்தியாவிலிருந்து வயதுப் பெண்களையெல்லாம் கடத்திக் கொண்டு போகிறதாக அல்லவா நினைப்பார்கள்?'' என்று சொல்லிக்கொண்டே போனாள்.

அவள் பேச்சிலே என் கவனம் செல்லவில்லை. கோபிக்கிறவர்கள், வருந்துகிறவர்கள், நல்லவர்கள், பொல்லாதவர்கள், அப்பாவிகள், மோசடிக்காரர்கள், யோக்கியர்கள், திறமைசாலிக்ள், மண்டுகள், நோயாளிகள், திடகாத்திரர்கள் அனைவருக்குமே அந்தக் கப்பலில் காத்து நிற்கும் அபாயம் என் ஞாபகத்தில் எழுந்தது. வேற்றுமையின்றி எல்லாருமே சாவைச் சந்திக்கப் போகிறார்கள் இன்னும் சில வினாடியிலோ, நிமிடத்திலோ!

வலுக்கட்டாயமான முயற்சி செய்து படுக்கையில் எழுந்து உட்கார்ந்தேன். எந்தச் செய்தியை அறிவிக்காமலே டாக்டரின் அறை வாயிலில் சுருண்டு விழுந்தேனோ அந்தச்

செய்தியை இப்போதாவது தெரிவித்துவிட வேண்டுமென்ற தீர்மானத்துடன், ''அம்மா..'' என்று வாயைத் திறந்தேன் - என் அம்மாவைப் பார்த்து அல்ல. திருமதி மீனாட்சியைப் பார்த்து.

அதற்குள், ''ஹவ் ஈஸ் மை குழந்தை, ஹேமா!'' என்று கேட்டுக் கொண்டே டாக்டர் உள்ளே வந்துவிட்டார்.

திருமதி மீனாட்சி, ''டாக்டர்! மணி மூன்றே முக்காலா கிறது. நீங்கள் தூங்கவில்லையா?'' என்று வியப்புடன் வினவ, அம்மாவும், கௌரியம்மாளும் சட்டென்று தங்கள் வெளிறிய முகங்களை வேறுபுறம் திருப்பிக் கொண்டு வேகமாக எழுந்திருக்க முனைந்தார்கள். திகில் நிறைந்த அந்தக் கணத்திலும் எனக்கு, 'இவர்கள் கறுப்புக் கண்ணாடி அணிந்திருந்தது இந்த டாக்டர் அடையாளம் தெரிந்து கொள்ளக்கூடாது என்றுதானோ?' என்ற எண்ணம் ஓடிற்று. சாயந்தரம் அவருடன் நான் வந்து கொண்டிருந்தபோதுதான் இவர்கள் இருவரும் திரும்பிச் சென்றார்கள் என்பதும் நினைவு வந்தது.

''தூக்கமா? நான் ஒரு நாளில் நாலு மணி நேரம்தான்...'' என்ற டாக்டர், அவசரமாகத் தன்னைக் கடந்து செல்ல முயலும் அம்மாவையும், கௌரியம்மாளையும் பார்த்துவிட்டார்.

''நீங்கள்...'' அவர் புருவங்களில் முடிச்சு விழுந்தது. பெரு விரலால் நெற்றியைத் தட்டிக் கொண்டார். ''நீங்கள்... அட! எத்தனை வருடமாயிற்று! மறுபடியும் உங்களை இதே கப்பலில், சேர்ந்தே பார்க்கிறேனே!'' என்றார் ஆச்சரியத்துடன்.

என்னதான் அவர்களுடைய மர்மத்தை அறிய எனக்குத் துறுதுறுப்பு ஏற்பட்டாலும், கப்பலின் அபாயத்தை எடுத்துச் சொல்லத்தான் நான் துடிதுடித்தேன். ''நிற்கட்டும் எல்லாம் அப்படி அப்படியே'' என்று ஆணையிட்டு, காலத்தின் முட்களைத் துளியும் நகராமல் ஸ்தம்பிக்கச் செய்யக் கூடிய மந்திர சக்தி எனக்கு ஏற்படக் கூடாதா என்று முட்டாள்தனமாக என் உள்ளம் ஏங்கியது. ஏனெனில் இனி என்ன சொல்லியும்

ஏது செய்தும் ஆபத்தைத் தடுக்க முடியாது என்று என் உள்ளுணர்வு கூறிவிட்டது.

''டாக்டர்... இந்தக் கப்பலில்....''

அவ்வளவு வரையில்தான் என்னால் சொல்ல முடிந்தது. அதற்கடுத்த வார்த்தையை நான் கூறுமுன்-

டமார் என்று காதைச் செவிடாக்கும் ஓசையொன்று கப்பலின் இன்னொரு கோடியிலிருந்து கேட்டது!

''இதுதான் நான் சொல்ல வந்தது'' என்று நான் கூவியதை யாரும் கேட்டிருக்க முடியாது. ஏனெனில் அடுத்தடுத்து இரண்டு மூன்று வெடியோசைகள் எழுந்து என் குரலை அமுக்கிவிட்டன.

அதிர்ச்சியினால் வாயடைத்துப் போன கப்பல் உடனேயே பெரும்கூச்சலுடன் பரபரத்தது. எவனோ அரக்கன் தன் இரு கைகளாலும் பிடித்து உலுக்குவது போலக் கப்பல் தடதடவென்று ஆடியது. வெடி குண்டுகளின் வேகத்தைத் தாளமாட்டாமல் குழப்பமும், இரைச்சலுமாய் அத்தனை பிரயாணிகளும் சிப்பந்திகளும் தங்கள் தங்கள் இடத்தைவிட்டு ஒரே சமயத்தில் வெளியே வர முயன்று அமளியை அதிகமாக்கினார்கள்.

அந்த அமர்க்களத்தில், ஜன வெள்ளத்தில், நானும் மோதுண்டவளாக வெளிப்புறம் வந்தேன். அம்மா! என்ன காட்சி அது! கருநீலமாய் விரிந்திருக்கும் வானத்தின் பின்னணியில் கப்பலின் ஒரு முனை தீப்பற்றி எரிந்து கொண்டிருந்தது. அபாய அறிவிப்புக்களும் அதிகாரிகளின் கட்டளைகளும் திசைகளெங்கும் முட்டி மோதின. சிறகொடிந்த பறவைபோல் கப்பல் தத்தளிப்பது நன்கு தெரிந்தது.

என் அருகில் எவரெவரோ முகம் தெரியாதவர்கள் ஓடிக் கொண்டிருந்தார்களே தவிர திருமதி மீனாட்சியையோ, அம்மாவையோ, கௌரியம்மாளையோ டாக்டரையோ காணவில்லை. ''அம்மா!'' என்று நான் அலறியபோது ஜனக்

கூட்டம் என்னைக் கீழே தள்ளியது. நான் மட்டும் ஒரு மயிரிழை புரண்டு நகர்ந்திராவிட்டால் என் நெஞ்சை ஒரு பூட்ஸ் கால் நசுக்கிக் கூழாக்கியிருக்கும்.

''போட்! போட்! அதோ அங்கே!'' என்று கூவின பல குரல்கள். லைஃப் போட்டைதான் அவர்கள் குறிப்பிடுகிறார்கள் என்று புரிந்து கொண்டேன். ஆனால் ஒரே சமயத்தில் அவ்வளவுபேரும் உயிர் பிழைக்க வேண்டுமானால் எது தேவையோ அந்தப் பொறுமை - கட்டுப்பாடு, நிதானம் எதுவும் அங்கே இல்லை. தாயைத் தள்ளிக் கொண்டு மகன் ஓடினான்; கணவனைத் தள்ளிவிட்டு மனைவி ஓடினாள். 'என் உயிர்! என் உயிர்!' என்ற சுயநலக் குரல் ஒன்றே அந்தக் கொழுந்து. விட்டெரியும் ஆகாயத்தில் எதிரொலித்தது ஓயாமல்.

கைக்கு அகப்பட்ட பிடிப்பைப் பிடித்துக்கொண்டு கடலைப் பார்த்தேன். பிறை நிலாவின் வெளிச்சத்தில், கொந்தளிக்கும் அலைகளின் நடுவில் தலைகள், தலைகள், தலைகளையன்றி வேறெதுவும் தென்படவில்லை. மீண்டுமொரு வெடியோசை கேட்டது. கோபுர உயரத்துக்குத் தண்ணீர் சீறியெழுந்து உருக்கிய வெள்ளியின் நீர் வீழ்ச்சியைப் போல் நடுவானிலிருந்து பொழிகின்ற கோலத்தைக் கண்டு மெய் சிலிர்த்தேன். அச்சத்தால் தொண்டையடைக்கக் கூவும் மனித வெள்ளத்தோடு, எரிகின்ற எண்ணெயின் நாற்றத்தையும் உணர்ந்தேன்.

எவ்வளவு பிறவிகள் எடுத்தாலும் மனத்தினின்று அழியாது அந்தப் பயங்கர இரவு. படகுகளில் தொற்றிக் கொண்டும் தாவிக் கொண்டும் இருந்தவர்கள் கைகளையும், கால்களையும் பைத்தியம் பிடித்தவர்களைப் போல ஆட்டி, தங்களுடன் வந்து சேருமாறு எங்கெங்கோ இருளில், அலையில் முடங்கிவிட்டவர்களையெல்லாம் அழைத்துக் கொண்டிருந்தார்கள். டீஸலின் நெடி வரவர நெஞ்சுக்குள் புகுந்து அடைத்துக்கொண்டு மூச்சைத் திணற வைத்தது.

திடீரென்று என் பாதம், என் தொடை, என் இடுப்பு, என் மார்பு நனைவதை உணர்ந்தேன். ஆம். கடலில் புரட்டி

யெடுக்கப்படும் பிரயாணிகளில் நானும் ஒருத்தியாகி விட்டேன். சிலீரென்ற ஐஸ் தண்ணீர் என் உடம்பைக் குத்தியது. எதையாவது பற்றிக் கொள்ள என் கைகள் துடித்தன. அதே நிமிடம் காலில் ஒரு பலகை தட்டுப்பட்டது. உடைந்து மிதந்து வந்த ஒரு மரக்கதவு அது. அதன் தாழ்ப்பாளில் விரல்களை நுழைத்து, இறுகப் பற்றிக் கொண்டேன். என் தேகத்தின் மேற்பாதி அந்தப் பலகையிலும், கீழ்ப்பாதி தண்ணீரிலுமாக இருந்தது. ஆனால் முழுகிவிடமாட்டேன் என்ற தைரியம் பிறந்தது.

உப்புத் தண்ணீர் மட்டுமல்லாமல் டீஸல் கலந்த தண்ணீரும் என் வாய்க்குள் போய்விட்டதால், அருவருப்புப் பொறுக்கமாட்டாமல் குமட்டலெடுத்தது.

''அம்மா!'' என்று தொண்டை கிழியக் கத்தினேன்.

எட்டத்தில், கப்பலின் பெரும் பகுதி எரிவதையும் பயங்கரமான கோணத்தில் அது சாய்ந்து சிறிது சிறிதாக மூழ்குவதையும் முழுமையாகக் காண முடிந்தது. கடைசிக் கடைசியான ஓசைகள், கடைசிக் கடைசியான தீக்கொழுந்து கள், கடைசிக் கடைசியான நாற்றங்கள் - ஆயிற்று. இன்னும் கொஞ்ச நேரத்தில் இந்தக் கப்பலின் ஐம்பது வருடத்துச் சரித்திரத்துக்கு முற்றுப் புள்ளி போட்டாகிவிடும்.

குளிர் என் உடம்பை விறைக்க வைக்கத் தொடங்கி யிருந்தது. என் புலன்கள் கொஞ்சம் கொஞ்சமாய்ப் பஞ்சடைவது போல் தோன்றியது. அப்படியே உடம்பு விறைத்து, உணர்வுகள் செத்து, என் முடிவு நெருங்கிவிட்டால் நன்றாயிருக்குமே என்று எண்ணினேன். இருந்தாலும், மனிதனால் அறிந்துகொள்ள முடியாத ஒரு சக்தி, இன்னும் வாழ வேண்டும் இன்னும் வாழ வேண்டும் என்ற துடிப்பை நசித்துப்போன எந்த மனித உள்ளத்திலும் எழுப்பிக் கொண்டே யிருக்கிறதே!

''அம்மா!'' என்று நான் திடீரெனக் கத்தினேன்.

ஆம். அம்மாதான். அதோ தண்ணீரில் முழுகி முழுகி வருகிறாள். உயிர் காக்கும் படகில் அவளுக்கு இடமில்லாத தால் அது எட்டச் சென்று கொண்டிருந்தது.

மரப் பலகையை விட்டு விடாமல் காலையடித்து நீச்சல் போட்டு நாலு எட்டில் அவளை அடைந்தேன்.

''ஹேமா! என்று அவளும் கூவினாள் என்னைக் கண்டதும்.

''இதோ, இங்கே பிடித்துக்கொள் - இந்தப் பலகையை!'' என்று கத்திக் கொண்டே கையை நீட்டினேன்.

ஆனால் அம்மா உடனே என்னைப் பிடித்துக் கொள்ளவில்லை. ''ஹேமா, அதோ அங்கே கௌரியம்மாள் திண்டாடுகிறாள் - அவளைக் காப்பாற்று!'' என்றாள்.

பொங்கி வந்தது ஆங்காரம் என் இருதயத்தில். ''மூன்று பேரை இந்தப் பலகை தாங்காது. நீ வா. பிடித்துக்கொள். அவள் எக்கேடா கெட்டுப் போகட்டும்!'' என்றேன்.

''இல்லை. ஹேமா! நீ அவளைத்தான் காப்பாற்ற வேண்டும்!'' என்றாள் அம்மா விடாமல்.

''வேண்டாம். நீ என் அம்மா. உன்னைத்தான் நான் காப்பாற்ற வேண்டும்,'' என்றேன் அழுத்தமாக.

''ஹேமா! அதனால்தான் சொல்கிறேன்,'' என்றாள் அம்மா. ''அவள்தான் - கௌரியம்மாள்தான் - உன் அம்மா!''

## 21

**ம**துரை வடக்கு வெளி வீதியில், சுமார் இருபது வருடங்களுக்கு முன்பு.

''ஏய் கௌரி! வாடி இப்படி இங்கே, நாயே! ஓடுகாலிக்கழுதை! எங்கேடி ஊர் சுற்றிவிட்டு வருகிறாய்?'' திகுதிகுவென்று கனன்று கொண்டிருக்கும் கும்மட்டி அடுப்பில், இரும்புக் கரண்டியின் வால் பாகத்தைச் செருகி வைத்துவிட்டு உறுமினாள் அந்த அம்மாள்.

ஆடை என்கிற அணைகளை உடைத்துக்கொண்டு கௌரியின் பருவச் செழுமை பாய்ந்து கொண்டிருந்த வயது அது. உடம்பிலே மதர்ப்பு இருந்த மாதிரி மனத்திலே துணிச்சல் வளர்ந்திருந்தது. அத்துடன் அவள் உள்ளத்தில் ஏதோ கோபமும் இருந்தது அந்தச் சமயத்தில்.

''பக்கத்து வீட்டுக்குப் போயிருந்தேன், அத்தை! என்ன பண்ணிவிட்டேன் என்று இப்போது கத்துகிறீர்கள்?'' என்றாள்.

''ஓகோ!'' அடுப்பில் காய்ந்து கொண்டிருந்த கரண்டியைக் கையில் எடுத்துக் கொண்டாள் கௌரியின் அத்தை. ''கத்துகிறேனா நான்! என்ன ஒரு இது இருந்தால் நீ பக்கத்துவீட்டு மாடிக்குப் போனேன் என்று இவ்வளவு தைரியமாய் என்னிடம் சொல்வாய்! தடித் தடியாய் எவ்வளவு காலேஜ் பசங்கள் இருக்கிறார்கள் அங்கே! உனக்கென்னடி வேலை அந்த இடத்தில்? காட்டு உன் காலை! ஒரு இழுப்பு இழுக்காமல் விடறதில்லை!''

''மாடி ஜன்னல் வழியாய் நம்ம வீட்டு முற்றத்திலே அவர்கள் நோட்டுப் புத்தகம் ஒன்று வந்து விழுந்துவிட்டது, அத்தை! அதைக் கொடுக்கத்தான் போனேன். அதிலே என்ன தப்பு?''

''என்ன தப்பு என்றா கேட்கிறாய்? ஏண்டி, அன்றைக்கொரு நாள் சீப்பு விழுந்தது. கொடுக்கப் போனாய். இன்னொரு நாள் கர்சீப் விழுந்தது. கொடுக்கப் போனாய். அவர்கள் எப்போது எதைப் போடுவார்கள் என்று நீதான் காத்துக் கொண்டே இருக்கிறாயே! வாடி இப்படி! அந்த ஊர்சுற்றிக் காலிலே ஒரு சூடு போட்டால்தான் நீ வழிக்கு வருவாய்...''

இம்மாதிரி பல சூடுகளைக் கண்டவள்தான் கௌரி. அவள் கணுக்காலைத் தூக்கிப் பார்த்தால் குறைந்தது நாலு கரண்டிச் சூடாவது வடுவுடன் தங்கிவிட்டதைக் காணலாம். கௌரி அதையெல்லாம் லட்சியம் பண்ணுகிறவளல்ல. அப்பாவும், அம்மாவும் இல்லாத அனாதையாக என்றைக்கு இந்த உறவுக்காரர்கள் வீட்டில் வந்து ஒண்டிக் கொண்டாளோ

அன்றைக்கே அவள் எல்லாவற்றையும் துடைத்துப் போட்டுவிட்டாள். அத்தை என்று அழைக்கப்பட்ட இந்தத் தூரத்து உறவுக்காரிக்குக் கௌரியிடம் பாசமும் கிடையாது, பரிதாபமும் கிடையாது.

கௌரி அவள் தரும் தண்டனைகளை உற்சாகமாக ஏற்றுக் கொண்டாள் என்றால் அதற்குக் காரணம் பக்கத்து வீட்டு மாடிதான். கௌரியின் வீட்டு முற்றத்தைப் பார்த்தாற்போல், அந்த மாடி ஜன்னல் இருந்தது. அவள் துணிகளைத் துவைக்கும்போதும், உலர்த்தும் போதும், வற்றல்களைக் காயப்போட்டுக் காவலுக்கு உட்கார்ந் திருக்கும்போதும், அந்த ஜன்னல் நிறைய வாலிபக் கண்களாகவே நிறைந்திருப்பது வழக்கம்.

தற்செயலாகவோ அல்லது வேண்டுமென்றோ அந்த ஜன்னலிலிருந்து ஏதாவது ஒரு பொருள் வந்து விழும்போது, கௌரி அதைச் சேர்ப்பிபதற்காகச் செல்வாள்.

கல்லூரியில் படிக்கும் வாலிபர்கள் மூன்று பேர் அந்த அறையில் இருந்து வந்தார்கள். அவர்களுடைய சினேகிதர்கள் வேறே இரண்டு மூன்றுபேர் எப்போதும் இருப்பார்கள். எல்லோருக்குமே கொண்டாட்டம்தான் கௌரி வந்து விட்டால்.

''தாங்க்ஸ்,'' என்று அவள் கையைத் தொட்டுப் புத்தகத்தைப் பெற்றுக் கொள்வான் ஒருவன்.

இன்னொருவன் குறுக்கிட்டு ''என்னப்பா, மிஸ் கௌரி தன் ரோஜாப் பாதம் கன்றிப் போக மாடியேறி வந்திருக்கிறாள். வெறும் தாங்க்ஸ் தானா?'' என்பான்.

''சரி, அடுத்த முறை ஒரு சாக்லேட் வாங்கி வைக்கிறேன். சரி தானே?'' என்று கண்ணைச் சிமிட்டுவான் மூன்றாமவன்.

''ஆனால், தானே காகிதத்தைப் பிரித்து, தானே வாயில் போட்டுக் கொள்ளும் சிரமத்தை வைக்கக்கூடாது மிஸ் கௌரிக்கு!''

இந்தப் பேச்சுக்களையும் இன்பத் தீண்டல்களையும், சீண்டல்களையும் மகிழ்ந்து அனுபவித்துவிட்டுத் திரும்பும் கௌரிக்கு, அத்தையம்மாள் வழங்கும் தண்டனைகளா பெரிதாகத் தோன்றும்? நாளுக்கு நாள் அவளுடைய துணிச்சல் அதிகரித்ததே தவிரக் குறையவில்லை. அந்தப் பக்கத்து வீட்டு வாலிபர்களுக்கு எந்த அளவு வரை சுதந்திரம் கொடுப்பது, எங்கே தடுத்து நிறுத்துவது என்றுகூட அவள் தெரிந்து கொள்ளக் கவலைப்படவில்லை.

சென்ற மாதத்தில் ஒருநாள், அத்தையும் அவள் கணவரும் வெளியூர் சென்றிருந்தபோது - வீட்டில் அவள் மட்டுமே தனியாக இருந்தபோது - வரம்பு மீறியே ஒருவன் உரிமை கொண்டாடிவிட்டான்.

இரவு பத்து மணிக்குமேல் அவர்களில் ஒருவன் வந்தபோது, அவள் கதவைத் திறந்து உள்ளே அனுமதித்த தாவது சிறிய தவறுதான். அவன் கொண்டு வந்திருந்த பொருள்களை அருந்தியதும் சாப்பிட்டதும்தான் பெரிய தவறாயிற்று. அதன் பின்னர் ஏதோ சொப்பன உலகத்தில் சஞ்சரிப்பதுபோல அரை மயக்கத்திலேயே இருந்தாள்.

பொழுது விடியுமுன் அவன் போய்விட்டான். கண்விழித்த கௌரிக்கு தன் உடம்பில் ஏதோ மாறுதல் நிகழ்ந்திருப்பது போல் தோன்றியது. ஆனால் அவள் அதைப் பெரிதாக நினைக்கவில்லை. மறுநாள் அவர்கள் கையை ஆட்டிச் சிரித்தபோது முகத்தைக் கோபமாகக்கூட வைத்துக் கொள்ளவில்லை. பதிலுக்குச் சிரித்து, அவர்களை மன்னித்து விட்டதாக அறிவித்தாள்.

ஆனால் அப்படியெல்லாம் அவளிடம்விளையாடிய வர்கள் - உரிமைகொண்டாடியவர்கள் - சொல்லாமல் கொள்ளாமல் ஊருக்குக் கிளம்பிக் கொண்டிருந்த போதுதான் அவளுக்குக் கோபம் வந்தது.

நோட்டுப் புத்தகத்தைக் கொண்டு போய்க் கொடுக்கிற சாக்கில் அவள் சற்று முன் சென்ற போது, அந்த வாலிபர்கள்

பெட்டியைப் பூட்டுவதும் ஹோல்டாலைக் கட்டுவதுமா யிருப்பதைக் கண்டு திடுக்கிட்டாள்.

''ஹலோ கௌரி! எங்கே போனாலும் உன்னை மறக்கமாட்டோம்,'' என்றான் ஒருவன்.

''எங்கே போகிறீர்கள்?'' என்று திகைத்தாள் அவள்.

''வெகேஷன் விட்டாயிற்று! எங்கள் ஊர்களுக்குப் போகிறோம்.''

''அவ்வளவுதானே? இரண்டு மாதம் கழித்துத் திருப்பி வந்து விடுவீர்கள் இல்லையா?''

''இல்லை. எங்கள் படிப்பு முடிந்துவிட்டது. இனிமேல் வேலை வேட்டைதான். எங்கே கிடைக்கிறதோ அங்கே போய் விடுவோம்,'' என்றார்கள்.

''இதை எங்கள் ஞாபகமாக வைத்துக்கொள், கௌரி,'' என்று ஒரு பேனாவை நீட்டினான் ஒருவன்.

''நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்,'' என்று அலமாரியில் கோபமாக எறிந்துவிட்டுத் திரும்பிவிட்டாள்.

அப்போதுதான் அவளுடைய அத்தை கரண்டியை அடுப்பில் போட்டுவிட்டுக் காத்துக் கொண்டிருந்தாள்.

''காட்டடி காலை!'' என்று உறுமினாள் அவள்.

கௌரிக்கு இருந்த எரிச்சலில், ''ஒரு கரண்டி போதாது அத்தை! இன்னும் நாலு கரண்டி காயப்போட்டு எடுத்து வாருங்கள்!'' என்று சொன்னதோடு, காலையும் தூக்கிக் காட்டிவிட்டாள.

''என்னடி சொன்னாய்?'' என்று அத்தையம்மாள் பாய்ந்தபோது-

''இதோ பார். இந்தக் கடுதாசி யார் எழுதியிருக் கிறார்களென்று தெரியவில்லையே!'' என்று வாசற்புறத்தி லிருந்து வந்தாள் அத்தையின் கணவர். வாயில்லாப் பூச்சியான அவர், பெரும்பாலும் வாசல் திண்ணையில்தான் விழுந்து கிடப்பார்.

கரண்டியை எறிந்துவிட்டு, "கடுதாசியா? கடிதம் போட நமக்கு யார் இருக்கிறார்கள்?" என்று கேட்டாள் கௌரியின் அத்தை.

"இவளுடைய பெரியப்பாவாமே? அந்தமானில் ஆபீஸராய் இருந்தாரே, அவர் எழுதியிருக்கிறார்," என்றாள் அத்தை கணவர்.

"ஓகோ! அவரா? முப்பது வருடத்துக்கு முன்னால் எவளோ வடக்கத்திக்காரியைக் கல்யாணம் செய்து கொண்டு போய்விட்டதாகச் சொல்வார்களே, அந்த மனிதரா? அம்மாடி! இவளைத் தொலைத்துத் தலை முழுக இப்போதாவது ஓர் இடம் கிடைத்ததே?" என்று பெருமூச்சு விட்டுக்கொண்டு கடிதத்தைப் படித்தாள் அத்தை.

கௌரியும் மனம் படபடக்க அதைக் கேட்டாள்.

"... என் தம்பி பெண் கௌரி உங்கள் வீட்டில் இருப்பது இப்போதுதான் தெரியவந்தது. அவளையும் அவள் தம்பி ஹரியையும் இங்கே அனுப்பிவிடக் கோருகிறேன். இத்தனை நாள் தாங்கள் அவர்களைப் பராமரித்து வந்ததற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்..." என்று எழுதியிருந்தார் சிவானந்தம் - அந்தமான் பெரியப்பா.

கௌரி அப்போது அடைந்தது மகிழ்ச்சிதான் என்று சொல்வதற்கில்லை. முன்பின் பார்த்திராத ஒரு பெரியப்பா விடம் போய் என்ன திண்டாடப் போகிறோமோ என்றுதான் அவள் நினைத்தாள். தெரியாத தேவதையான அவரைக் காட்டிலும் தெரிந்த பிசாசான இந்த அத்தையிடமே காலத்தை ஓட்டலாம் என்றுகூட அவள் எண்ணினாள்.

ஆனால் அத்தை அதற்குச் சம்மதித்தால்தானே! "அந்த அந்தமான்காரருக்கு உடனே எழுதிக் கப்பலுக்குப் பணம் அனுப்பச்சொல்லுங்கள். இவளுக்குப் புடைவை வாங்கிக் கொடுத்தது, கைக்கும், காதுக்கும் பண்ணிப் போட்டது - இதெல்லாம் இரண்டாயிரம் ரூபாய் போல நமக்குக் கடன்

இருக்கிறதே அதையும் அனுப்பச் சொல்லுங்கள்,'' என்று கட்டளைகள் பிறப்பித்துவிட்டாள் கணவனுக்கு.

அந்தமான் சிவானந்தத்திடமிருந்து பணம் வரவும், கௌரி புறப்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்து முடிக்கவும் இரண்டு மூன்று மாதங்களாகிவிட்டன. தம்பி ஹரி, திருநெல்வேலியில் சற்று நல்ல மாதிரியான உறவினர்களிடம் தங்கிப் படித்துக் கொண்டிருந்தான். ஆகவே அவனை அழைத்துக் கொள்ளத் தேவையில்லை என்று கௌரி முடிவு செய்துவிட்டாள்.

கௌரியின் அத்தை கணவர் அவளைச் சென்னைக்கு அழைத்துச் சென்றார். அப்போது அந்தமானுக்கும் சென்னைக்குமாகச் சென்று கொண்டிருந்த 'ஜமீலா' கப்பலில் அவளை ஏற்றிவிட்டார்.

இரண்டு அழுக்குப் புடவைகளும், ஒரு கிழிசல் படுக்கையும் கொண்ட கடைசி வகுப்புப் பிரயாணியாகக் கௌரி பயணமானாள் அந்தமானுக்கு.

கப்பல் புறப்பட்ட கொஞ்ச நேரத்துக்கெல்லாமே அவளுக்கு வாந்தியும், தலைசுற்றலும் ஏற்பட்டன. வேறு பல பிரயாணிகளும் தன்னைப் போலவே அவதிப் படுவதைக் கண்டவள், கப்பலில் உள்ள ஆஸ்பத்திரிக்கு அவர்கள் செல்வதைப் பார்த்து, தானும் சென்றாள்.

டாக்டர் கணபதி கௌரியின் வாழ்க்கையில் மூன்று முக்கியமான சந்தர்ப்பங்களில் குறுக்கிட்டிருக்கிறார்.

அது முதலாவது தடவை.

தலைசுற்றல் என்று கூறிக்கொண்டு வந்த ஒவ்வொரு பிரயாணிக்கும் ஒரு மாத்திரையைக் கொடுத்து அனுப்பிய டாக்டர், கௌரியை மட்டும் அப்படி உடனே அனுப்பிவிட வில்லை. ''இப்படி இரு, குழந்தே,'' என்றுகூறி அவளை உட்காரச் சொல்லிவிட்டு, மற்றப் பிரயாணிகளைக் கவனித்து அனுப்பினார். பிறகு கௌரியை உள்ளே 'கன்ஸல்ட்டிங்' அறைக்கு அழைத்துச் சென்று, நர்ஸின் உதவியோடு

உடம்பைப் பரிசோதித்தார். பின்னர் ஒரு புன்னகையுடன், ''உனக்கு ஏற்பட்டிருப்பது வெறும் ஸீஸிக்னஸ் மட்டுமில்லை, குழந்தே. இந்த நிலையில் நீ தனியாகவா பிரயாணம் பண்ணுகிறாய்? கூட யாரும் வரவில்லை?'' என்று கேட்டார்.

தூக்கிவாரிப் போட்டது கௌரிக்கு. டாக்டருடைய பேச்சுக்கும், புன்னகைக்கும் பொருளென்ன என்று அவள் புரிந்துகொள்ள தவறவில்லை. உண்மையில் இரண்டு மூன்று மாதமாகத் தன் உடம்பில் ஏற்பட்டு வந்துள்ள மாறுதலை அவளே உணர்ந்துதான் இருந்தாள். ஆனால்-

''என்ன புரியவில்லையா, குழந்தே! புரியாமலிருக்குமா? கங்கிராசுலேஷன்ஸ். உன் புருஷன் என்னம்மா செய்கிறான் அந்தமானிலே?'' என்று அடுக்கடுக்காக விசாரித்தார் டாக்டர் கணபதி.

மென்று விழுங்கிப் பதிலளித்துவிட்டு 'டெக்' குக்குத் திரும்பினாள் கௌரி. அன்று அந்தப் பக்கத்து வீட்டு வாலிபர்களுக்கு இடம் கொடுத்தது பெரும் பாவமான செய்கை என்றோ, அவமானப்பட வேண்டியது என்றோ நினைத்து அவள் மறுகவில்லை. போகிற இடத்தில் தன்னை ஆதரித்துக் காப்பாற்றப்போகிற பெரியப்பாவினிடத்தில் இதற்குத் தகுந்த சமாதானம் ஒன்று சொல்லியாக வேண்டுமே என்றுதான் கவலைப்பட்டாள்.

'உன் புருஷன் என்னம்மா செய்கிறான்?' என்ற டாக்டரின் கேள்வி அவளுக்கு ஒரு யோசனை சொல்லிக் கொடுத்தது. சுற்றும் முற்றும் பார்த்தாள். தனியாக, சாதுவாக, உட்கார்ந்திருக்கும் ஒரு பெண்ணைக் கண்டுபிடித்து மெதுவாய் நெருங்கினாள்.

''ஒரு மஞ்சள் துண்டு இருக்குமா உங்களண்டை? தினம் நான் மஞ்சள் பூசித்தான் குளிக்கிறது வழக்கம். கொண்டுவர மறந்துவிட்டேன்,'' என்றாள்.

அந்தப் பெண் கௌரியை ஆச்சரியத்துடன் பார்த்தாள். கௌரியின் முகத்தையும், பேச்சுத் தோரணையையும்

பார்த்தால், மஞ்சள் பூசிக் கொள்கிறவளாகத் தோன்றவில்லை. இருந்தாலும் பழைய டிரங்குப் பெட்டியைத் திறந்து, தகர சோப்பு டப்பாவுக்குள் வைத்திருந்த மஞ்சள் துண்டை எடுத்துக் கொடுத்தாள்.

முழ நீளமுள்ள ஒரு ட்வைன் நூலை எங்கேயோ சம்பாதித்துக்கொண்ட கௌரி, யாருமில்லாத இடத்துக்குச் சென்றாள். மஞ்சளை அரைத்து ட்வைன் நூலில் நன்றாய்த் தடவிக் கொண்டாள். கழுத்தில் தாலிபோல் கட்டிக் கொண்டாள்.

பெரியப்பாவிடம் என்னென்ன வசனம் பேச வேண்டும் என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டவளாகத் திருப்தியுடன் அவள் திரும்பியபோது -

தன் செய்கைகள் அனைத்தையும் கவனித்துக்கொண்டு அந்தப் பெண் - மஞ்சள் துண்டு கொடுத்தவள் - நின்றிருப்பதைக் கண்டாள்.

கௌரி வாயைத் திறக்குமுன், அவள் புரிந்து கொண்டவளாக, ''பயப்படாதே. நான் யாரிடமும் சொல்லமாட்டேன்,'' என்று உறுதி கூறினாள்.

சாரதாவும், கௌரியும் ஒருவருக்கொருவர் அறிமுகமானது அந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

சாரதாவின் கணவன் அதே கப்பலின் இஞ்சின் அறையில் 'செராப்' என்ற மேஸ்திரியாகப் பணியாற்றுகிறான் என்றும், அந்தமானில் நடக்கும் ஒரு தமிழ்ப் பள்ளிக்கூடத்தில் வேலை செய்வதற்காக சாரதா செல்கிறாளென்றும் அறிந்து கொண்டாள் கௌரி.

அடுத்த இரண்டு நாளும் கௌரியின் உற்ற துணையாகவும் தோழியாகவும் விளங்கியவள் சாரதாதான். அவள் கணவன் தங்களது மெஸ்ஸில் தயாராகும் ஸ்பெஷல் ரொட்டியை ரகசியமாய்க் கொண்டு வந்து கொடுப்பான். அதிலே கொஞ்சம் பங்கு கௌரிக்கும் கிடைக்கும். அவன் கீழே வேலைபார்க்கும் ஆயில்மேன்களும் ஃபயர்மேன்களும்

காசு வைத்துச் சீட்டாடுவார்கள். சாரதாவின் கணவன் காசைத் தோற்றுப் பரிதாபமாக நிற்பான். கௌரிக்கு இதெல்லாம் பொழுது போக்கான வேடிக்கையாக இருந்தாலும், தன் பெரியப்பாவைப் பார்க்கும்போது பேச வேண்டியதையும் நடந்துகொள்ள வேண்டியதையுமே மனத்துக்குள் அவள் ஒத்திகை பார்த்துக் கொண்டிருந்தாள்.

அந்த வேளையும் வந்தது.

சென்னையிலிருந்து புறப்பட்ட ஐந்தாம் நாளன்று போர்ட் பிளேர் வளைகுடாவில் கப்பல் நுழைந்தது. புல்லும் புதருமான ராஸ் தீவைச் சுற்றிக்கொண்டு, துறைமுகத்தை அடைந்து சாதாம் துறையில் நின்றபோது விடிகாலை மூன்று மணி இருக்கும். சில்லென்ற குளிர்காற்று வெகுவேகமாக வீசிக்கொண்டிருந்தது. மரங்களடர்ந்த குன்றுகள் கருமையாக எழுந்து நின்றன எதிரே.

பொழுது புலர்ந்ததும் பிரயாணிகள் இறக்கப் பட்டார்கள்.

போட்டோவில்கூடப் பார்த்திராத பெரியப்பாவை எப்படி அடையாளம் கண்டுகொள்ளப் போகிறோம் என்று குழம்பிக் கொண்டிருந்தாள் கௌரி. ஆனால் சிவானந்தமே அவளைக் கண்டுபிடித்துவிட்டார். நல்ல கறுப்பு நிறமாய், இரட்டைநாடியாய், குழந்தை போன்ற துறுதுறுப்புடன் விளங்கிய அவரை ஏமாற்றுவது சுலபமென்று பார்த்த மாத்திரத்திலேயே கண்டு கொண்டாள் அவள்.

துறைமுகத்திலேயே அவர் கைகளைப் பற்றிக்கொண்டு பொல பொலவென்று கண்ணீர் உகுத்தாள் அவள். ''பெரியப்பா! உங்கள் கடிதம் மட்டும் இரண்டு நாள் தாமதமாக வந்திருந்தால் என்னை உயிரோடு பார்த்தேயிருக்க மாட்டீர்கள், பெரியப்பா! நான் அவ்வளவு கொடுமைக்கு ஆளாகி யிருந்தேன். படிப்பு, பண்பாடு, சொத்து எதுவும் இல்லாத ஒரு குடிகாரக் கணவனுக்கு என்னைக் கட்டாயக் கல்யாணம் செய்து வைத்து...'' என்று விம்மியபடி, தான் இப்போது மூன்று மாத கர்ப்பமாக இருப்பதையும் தெரிவித்துவிட்டாள் ஒரு வழியாக

எல்லாக் கற்பனைகளையும் எளிதாக நம்பிய அவர், ''இவ்வளவு கொடுமையா அனுபவித்தாய்? இனிமேல் நீ இந்தியா பக்கம் தலைவைத்துக்கூடப் படுக்க வேண்டாம்!'' என்று தைரியம் கூறினார். அத்தோடில்லை. கௌரி அவளுடைய 'கணவனிடம் பட்ட கொடுமைகளை' எல்லோரிடமும் அவராகவே சொல்லிப் புலம்பலானார்.

கௌரி விரும்பியது அதுதான். பெரியப்பா தமிழ்நாட்டுக்குச் செல்லவோ அங்குள்ள எவருக்கும் கடிதம் போடவோ இனிமேல் சந்தர்ப்பம் ஏற்படப் போவதில்லை. தானும் ஊருக்குத் திரும்பத் தேவையிருக்காது. ஆகவே தன்னுடைய ரகசியம் இந்த அந்தமான் தீவிலேயே புதைந்துவிடும் என்று அவள் எதிர்பார்த்தாள். அதற்கேற்றபடி தனது திட்டங்களையும் அமைத்துக்கொண்டாள்.

சிவானந்தத்தின் வட இந்திய மனைவி எப்போதோ காலமாகிவிட்டதால் எந்தக் குழப்பமும் நேரவில்லை.

ஆயுள் கைதிகள் அடைக்கப்படும் காராக்கிரகமாக இல்லாமல், நவீனமான நாடாகவே இருந்தது அந்தமான். சீஃப் கமிஷனராக இருந்து ஓய்வு பெற்றவர் சிவானந்தம். ஒரு சின்னஞ் சிறு தென்னந் தோப்பு வாங்கி, தேங்காய்களை ரங்கூனுக்கு அனுப்பி விற்று, பிறகு ரேடியோ, தையல் மிஷின், சைக்கிள் முதலியவற்றை விற்பனை செய்ய ஏஜென்ஸி எடுத்துப் பணக்காரரானார். முதன் முறையாக அந்தமானில் கோதுமை பயிரிட முடியும் என்று நிரூபித்தவர் அவர். ஜனாதிபதி ராஜேந்திர பிரசாத் வருகை புரிந்தபோது அவரிடம் பாராட்டு வாங்கி, அதைக் கண்ணாடி சட்டமிட்டு இன்றும் பெருமையுடன் தன் பங்களா வரவேற்பறையில் மாட்டி வைத்திருக்கிறார்.

அரண்மனை போல் பங்களாவும், அரசனைப் போலச் செல்வாக்கும், எழுப்பும் குரலுக்கு ஏனென்று கேட்டு ஓடிவர ஜேஜே என்று வேலையாட்களும் இருப்பதைக் கண்டு கௌரி பிரமித்துப் போனாள்.

பள்ளிக்கூட விடுமுறைகளில் சாரதாவும் அவளைப் பார்க்க வருவாள்.

விம்புர்லிகஞ்ச் ஆஸ்பத்திரிக்குச் செல்லும் போதும், அபர்டீன் பஜாரில் தேவையான பொருள்களை வாங்கும் போதும், கோலின்பூர் சாலையில் உலாவப் போகும்போதும், பழைய கைதிகளின் பெயர்களைச் சூட்டிக்கொண்டிருந்த ஹட்டு, ஜங்லிகாட், தெலாயன்பூர் பேட்டைகளை வேடிக்கை பார்க்கும்போதும், உலகப் போரின்போது ஜப்பானியர்கள் இடித்துத் தள்ளிவிட்ட சிறைச் சுவர்களைக் கடக்கும்போதும் சாரதாதான் கௌரியின் இணைபிரியாத தோழியாக இருந்தாள். ஆகவே அவளிடம் மட்டும் தன் ரகசியங்களை ஒருபோதும் மறைக்கவில்லை.

கௌரிக்கு ஒரு குறையுமிருக்கவில்லை - வயிற்றிலுள்ள ஒரு சிசுவைத் தவிர.

முட்டாள்தனமாக இப்படி ஓர் இக்கட்டில் மாட்டிக் கொண்டோமே என்று பொருமினாள் அவள். யாருக்கும், எதற்கும் தலைவணங்காமலே இருந்து பழக்கப்பட்டுவிட்ட பிறகு, இன்று இந்தச் சிக்கல் காரணமாகப் பொய் சொல்லித் தலைகுனிந்து நிற்க வேண்டியிருக்கிறதே என்ற ஆத்திரத்தை யாரிடமும் காட்ட முடியாமல், வளர்கின்ற சிசுவிடத்தில் காட்டினாள். மாதங்கள் ஆக ஆக அவளுடைய கசப்பும் பெரிதாக வடிவெடுத்தது.

தீபாவளிக்கு முதல்நாள் இரவு அவள் பிரசவித்தாள்.

டாக்டர் கணபதி அவளை இரண்டாம் முறையாகச் சந்தித்தது இந்தச் சந்தர்ப்பத்தில்தான்.

## 22

அப்போது 'ஜமீலா' கப்பல் அந்தமானுக்கு வந்திருந்தது. இரண்டு நாள் தங்கியிருக்குமாகையால் கப்பலிலுள்ள பெரிய அதிகாரிகள் நாலைந்து பேரைத் தன் வீட்டுக்கு விருந்துக்கு அழைத்திருந்தார் கௌரியின் பெரியப்பா.

நிறை கர்ப்பிணியாக இருந்த கெளரிக்கு, பாதி விருந்தின்போது பிரசவநோவு கண்டது. கிடுகிடுவென்று அதிகரித்துவிட்டது. ஆஸ்பத்திரிக்கு அழைத்துப் போகக்கூட நேரமிருக்கவில்லை.

டாக்டர் கணபதியின் உதவியுடன், விருந்துக்கு வந்திருந்த சாரதாவின் துணையுடன், அதே பங்களாவின் மாடியறையில் ஒரு பெண் குழந்தைக்குத் தாயானாள் கெளரி.

செக்கச் செவேலென்று, மூக்கும் முழியுமாக, சொர்ண விக்கிரகம் போல் இருக்கிறது என்று எல்லாரும் பாராட்டிய அந்தக் குழந்தையைக் கெளரி ஒருத்திதான் சீராட்டவில்லை, கொஞ்சவில்லை. குழந்தை, கெளரியின் மடியில் இருந்ததைக் காட்டிலும் சாரதாவின் மடியில் இருந்த நேரம்தான் அதிகம். தன் சொந்தக் குழந்தைபோல் அவள் அதைக் குலவியதைக் காணக் காண கெளரிக்கு வேறோர் எண்ணம் உருவாக லாயிற்று. பெரியப்பாவுக்குப் பயந்துகொண்டு, தான் நினைப்பதைப் பற்றி வாய் திறவாமலேயே இருந்தபோது-

பெரியப்பா திடீரென்று ஒருநாள் மாரடைப்பில் காலமாகிவிட்டார், தன் மொத்தச் சொத்துக்கும் கெளரியையே வாரிசாக்கிவிட்டு.

அதே வாரத்தில் சாரதாவின் கணவனும் இருதய நோய் காரணமாகக் கப்பல் இஞ்சினில் வேலை செய்வதை விட்டுவிடும்படி நேர்ந்தது. சொந்த ஊரான தஞ்சாவூரிலேயே ஏதாவது பிழைப்புத் தேடிக் கொள்ளலாம் என்று அவன் தீர்மானித்ததால் சாரதா அந்தமானை விட்டுப் புறப்படுவ தென்று முடிவு செய்தாள்.

கெளரியிடம் சொல்லிக்கொண்டு போவதற்காக வந்தவள், குழந்தையைத் தூக்கி வைத்துக்கொண்டு கொஞ்சினாள். அதுதான் தருணமென்று தோன்றியது கெளரிக்கு. ''இதனிடம் இவ்வளவு பிரியம் வைத்திருக் கிறவள், ஊருக்கு எடுத்துப்போய் நீயே வளர்க்கலாமே!'' என்று எப்படியோ துணிந்து சொல்லிவிட்டாள்.

''நிஜமாகத்தான் சொல்கிறீர்களா?'' என்று சந்தோஷ அதிர்ச்சியுடன் கேட்டாள் சாரதா.

''நிஜமாகத்தான் சொல்கிறேன். என் கதை உனக்குத் தெரிந்ததுதான். இங்கே பெரியப்பாவின் சொத்து விவகாரங்களை முடித்துக்கொண்டு நான் தமிழ் நாட்டுக்குத்தான் திரும்பியாக வேண்டும். இங்கே நான் சௌகரியமாகச் சொல்லிக் கொண்டிருந்த பொய்யை அங்கே சொல்லித் தப்பிக்க முடியாது. பணம் காசுடன் இருப்பேனாகையால், விட்டுப் போன உறவினர்கள்கூட வலிய என்னைத் தேடி வருவார்கள்''

குழந்தையை ஆசையுடன் முத்தமிட்டாள் சாரதா. ''எனக்கு சந்தோஷம்தான்,'' என்று ஒப்புக் கொண்டாள் உடனே. பிற்காலத்தில் தன் வயிற்றில் குழந்தை எதுவும் பிறக்கப் போவதில்லை என்று அன்றைக்கே அவளுக்குத் தோன்றிவிட்டதோ என்னவோ?

''ஆனால் ஒரு வாக்குறுதி தர வேண்டும்,'' என்றாள் கௌரியிடம்.

''என்ன?''

''சினிமாக்களில் வருகிற மாதிரி பிற்பாடு ஒருநாள் வந்து 'என் குழந்தையை என்னிடம் கொடு' என்று என்னைக் கேட்கக்கூடாது.''

''மாட்டேன்,'' என்று கௌரி வாக்களித்தாள்.

கௌரியைத் தட்டிக் கேட்க ஆளில்லை. அப்படியே கேட்டவர்களிடமும், அந்தமான் தீவின் சீதோஷ்ண நிலை குழந்தைக்கு ஒத்துக்கொள்ளவில்லை என்றும், அதனால் சாரதாவுடன் அதை முன்னதாகத் தமிழ்நாட்டுக்கு அனுப்பி வைப்பதாயும் சொல்லிவிட்டாள்.

கப்பலில் சாரதாவையும், குழந்தையையும் ஏற்றி அனுப்பி வைத்தபோது, மூன்றாவது தடவையாக டாக்டர் கணபதியைச் சந்தித்தாள் கௌரி. எல்லாரிடமும் சொன்ன சாக்கையே அவரிடமும் சொல்லி வைத்தாள்.

''சீக்கிரமே நீயும் தமிழ் நாட்டுக்குத் திரும்பி விடணும் குழந்தே! இல்லாமற் போனால் உன் குழந்தை ரொம்ப ஏங்கிப் போய்விடும்,'' என்றார் டாக்டர் கணபதி.

''என்ன டாக்டர், பெற்றவள் எனக்குப் பாசம் இருக்காதா?'' என்றாள் கௌரி ரோஷப்பட்டவள்போல.

ஆனால் பல மாதங்களுக்குப் பிறகு தமிழ் நாட்டுக்குத் திரும்பியவள், சாரதாவும், குழந்தையும் எங்கே இருக்கிறார்கள். எப்படி இருக்கிறார்கள் என்று தெரிந்து கொள்ளக் கடுகத்தனை பிரயத்தனமும் எடுத்துக் கொள்ளவில்லை, ஒரே ஒருமுறை மதுரைக்குப் போய், அந்தப் பக்கத்து வீட்டு வாலிபர்கள் என்ன ஆனார்கள் என்றறிய முயற்சி செய்தாள். அந்த வீடு ஓர் ஓட்டல் கட்டடமாக மாறியிருந்தது. அதில் மாடியே இல்லை. அத்தையும் அவள் கணவனும் பம்பாய்க்குப் போய்விட்டார்கள் என்றும் தெரிந்தது.

இதற்கு முன்பு தனது களங்கத்தைப் பற்றிக் கொஞ்சம் கொஞ்சம் உறுத்தல் இருந்திருந்தாலும் அதை அடியோடு துடைத்தெறிந்துவிட்டுப் புதிய வாழ்க்கையில் படுவேகமாகப் புகுந்து கொண்டாள் கௌரி. தம்பி ஹரிக்கு நல்ல படிப்பு வசதிகள் செய்து கொடுத்தாள். பெரியப்பாவின் மூலமாக வந்திருந்த பல பிஸினஸ்களைத் தானே தொடர்ந்து கவனித்தாள். ஒரு நல்ல இடத்தில் திருமணமும் செய்து கொண்டாள். ஆனால் கௌரியின் தடலடியான சுபாவத்தைக் கண்டு பயந்துபோன அந்தக் கணவன், ஊரிலே விவசாயத்தைக் கவனிக்கிறேன் என்று போய்விட்டபின். அதன் பிறகு, மேலும் வசதியாகிவிட்டது.

கௌரி, கௌரியம்மாள் ஆனாள்.

பதினைந்து பதினாறு வருடங்கள் தாண்டிவிட்டன.

சாரதா என்ற ஒருத்தியையும், அவளுடன் போய்விட்ட. தன் குழந்தையையும் பழங்கனவாக மறந்தே போனாள் கௌரியம்மாள்.

தன் வீட்டில் சமையல்காரியாக அதே சாரதா வந்து சேருவாள் என்று அவள் நினைக்கவேயில்லை. விளம்பரம் கொஞ்சிருந்ததால் சாரதா வேலைக்குச் சேர்ந்திருந்தாள.

சாரதாவும் யாரோ ஒரு கௌரியம்மாளின் வீட்டுக்குச் செல்வதாக எண்ணினாளே தவிர, இவளாக இருக்கும் என்று எதிர்பார்க்கவில்லை. உண்மையில் அந்தக் கௌரியம்மாள் அந்தமானில் சௌக்கியமாக இருந்து கொண்டிருக்கிறாள் என்பதுதான் அவள் நினைப்பு. இந்தியாவுக்கு வந்ததே அவளுக்குத் தெரியாது.

கையில் ஹிண்டு பேப்பருடன் மாடிப்படியில் இறங்கிக் கொண்டிருந்த கௌரியம்மாளும், பழைய துணி மூட்டையுடன் ஹாலுக்குள் நுழைந்து கொண்டிருந்த சாரதாவும் ஒருவரையொருவர் அடையாளம் கண்டு கொண்ட அந்த வினாடி, உலகமே அசைவற்று நின்றது. வந்த வழியே திரும்பி ஓடிவிட வேண்டும் என்ற துடிப்பு இரண்டு இதயங்களிலும் உதித்தது.

ஆனால், ''அட!'' என்று ஒரே சமயத்தில் ஆச்சரியத்தை வெளிப்படுத்தி இருவரும் சிரித்துக்கொண்டார்கள் போலியாக.

எஜமானியம்மாள் என்கிற முறையில் சாரதாவை அழைத்துச் சென்று தம்பி ஹரியிடமும் மற்ற வேலைக் காரர்களிடமும் அறிமுகம் செய்து வைத்து, என்னென்ன வேலைகளை சாரதா செய்ய வேண்டும் என்பதை விளக்கினாள் கௌரியம்மாள். வேறெதுவும் கேட்கவுமில்லை, சொல்லவுமில்லை. ஆனால் எந்த வினாடியும் அந்தப் பேச்சு வரப்போகிறதென்று சாரதா அஞ்சிக் கொண்டுதான் இருந்தாள்.

அன்று இரவு, சமையல்காரியாக வேலை பார்க்கத் தொடங்கிய முதல் தினத்தன்று ராத்திரி, சமையலறையைத் தண்ணீர் விட்டுக் கழுவி விட்டுக்கொண்டிருந்தபோது கௌரியம்மாள் வந்தாள்.

''வாரத்துக்கு ஒருமுறை தண்ணீரோடு வாஷிங் சோடாவும் போட்டுத் தரையைக் கழுவு,'' என்றவள், உடனே போகாமல் ஃபிரிஜ்ஜைத் திறப்பதும் மூடுவதுமாக இருந்தாள்.

'அந்த நேரம்' நெருங்கிக் கொண்டிருக்கிறதென்று சாரதாவின் உள்ளுணர்வு கூறியது.

''அது... குழந்தை... இருக்கிறதா, சாரதா?'' கடைசியில் கேட்டேவிட்டாள் கௌரியம்மாள்.

பதிலைக் காலையிலிருந்து தயாராக வைத்திருந்த சாரதா, ''ஆமாம். ஹேமா என்று பெயர் வைத்திருக்கிறேன். பத்தாம் கிளாஸ் படிக்கிறாள்,'' என்றாள்.

''பத்தாவதுதானா? அவள் வயதுக்கு...''

''அது குறைவுதான், ஆனால் என் கணவருக்கு ஒழுங்கான வேலை கிடையாது. ஊர் ஊராக அலைந்து கொண்டிருந்ததில் சரியாகவே படிக்க வைக்க முடியவில்லை. இப்போது அவரும் போய்விட்டார்,'' என்றாள் சாரதா.

ஒரு நிமிடம் மௌனம்.

கௌரியம்மாள் கேட்டாள், ''யாருக்கும் தெரியாது இல்லையா, ஹேமாவைப் பற்றி?''

''தெரியாது. தஞ்சாவூரில் இருக்கும் என் மாமியாரிடம்கூட நான் சொல்லவில்லை. அந்தமானில் இருந்த போது எனக்குப் பிறந்த குழந்தை என்றுதான் அவரும் நினைத்திருக்கிறார். ஹேமாவைப்பற்றி அறிந்திருந்த ஒரே நபர் என் கணவர். அவரும் உயிருடன் இல்லை,'' என்றாள் சாரதா.

அன்றைக்குத் தொடங்கியது, ஓர் ஊமைப் போராட்டம் அந்த இருவருக்குமிடையே.

ஒரு சிறு வேட்டுக் கூட வெடிக்கப்படவில்லை. ஆனால் அதன் ஓசை பல்லாயிரம் காதுகளைச் செவிடுபடுத்தக் கூடியதாக இருந்தது. ஒரு சிறு தீப்பொறிகூடப் பறக்கவில்லை. ஆனால் நரகத்தின் நுழைவாயிலை காட்டிலும் கொடூரமாக நெருப்பை கொளுத்தியது.

ஹரிக்குத் தெரியாது. ஹேமாவுக்குத் தெரியாது. தஞ்சாவூரிலிருந்த பாட்டிக்குத் தெரியாது. கூட இருக்கும் வேலைக்காரர்களுக்கும் டிரைவர்களுக்கும் மானேஜர்களுக்கும் தெரியாது. எந்த ஒரு பூச்சி, புழுவுக்கும், புல் பூண்டுக்கும் தெரியாமல் அந்த இரண்டு நெஞ்சங்கள் மோதி மோதி உடைந்து கொண்டிருந்தன.

அம்மா என்னிடம் இவ்வளவையும் சொல்லி முடித்தாள்.

தூரத்தில் கறுத்த அடிவானத்தில் மினுமினுக்கும் நட்சத்திரத்தையே பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருந்தேன் நான். குளிரினால் விறைக்கும் கால்களை மார்போடு இறுக்கிக் கொள்ளக்கூடத் தோன்றவில்லை. நான் ஒரு மரக்கட்டை. என் உணர்ச்சிகள் செத்துவிட்டன. இருதயம் என்பது உலர்ந்த சருகினாலும், மக்கிப் போன காகிதத்தினாலும் செய்யப்பட்ட பொருள்போல் தோன்றியது.

விடியவே விடியாது போலிருந்த அந்தப் பயங்கர இரவில், வெறும் கையைப் பிடித்துக்கொண்டு உயிருக்குப் போராடிக் கொண்டிருந்த வேளையில், ''கௌரியம்மாளைப் போய்க் காப்பாற்று!'' என்று அம்மா சொன்னதும் நான் மறுத்ததும் சற்று முன்தான் நிகழ்ந்தாற்போல் இருக்கிறது. ஆனால் நான் கௌரியம்மாளைக் காப்பாற்ற வேண்டிய அவசியம் இருக்கவில்லை.

வேறொரு லைஃப் போட்டில் அவளுக்கு இடம் கிடைத்துவிட்டது.

அது மட்டுமல்ல, ஜாவாத் தீவுகளுக்குச் சென்று கொண்டிருந்த ஒரு கிரேக்கக் கப்பல் உதவிக்கு விரைந்து வந்து எங்கள் எல்லோருக்கும் புகலிடம் தந்துவிட்டது. (ஜமீலா கப்பல் முழுகி விட்டதென்றாலும், அதற்குக் காரணமாயிருந்த உள்நாட்டு ஐந்தாம் படையினரும், அவர்களுக்குத் துணை செய்த எதிரி நாட்டு நீர் மூழ்கிக் கப்பலும் பிடிபட்டுவிட்ட செய்தியை ஐந்துநாள் கழித்துப் பேப்பரில் படித்துத் தெரிந்துகொண்டேன்.)

கப்பலின் கீழ்த்தளத்தில் ஒரு பகுதியை ஆஸ்பத்திரியாக மாற்றி, குற்றுயிரும் குலையுயிருமாக அகப்பட்ட பிரயாணிகளுக்கு அங்கே நல்ல சிகிச்சை கொடுத்து வந்தார்கள். அவர்களில் ஒருத்தியாகக் கௌரியம்மாள் அங்கே படுத்திருந்தாள். திருமதி மீனாட்சியும் டாக்டர் கணபதியும்கூட நல்ல வேளையாக உயிர் பிழைத்துவிட்டார்கள். எங்களைக் காப்பாற்றிய கிரேக்கக் கப்பல் சென்னையை நோக்கிச் சென்று கொண்டிருந்தது, எங்களை இறக்கிவிடுவதற்காக.

அந்த நேரத்தில்தான் அம்மா என் கதையை எனக்குச் சொல்லி முடித்தாள். கடவுளே! இனி அவளை நான் என்னவென்று கூப்பிடட்டும்? சாரதா அம்மாள் என்றா?

''அதன் பிறகு?'' என்று கேட்டேன்.

''கௌரியம்மாளை உன் அம்மா என்று வைத்துக் கொண்டு, எல்லாவற்றையும் நினைத்துப் பார்த்தால் உனக்குப் புரியும்,'' என்றாள் அம்மா. ''பருவத்தின் திமிரில், பெற்றவள் என்கிற பாசம் அன்றைக்கு மறைந்துவிட்டது. சுதந்திரமாக உல்லாசமாகத் திரிய நீ ஒரு முட்டுக்கட்டை என்று எண்ணிவிட்டாள். ஆனால் பிற்பாடு அவளுக்கே கொஞ்ச கொஞ்சமாக ஏக்கம் வந்திருக்கும். தான் பெற்ற குழந்தை எங்கே இருக்கிறதோ என்று எவ்வளவு ராத்திரிகள் அவள் தூக்கமில்லாமல் சிந்தனை செய்திருப்பாளோ!''

''ஆமாம், ஆமாம்! துடித்துப் போயிருப்பாள்!'' என்றேன் நான் அகங்காரத்துடன். ''எல்லாவற்றையும் சொல்ல நேரிட்டுவிட்டதால் அவளுக்கும் எனக்கும் ஒரு பிணைப்பு ஏற்படுத்த முயலுகிறாயாக்கும்? அம்மா! அது ஒரு நாளும் நடக்கப்போவதில்லை. வேலியில் எறிகிற மாதிரி என்னை எறிந்துவிட்டுப் போனவளிடம் பதினெட்டு வருடம் கழித்துப் போய் ஒட்டிக் கொள்ளச் சொல்கிறாயா? முடியாதம்மா, முடியவே முடியாது!''

என் ஆத்திரத்தைத் தணிப்பதற்காகவே வந்த மாதிரி கப்பல் ஊழியர் ஒருவர் ''டீ சாப்பிடுகிறீர்களா?'' என்று எங்களை நெருங்கிக் கேட்டார்.

''நன்றி. எதுவும் வேண்டாம்,'' என்றேன்.

இருண்டு கிடந்த அலைநீரைப் பிளந்து கொண்டு கப்பல் ஓடிக்கொண்டிருந்தது.

''பதறாதே,'' என்றாள் அம்மா, ''நீ தஞ்சாவூரில் பாட்டிவீட்டில் இருக்கிறாயென்று தெரிந்த பிறகு, எவ்வளவு முறை கௌரியம்மாள் ரகசியமாக தஞ்சாவூருக்கு வந்தாள் தெரியுமா? - உன்னைப் பார்ப்பதற்காக?''

''நிஜமாகவா?''

''சத்தியமாக,'' என்று பதிலளித்தாள் அம்மா. ''தஞ்சாவூருக்கு நான் வந்த போதெல்லாம் அவளும் வந்தாள். எங்கேயாவது தெருக் கோடியில் நின்று பார்த்துவிட்டுப் போய் விடுவாள். உன்னைத் தன் மகள் என்று உலகறிய ஒப்புக் கொள்ள அவளுக்குத் துணிவு ஏற்படவில்லை. எனக்கோ இத்தனை நாள் உன்னை என் சொந்தக் குழந்தையாக என் தோளில் சாத்தி வளர்த்த பிறகு அவளிடம் பறிகொடுக்க மனம் வரவில்லை. ஹேமா! கோபிக்காதே, கௌரியம்மாள் உன் தாய் என்று தெரிந்துவிட்டால், என்னை விட்டுவிட்டு அவளுடைய செல்வத்தின் பின்னே நீ போய்விடுவாயோ என்றுகூட நான் பயப்பட்டேன், ஹேமா...''

அம்மாவின் கண்ணீரைத் துடைத்தேன். ''எவ்வளவு மட்டமாக என்னை நினைத்துவிட்டாய் நீ அம்மா!''

''தான்தான் உன் அம்மா என்பதைச் சொல்ல முடியவில்லையே ஒழிய, அவள் செய்தது ஒவ்வொன்றும் ஒரு தாய் செய்யக்கூடியதுதான்,'' என்றாள் அம்மா. ''நீ படிப்பிலும் விளையாட்டிலும் வாங்கிய கோப்பைகளையும், மெடல்களையும், பெருமையாகத் தன்னிடம் கொண்டு போய் வைத்துக்கொண்டாள். உன்னைப் பங்களாவுக்கு வரவழைத்து விலையுயர்ந்த புடைவை வாங்கிக் கொடுத்தாள். தினகரா கம்பெனியில் உளவுக்காக உன்னைப் பிரகாசம் அமர்த்தியிருக்கிறார் என்பதை அறிந்துகொண்டதும் அங்கே நீ வேலைக்குச் சேர்ந்து ஆபத்திலே மாட்டிக் கொள்ளக்கூடாது என்பதற்காகக் கவலையுடன் தடுக்கப் பார்த்தாள்.

வேண்டுமென்றே உன் கண்ணெதிரில் என்னை வேலைக்காரியாக நடத்தினாள். வக்கீல் நோட்டீஸ் கொடுத்து மான நஷ்டம் என்று பயமுறுத்தி, உன்னைத் தன்னோடு இழுத்துக் கொள்ள முடியுமா என்று முயன்றாள். எதுவும் பலிக்கவில்லை. நீ பாட்டுக்குச் சிங்கப்பூருக்குப் போகிறாய் என்று தெரிந்ததும் கூடவே வருகிற மாதிரி வந்து உன்னை மடக்கி அழைத்துப் போய்விடவேண்டுமென்று நினைத்தாள்...''

''காலம் கடந்த பாசம்,'' என்று வெறுப்புடன் சொன்னேன்.

''இதோ பார், இந்த வெறுப்பையும், கசப்பையும் மூட்டை கட்டி, அதோ கொந்தளிக்கிறதே கடல், அதிலே தூக்கி எறி!'' என்றாள் அம்மா. ''நீ பழைய ஹேமா இல்லை. செத்துப் பிழைத்து வந்திருக்கிற புதிய ஹேமா. புதிய பிறவி. கடவுள் அதற்காகத்தான் உன்னைப் பிழைக்க வைத்திருக்கிறார். எழுந்திரு. உன் அம்மாவைப் போய்ப் பார். பக்கத்திலே உட்கார்ந்து இரண்டு வார்த்தை பேசு,'' என்று அம்மா அடுக்கிக்கொண்டே போனாள்.

''அம்மாவின் பக்கத்தில்தான் உட்கார்ந்து பேசிக் கொண்டிருக்கிறேன்,'' என்று அழுத்தமாகக் கூறினேன்.

அம்மா என்னையே வெறிக்கப் பார்த்துக் கொண்டிருந் தாள்.

சென்னை துறைமுகம்.

ஜமீலாவுக்கு நேர்ந்த விபத்தும், உயி பிழைத்தவர்கள் இந்தக் கப்பலில் வருகின்ற செய்தியும் நகரெங்கும் முன்பே பரவியிருந்தது. அந்த விடிகாலை நேரத்தில் கவலையே உருவாகப் பலர் காத்திருந்தார்கள். எதிரே தெரிந்த கட்டிடத்தின் மாடியில். உற்சாகமாகப் பெயர் சொல்லிக் கூப்பிடும் பல குரல்கள்.

''ஹேமா!''

குழாய்களில் இப்போதுதான் முதல் தடவையாக ரத்தம் ஓடுவது போல் உணர்ந்தேன்.

ஹரிக்கும் எனக்குமுள்ள புதிய உறவு ஞாபகம் வந்தது. அவன் என் காதலன் மட்டுமல்ல - என் மாமனும்கூட. கையை ஆட்டினேன்.

''ஹேமா! அங்கே பார்! ஐயோ!'' என்று திடீரெனக் கூவினான் ஹரி. இன்னும் பலரும் கூச்சலிட்டார்கள் ஒரே சமயத்தில்.

காங்வே பாலத்தைத் திரும்பிப் பார்த்தேன். தலை சுற்றியது.

கப்பலையும் கட்டடத்தையும் இணைக்கும் காங்வேயிலிருந்து நழுவியோ, தள்ளாடியோ கீழே விழுந்து கிடந்தாள் அவள்.

அறுபதடிக்குக் கீழே, ஹார்பரின் இதயமற்ற கான்கிரீட் பரப்பில், செக்கச் செவேலென்ற ரத்த வெள்ளம்.

அந்த வெள்ளத்தின் நடுவே அவள் அலங்கோலமாகக் கிடந்தாள்.

நான் வீரிட்டேன். யாரோ என்னைத் தாங்கிக் கொண்டார்கள்.

ஜெனரல் ஆஸ்பத்திரியில் இயன்றதைச் செய்து விட்டார்கள். இனி அனேகமாய் நம்பிக்கை இல்லை.

உடம்பு பூரா கட்டாகவே இருக்கும் அவளருகே கண்ணீருகுத்துக் கொண்டு நான் உட்கார்ந்திருந்தேன்.

பல யுகங்கள் கழித்து அவள் கண் திறந்தாள்.

''அம்மா,'' என்றேன் குரல் தழுதழுக்க.

அவள் உதட்டில் புன்னகையின் நிழல் அரும்பியது வெகு மங்கலாக. ''ஹேமா.. ஹேமா..ஹேமா..'' என்று அவள் உதடுகள் அசைந்தன. மிகச் சிரமத்துடன் சொன்னாள்: ''நானில்லை உன் அம்மா... இனி அவள்... அவள்தான்...'' என்று கட்டிலின் மறுபுறத்தை - அங்கு உட்கார்ந்திருந்த கௌரியம்மாளை - விழிகளால் காட்டினாள்.

பிறகு அவள் கண்கள் திறக்கவில்லை. யாரை இந்தப் பதினெட்டு வருடமாக அம்மா என்று நினைத்துப் பழகி வந்திருக்கிறேனோ அந்தச் சாரதா போய்விட்டாள். கௌரியம்மாளுக்கும் எனக்கும் குறுக்கே நிற்கக்கூடாது என்பதற்காக வேண்டுமென்றே செய்துகொண்ட தற்கொலை அது!

ஆஸ்பத்திரிக்கு வெளியே வந்தேன்.

நடந்தேன்.

வேண்டும் ஹேமா உனக்கு, நன்றாக வேண்டும். உணர்ச்சி வசப்பட்ட சூழ்நிலையில் கொஞ்சம் அதிகப்படியாக நடந்து கொண்டுவிட்ட ஹரியை என்ன மட்டமாய்ப் பேசினாய்! ஒருவனை மனமாரக் காதலித்து அவனை நம்பித் தன்னை கொடுத்து, அதன் விளைவாகக் கையில் குழந்தையுடன் நிற்க நேரிட்டுவிட்ட வனஜாவை எவ்வளவு இரக்கமில்லாமல் ஒதுக்கினாய்! இப்போது?

அவளுக்காவது தன் குழந்தையின் தகப்பன் யார் என்று தெரியும்? உனக்கு? கௌரியம்மா உன் அம்மா-புரிகிறது. ஆனால் உன் அப்பா?

வனஜா, என்னை மன்னித்து விடு. ஹரி, என்னை மன்னித்துவிடு.

நான் நடந்து நடந்து போய்க்கொண்டேயிருந்தேன். சிவப்புக் கற்கோட்டையாக உயர்ந்து நிற்கும் ஹைகோர்ட்டின் வாசலில் என் கால்கள் நின்றன.

வனஜா... வனஜா... உனக்கு நீதிமன்றம் என்ன தண்டனை வழங்கியிருக்கிறதோ! எந்தச் சிறைக் கம்பிக்குப் பின்னால் நீ இருக்கிறாயோ?

என் மனக் குரலைச் செவியினால் கேட்ட மாதிரி, ''ஹேமா!'' என்று கட்டிக்கொண்டாள் பெருந்தன்மை மிக்க என் தோழி.

''வனஜா! நீ... நீ...'' என்று திணறினேன்.

''விடுதலையாகிவிட்டேன். ஹேமா. என் அப்பா அடிக்கடி என்னைத் துன்புறுத்துவது உண்டென்றும், அது

பொறுக்காமல்தான் அவரை நான் தாக்கினேன் என்றும் கோர்ட்டுக்கு வந்து சாட்சியம் சொல்லி, எனக்காகப் பெரிய வக்கீல் வைத்து வழக்காடி...''

''யார்? யார்?'' என்றேன் வியப்புடன்.

''அப்பாவையே கொலை செய்ய முயலுமளவுக்கு எனக்கு வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டிருப்பதைக் கண்டதும் அவருக்கு இரக்கம் ஏற்பட்டுவிட்டது...''

''யாருக்கு வனஜா? யாரைச் சொல்கிறாய்?'' என்றேன் ஆர்வத்துடன்.

''அதோ அவர் காத்திருக்கிறார். ஒருநாள் வீட்டுக்குக் கட்டாயம் வா,'' என்று [illegible]டுக் காரை நோக்கி ஓடினாள் வனஜா.

ஸ்டியரிங்கைப் பிடித்துக் கொண்டு உட்கார்ந்திருந்தவன் -

ஜனார்த்தனம்தான்.

பனிக்கும் கண்களைத் துடைத்துக்கொண்டு மேலும் நடந்தேன்.

கடற்கரை வந்தது. வெண்மணற்பரப்பு வந்தது. அலையோரமாயப் போய் உட்கார்ந்து கொண்டேன்.

சிறுசிறு கிளிஞ்சல்களைப் பொறுக்கிக் கடலின் மீது எறிந்து கொண்டிருந்தேன்.

என்னைப் பிறப்பித்ததும் இந்தக் கடல். என்னைச் சிக்கலுக்கு ஆளாக்கியதும் இந்தக் கடல். என்னை உயிருக்கு மன்றாட வைத்ததும் இந்தக் கடல். என் அந்தரங்க ரகசியங்களை அறிய வைத்ததும் இந்தக் கடல்.

இந்த ஹேமாவின் பயனற்ற வாழ்க்கையும் ஏன் இங்கேயே முடிந்துவிடக்கூடாது?

எழுந்தேன் - இல்லை, எழ நினைத்தேன்.

ஒரு கரம் என் கையை அழுத்தி உட்கார்த்தி வைத்தது.

ஹரி.